


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணின் அந்நியர்

## சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணின் அந்நியர்

சிறுகதைகள்

இரா. சடகோபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணின் அந்நியர்

**சிறுகதை தொகுப்பு**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | இரா.சடகோபன் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர்-2015 |
| உரிமை | : | ©இரா.சடகோபன் |
| ISBN | : | 978-955-42706-0-2 |
| பதிப்பகம் | : | கௌரி அச்சகம் |
| நூல் வடிவமைப்பு | : | வீ.அசோக் |
| அட்டைப்பட ஓவியம் | : | இரா.சடகோபன்<br>எஸ்.டி.சாமி |
| விலை | : | ரூ. 350/- |

A collection of short stories
by R.Shadagopan

| | | |
|---|---|---|
| First Edition | : | December-2015<br>©R.Shadagopan |
| ISBN | : | 978-955-42706-0-2 |
| Printers | : | Gowriy Printers |
| Book Design | : | V.Ashok |
| Cover Art | : | R.Shadagopan<br>S.D.Samy |
| Price | : | Rs.350/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“
தனது அறுபத்தைந்தாவது
வயதுவரை தொளஸ்பாகை
மொஸ்வில்ல தோட்டத்தின்
மலை மேடுகளில்
ஏறி
தன் தளிர்க்கரங்களால்
தேயிலை கொழுந்து பறித்து
என்னை ஆளாக்கிய என் தாய்
அடைக்கம்மாள்,
தன் சிறு வருமானத்தால்
எங்கள் குடும்பத்தை
உன்னதத்துக்கு
உயர்த்திய
என் தந்தை ராமையா
ஆகியோரின்
பொற்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம் ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

- நண்பரும் மூத்த எழுத்தாளருமான
  சாஹித்திய ரத்னா
  தெளிவத்தை ஜோசப்
- சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர்
  ஆர்.ராஜலிங்கம்
- ஓவியர் எஸ்.டி.சாமி
- வீ.அசோகன், இணைப்பாளர்,
  வீரகேசரி வத்தளை கிளை.
- அன்டன் சுகந்தன், முகாமையாளர்,
  வீரகேசரி வத்தளை கிளை.
- செல்வி எம்.பிரியதர்சினி,
  சுகவாழ்வு ஆசிரிய பீடம்
- என் இல்லத்தரசி எஸ்.கிரேஸ்
  அன்புச்செல்வங்கள்
  எஸ்.ஷர்மினி, எஸ்.தான்ரக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

நான் ஒரு எழுத்தாளன் என்ற வகையில் என்னை முதன் முதலாக நான் இனங்காட்டிக் கொண்டது ஒரு கவிஞனாகத்தான். எனது முதல் கவிதைத் தொகுப்பு நூல் **'வசந்தங்களும் வசீகரங்களும்'** 1998 ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்போது நான் அந்தக் கவிதைகளை எழுதி 22 ஆண்டுகள் கடந்திருந்தன.

இக் காலத்தில் நான் சுமார் பத்துக்கும் மேற்பட்ட சிறு கதைகளை எழுதியிருந்தேன். அதில் **'சொந்த மண் ணின் அந்நியர்'** என்ற சிறுகதை 1998ஆம் ஆண்டு துரைவி-தின கரன் இணைந்து நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று எனக்கு சிறு கதை எழுத்தாளன் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது. அதனாலேயே இச் சிறுகதைத் தொகுதிக்கு மகுடக் கதையாக அதனையே தேர்ந் தெடுத்திருந்தேன்.

இச்சிறுகதைத் தொகுப்பில் வரும் அனேகமான சிறு-கதைகள் வெறும் கற்பனைப் புனைவுகள் அல்ல. ஆதலால் தான் அவை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது அக்கதைகளின் இறுதியில் யாவும் கற்பனை யல்ல என்று போட வேண்டியதாயிற்று. இந்நூலின் தலைப்பு சிறுகதையான **'சொந்த மண்ணின் அந்நியர்'** என்ற சிறு கதை நான் பிறந்த தோட்ட மண்ணில் இருந்து என் னையும் என் குடும்பத்தையும் ஏனைய தொழிலாளர்களை யும் பலாத்காரமாக வெளியேற்றிய அந்த சம்பவத் தின் எனது சிறுபராயத்து மனப்பதிவின் வெளிப்படுத்து கையாகும்.

**'நேர் கோடுகள் வளைவதில்லை'** என்ற கதை எனது சிறு பருவத்து ஞாபகங்களுடன் என்னுடன் ஒன்றாய்ப் படித்து ஐந்தாம் வகுப்புடன் படிப்பைத் தொடர முடியாமல் அந்த தோட்டத்திலேயே தன் வாழ்வை முடக்கிக் கொண்டுவிட்ட வீரமலை என்ற என் நண்பனின் கதையாகும். இதில் மஸ்கெலியா டெவன் தோட்டத்தில் தோட்ட நிலத்தை பிரிக்கும்போது ஏற்பட்ட போராட்டத்தில் சிவனு லெட்சுமணன் என்ற தொழிலாளி தன்னுயிரை ஈந்த சம்பவம் நினைவு கூரப் படுகின்றது.

இதில் வரும் மற்றொரு கதையான **'உன்னைக் கொன்ற வர்கள் யார்'** என்ற கதை அரசாங்கத்தின் இனவாத நோக்கங்கொண்ட பொருளாதார, விவசாய கொள்கையால் எவ்வாறு மிகச் செழிப்பான தேயிலை தோட்டமொன்று சாகடிக்கப்படுகின்றது என்பதையும் அத்தோட்டத்துடன் அத்தோட்ட மக்களும் எவ்வாறு சின்னாபின்னப்படுகின்றனர் என்பதையும் அம்பலப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'இன்னும் எத்தனை நாள்'** என்ற சிறுகதை கல்வியால் தான் மலையக சமூகம் முன்னேற வேண்டும் என்பதையும் லயத்தை விட்டு வெளியேறி இம்மக்கள் சுதந்திரமாக காணித்துண்டொன்றில் சுயமாக வீடு கட்டி வாழும் சுதந்திர வாழ்வை அடைய வேண்டுமென்பதையும் எனது சொந்த அனுபவம் வாயிலாக வலியுறுத்துகின்றது.

**'சூடேறும் பாறைகள்'** மற்றும் **'புன்னகை மறைந்த அந்நாளில்'** ஆகிய இரு சிறுகதைகளும் எனது பாடசாலைக்கால அனுபவங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை. சூடேறும் பாறை நான் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தபோது இடம்பெற்ற ஒரு சம்பவமாகும். அந்தச் சம்பவம் என் மனதை மிகப் பாதித்த நிகழ்வுகளில் ஒன்று. **'புன்னகை மறைந்த அந்நாளில்'** என்ற சிறுகதை க.பொ.த. (உ/த) படித்துக் கொண்டிருந்த போது இடம்பெற்றது. அதேபோல் **'கரையைத் தொடாத ஓடங்கள்'** என்ற சிறுகதை எனது பல்கலைக்கழக வாழ்வின் முதலாம் ஆண்டு பெற்ற அனுபவமாகும்.

**'நெஞ்சின் அலைகள்'**, **'செவப்புக் கலருல ஒரு காரு'** ஆகியன எனது இரண்டு பருவங்களில் இடம் பெற்ற கதைகளாக இருந்தபோதும் இவையும்கூட உணர்ச்சி பூர்வமான அனுபவப் பகிர்வுகளாக இருப்பதனை வாசிப்பவர்களால் உணர முடியும். **'சொல்லாமலே'** என்ற சிறுகதை நமது சமூகத்துக்கு மட்டுமல்லாமல் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களிலும் இடம்பெறும் அவலமான பருவமடை யாத சிறுபிள்ளைகளை வீட்டில் விட்டு விட்டு தாய் மார்கள் வெளிநாடுகளுக்கு செல்வதால் ஏற்படும் விளை வுகள் பற்றி கூறுகிறது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள **'கருஞ் ஜூலை'** என்ற கதை வெறுமனே எனது அனுபவம் மாத்திரம் மட்டு மல்ல. அது தமிழன் ஒவ்வொருவனதும் மறக்க முடி யாத ஆழ்மனப் பதிவு. அந்த நிகழ்வுகள் என் வாழ் வினை முற்றாகத் திசை திருப்பிய அகோரமாகும். அந்த நிகழ்வுக்கு பின் ஆறு மாதங்கள் என் மூளை செயற்பட மறுத்தது. இன்றுங்கூட என் மூளை சில விடயங்களை பிடிவாதமாக ஏற்க மறுப்பதற்கு காரணி யாக அந்த நிகழ்வு அமைந்து நிரந்தரமாக என்னை சில விதங்களில் ஊனமுற்றவனாக ஆக்கிவிட்டது. அதனை நான் எழுத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு பின் (2012) இக்கதையை எழுதினேன்.

இச் சிறுகதைத் தொகுதியில் நான்கு கதைகள் விசேடத்துவம் பெறுகின்றன. அவற்றில் இரண்டு வர லாற்றுக்காலத்துடன் தொடர்பு பட்டவை. தேன்மொழி அல்லது இளம்பருதி என்ற கதை கண்டி செங்கடகல, வரலாற்றுக் காலத்தில் நிகழ்ந்ததாக வருகிறது. எனி னும் அதன் முடிவு தற்கொலை என்பதால் நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் சற்றே எதிர்மறையான சலசலப்பை ஏற்படுத்தியது.

இதனால் எழுந்த மனக்கிலேசத்தை சமாதானப்படுத்தவே **'செல்லி அல்லது மணிராசு'** என்ற கதையை படைத்தேன். 1868 ஆம் ஆண்டு இடம்பெறுவதாக வரும் இச்சிறுகதை வாய்மொழி மூலம் கூறப்பட்டு வரும் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. இக்கதையின் முடிவு முன்னைய கதைக்கு எதிர்மாறானதாக இருக்க வேண்டும் என்று கருதினேன்.

இறுதியாக **'சூரியன் சாட்சியாக'** என்ற கதை பற்றி குறிப்பிடுவது மிக அவசியமானதாகும். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக இந்நாட்டை உலுக்கிக்கொண்டிருந்த உள்நாட்டுப் போர் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்று பேதம் பார்க்காது எல்லோரது வாழ்விலும் எள்ளி நகையாடியது என்பதை யாரும் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியது இல்லை. ஆதலால் போர்க்காலக்கதை யொன்றை எழுத வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே அவாவுற்றிருந்த போதும் பிரதேச மொழி நடையை எவ்வாறு கையா ள்வது என மனங்குழம்பிப் போனதால் அதனை எழுது வது தள்ளிப் போய்க்கொண்டே இருந்தது.

இந்தக் கதைக்கரு சுமார் பத்து வருடங்களாக என் மனதில் கிடந்து உறுத்திக் கொண்டும் உருவாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டும் இருந்தது. இதனை நான் மிக அண்மையிலேயே எழுதிய போதும் எந்தப் பத்திரிகையிலும் சஞ்சிகையிலும் வெளியிட்டிருக்கவில்லை.

என்னுடன் நெருங்கிப் பழகிய என் நண்பர்கள் சிலரும் என்னைத் தேடி வந்து என்னுடன் தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்ட பலரும் என் வாழ்க்கையில் இத்தகைய அற்புதமான அனுபவங்கள் பொதிந்துள்ளனவா என வியந்து அத்தகைய மனப் பதிவுகளை தொடராக எழுதினால் என்ன என்று வினவுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நான் கூறிய பதில் "அவற்றைத்தான் நான் எனது சிறு கதைகளில் பதிந்துள்ளேன்" என்பதாகும்.

ஆனால் அவர்களில் பலரும் எனது சிறுகதைகளைப் படித்திருக்கவில்லை. ஏன் நிறையப் பேர்களுக்கு எனது சிறுகதை எழுத்தாளன் என்ற முகத்தைத் தெரியாது. ஆதலால் இப்போது இச் சிறுகதைகளை ஒரு சேர படிக்கும் போது என் வாழ்வில் நிகழ்ந்த வரலாற்று அனுபவங்களை உணர்வு பூர்வமாக அனைவராலும் தரிசிக்க முடியும்.

என்றாலும் என் வாழ்வில் இடம்பெற்ற மற்றும் பல ருசிகரமான நிகழ்வுளையும் ஒரு தொடராக எழுத வேண்டும் என்ற எண்ணம் இப்போது பலமாக என்மனதில் முகிழ்ந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது எழுத்துக்கள் உணர்வு பூர்வமானவை என்று ஏற்கனவே பல மூத்த எழுத்தாளர்களும் விமர்சகர் களும் எனக்கு சான்று பகர்ந்துள்ளார்கள் என்பதில் நான் பெருமைப்பட்டுக்கொள்வதில் தவறில்லை என்றே கருதுகின்றேன்.

இந்தப் பெருமையை எனது அண்மைய சிருஷ்டியான **'கண்டிச்சீமையிலே'** என்ற கோப்பிக்கால வரலாற்று நூ லும் கிறிஸ்டின் வில்சன் எழுதிய பிட்டர் பெர்ரி (Bitter Berry) என்ற ஆங்கில நாவலின் மொழி பெயர்ப்பான **'கசந்த கோப்பி'** யும் பெற்றுத்தந்தன.

இவை இரண்டுமே எமது முன்னோர்கள் இந்நாட் டுக்கு வந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட் டியமைக்கும் பெரும் பணியில் எப்படியெல்லாம் துன் பப்பட்டார்கள் என்பதை அம்பலப்படுத்துவதாகவும் மற் றும் நான் பிறந்து வளர்ந்த அதே பின்னணியிலும் பகைப்புலத்திலும் நிகழ்பவையாக இருந்திருக்கின்றன என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கருது கிறேன்.

எனது இந்த எல்லாச் சிறுகதைகளுமே அந்த வகையைச் சேர்ந்தவைதான். அவற்றை படித்தவர்கள் பலரும் அவை தம்மை உணர்ச்சி வசப்படுத்தி கண் களை ஈரமாக்கியதாக கூறினார்கள். உங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய உணர்வை இக்கதைகள் ஊட்டுமாயின் அதனையே என் வெற்றியெனக் கருதுவேன். உங்கள் விமர்சனங்களுக்காக ஆவலுடன் காத்திருப்பேன்.


**சட்டத்தரணி இரா. சடகோபன்**

பிரதம ஆசிரியர் **சுகவாழ்வு**

ஸ்தாபக ஆசிரியர் **விஜய்**

17B, ரிச்சர்ட் டி சொய்சா ஊடகவியலாளர்

வீடமைப்புத்திட்டம், பத்தரமுல்ல.

தொ.பே : 0777 679231

மின்.அ : updrf@yahoo. com

வலைபூ : www.updrf.blogspot.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இது நண்பர் இரா.சடகோபன் அவர்களின் முதலாவது சிறுகதைத் தொகுதி. முதலாவது சிறுகதைத் தொகுதி என்றாலும் அவருடைய ஏழாவது நூல் என்பது அழுத்தமாகக் குறிப்பிடக்கூடியதே.

ஒரு பட்டியலுக்காக இல்லை என்றாலும் அவற்றின் முக்கியத்துவத்துக்காக சடகோபன் அவர்களின் நூல்களைப்பார்ப்போம்.

**1998- வசந்தங்களும் வசீகரங்களும்** - கவிதைகள்

**2002- ஆயிரம் ஆண்டு கால மனிதர்கள்** - சிறுவர் நூல்

**2008- உழைப்பால் உயர்ந்தவர்கள்** - சிங்கள நாவலின் மொழிபெயர்ப்பு

**2011- கசந்த கோப்பி** - ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு

**2012- எங்கள் கிராமம்** - மார்ட்டின் விக்கிரமசிங்கவின் சிங்கள நூலின் மொழிபெயர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2014- கண்டிச்சீமையிலே** - கோப்பிக்கால வரலாற்று ஆவணம்

2015 - சிறுகதைகளின் தொகுப்பு நூல்

முதல் நூலான கவிதைத்தொகுப்பு அவருக்கு மத்திய மாகாண சாஹித்திய விருதைப் பெற்றுக்கொடுத்தது. பின் மூன்றாவது நூல் அவரை ஒரு முக்கியமான மொழி பெயர்ப்பாளராக இனங்காட்டியது.

அந்த இனங்காட்டல் அவரை இந்த மொழி பெயர்ப் புத்துறைக்குள் மேலும் ஆழமாக ஈடுபடுத்தியது. எழுத் தாற்றல் மிக்கவரான சடகோபன் சிங்கள மொழிப்புலமை யும் ஆங்கில மொழிப்புலமையும் மிக் கவர். அவருடைய அடுத்த இரண்டு நூல்களும் இலக்கியத்துறையில் அவருக்கான இடத்தை நிர்ண யித்தன. செவ்விய மொழிபெயர்ப்புக்கள் பொதுமைப் பரிமாணங்களையும் கடந்து சிறப்புப் பரிமாணங்கள் மீது ஊடுருவி உட்புகுந்து இலக்கு மொழிக்குள் கொண் டுவரும் கலைத்துவப் படைப்பையும் பண்பையும் உள்ளடக்கியுள்ளது. அந்த வகையில் இலக்கிய மொழியாக்கம் செய்யும் தரம்மிக்க புலமையாளர் மத்தியில் நண்பர் இரா. சடகோபன் அவர்களுக்கு தனி இடம் உண்டு என்று குறிக்கின்றார் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்.

இந்த மூன்று நூல்களும் அந்த அந்த வருடத்தின் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளன என்பது குறிப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தக்கது. சாஹித்திய விருது என்பது ஒரு படைப் பின் தரத்துக்கான அடையாளம் ஆவதில்லை என்றாலும் கூட சட்டத்தரணி சடகோபன் அவர்களின் ஆறாவது நூல் **'கண்டிச்சீமையிலே'** மலையகம் பற்றிய வர லாறு பேசும் நூல் வரிசையில் இது ஒரு மகத்துவம் மிக்க நூல். இன்றைய தங்கள் இருப்புக்காக உரு வாக்கத்துக்காக நம் முன்னோர் பட்ட துயரங்களை நமது மொழியில் தருகின்ற கண்ணீர் காவியம் இந்தக் கண்டிச்சீமையிலே.

இந்த வரலாறு ஏற்கனவே சொல்லப்பட்டதுதான் என்று ஒரு சில குரல்கள் கேட்கலாம். மோல்ட்றிச் ஏற் கனவே சொன்ன இந்தச்சோக வரலாற்றை எத்தனை பேர் வாசித்தார்கள். அறிந்திருந்தார்கள். அரசியல்வாதிகள், சமூக பொருளாதார ஆய்வாளர்கள் என்று நிறைய பேரிடம் கேட்டேன். நிறையவே "இல்லைகள்" தான் பதிலாகக் கிடைத்தன என்று பதிகின்றார் சடகோபன். சி.வி.யின் Born To Labour என்னும் பிரசித்தி பெற்ற நூல் பற்றி உலகப்புகழ் பெற்ற கலைஞர் **மார்ட்டின் விக்கிரமசிங்க** குறிப்பிடுகையில் இந்த மக்களின் மொழியிலேயே இவைகள் எழுதப்பட்டிருந்தால் இதன் மகிமை இன்னும் பன்மடங்காகி இருக்கும் என்று ஆதங் கப்பட்டிருந்தமை என் நினைவில் எழுகிறது.

இந்த மக்களின் ஆரம்ப கால துயர் நிறைந்த சோக வரலாற்றை அந்த மக்களுக்காக அவர்கள் மொழியிலேயே தந்துள்ள முறைமையே இந்த கண் டிச்சீமையிலே நூலின் மகத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுகள் விருதுகள் போன்றவைகளுக்கு அப்பாற் பட்ட மகத்துவம் அது.

ஒரு சமூகத்தின் உயர்வும் முன்னேற்றமும் அச்சமூகத் தினர் அதனை மதிக்கும் போதும் தம் சமூகக் குறைகளைத் தாங்களே உணர்ந்து அவற் றைக்களைய முன்வரும்போதுமே ஏற்பட முடிகின்றது.

தன்னுடைய எழுத்துக்களை இதற்காகவே பயன் படுத்தும் ஒரு சமூக அக்கறையாளர் சடகோபன். மொழியை இயக்கத்தில் வைக்கும் எழுத்து. ஒரு சமூகத்தின் மனச்செயற்பாடு. சமூக மாற்றத்தை எழுச்சியை மீட்சியை விரும்புகிறவர்கள் தங்களின் சக்திக்கேற்ப அதற்கான விதைகளை விதைப்பதுடன் ஏற்கனவே யார் யாராலோ விதைக்கப்பட்டவைகளுக்கு நீரூற்றி, உரமிட்டு அவைகளை வளர்த்தெடுப்பார்கள். சடகோபன் அவர்களது மொழிபெயர்ப்புத் தேர்வுகள் இந்த வளர்த்தெடுப்புக்களே. வரலாற்று வேர்களைத் தேடுவதில் அதிலும் குறிப்பாக மலையக வரலாற்றின் வேர்களைத்தேடுவதில் வல்லமை கொண்டவர் இவர்.

The INDO-LANKANS-THEIR 200 YEAR SAGA என்ற மிகப்பாரிய நூலை எழுதுவதற்காக MADRAS EDITORIAL SERVICE அமைப்பு இவ ரைத் துணைவராகத்தெரிவு செய்து கொண்டது என்பதே சடகோபன் அவர்களது வரலாற்று அறிவுக்கான, உணர்வுக்கான சான்றுதான். மனித வரலாறு என்பது ஒடுக்கப்பட்டவர்கள் தம்மை ஒடுக்குபவர்களுக்கு எதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக நடத்திய போராட்டங்களின் நீண்ட வரலாறு தான் என்கிறது மார்க்சியம்.

சடகோபனது மொழிபெயர்ப்பு நூல்கள் மட்டுமன்றி அவருடைய பெரும்பாலான சிறுகதைகளும் கூட வர லாற்றுச் சிறுகதைகள்தான்.

ஈழத்துத்தமிழ்ச் சிறுகதைத்துறைக்கு ஏறத்தாழ 150 ஆண்டு கால வரலாறு உண்டு (1865 - 2015). காலத்தில் முந்திய ஈழத்துச்சிறுகதை இலக்கியம் 1930களுக்குப் பிறகே (ஆரம்பித்து அரை நூற்றாண்டுகளுக்குப் பிறகு) உருவப்பிரக்ஞையுடன் வெளிவரத்தொடங்கியதாக வர லாறுகள் பதிகின்றன.

உருவமும் உள்ளடக்கம் முற்போக்கு நற்போக்கு இலக்கியச் சண்டைகளுக்கு மத்தியிலும் எங்களை விட நீங்கள் பத்து வருடம் பிந்தி நிற்கிறீர்கள். அப்படி இப்படி என்னும் இந்தியத்தமிழிலக்கிய மேதாவிலாச இடைஞ்சல்களுக்கிடையிலும் தனக்கேயுரித்தான தனிப் பண்புடனும் ஈழத்துச்சிறுகதை வளர்ந்து வந் துள்ளது. எண்ணிக்கை அடிப்படையில் எழுநூறுக்கும் மேற்பட்ட சிறுகதை எழுத்தாளர்களின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் வந்திருக்கின்றன.

என்னுடைய இந்த எண்ணிக்கையின் அடிப்படையே ஒரு குத்து மதிப்புத்தான். நம்மிடம் இதற்கான கண க்கு எங்கே இருக்கிறது? கணக்கே இல்லாதபோது நாம் எங்கே இருக்கிறோம் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும். தனி மனிதர்களால் சுமக்க முடிந்த பாரம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கை ஆழியானும் தூக்க முயற்சித்தார் தான்! ஆனாலும் முடியவில்லை. பல்கலைக்கழகங்கள் ஏன் இது குறித்து மௌனமாக இருக்கின்றன.! கணக்கெடுப் புத்தேவையில்லை என்று நினைக்கிறார்களோ தெரிய வில்லை.

ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்துக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் மிக நெருங்கிய உறவிருந்த காலம் ஒன்றிருந்தது. அந்தக்காலம் மீண்டும் வரவேண்டும் என்பது எனது அவா. பல்கலைக் கழகங்களுக்கும் இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான உற வுப்பாலமாகப் பல்கலைக்கழகங்களை இயக்கும் ஆற்றலும் ஆளுமையும் இலக்கிய ஆர்வமும் வேட் கையும் கொண்டவர்கள் சிலர் இன்னமும் உள்ளே இருக்கின்றார்கள்தான்!

**விபுலானந்தர் காலம், கணபதிப்பிள்ளைக்காலம், வித் தியானந்தன் காலம், கைலாசபதி, சிவத்தம்பி காலம்** என்னும் அந்த வரலாறு மீட்சி பெற வேண்டும்.

மறதிகளால் சூழப்பட்ட ஒரு சமூகமாக ஈழத்தமிழ் சமூகம் மாறிவிட இடமளிக்க முடியாது. அவர்கள் எந்தப் பிரதேசத்தமிழராக இருந்த போதும் நினைவு களை மீட்டுத்தருவதாக அமைகின்ற எழுத்து சட கோபன் அவர்களின் எழுத்து. அதற்குள் ஒரு வன்மை இருக்கிறது. அவருக்கென்றே தனியான ஒரு நடை இருக்கிறது. அதில் ஒரு சுதந்திர தன்மையும் இருக் கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை ஈழத்தில் எத்தனை தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகள் வந்திருக்கின்றன என்ற நினைவு வந்த போது ஆயிரத்துக்கு மேலான தொகுதிகள் என்று மதிப்பிட்டுக்கொண்டபோது அவைகளில் எத்தனை வர லாறு பேசுகின்ற தொகுதிகளாக வந்துள்ளன என்ற நினைவும் எழுந்தது.

ஐம்பதுகளில் **அருள் செல்வநாயகம்** அவர்கள் வெளியிட்ட **தாம்பூவராணி** ஈழநாட்டு வரலாற்றுக் கதைகள் என்றே வந்தது. இலங்கையின் மன்ன ராட்சிக்கால சரித்திரக்கதைகள் அவை. கல்கியின் வரலாற்றுக்கதைகளின் பாதிப்பாகவும் அவை இருக்க லாம். ஆனாலும் வரலாற்றுக்கதைகள் என்று மகு டமிட்டுக் கொள்ளாவிட்டாலும் பெரும்பாலான ஈழச் சிறுகதைகள் மனித வரலாறு பற்றி, மனித இடர் பற் றிப்பேசும் கதைகளாகவே அமைந்துள்ளவைதான்.

அதிலும் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கின் பெரும்பான்மைத்தமிழர்கள் பற்றியவைகள் தான்.

பலம் கூடியவர்கள் பலம் குறைந்தவர்களை அழிக் கும் நடைமுறை அவர்களின் மண்ணை, மண்ணின் வளத்தை அழித்தொழிக்கும் நடைமுறை மேற்குலக நாடுகளின் பலம் குறைந்த நாடுகளை அழித்த மத்திய வரலாற்றின் இன்னொரு முகம்தான்.

அந்த யுத்தத்தின் கோரத்தை, கொடூரத்தைக்காட்டும் கதை இந்த தொகுதியின் **சூரியன் சாட்சியாக** என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பின் ஒரு கிராமத்து ஒன்றுமறியாத விவசாய மக்களை ஆண் பெண் பிள்ளைகள் என்ற பேதமின்றி வரிசையாக நிறுத்தி வைத்துச் சுட்டுக்கொன்று புதைத்த பயங்கரத்தைப்பதிவு செய்கின்ற கதை இது. போர் என்ற போர்வையில் அழித்தொழிக்கப்பட்ட கிராமத்தின் வரலாற்றுப்பதிவு இது.

இன்னல் படும் மக்களின் வரலாறுகளும் பதியப்படல் வேண்டும். மன்னர்கள் மட்டுமே வரலாற்று நாயகர்கள் அல்ல என்னும் திருப்பு முனையை ஏற்படுத்தியவர் அன்டோனியோ கிராம்சி என்னும் சிந்தனையாளர்.

சடகோபனின் **கண்டிச்சீமையிலே** நூல் பற்றிப் பேசும் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களின் நினைவிலும் கிராம்சி வந்திருக்கின்றார் என்பது சடகோபனின் எழுத் துக்களின் வளம் பற்றியது. பலம்பற்றியது.

மலையக மக்கள் பற்றி மட்டுமல்லாமல் இடருறும் எல்லா மக்கள் பற்றியும் துயர்படும் மனம் கொண்ட படைப்பாளர் இரா. சடகோபன் அவர்கள்.

ஈழப்போரே இடம்பெறாத மலையகத்தின் மக்கள் அனுபவித்த இன்னல்கள் எழுத்தில் அடங்காதவை. அவைகளை எழுத்துக்குள் அடக்கி ஒரு சமூகத்துயரின் நினைவுகளை மீட்டுத்தரும் சடகோபனின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

நாகரிகமடையாத, அறிவியல் அடிப்படையில்லாத, அரசியல் உரிமைகளற்ற என்பவற்றை மட்டுமே மையப் படுத்தப்பட்டுவிட்ட ஒரு சமூகத்தின் மறைக்கப்பட்ட மறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கப்பட்ட மற்ற மற்ற சிறப்பியல்புகளையும் கிண்டி எடுத்து மேலே கொண்டு வரும் நாட்கள் இவை.

இத்தனை உண்மைகளா, இத்தனை இன்னல்களா, என்ற வியப்பை தொடர்ந்தும் தந்து கொண்டே இருப்பவை மலையக எழுத்துக்கள்.

அந்த வகையில் மறுக்கப்பட்டவைகளின் இருத்தலை சதா நினைவூட்டிக் கொண்டே இருப்பவை சடகோபனின் சிறு கதைகள்.

**சொந்த மண்ணின் அந்நியர், நேர்கோடுகள் வளைவதில்லை, உன்னைக் கொன்றவர்கள் யார், இன்னும் எத்தனை நாள், செல்லி அல்லது மணிராசு, புன்னகை மறைந்த அந்த நாளில், கருஞ் ஜூலை** போன்ற பெரும்பாலான கதைகள் வரலாற்று துயர்களை மீட்டுத்தரும் கதைகள்.

ஒரு சிறுகதை என்பது ஜன்னல் ஊடாகக்காணும் காட்சிக்கொப்பானது. என்று கூறுவார்கள் சிறுகதைச் சாதனையாளர்கள்.

**கரையைத் தொடாத ஓடங்கள், நெஞ்சின் அலைகள், கரிச்சான் குருவி, செவப்புக்கலருல ஒரு காரு, சூடேறும் பாறைகள், சொல்லாமலே** போன்ற கதைகள் இன்னொரு சம்பவத்தை வாசகன் மனதில் பல்வேறு, உணர்வுகளுடன் வியாபிக்க வைக்கின்றன. செல்லி... தேன் மொழி போன்ற கதைகள் காதலை மையமாகக் கொண்டிருந்தாலும் வரலாற்றுணர்வுடனும் காதலுணர்வின் மென்மையுடனும் கூறப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர்பட்ட மக்களின் ஒரு பின்னமான தமிழ் வாசகர் களை மேலும் துயர்படச் செய்யாத முடிவுகளைக் கொண்டவை இவை.

படைப்பாற்றலுடன் கூடிய சடகோபன் அவர்களின் இவ்வெழுத்துக்களுக்கான உழைப்பு வியப்பதைத் தரு வது.

ஆறு நூல்கள் தந்திருக்கும் சடகோபனின் ஏழாவது நூல் இது என்பது இச்சிறுகதைகளின் சிறப்புக்கான சாட்சி ஆக முடியாது. ஆனாலும் இச் சிறுகதை நூலின் இலக்கிய இருப்புக்கும் கவனிப்புக்கும் இத் தொகுதியின் கதைகளே சாட்சியாக அமையும் என் பதை காலம் காட்டி நிற்கும்.

வாழ்த்துக்கள் சடா

என்றும் அன்புடன்

**தெளிவத்தை ஜோசப்**

தொ.பே: 0770248366

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....


| | | |
|---|---|---|
| | என்னுரை | ...09 |
| | அணிந்துரை | ...17 |
| 01. | நேர்கோடுகள் வளைவதில்லை | ...29 |
| 02. | சொல்லாமலே.... | ...49 |
| 03. | உன்னைக் கொன்றவர்கள் யார்? | ...59 |
| 04. | சூடேறும் பாறைகள் | ...73 |
| 05. | சொந்த மண்ணின் அந்நியர் | ...85 |
| 06. | நெஞ்சினலைகள் | ...99 |
| 07. | செவ்பு கலருல ஒரு காரு | ...121 |
| 08. | தேன் மொழி அல்லது இளம் பரிதி | ...131 |
| 09. | கருஞ் ஜூலை | ...141 |
| 10. | புன்னகை மறைந்த அந்த நாளில் | ...161 |
| 11. | கரிச்சான் குருவி | ...177 |
| 12. | இன்னும் எத்தனை நாள்...? | ...189 |
| 13. | செல்லி அல்லது மணிராசு | ...211 |
| 14. | கரையைத் தொடாத ஓடங்கள் | ...233 |
| 15. | சூரியன் சாட்சியாக | ...253 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிறநூல்கள்

***வசந்தங்களும் வசீகரங்களும்***
கவிதைத்தொகுப்பு (1998)
(மத்திய மாகாண சாகித்திய விருது பெற்றது)

***ஆயிரம் ஆண்டு கால மனிதர்கள்***
சிறுவர் நூல் - 2002 தேசிய கலை இலக்கிய பேரவை வெளியீடு

***உழைப்பால் உயர்ந்தவர்கள்***
சிங்கள நாவலின் மொழிபெயர்ப்பு
2008 ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றது

***கசந்த கோப்பி***
ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு
2011 ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றது

***எங்கள் கிராமம்***
மார்டின் விக்கிரமாசிங்கவின்
சிங்கள நூலின் மொழிபெயர்ப்பு
2012 ஆம் ஆண்டின் சாகித்திய விருது பெற்றது

***கண்டிச் சீமையிலே***
கோப்பிக்கால வரலாற்று ஆவணம்
வீரகேசரி - வெளியீடு - 2014

## வரவிருக்கும் நூல்கள்

***இரத்த வரலாறு***
(நாவல்)

***விசப் பரீட்சை***
(விஞ்ஞான புனைக்கதை-நாவல்)
விஜய் பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு

***சிங்களத்தில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்***
(அகராதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

# நேர்கோடுகள் வளைவதில்லை

"நாளைக்கு எப்படியாவது இந்தப் பிரச்சினைக் குத் தீர்வு கண்டாக வேண்டும். நான் சொன்னால் மற் றவர்கள் கேட்பார்கள். எடுத்த எடுப்பில் வேலையை நிறுத்திப்புட்டால் என்ன செய்வது.... அதையுந்தான் பார்க்கலாம்"

சீனிவாசகத்தின் நெஞ்சில் ஓடிய உரத்த எண்ணங் கள் போலவே அவனுடைய மண் வெட்டியும் பலமாக நிலத்தைக் கொத்திக் கொண்டிருந்தது.

எண்ணத்தில் எழுந்த சீற்றம் அவனறியாமலேயே அவன் செய்து கொண்டிருந்த செயலிலும் வெளிப் பட்டதால் மண்வெட்டி மிக வேகமாக மண்ணில் புதைந்திருந்த கருங்கல் ஒன்றில் தாக்கி பளீர் என்று தீப்பொறி எழுந்ததைக்கூட அவன் உணரவில்லை. சக்திக்கு மீறிய உழைப்பின் கடுமையால் விய-ர்வை பெருக்கெடுத்திருந்தது. தலையில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியின் ஊடாக கீழ்நோக்கி வழிந்த வியர்வைக் கோடொன்று மூக்கின் நுனிவரை வந்து அதற் கப்பால் செல்ல மார்க்கம் தெரியாமல் நிலத்தில் சிந்திக் கொண்டிருந்தது. அதனைத் துடைத்தெறிவதில் அவன் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

எழுபதுகளில் அரசாங்கம் கொண்டு வந்திருந்த காணிச் சீர்திருத்தம் மற்றும் காணி உச்சவரம்பு சட்டங்கள் காரணமாக பல தனியாரின் தேயிலைத் தோட்டங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமாகின.

அதேசமயம் தோட்டச் சொந்தக்காரர் ஒருவர் 50 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள தோட்டமொன்றை சொந்தமாக வைத்துக் கொள்ள மாத்திரம் சட்டம் இடமளித்தது. இதனைப் பயன்படுத்தி தோட்டச் சொந்தக்காரர்கள் பலர் தமது குடும்ப அங்கத்தினர்க ளின் பெயர்களில் தலா 50 ஏக்கர்கள் என எழுதி 200 ஏக்கர், 300 ஏக்கர் தேயிலைத் தோட்டங்களை சொந்தமாக வைத்திருந்தனர்.

இவை தவிர காணி பகிர்ந்தளித்தல், பல பயி ராக்கல் திட்டம் போன்றன காரணமாகவும் தோட் டங்கள் துண்டாடப்பட்டு ஆங்காங்கே உதிரி உதிரி யான தோட்டங்கள் உருவாகின. இந்தத் தோட் டங்களில் தொழில் புரிந்து வந்த பல்லாயிரக்க ணக்கான தோட்டத் தொழிலாளரும் வேறு தோட்டங் களுக்கு குடி பெயர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தொடர்ந்தும் தோட்டங்களில் வேலை செய்ய விரும்பாமல் வவுனியா, கிளிநொச்சி போன்ற பிரதே சங்களுக்குச் சென்று குடியேறினர். சிலர் வேறு தோட்டங்கள் கிடைக்காததால் அந்தந்த தோட்டங் களிலேயே கிடைத்த வேலைகளைச் செய்து கொண்டு தங்கி விட்டனர். சீனிவாசகம் போன்றவர்கள் இவ் விதம் தங்கிவிட்டவர்களே.

தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டதால் பாதிக் கப்பட்டவர்கள் இவர்களே.

சம்பள உயர்வுகளோ, சுகாதார வசதிகளோ, வீட மைப்புத் திட்டங்களோ இவர்களை அணுகியதாகத் தெரியவில்லை. இந்தச் சமாச்சாரங்கள் தோட்டத் தொழிலாளருக்கு எந்த அளவு கிடைத்திருக்கின்றன என்பது வேறு சமாச்சாரம்.

சீனிவாசகத்துக்கு அன்று கான் வெட்டும் வேலை. தேயிலை மலைகளில் மழைக் காலத்தில் ஓடிவரும் தண்ணீரை தேக்குவதற்கும் தேயிலை மரங்களின் வேர் பகுதிகளில் மண்ணரிப்பைத் தடை செய்வதற்கும் இடைக்கிடை கான் வெட்டப்படுகின்றது.

கான் வெட்டுதல், முள்ளு குத்துதல், உரம் போடு தல், புல் வெட்டுதல் முதலிய பராமரிப்பு வேலை களை ஆண் தொழிலாளர்களும், கொழுந்து பறித் தல் வேலையை பெண் தொழிலாளர்களும் செய்து வந்தனர். சில சமயங்களில் வேறு வேலைகள் இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாதபோது ஆண் தொழிலாளர்களும் கொழுந்து பறிக்க வேண்டும்.

சீனிவாசகத்துக்கு கான் வெட்டுவதை விட கொழு ந்தெடுக்கவே அதிகம் விருப்பம். இதற்கு விசேட மான காரணம் ஒன்றிருந்தது.

சீனிவாசகத்தின் குடும்பத்தினரையும் சேர்த்து சுமார் முப்பது குடும்பங்கள் அந்த சிறிய தோட்டத்தில் வேலை செய்து வந்தன. அதில் செல்லம்மாவின் குடும்பமும் ஒன்று.

செல்லம்மா, தோட்டங்கள் துண்டாடப்பட்டபோது எங்கெங்கோ தேடியலைந்துவிட்டு வேலை கிடைக் காமல் கடைசியாக இந்தத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தாள். அவளுடன் அவளது இளைய மகள் ராசாத்தியும் மூத்த மகள் காமாட்சியும், எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து பின்னர் இவர்களுடன் ஒட்டிக்கொண்டு விட்ட சுப்பு ஆகியவர்களும் வந் தனர். சுப்புவின் பெண்சாதியை யாரோ இழுத் துக் கொண்டு ஓடி விட்டதால் அவனது புத்தி கொஞ்சம் பேதலித்திருந்தது. அவனுக்கு சூனியம் வைத்துவிட்டு அவன் பெண்சாதி ஓடிவிட்டாள் என்ற கதையும் அவனைப் பற்றியுண்டு.

சீனிவாசகத்துக்கு செல்லம்மாவின் இளைய மகள் ராசாத்தி மேல் எப்பவும் ஒரு அனுதாபமிருந்தது. அவளும் இவனைப் பார்க்கும் போதெல்லாம் அந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தச் சின்னக் கரிய விழிகளை உருட்டி ஏதோ சேதி சொன்னது போல்! இவனும் புரிந்து கொண்டான். அவர்கள் இதுவரை நேரிடையாகப் பேசிக் கொண் டது கிடையாது.

சீனி என்று அந்தத் தோட்டத்தினர் அவனை ஏக வசனத்தில் அழைத்தாலும் அவன் மீது அவ ர்களுக்கு தனி மரியாதையுண்டு. அவனும் மற் றவர்களுடன் அடக்கத்துடனும் கௌரவமாகவும் நடந்து கொள்கிறவன்தான்.

ராசாத்தி மாத்திரம் இந்த மரியாதை உணர்வுகளை யும் தாண்டி தனது இதயத்து மெல்லுணர்வுகளில் அவனுக்கு இடமளித்திருந்தாள். இந்த சிறுசுகளின் இனந்தெரியாத கூத்துக்கள் பற்றி செல்லம்மாள் சாடை யாக புரிந்து வைத்திருந்தாலும் அதனை அவள் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ராசாத்தியை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக் கலாம் என்பதற்காகவே சீனி கொழுந்து மலைக்கு வேலைக்குப் போவதற்கு ஆசைப்படுவான்.

தேயிலை மலையில் கொழுந்து பறிக்கும்போது அவர்கள் சும்மா வாயைப் பொத்திக் கொண்டு வேலை செய்வது கிடையாது. எதையெதையா வது பேசிக் கொண்டோ... பெரும்பாலும் வம்புப் பேச்சுக்களாக இருக்கும். அல்லது பாடிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக சினிமாப் பாட்டுக்கள். முழுவதுமில்லாமல் முதலிரண்டு அடிகள் அல்லது ஒரு பந்தி எல்லோருக்கும் இப்படி கலகலப்பாக வேலை செய்வதால் மாச்சல் தெரியாது.

இடையிடையே "மொட்டு புடுங்காதே... நாரு காம்பு கிள்ளாதே... வங்கி ஒடிக்காதே" ரெட்டெல புடுங்காதே என்று கொழுந்து பிடுங்கும்போது எதைத் தவிர்க்க வேண்டும் என்பதை கங்காணி கோவிந்தசாமியின் குரல் திரும்பத்திரும்ப அறிவுறுத்திக் கொண்டே இருக்கும்.

கங்காணியின் குரல் ஒரு அதிகாரக் கட்டளையாக வந்தபோதும் அவர்களுக்கு அது நன்கு பழகி இருந்ததால் அதனை யாரும் சட்டை செய்வது கிடையாது. சில போதுகளில் அவர் உலகம் கண்டறியாத விரசமான வார்த்தைகளால் தவறாகக் கொழுந்து பறித்துவிட்ட சில பெண்களைத் திட்டித் தீர்த்து விடுவார். ஆனால் சில கணங்களிலேயே சிறிதும் மனக்கிலேசம் இல்லாதவாறு அதே பெண்களிடம் மிகுந்த உரிமையுடன் "ஒரு வாய்க்கு வெத்திலை இருந்தால் கொடு" என்று வாங்கிப் போட்டுக் கொள்வார். அந்தப் பெண்களும் எந்த விதமான வெவஸ்தையும் இல்லாமல் அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் செயல் அவர் செய்துவிட்ட தவறுக்கு பிராயச்சித்தம் போலவும் அதனை இவர்கள் மன்னித்து விட்டது போலவும் இருக்கும். இதனை இவர்கள் உணர்வுபூர்வமாக சிந்தித்து செய்வதில்லை என்றாலும் நீண்ட காலமாக அது அப்படித்தான் நடைபெற்று வருகின்றது.

எட்டு மணி நேரம் வேலை என்ற தொழிற் சட்டமெல்லாம் அவர்களைப் பாதிப்பதில்லை. அதிகாலை ஆறு மணிக்கு தோட்டக் காவல்காரன் தனது முறை காவலின் இறுதிச் சுற்றில் முடிவினை அறிவிக்கும் முகமாக ஒரு இரும்புத் துண்டை வைத்து "டொங்... டொங்... டொங்..." என்று ஓசை எழுப்புவான். இந்த ஓசை கேட்டு பதினைந்து நிமிடங்களுக்குள் தொழிலாளர்கள் அனைவரும் பிரட்டுக் களத்துக்கு செல்ல வேண்டும்.

முந்தியெல்லாம் அந்தத் தோட்டம் ஆயிரத்து இருநூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள பெரிய தோட்டமாக இருந்தது. தோட்டத்துக்கென சொந்தமாக கொழுந்தரைக்கும் தொழிற்சாலை ஒன்றுமிருந்தது.

காலையில் தொழில் தொடங்குவதற்கும் மாலையில் வேலை விடும்போதும் மத்தியானச் சாப்பாட்டு வேலைக்கும் ஆலைச்சங்கொலி எழுப்புவார்கள். மூன்று டிவிசன்களாக இருந்த அந்த தோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் சுமார் எழுநூறு தொழிலாளர்கள் வேலை செய்தார்கள்.

அப்போது சீனிக்கு பதினொரு வயதிருக்கும். தோட்டத்து பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலமது. திடீரென தோட்டத்தை அளந்து பிரித்து கொடுக்கப் போகிறார்கள் என்றும் அதற்கு அரசாங்கத்தில் இருந்து அதிகாரிகள் வரப் போகிறார்கள் என்றும் செய்தி பரவியது.

அந்தப் பகுதியில் இருந்த தோட்டங்களில் தொழிலாளர்கள் எல்லோரும் கவலையும் அதே சமயம் கோபமும் கொண்டார்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் ஏதேதோ பேச்சுவார்த்தைகள் நடந்தன. பேச்சுவார்த்தைகளில் அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டதாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால் தோட்டங்களைப் பிரித்துக் கொடுப்பது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை.

தோட்டத் தொழிலாளரும் தோட்டங்களை பிரிக்க அனுமதிப்பதில்லை என்பதில் பிடிவாதமாக இருந்தார்கள். அந்த விடயத்தில் அவர்களின் ஒற்றுமை வியக்கத்தக்கதாக இருந்தது.

தேயிலைத் தோட்டக் காணிகளை அளந்து பிரிப்பதற்கென நியமித்திருந்த அந்த துயரமான குறுதிதோய்ந்த சிவப்பு நாளும் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளரின் தீவிரமான எதிர்ப்பையும் அவர்கள் ஒற்றுமையையும் நன்கு தெரிந்து கொண்டிருந்த அரசாங்கம் நிலத்தை பிரிக்கவென வந்திருந்த அதிகாரிகளுடன் போலீஸையும் இராணுவத்தையும் துப்பாக்கிகள் சகிதம் அனுப்பி வைத்திருந்தது.

இவற்றையெல்லாம் கண்டு தோட்டத் தொழிலாளர்கள் கோபமடைந்தார்கள்.

சீற்றம் கொண்டார்கள்.

வெகுண்டெழுந்தார்கள்... விளைவு பாதையில் சென்ற வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பாலங்கள் தகர்க்கப்பட்டன. அதிகாரிகள் தாக்கப்பட்டனர். அவர்கள் வந்த வாகனங்கள் உடைக்கப்பட்டன.

இவற்றுக்கு மாறாக எதிர் தரப்பினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளைப் பொழிந்தனர். துப்பாக்கிகள் சீறிக் கொண்டு குண்டுகளைக் கக்கின. பலர் காயமடைந்தனர். ஒரு அப்பாவித் தொழிலாளியின் உயிர் பறிக்கப்பட்டது.

இறந்த தொழிலாளியின் மரணச் சடங்குகள் பிரமாண்டமாக ஒழுங்கு செய்யப்பட்டன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்றுகூடி தமது சக தொழிலாளிக்கு அஞ்சலி செலுத்தினர். அரசியல்வாதிகளும் தொழிற்சங்க பிரதிநிதிகளும், தலைவர்களும் மேடை போட்டு ஒலிபெருக்கி வைத்து அனுதாப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை நிகழ்த்துவதாகக் கூறி அரசியல் பேசி மாலை போட்டுக் கொண்டனர்.

அத்துடன் அன்றைய சோக சம்பவம் முடிவுற்றாலும் காணி பகிர்ந்தளிப்பதற்காக தோட்டங்கள் துண்டாடப்படுவது முடிவுறவில்லை. அது தொடரத்தான் செய்தது. தோட்டத் தொழிலாளர்கள் எவ்வளவுதான் ஒற்றுமையாக இருந்தபோதும் அந்த ஒற்றுமையின் சக்தியைப் பயன்படுத்தி தமது கோரிக்கையை வென்றெடுக்க தொழிற்சங்கங்கள் தவறிவிட்டன. தோட்டத் தொழிலாளர்கள் தம் விதியை நொந்து ஒரு நெடிய பெருமூச்சு விட்டுக் கொண்டு தொடர்ந்தும் தோட்டங்களில் தம் வியர் வையைச் சிந்தத் தொடங்கினர்.

அதற்கப்புறம் மிகச் சொற்ப காலம் தான் சீனியின் ஐந்தாம் வகுப்பு பள்ளி வாழ்க்கை தொடர்ந்தது. தோட்டங்கள் பிரிக்கப்பட்டபோது பல தோட்டப் பாடசாலைகளும் மூடப்பட்டுவிட்டன. அவற்றுள் சீனியின் பாடசாலையும் ஒன்று.

அந்தப் பாடசாலையின் எல்லா மாணவர்களும் எங்கெங்கோ அவர்கள் தாய் தந்தையர் சென்ற வழி பிரிந்து சென்றுவிட்டனர். அவர்கள் எல்லோரும் அதன் பின்னர் படிப்பைத் தொடர்ந்தார்களா என்பது சீனிக்குத் தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயமாயிற்று. சீனி அதன் பின்னர் படிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சநாள் கொழுந்து மலையில் வேலை செய்து வந்த தமது தாய் தந்தையருக்கு 'தேத்தண்ணி' (சர்க்கரை போடாத 'பிளேன்டி' அதனை அவர்கள் மத்தியான சாப்பாட்டு வேளைக்கு முன்பு சுமார் 11 மணியளவில் வெறும் தேங்காய் ரொட்டித் துண் டொன்றை கடித்துக் கொண்டு குடிப்பது வழக்கம்) கொண்டுபோய் கொடுக்கும் பணியைச் செய்து வந்தான். அல்லது தந்தையுடன் சேர்ந்து 'கொந்தரப்பு' புல் வெட்டுவான்.

இந்தக் காலத்தில் அவனது தந்தையும் மற்ற வர்களைப் போல் 'பத்துச் சீட்டை (தோட்ட வதி விட அத்தாட்சிப் பத்திரம்) தூக்கிக் கொண்டு பல தோட்டங்களில் வேலை தேடி அலைந்தார். அவருக்கு தோதான ஒரு இடமும் கிடைத்தபாடில்லை.

ஒருநாள் அவரும் 'கவ்வாத்து' (தேயிலை இலை கள் முதிர்ச்சியடையும்போது மட்டம் வெட்டுதல்) மலையில் வேலை செய்யும்போது உச்சி வெய்யிலில் மயங்கி, சுருண்டு விழுந்து செத்துப் போனார். அதன் பிறகு சீனியன் தாய் வேறு தோட்டம் தேடும் முயற்சியில் ஈடுபடவில்லை. சிறிது காலத்தில் சீனியும் எஞ்சியிருந்த சிலருடன் முழுநேரத் தோட்டத் தொழிலாளியாகி விட்டான்.

சீனியின் வாழ்வில் தோட்டங்கள் பிரிக்கப்படுவதற்கு முந்திய அவன் ஐந்தாம் வகுப்பு வரை படித்த காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பொற்காலம். அந்த நினைவுகளை சுமப் பதில் மாத்திரம்தான் அவன் சந்தோசப்பட்டான். சீரும் சிறப்புமாக தோட்டத்துக்கு ஒதுக்குப்புறமாக ஒரு காலத்தில் தோட்டத்தின் நடு நாயகமாக விளங்கிய, இப்போது பூசை புனஸ்காரங்கள் எதுவுமின்றி பாழடைந்து போயிருக்கும் அந்த மாரியம்மன் கோ யிலை மறக்கவே முடியாது. வருடத்தில் எத்தனை கொண்டாட்டங்கள், திருவிழாக்கள், பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி, தைப்பூசம், வருடாந்த அம்மன் கரகம்பாலித்தல், சப்பரம், சாமி தூக்குதல், பஜனை, கோவிந்தநாம சங்கீர்த்தனம், காமன்கூத்து, ஆடிபதினெட்டு, கார்த்திகைத் தீபம், கவ்வாத்து மலை தேயிலை மிளாரெல்லாம் மூன்றாள் உயரத்துக்கு வைத்துக்கட்டி சொக்கப்பனை கொழுத் துதல், சூரசம்ஹாரம் இன்னும் எத்தனை.தப்படித்த லும், இதற்கு ஏறுக்கு மாறாக ஆடிய சிறு பிள்ளைத் தனமான சதுராட்டங்களும் எல்லாம் அந்த அம்மன் கோயிலைச் சுற்றி எத்தனை கதைகள், எத்தனை நினைவுகள்.

இப்பவும் சிலநேரம் அந்த கோயில் பக்கம் வேலை மெனக்கெட்டு சீனி போய் வருவான். கதவு இற்றுபோய் உடைந்து சிதிலமடைந்திருந்தது. சுவர்கள் காரை பெயர்த்து ஆங்காங்கே வீறுவிட்டிருந்தன. கூரையின் தகரங்கள் கறல்பிடித்து ஓட்டை விழுந் திருந்ததால் அதனூடாக வந்த சூரியக் கீற்றுகள் நிலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஆயிரம் நிலாக்களை இறைத்துவிட்டதுபோல் தோற்றம் தந்தன. சுவற்று மூலைகளில் சிலந்தி வலைகள் அடர்த்தியாகப் படர்ந்திருந்தன.

அம்மன் சிலைக்கென்று தனியான கர்ப்பக் கிருகம் கிடையாது. உள்ளிருந்த ஒரு மேடையில் கற்றுக் குட்டித்தனமாக செதுக்கப்பட்டதொரு அம்மன் சிலை. அதனைச் சுற்றி எப்போதோ சாத்தப்பட்ட அம்மனுக்கு விருப்பமான சிவப்புப் பட்டுத்துணி சாயம் வெளுத்து இற்று பாதி கிழிந்திருந்தது. இவற்றையெல்லாம் மீறி நாலாபுறமும் வளர்ந்துவிட்ட கரையான் புற்றுக்கள். சிலவற்றில் பாம்புகள் வாழ்ந்திருந்ததன் அடையாளம்.

இவையெல்லாம் கோயிலின் ஜீவனற்ற தன்மையினை பூதாகரமானதாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். சீனி மெல்ல கோயிலுக்குள் எட்டிப்பார்க்கும்போது சற்றே மனதில் பய உணர்வு தோன்றினாலும் 15 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்திருந்த ஜீவிதத்தின் உன்னதங்கள் உடனேயே அவன் மனதை ஆக்கிரமித்துக் கொள்ளும். சில நிமிடங்கள் அந்த பசுமை நினைவுகளில் அவன் லயித்துப் போய் மீளும்போது அவனையறியாமல் அவன் கண்களில் நீர் வழிந்தோடியிருக்கும். அது சோகத்தினாலா... சந்தோசத்தினாலா என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் அதனை அவன் துடைத்து விட்டுக்கொள்வது கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனி ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தான். இன்று வேலைவிட்டதும் எல்லோரும் கூடி ஒரு முடிவுக்கு வந்து விடுவதென்றும் காலையில் பிரட்டுக்கலைக்க முதலாளி வரும்போது பிரச்சினையை கிளப்புவ தென்றும் அவன் மனதுக்குள் திட்டம் உருவானது.

அவர்கள் தங்களுக்குள் ஏதும் பிரச்சினைகள் பற்றி பேசுவதென்றால் பிரட்டுக்களத்தை ஒட்டியிருக்கும் பிள்ளை மடுவத்தில்தான் கூடுவார்கள். பொதுவாக முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏதும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதென்றாலும் அது சீனி மூலம்தான் நடக்குமாதலால் அவன்தான் அவர் களின் தலைவன்போல் தொழிற்பட்டு வந் தான். அதனால் அவன் சொல்லுக்கு எல்லோரும் கட்டுப்பட்ட வர்களாகவே இருந்தனர்.

தோட்டத்தில் நிர்வாகம் என்று பெரிதாக ஒன்றும் கிடையாது. தோட்டத்தின் செயல்பாடுகள் அனைத் துக்கும் முதலாளியே பொறுப்பாக இருந்தார். அவ ருக்கு உதவியாக ஒரு மனேஜர் இருந்தார். முதலாளி யின் பங்களாவின் ஒரு பகுதியே அலுவலகமாக வும் இருந்து வந்தது.

அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சிறிதளவு சம்பள உயர்வுகளும் அவர்களை எட்டவில்லை. மாதத்தில் *15* நாட்களுக்கு குறைவாகவே அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் வழங்கப்பட்டன. ஊழியர் சேமலாப நிதிக்குக்கூட அவர்களை பதிவு செய்து கொண் டிருக்கவில்லை. அநேகமாக எல்லா தொழிலாளி குடும் பங்களுமே முதலாளிக்கு கடனாளிகளாக இருந்தன. அதனால் ஒரு கொத்தடிமை முறை அமைப்பே அங்கு காணப்பட்டது.

சீனி எல்லோருக்கும் சொல்லியனுப்பியிருந்தப டியே மாலை ஐந்தரை மணிக்கு எல்லோரும் பிள்ளை மடுவத்தில் கூடியிருந்தனர். இருட்டுப்பட்டு விட்டால் பேசுவதற்கு வசதியாக ஒரு பெற்றோல் மாக்ஸ் லாம்பும் எடுத்து வரப்பட்டிருந்தது.

எல்லோரிடமும் அபிப்பிராயம் கேட்டதன் பின்னர் சீனி முடிவாகச் சொன்னான். "என்னா சொல்றேன்னா கவன்மென்ற் தோட்டங்கள்ல எல்லாம் கூலி ஒசத்தி இருக்கு. மாதம் இருவத்தியாருநாள் வேலை கொடுக் கறாங்க. இதுல முதலாளிக்கி நஸ்டம் ஒன்றும் கெடை யாது. நாம ஒழைக்கிறதுக்குத்தான் கூலி கேக்குறோம். நாயமா கேட்டுப் பாப்போம். ஆவலையானா வேற மாதிரி வேலையைக் காட்ட வேண்டியதுதான்" எல் லோரும் தலையாட்டினார்கள். கங்காணி கோவிந்த சாமி மாத்திரம் எல்லாத்தையும் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்தார். நீண்ட நாட்களாகவே அவர் முத லாளிக்கு இரண்டாம் படை வேலை செய்வது சீனிக் கும் மற்றவர்களுக்கும் தெரியும். அன்றும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து சென்றபோது அவர்கள் பேசிக் கொண்ட விடயம் முதலாளிக்கு அன்றிரவே தெரிந்துவிடும் என்பதும் அவர்கள் புரிந்து கொண்ட விடயம்தான்.

திட்டமிட்டிருந்தபடியே அதிகாலையில் பிரட்டுக் கலைக்கும் போதே ஆரம்பித்துவிட்டான் சீனி.

"ஐயா... எங்கள் தினக்கூலியை கவுருமெண்டு கணக்குக்கு ஒசத்திக் கொடுக்க..."

இடைமறித்தார் முதலாளி.

"அதெல்லாம் சரிப்படாது. நீயெல்லாம் நேத்து பேசின விசயம் நாங் கேள்விப்பட்டது. நீ இல்லாட்டி நாங் வேற ஆள் போட்டு வேலை செய்யறது"

"வேற ஆளுங்க இங்கே நுழைந்தால் நடக்கிறதே வேற" அதே சூட்டோடு சீனியும் பதிலளித்தான்.

"மெனேஜர்... இவங்க ஒழுங்கா வேலை செய்யறதுன்னு சொன்னா வேல கொடுக்கிறது. இல்லாட்டி வேலை நிப்பாட்டறது. நாங் போறது" முதலாளி கொதிப்புடன் சொல்லிவிட்டு மோட்டார் சைக்கிளை மிகுந்த சத்தத்துடன் கிளப்பிக் கொண்டு போய் விட்டார். சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். மனேஜரும் கொஞ்சநேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு போய் விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவையும் தான் ஒருவனே சிந்தித்து திட்ட மிட்டு செய்துவிட்ட சீனி மேற்கொண்டு என்ன செய்ய லாம் என்று கவலைப்பட்டான். ஆனால் இதுவரை தான் செய்துவிட்ட விடயத்தில் ஒரு மிகப்பெரிய நோக்க மும் நியாயமும் உரிமையும் இருக்கின்றது என்ப தில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந் தது.

தோட்டத்தில் வேலை நடந்து ஐந்து நாட்கள் ஆகிவிட் டன. காலையில் மனேஜர் மட்டுமே பிரட்டுக் களத் துக்கு வந்து சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்து விட் டுப் போனார்.

இந்த ஐந்து நாட்களில் தோட்டத்தின் சுமுக உறவு பாதித்திருந்தது. கங்காணி கோவிந்தசாமி மாத்திரமே எல்லா வீடுகளுக்கும் போய் ஏதோ உபதேசம் பண்ணி வருவதாகக் கேள்விப்பட்டான் சீனி.

அதுவரை அவனிடம் அன்பாய் பழகியவர்கள் பலர் அவனைக் குற்றவாளியைப் பார்ப்பது போல் பார்ப்பதாக அவன் உணர்ந்தான். இவர்களுக்கு என்ன நடந்தது என்று அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

இந்த சில நாள் பரபரப்பில் அவன் ராசாத்தியையும் அவள் கருவிழிகளையும் சந்திக்க முடியவில்லை. அவன் மெல்ல செல்லம்மாவின் வீடு நோக்கி நடந் தான். செல்லம்மாக்காவிடம் விபரம் விசாரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அப்படியே ராசாத்தியையும் ஒரு பார்வை பார்த்துவிட வேண்டுமென்பது அவன் எண்ணம்.

செல்லம்மாவின் வீடு பதினாலாம் நம்பர் லயத்தில் வலது கோடியில் இருந்தது. அந்த லயம் சற்று பள்ளத்தில் இருந்ததால் தூரத்தில் ரோட்டு மேல் இருந்தே அதனை பார்க்க முடியும்.

அந்த வீடு அன்று வழக்கத்துக்கு மாறாக கலகலப் பாக இருந்தது. செல்லம்மாவின் மூத்த பெண் காமாட்சி புதுப் பொலிவுடன் காணப்பட்டாள். ராசாத்தி யைத்தான் கண்ணிலேயே காணவில்லை.

"ராசாத்தியை எங்கே காணல" என்று கேட்டான் சீனி.

"அது இனிமே வேலைக்கு வராது. மொதலாளி வூட்டு தம்பி கொழும்புல இருக்காக இல்ல. அவுக வூட்ல வேலைக்கு வுட்டிருக்கேன். நம்ம காமாட்சி கல் யாணத்துக்கு மொதலாளி ரெண்டாயிரம் ரூவா கொடுத் திருக்காரு. அப்புறம் நம்ம ஆளுங்க மொதலாளிகிட்ட பட்டிருக்கிற கடன் எல்லாம் தள்ளுபடி செஞ்சிட்டாங் கலாம். நாளைக்கி எல்லாத்தையும் வேலைக்கு வரச்சொல்லி கங்காணி வந்து சொல்லிவிட்டுப் போறாரு"

செல்லம்மா சொல்லச் சொல்ல சீனி பொறுமை இழந்தான். "அப்படீன்னா நீங்கெல்லாம் நாளைக்கு வேலைக்குப் போகப் போறீங்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா நீ கேக்கரதுல என்னா நாயம் இருக்கு சீனி. இப்பவே வூடுங்கல்ல சமைக்கிறதுக்கு அரிசி இல்லை"

அவள் தொடர்ந்து பேசியதைக் கேட்க சீனி அங்கிருக் கவில்லை. அவன் தன்னிடமிருந்த மிகப் பெரிய சொத்து ஒன்று பறி போய்விட்டது போல் உணர்ந்தான். முதன் முறையாக தான் பலவீனப்பட்டுவிட்டதுபோல் தோன்றியது.

அடுத்தநாள் காலை ஆறு மணி. வழக்கம் போல் காவல்காரனின் மணிச்சத்தம் கேட்டது. எல்லோ ரும் பெரட்டுக்களம் செல்வதை உணர்ந்து சீனி யும் என்ன செய்வது என்று தெரியாமலேயே எழு ந்து சென்றான். எல்லோரும் வரிசையாக பெரட்டுக் களத்தில் அவரவர் இடத்தில் வரிசையாக நின்றிருந் தனர்.

மனேஜர் ஒவ்வொருவராகப் பெயர் கூப்பிட்டு அவர வர் எந்தெந்த மலைக்கு என்ன வேலைக்குச் செல்ல வேண்டுமென 'பெரட்டுக் கலைத்துக்' கொண்டிருந் தார். முதலாளி வந்திருக்கவில்லை.

சீனியின் முறை வந்தபோது அவன் பெயரை மனே ஜர் கூப்பிடவில்லை. அவனை சற்றே ஏறிட்டுப் பார்த் தார். நிதானமாக அவர் வாயில் இருந்து சொற்கள் வெளி வந்தன.

"சீனிக்கு இனிமேல் வேலை கிடையாது. வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கக்கூடாது என்பது முதலாளியின் உத்தரவு"

சீனி மனேஜரை சற்று நேரம் முறைத்துப் பார்த் தான். பின்னர் அவ்விடத்தில் இருந்து வெளியேறி-னான். இந்த இடத்துக்கு தான் இப்போது வந்தே இருக்கக்கூடாது என்பது மட்டும் அவன் மனதில் உறைத்தது.

சீனி தன்னந்தனியனாய் நடந்தான். இதுவரை உணர்ந் தறியாத ஒரு தனிமை உணர்வு அவனை பீடித்திருந் தது. அவன் கால்கள் தளர்ந்தபோது எதிரில் காணப் பட்டது அந்த பாழடைந்த அம்மன் கோயில். அவனு க்கு அப்போதைக்கு ஆறுதலளிக்கக் கூடியது அது ஒன் றுதான்.

**வீரகேசரி**
**1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

# சொல்லாமலே...

அந்த சூட்கேசைப் பாக்க பாக்க எனக்கு அழுகை அழுகையா வருது. அத நெருப்பு வைச்சி கொளுத்திரலாமான்னு கூட நெனச்சேன். அம்மா வெளிநாட்டு வேலைக்கு போறதுக்கு எல்லா சாமான் களையும் அதுலதா எடுத்து வைச்சிருக்கா. இன்னும் ஒரு கெழமைல எங்கள எல்லா உட்டுபுட்டு அவ போயிடுவா.

இந்த ஒரு கெழமையாகவே அம்மாவோட நான் ஒன்னுமே பேசல. பேச முடியல. பேச வாய் தொற ந்தா அழுகையும் விசும்பலுந்தா வருது. இந்த அம்மா இப்ப ஏன் வெளிநாட்டுக்கு போவனும்.

எங்கள படிக்க வைக்கிறதுக்கு அம்மா படுற கஸ்டம் தெரியாம இல்ல. எங்க அப்பா நா ஏழு வயசா இருக்கும் போது கவ்வாத்து மலையில வேல செஞ்சிக்கிட்டிருக்கிறப்ப பாம்பு கடிச்சி செத்துப் போயிட்டாரு. அதுக்கப்புறம் எங்களுக்கு எல்லாமே எங்க அம்மாதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பேரு சரோசா. எனக்கு இப்போ பதிமூனு வய சாவுது. எட்டாங் கிளாஸ் படிக்கிறேன். எனக்கு பின் னால் ஒரு தங்கச்சியுந் தம்பியும் இருக்காங்க. அவுங் களையும் அம்மா நேசரியில சேத்திருக்காங்க. நாங்க நல்லா படிச்சி பெரியாளாவனும்னு அம்மா அடிக் கடி சொல்லுவாங்க.

அம்மா அப்படி சொல்லுறதுல ஒரு காரணமிருக்கு. அம்மா பதினோராங் கிளாஸ்ல நல்லா பாஸ் பன் னாங்களாம். பன்னண்டாங் கிளாஸ் போக நெனச் சபோது அவங்களை அவங்க அப்பா கட்டாயப்ப டுத்தி எங்கப்பாவுக்கு கலியாணம் பண்ணி கொடுத்திட் டாங்களாம். இல்லாட்டி டாக்டர் படிப்பு படிச்சிருப்பாங் களாம்.

எனக்குனா படிக்கிறதுல கொஞ்சங் கொட இன்ட ஸ்ட்ரே இல்ல. ஆனா அம்மாவ பாத்தா பாவமா இரு க்கு. இதப்பத்தியெல்லா நெனைக்க எந் தங்கச் சிக்கும் தம்பிக்கும் வெவரம் போதாது. நா தான் அவங் கள நேசரியில உட்டுட்டு அப்புறமாதா உஸ்கோலுக்கு போவேன்.

“நாங்கள் இருக்குறது ஒரு தரித்திரம் புடிச்ச தோட் டம், ராசாத் தோட்டம்னு பேருதா. ராசாவும் இல்ல மந்திரியும் இல்ல. தொரயுங் கன்டாக்கும் நாசமா போன வனுங்க. எனக்கிட்ட மட்டும் வாலாட்னா ஒட்ட அறுத்துரு வேன்” அம்மா அடிக்கடி கோவமா சொல்லுவாங்க. அவுங்க ஏன் அப்பிடி கோவப்படுறாங்கனு எனக்கு வெளங்கல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அப்படி கோவமா இருக்கிற நேரத்தில சொல்ற மத்த வார்த்தங்கதா "நாதாரி களுதங்க... சாண்டைய குடிக்கி, தூமிய குடிக்கி மக புள்ள ..." அம்மா அப்பிடி ஆத்திரத்துல வையும்போது காளி மாதிரி இருப்பா. எங்களுக்கு கிட்ட போக பயமா இருக்கும்.

ஆனா அம்மா ரொம்ப நல்லவங்க, ரொம்ப அன்பா இருப்பாங்க. அப்பப்ப எங்கள கட்டிப்புடிச்சி ஏஞ் செல்வங்க....ஏய் கண்ணுங்க..." அப்டீன்னு சொல்லி நச்சி நச்சின்னு முத்தங் கொடுப்பாங்க. எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கும் தெரியுமா?

இப்ப அம்மா எதுக்கு வெளிநாட்டு வேலைக்கு போவனும்னு புரியல. எங்கள உட்டுட்டு அவ மட்டும் அங்க போயி சந்தோசமா இருப்பாவா? அம்மா கிட்ட நாளு வார்த்த நறுக்குன்னு கேக்கலாம்னு பாக் கிறே. முடியலையே....

அந்த சூட்கேஸ் கட்டல் மேல இன்னும் அநா தையாதா இருக்கு. கொளுத்தி புடலாமா? எம் மனசு கேக்கல. அம்மா ஏன் வெளிநாட்டுக்கு போவனும்.

அம்மா விடிய காலம் கோழி கூவுறத்துக்கு மொதல் லயே எழுந்திருச்சிருவாங்க. காலச்சாப்பாடு, பகல் சாப் பாடு செய்வாங்க. பெருசா ஒன்னுமில்ல ரொட்டியும், சம்பலும், சோறுந்தா. பொறகு நாங்க உஸ்கோலுக்கு போற வேலைங்க, அதுல மட்டும் அம்மா ரொம்ப ஆர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமா இருப்பாங்க. துணிமணி, உஸ்கூல் பேக், கொப்பி புத்தகங்கள்....ரொம்ப சுத்தமா இருக்கனும்.

அம்மாவுக்கு கொழுந்து மலையில் கொழுந்தெடுக் குற வேலதான். சூரியன் உச்சிக்கு வரும்போது ஒடம் பெல்லாம் நடுங்குமாம். ஆனா, அந்த கங்காணிப் பய லாலதான் அதிக தொல்லைனு சொல்லுவாங்க. அவன் பேச்சே கேக்கல்லாட்டி ஏதாவது நொட்டை தேடி பேர்போட மாட்டேன்னு மெரட்டுவானாம். ஒரு நா அப்படி மெரட்டி கூட்டிக்கிட்டு போய் மார்ல கைவச்சு அழுத்தினானு அம்மா அழுதுகிட்டிருந்தா... ரெண்டு நாளா வேலை க்குப் போகல. பொறகு எங்க ளோட மொகங்கள பாத்து பாத்து பெருமூச்சு விட்டு கொஞ்ச மனச தேத்திக்கிட்டு வேலைக்கு போனா... கொஞ்ச நாளாவே அவ மனசு வேதனையால கஸ் டப்படுறது எனக்கு வெளங்குது.

ஒரு நா அப்பிடிதா.... அந்த களவாணி பய தொர பங்களாவுல வேலைக்கு வரச்சொல்லி கூப்பிட்டனுப் பியிருக்கான்னு அம்மா போனா. பொறகு அரவாசியி லேயே அழுதுகிட்டு திரும்பி வந்துட்டாங்க. நா "என்னம் மானு...." கேட்டேன். அம்மாவுக்கு கோவம் பொத்துக் கிட்டு வந்திருச்சி. கன்னத்திலயும் முதுகுலயும் பெலமா அறைஞ்சாங்க, தங்கச்சிக்கும் தம்பிக்கும் கூட அடி விழுந்திச்சி....அன்னைக்கு முழுவதும் அம்மா அழுதுக் கிட்டிருந்தாங்க. கட்டல்ல சுருண்டு படுத்துட்டாங்க... அதுக்கு பொறகு அம்மா மொகத்தில மிஞ்சியிருந்த கொஞ்ச சந்தோசமும் இல்லாம போயிருச்சி. அடிக் கடி கடுமையா யோசிச்சிக்கிட்டு உக்காந்திருப் பாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்குப் பொறகுதா அந்த வெளிநாட்டுக்கு ஆள் அனுப்புற புரோக்கர் மனுசன் வந்தான். அவன எனக்கு கொஞ்சம் கூட புடிக்காது தாடி, மீசை வளர்த்து, கறுப்பா, மூஞ்சில எண்ணை வடிஞ்சு, உதடுகள் பெருசா, கொரங்காட்டம் இருப்பான். அவன் தான் அம்மாவுக்கு பாஸ்போட் கொண்டு வந்து கொடுத்தான்.

தோட்டத்துல எல்லா நாளும் வேல கொடுக்கமாட்டான். கெழமையில நாளு நாளைக்குத்தா அம்மா வேலைக்கு போவாங்க. மத்த நாளைங்கள நாட்டுப் புறத்துக்கு அம்மா கூலி வேலைங்களுக்கு போவாங்க. நாட்டு சிங்களவங்களோட சிறு தேயிலைத் தோட்டங்களையும், அவங்களோட மரக்கறித் தோட்டங்களையும் அம்மாவுக்கு வேலை கெடைக்கும். அப்படி போனாங்கன்னா பகல் சாப்பாட்டுக்கு வரமாட்டங்க. அங்க கெடைக்கிறத சாப்பிட்டுட்டு அந்தியானதும் தான் வருவாங்க. தங்கச்சிக்கும் தம்பிக்கும் நாந்தான் தேத்தண்ணி ஊத்திக் கொடுக்கணும்.

ஒரு நா அப்புடித்தான் கேத்தல்ல தண்ணி கொதிச்சதும் சும்மா கையால தூக்குனனால கை சுட கேத்தல தடால்னு கீழே போட்டுட்டேன். கொதி தண்ணி கால்ல ஊத்தி ரெண்டு காலும் நடக்க முடியாம வெந்து போச்சு. மூனு மாசமா ஆஸ்பத்திரியில இருந்தேன். அம்மாகிட்ட இருந்து கவனிச்சுப் பார்த்தாங்க. அதுக்கப்புறம் நாட்டுக்கு வேலைக்குப் போனா கூடு மானவர வெள்ளனவா வந்திருவாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அம்மா எந்த நாளும் வேலைக்கு போகாம வீட்ல இருக்கனும்னு தான் விருப்பம். ஆனா என்னா செய்யறது. எங்களுக்குத்தா அப்பா இல்லையே. அம்மா வேலை செஞ்சாதான் சாப்புடலாம்.

எனக்கு இருக்குற பெரிய பிரச்சினை என்னான்னா அம்மா வெளிநாட்டுக்கு போனா நாங்க மூணு பேரும் எங்க அத்த வூட்டுலதா தங்கனும். எனக்கு அத்த வூட்டுக்கு போறதுனாலே புடிக்காது. அதுக்கு காரணம் அந்த சண்டாலி மவ பெத்த புள்ள, களவாணிப்பய சின்ராசுதான். அவன எனக்கு மாமானு கூப்பிடவே கொமட்டிக்கிட்டு வருது. நா அங்க எப்ப போனாலும் யாருமில்லாத நேரத்துல எம் பாவாடைக்குள்ள கைய போட்டு உள்ளுக்குள்ள தொடையில கிள்ளுவான். நாசமா போன பய. எனக்கு அழுக அழுகையா வரும். யாருக்கிட்டயும் சொல்லவும் முடியாது. நா அழுதுக்கிட்டு ஓடியாந்திருவேன். சில நேரம் அம்மா கேப்பாங்க ஏன்டி அழுவுறேன்னு. நா ஒன்னும் சொல்ல மாட்டேன். எப்படி சொல்றது. இங்கினைதான் அவன் கைய வைச்சி கிள்ளுனான்னு. அம்மாவுக்கு கோவம் வந்திச்சின்னா அவங்க என்ன செய்வாங்கனு சொல்ல முடியாது. இப்ப அம்மா வெளிநாடு போய்ட்டா நா அவன் கிட்ட மாட்டிப் பேன்னு நெனைக்க பயமா இருக்கு. இப்ப கூட நா அழுரத விட்டா வேற என்ன செய்ய முடியும்?

அந்த சூட்கேஸ் கட்டல் மேல இப்பவும் அநாதை யாதா கெடக்கு. நெருப்பு வைச்சிரலாமா? எம் மனசு கேக்கல. இந்த அம்மா ஏன் வெளிநாட்டுக்கு போவனும்னு புரியல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கப்புறம் அடுத்ததா எனக்குப்புடிச்சது சின்னத்தம்பிதான். சின்னத்தம்பிங்கிறது அவன் பேரு கெடயாது. அவன் பேரு நட்ராஜ் தான். ஆனா அவுங்க ஊட்ல அப்பிடி கூப்பிட்டு கூப்பிட்டு தோட்டத்துல எல்லாரு அவன செல்லமா சின்னத்தம்பின்னு தான் கூப்பிடுவாங்க.

அவன் எங்க உஸ்கூல்ல ஒம்பதாங் கிளாஸ் படிக்கிறான். உஸ்கூலு ஒரு கட்டைக்கு அங்கால இருக்கிறதால நாங்கெல்லா சேர்ந்துதா உஸ்கூலுக்குப் போவோம். மத்த நேரத்திலயும் அவனோடதா நா சேந்து வெளயாடுவேன். நாங்க எப்பவும் ஜோடியா இருக்கிறத பாத்து எல்லாருங் கேலி பண்ணுவாங்க. கலியாணங் கட்டிக்க போறீங்களான்னு கேப்பாங்க. வெக்கமாத்தா இருக்கும். ஆனா நாங்க சேர்ந்து வெளயாடறத நிறுத்தறது இல்ல.

எங்க மாமா சின்ராசு மாதிரி சின்னதம்பி மொறடன் இல்ல. ஆனா ஏதாவது சுட்டித்தனம் பண்ணி வீட்ல எந்த நேரமும் அடிவாங்குவான். அப்ப வெல்லாம் எங்கிட்டதான் ஓடி வருவான். நானும் அவனும் காடு, மேடு, ஆறு, கொளம் எல்லா ஓடித்திரிவோ. என்னவோ தெரியாது அவனோட கைய புடிச்சிக்கிட்டு சுத்தித்திரியறதில உள்ள சந்தோசம் வேற ஒன்லயும் கெடைக்காது. ஆம்பள பயலோட நா சுத்திகிட்டு அலையிறேன்னு அம்மா சில நேரம் ஏசுவாங்க. ஆனா தடுக்க மாட்டாங்க.

எங்கம்மா கிட்ட எனக்கு பிடிக்காத விசயந்தா நாங்க வெளையாடிக்கிட்டிருக்கிறப்போ எடயில கூப்பிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்கா திரிவித்தர சொல்லுறதும் இல்லாட்டி கீர பிக்க சொல்லுறதும், சட்டி பானையெல்லாம் கூட கழுவ சொல்லுவாங்க. கைலயெல்லாம் கரி அப் பிப் போயிருக்கும். எல்லா பிள்ளைகளும் வெளையாட யில நா மட்டும் எப்பிடி வேலை செய்றது? பிள்ளை கள் கத்திக் கூச்சல் போட்டு விளையாடுற சத்தம் காதுக் குள்ள கேக்குமே தவிர வேலை செய்றதுக்கு கையும் ஓடாது காலும் ஓடாது. என்னோட துக்கம் அம்மாவுக்கு வெளங்கலையேன்னு கவலைப்படுவேன்.

ஆனா எல்லா நேரமும் அப்படி இல்ல. நா வேலை செய்யாம பேயறைஞ்ச மாதிரி எதையோ நெனச் சிக்கிட்டு உக்காந்திருக்கிறத பார்த்தா அவுங்க மனசு எளகிடும். "சரி...சரி...போ வெளையாடிட்டு வா"ன்னு அனுப்பிடுவாங்க. நா எந்திருச்சி ஓடிப்போய் அம் மாவ அணைச்சி வாயில இருந்த எச்சியெல்லாந் தெரட்டி அவுங்க கன்னத்தில 'பசக்' குன்னு ஒரு முத் தம் கொடுத்திட்டு சிட்டா பறந் திடுவேன்.

இப்ப எங்க அம்மா எங்களை இங்கே தவிக்க விட் டுட்டு வெளிநாட்டுக்கு போகப்போறா. இத எப்பிடி எங் களால் தாங்கிக்க முடியும். அவுங்களாலயுந்தா தாங் கிக்க முடியுமா?

அந்த சூட்கேஸ் பெட்டி கட்டில் மேல இப்பவும் அநாதையாதா கெடக்கு. நெருப்பு வைச்சிரலாமா? எம்மனசு கேக்கல. அம்மா ஏன் வெளிநாட்டுக்கு போவ னும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு காலையிலிருந்து யாரும் யாரோடயும் பேசல. தம்பியும் தங்கச்சியும் கூட வெளயாடுறதுக்கு போகல. இன்னைக்கு மட்டுந்தா அம்மா எங்களோட இரு ப்பா. நாளைக்கு காலமையில பிளேன் ஏறனும்.

அம்மா குத்துக் கல்லாட்டம் குந்திக்கிட்டு பிள வுசு தெச்சிக்கிட்டிருந்தா. அவங்களோட மூக்கில் வேர்த்து வெளிச்சித்துல மின்னிக்கிட்டிருந்திச்சி. ஊசித் துவாரத்தில நூல போட முடியாம கஸ்ட் டப்பட்டாங்க. என்னால தாங்க முடியல. நா ஓடிப் போயி ஊசியையும் நூலையும் பறிச்சி நூல ஊசி யில போட்டுக் கொடுத்தே. அப்பதான் அம்மா என்ன நிமிர்ந்து பார்த்தாங்க. அவங்க ரெண்டு கண்லயும் நீர் நெரம்பி இருந்திச்சு. என்னால அந்த கண்கள நேரா பார்க்க முடியல. என் கண்லயும் நீர் வந்திருச்சி. விசும்ப முடியாத அளவுக்கு தொண்டை அடைச்சுக்கிச்சு.

அம்மா இரண்டு கையாலயும் என்னை இறுக்கி அணைச்சுக்கிட்டாங்க. அவங்க கண்கல்ல இருந்து கண்ணீர் வடியிறத அவங்க தொடைக்க நெனைக்கல. நானும் அவங்கள இறுக்கி அணைச்சுக்கிட்டேன்.

அம்மாவோட அந்த அணைப்பு சூடா இருந்திச்சி. அம்மா பேசாட்டியும் அவங்க மனசில ஓடர எல்லா எண்ணங்களும் எனக்கு வெளங்கின மாறி இருந்திச்சு. அவங்க ஒரு சரியான காரணத்துக்காகத்தான் வெளி நாடு போக தீர்மானிச்சிருக்காங்க. அவங்க எவ்வளவு நல்லவங்கனு என்னைவிட வேறு யாருக்கு தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா எங்களோட முன்னேற்றத்துக்காக எவ்வளவு கஸ்டம் வந்தாலும் தாங்கிக்குவாங்க. இப்பவும் அவங்க எங்க சந்தோசத்துக்காகத்தான் வெளிநாடு போறாங்க.

அப்பா இல்லாத எங்கள வளர்த்து படிக்க வைக்க அவங்க படுற கஸ்டம் எம் மனசுக்கு தெரியாம இல்ல. வெயில், மழ, குளிரு, அட்டக்கடி எல்லாத்தையுந் தாங்கிக்கிட்டு அவங்க ஒழைக்கிறாங்கன்னா அது நாங்க படிச்சி பெரியவங்களா வரனுங்கிறதுக்குத்தா.

அந்த சூட்கேஸ்ல அம்மா எடுத்து வெச்சி இருக்கிறது அவங்களோட துணிமணிகள மட்டு மில்ல. எங்களோட மனசுகளையுந்தா. அம்மா எவ்வளவு காலத்துக்கு போயிருந்தாலும், எவ்வளவு காலத்துக்கு பாக்காம இருந்தாலும் அம்மா மனசுல நாங்களும், எங்க மனசுல அம்மாவும் இருப்பாங்க.

■

**மல்லிகை**
**2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

# உன்னைக் கொன்றவர்கள் யார்?

அந்த நீலமலைத்தொடர்கள் எத்தனை அழகாய் இருக்கின்றன. சலசலத்தோடும் அருவிகள், ஓடைகள், சில்லென்ற தென்றல், குருவிகள் மைனாக்களின் கொஞ்சும் ஒலியலைகள் என்பன மனதுக்கு எவ்வளவு இதமளிக்கின்றன. பார்க்கு மிடங்கள் எல்லாம் பசுமைகள், புல்வெளிகள் யாருக்குத்தான் மனதில் இனிமை உணர்வை உண்டு பண்ணாது! இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் தொடுவானத்துக்கப்பால் மாலையில் சூரியன் மறையும் அந்த அற்புதக் காட்சியைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த அபூர்வ வர்ண ஜாலத்தை அங்கு மாத்திரம்தான் பார்க்க முடியும். மஞ்சள், சிவப்புக்கலந்த மனோரம்யமான வர்ண ஒளி மேவிப் பரவ ஊதா, கருஞ்சிவப்பு, பச்சை, நீலமென நிமிடத்துக்கு நிமிடம் உருமாறி மாயாஜாலமென இந்திர லோகத்தை நினைப்பூட்டும்.

ஆனால் இவையெல்லாம் அருகில் இருந்தும் இவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைப் பார்த்துப் பரவசப்பட முடியாத ஒரு மக்கள் கூட்டத்தினரும் அங்கு வாழத்தான் செய்கிறார்கள். அரசின் இனவாதக் கொள்கையால் ஆயிரத்துத் தொழாயிரத்து எழுபதுகளில் இவர்கள் வாழ்ந்து உழைத்து வளங்கொழிக்கச் செய்த அந்தத்தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கல் என்ற பெயரில் பறித்தெடுக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் விஸ்தீரணமுள்ள பல டிவிசன்களைக்கொண்ட பல தோட்டங்கள் துண்டாடப்பட்டன. சிறு, சிறு துண்டுகளாகப் பெரும் பான்மை இன மக்க ளுக்கு மட்டும் வழங்கப்பட்டன. அவற்றில் வாழ்ந்த தொழிலாளக் குடும்பங்கள் ஒதுக்கப்பட்டு ஓரங்கப்பட்டனர். அவர்கள் போவதற்கு இடமின்றிக் கொதிக்கும் பானையில் இருந்து அடுப்பில் விழுந்தவர்களின் கதிக்குத் தள்ளப்பட்டனர்.

இப்படி வாழ்ந்து கெட்டுப்போன தோட்டந்தான் தொளஸ்பாகே குன்றுகளின் சாரலை அண்டிக் காணப்பட்ட தாமரைவள்ளித்தோட்டம். மேற்கணக்கு, பணியக்கணக்கு, நடுக்கணக்கு என்று மூன்று டிவிசன்களைக்கொண்ட செழிப்பான தோட்டம், இன்று போக்குவரத்துப் பாதைகள் உடைந்து போய் ஆள் நடமாட்டமின்றிப் பாழாகிப்போய் விட்டன. பல் ஆயிரம் கிலோ தேயிலையை அரைத்து உலகின் மிகச்சிறந்த தேயிலையை உற்பத்தி செய்து ஏலச் சந்தையில் மிக அதிக விலையைப் பெற்றுக் கொடுத்த அத்தோட்டத்தின் இராட்சதத் தொழிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை கண்மூடி மௌனியாக இருக்கிறது. அதன் சுவர்கள் இற்று உழுத்து அநாதரவாகச் சிதைவடைந்து கிடக்கின்றன.

சிறு வயதில் பள்ளிக்காலத்தில் எனது தந்தையே பெக்டரி ஒப்பீஸராக இருந்ததால் அந்தத் தொழிற்சாலையின் ஒவ்வொரு அங்கத்தையும் அறியும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. தொழிற்சாலை இயங்கும்போது தூரத்தில் இருந்து பார்த்தால் ஒரு பெருஞ்சிங்கம் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து உரக்க குரலெடுத்து உறுமுவது போல் ஒரு பிரமையை ஏற்படுத்தும். மற்றச் சமயங்களில் அந்த இயந்திர ஒலி நாம் எந்த ராகத்தை நினைத்துக்கொண்டாலும் அந்த ராகத்தில் இசை எழுப்புவதாகவே ஒலிக்கும். இரவில் அந்த ஓசையைத் தாலாட்டாக நினைத்துக் கொண்டு கூர்ந்து செவிமடுத்தால் தூக்கம் வராத நேரத்திலும் தூக்கம் வந்து விடும்.

தாமரைவள்ளித் தோட்டத்தில் புகழ்பெற்ற ஒரு அம்மன் ஆலயமும் இருந்தது. அம்மன் கோயில் திருவிழாவென்றால் எத்தனை கொண்டாட்டம். சுற்று வட்டாரத்தில் எல்லாத்தோட்டங்களில் இருந்தும் மக்கள் திரண்டு வருவர். கலை நிகழ்ச்சிகள் பத்து நாட்களுக்கு நடைபெறும். இந்தியாவில் இருந்தெல்லாம் கலைஞர்கள், பேச்சாளர்கள் வந்து கலந்து கொள்வார்கள். நானும் கூட காவடி, கோலாட்டம் எல்லாம் ஆடியிருந்தேன். கரகம் பாலித்தல், பங்குனி உத்திரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பரில் ராமநாமபஜனை, இடையில் காமன் கூத்து, என்ன ஒரு கலகலப்பான வாழ்வு. இவை எல் லாம் எங்கே போய்விட்டன. ஏன் அந்தக்கோயில் இப்படி பூஜை புனஸ்காரமின்றிப் பாழடைந்து போய் கிடக்கின்றது. நாய்களும் பூனைகளும் மழைக் கொதுங்குவதைத்தவிர மற்றப்படி உயிரற்ற கோயி லாகத் தோற்றமளிக்கிறது.

அந்த தோட்டத்தில் எனக்கு மிகப் பிடித்த தொன்று மாடசாமி கோயிலும் கற்குகையும் அதனை யொட்டிய சிற்றாறும் ஆகும். வார இறுதி நாட்களிலும் விடுமுறைகளின் போதும் எங்கள் விளையாட்டெல்லாம் அந்த முனியாண்டிக் கோவி லோர ஆற்றில்தான். ஆற்றை மறித்துச் சிறிய அணைகட்டித் தெப்பக்குளமாக்கி நான்கு வாழை மரத்தண்டுகளை ஒன்றாகச் சேர்த்து இணைத்துக்கட்டி தெப்பம் விடுவதென்றால் எத்தனை இன்பகரமான பொழுதுகள்.

தோட்டத்தில் யாருக்கும் அம்மை நோய் வந் தாலும் வைசூரி கண்டிருந்தாலும் வேறும் துன்ப துயரங்களின் போதும் காத்தருள வேண்டுமென்று மாடசாமி தெய்வத்தை வேண்டிக்கொண்டு சேவலொன் றைத்தருவதாக நேர்த்திக் கடன்கள் சொல்லிவிடுவார் கள். பின்பொருநாள் அந்தச் சேவலையும் ஒரு போத்தல் சாராயத்தையும் கொடுத்து அதற் கென்று காத்திருக்கும் பூசாரியிடமும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவாரத்திடமும் ஒப்படைத்து விடுவார்கள். அப்புற மென்ன? சேவல் தூக்கலாக மிளகாய்ப்பொடி போட்டு உறைப்பான கறியாவார்! மாடசாமி தெய்வத் துக்கு நன்றி தெரிவித்துப் படைத்தபின் பூசாரியும் பரிவாரத்தினரும் உண்டு குடித்துக் களித்திருப்பர். எம்மைப் போன்ற வாண்டுப்பட்டாளம் ஐந்தாறு பேருக் கும் கூட பங்கு கிடைக்கும். அந்தக் கறியின் சுவை அம்மா சமைத்த சாப்பாட்டில் கூட இருந்ததில்லை.

அந்தச்சிற்றாறு மாடசாமி கோயில் குகைக்கும் முனியாண்டி சாமிக்கோயிலுக்கும் இடையில் தான் இருந்தது. பதின்மூன்றாம் கொழுந்து மலையில் இருந்து அந்தச்சிற்றாறில் வந்து விழுகின்ற ஓடையை மறித்து ஒரு பீலி வைத்திருக்கிறார்கள். சுமார் பத்தடி உயரத்தில் இருந்து விழும் நீரில்தான் தோட்டத்து மக்கள் பகல் பொழுதில் குளிப்பார்கள். எனினும் பகல் பன்னிரண்டு மணிப்பொழுதில் இளம் ஆண், பெண் பிள்ளைகள் அங்கு குளிக்கக்கூடாதெனப் பெரி யோர்கள் எச்சரித்திருந்தார்கள். காத்துக்கறுப்பு பட்டு விடுமாம்.

அப்படிப் பயந்து காய்ச்சல் வந்து அவதிப்பட்டவர் கள் பலரை எனக்குத்தெரியும். என்றாலும் எனக்கு அது மூட நம்பிக்கையாகவே பட்டது. ஒருநாள் நண் பர்கள் யாரும் கிடைக்காததால் நான் மட்டும் அந்தப் பீலியில் குளிக்கப் போனேன். பகல் பன்னிரண்டு மணி. பீலி இரண்டு கல்லிடுக்குகளுக்கு இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் செறுகப்பட்டிருந்தது. தண்ணீர் தாரையாக நடு வில் வழிய இரு புறமும் உயர்ந்த பாறைகள். தலையைத் தண்ணீருக்குள் பிடித்தால் இரண்டு பாறைகளுக்கும் நடுவில் இருந்த குகைக்குள் கும்மிருட்டு. எனக்கு அப்போது பார்த்து காத்து, கறுப்பு பற்றி ஞாபகம் வந்துவிட்டது. உள்ளே இரண்டு விழிகள் என்னையே பார்ப்பது போன்ற ஒரு பிரமை. நடுக்கமும் பயமும் தலைக்கேறி உடல் வெடவெடத்தது. அதன் பின் சோப்புப் போட்டு மறு படியும் தலையைப்பீலியில் பிடிக்கும் தைரியம் எனக் கிருக்கவில்லை. தொடர்ச்சியாக நடுக்கம் தெரிந்தது. நான் பீலியில் குளிக்காமல் வெளியில் ஓடையில் ஓடிய நீரை கோப்பையில் அள்ளிக் கழுவிக்கொண்டு ஓட்டமாய் ஓடி வீடு வந்து சேர்ந்து விட்டேன். நான் பயந்து ஓடி வந்த விடயத்தை யாரிடமும் சொல் லவில்லை. வெட்கமாக இருந்தது.

அதன்பின் அந்தி சாயச் சாய உடம்பு கொதித் துக் காய்ச்சல் ஆரம்பித்து விட்டது. இரவெல்லாம் பிதற்றல். அம்மாவுக்கு விசயம் விளங்கி விட்டது. கோயில் பூசாரியை அழைத்து வந்து மந்திரித்துப் போட்டார்கள். அடுத்த நாள் மை போட்டுப்பார்த்தார் கள். பின் கோடாங்கி வைத்தும் பார்த்தார்கள். ஒன்றி லும் பயனில்லை. இப்படியாக இரண்டு கிழமை கள் ஓடி விட்டன. காய்ச்சல் தானாகவே சரியாகி விட் டது. அதன் பின் நீண்ட நாட்களுக்கு எனக்கு இரவைக் கண்டால் பயம். அப்படியொரு இனந்தெரியாத பயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வயதில் மனதில் பதிந்து போய்விட்ட இந்தக் காத்து, கறுப்பு, பேய், பிசாசு என்ற பயத்தை இப்பவும் கூட என்னால் துடைத்தெறிய முடியாமல் இருக்கிறது.

இந்தத் தோட்டத்தில் நாதியற்றவர்களாக இப்போதும் பத்துப்பதினைந்து குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். ஒதுக்குப்புறமாகப் பிழைத்துப் போங்கள் என்று கைவிடப்பட்டு உடைந்து போன இரண்டு லயங்களில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். என்னுடன் ஐந்தாம் வகுப்பில் படித்த வீரமலை, பாக்கியம், கணேசன், செல்லமணி ஆகியோரும் அங்கு தான் இருக்கின்றனர். செல்லமணி ஐந்து குழந்தைகளுக்குத் தாயாகி இருந்தாள். அவளின் தந்தையை எனக்கு அக்காலத்தில் ரொம்பப்பிடிக்கும். செல்லையா கங்காணி என்று அழைப்பார்கள். நல்ல தத்துவப்பாடல்களைப் பழைய திரைப்படங்களில் இருந்து மனனம் செய்து பாடுவார். எங்கள் வீட்டுத்திண்ணைக் கச்சேரிகளில் அவர் பாடல்களுக்கு முதலிடம் கிடைக்கும். இத்தகைய கச்சேரிகளின்போதும் வேறு நிகழ்வுகளின் போதும் எனது அப்பாவே தலைமை தாங்குவார். நானும் அவர் மடியில் இருந்தவாறே நிகழ்ச்சிகளை ரசித்திருக்கின்றேன். அது ஒரு பொன்னான காலம்.

தோட்டம் துண்டாடப்பட்டு வேலையில்லாமல் போனதுடன் செல்லையா கங்காணிக்குப் புத்தி பேதலித்துப் போய்விட்டது. பிள்ளைகளும் அவரை ஒதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர். குளிக்காமல் கொள்ளாமல் பிசுக் கேறிய தலையும் கிழிந்து அழுக்கான உடையும் மழிக் காமல் வளர்ந்த தாடியும் பாட்டும் சிரிப்பும் அவ ரைப் பரிதாபத்துக்குரிய ஜீவனாக்கியது. பிச்சைக் காரனாகத்திரிந்தாலும் அவர் யாரிடமும் தானாகப் பிச்சை கேட்பதில்லை. அவர் முன்பு வாழ்ந்த வாழ்வை யும் இப்போதைய நிலைமையையும் பார்க்கும் பல ரும் தாமாகவே அவருக்கு உணவுப்பொருட்களைவழங் குவார்கள்.

செல்லமணி நான் அந்தத் தோட்டத்துப் பாடசாலை யில் ஐந்தாம் வகுப்பு வரை படித்த காலத்தில் எனது நல்ல நண்பி. எப்போதும் என்னுடன் ஒட்டிக்கொண்டே திரிவாள். பாடசாலையில் விளையாடும் போதும் விழாக் காலங்களிலும் எங்களை ஜோடியாகப் பார்க்கும் எல் லோரும் இணைத்துப் பார்த்துக் கேலிப் பேச்சுப் பேசுவார்கள். எங்களுக்கு இதெல்லாம் அப்போது புரியாது. கடைசி வரை நாங்கள் நல்ல நண்பர்களாக இருந்தோம். தோட்டம் பிரிக்கப்பட்ட போது எங்கள் குடும்பத்தினர் வேறு தோட்டத்துக்குச் செல்ல நேர்ந் தது. நான் செல்லமணியைப் பிரிந்து சென்ற காட்சி மிகச்சோககரமாக இருந்ததென்று பின்னர் எனது குடும்பத்தினர் கூறினார்கள்.

அண்மையில் ஒரு நாள் என் பழைய ஞாபகங்களை மீட்டுக்கொள்ள அந்தத்தோட்டத்துக்குச் சென்றிருந் தேன். செல்லமணியைப் பார்த்துப் பேச வேண்டு மென்று உள் மனது துடிக்காமல் இல்லை. நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிய காலம் மிகப் பால்ய காலமாக இருந்தாலும் ஏதோ உணர்வுடன் கூடிய அந்த உறவின் தடங்கள் இப் போதும் என் இதயத்தில் இருந்து அகன்று விட வில்லை. செல்லமணி வசித்த லயக்காம்பரா எது வென்று விசாரித்து கதவைத் தட்டியபோது ஒரு வாண்டுப்பயல் வந்து கதவைத்திறந்தான். செல்லமணி யின் மகனாக இருக்க வேண்டும். காற்சட்டை மட்டும் போட்டிருந்தான். உடம்பில் துணியில்லை. மெலிந்த தோற்றம், வயிறு ஒட்டிப்போய் விலா எலும்புகள் முன் னுக்கு நீட்டிக் கொண்டிருந்தன. கண்கள் இரண்டும் குழிக்குள் பிதுங்கிக் கொண்டிருந்தன. குளித்துப்பல நாளான தலைமயிர் பரட்டையாக இருந்தது. கட்டி யான மூக்குச்சளி சீந்தப்படாமல் பச்சையாக ஒழுகி வடிந்து கொண்டிருந்தது. அவனின் அந்தத் தோற் றமே செல்லமணியின் தரித்திர நிலையைச் சொல் லாமல் சொல்லியது.

"அம்மா எங்கே...?" என்று கேட்ட என்னை அந்நிய னாகக் கண்டு மிரண்ட அவன் கண்கள் உள்நோக்கித் திரும்பி வலது கையும் உள்நோக்கிக் காட்டியது. நான் மெதுவாக ஸ்தோப்புக்குள் நுழைந்தேன். அவர் கள் வாழ்ந்து வந்த அந்த லயக்கம்பரா, வீடு என்று சொல்வதற்கான எந்த லட்சணத்தையும் கொண்டி ருக்கவில்லை. ஒரு இருட்டு குகை போல்தான் இருந் தது. கூரை, சுவர், சுற்றுப்புறம் எல்லாமே புகைக்கரி மண் டிக்கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஓரமாக அடுப்பும், அதனைச்சுற்றிக் கறுப்பு கறுப்பாகப் பானை சட்டிகளும் உடைந்த பாத்திரம் கோப்பைகளும்ஒழுங்கற்று விசிறிக்கிடந்தன. அடுப்புக் குச் சற்றுத்தள்ளி இளமையிலே கிழண்டுபோன ஒரு பெண்ணுருவம் கிழிந்துபோன வாழை நாரெனச் சோம்பிப்போய் சுவரில் முதுகை சாத்திக்கொண்டு அமர்ந்திருந்தது. யாரோ வீட்டுக்குள் வருவதை உணர் ந்த அந்த உருவம் தன் பலவீனமான உடம்பைப் பிரய த்தனப்பட்டு நிமிர்த்தித் திரும்பிப்பார்த்தது.

"யாருங்க?" இந்தக்குரல் நைந்து உருகிப் போய்க் காற்றில் பிசுபிசுத்து ஒலித்தது. "செல்லமணி நீங் களா?" நிலைமையை சுதாகரித்துக்கொண்ட என் உணர் வுகளுக்கும் சோகம் கப்பிக் கொண்டதால் அது குரலி லும் வெளிப்பட்டது. அந்தப் பெண் தலையாட்டினாள்.

வீட்டுக்கு உள்ளே மேலும் சில வாண்டுப் பிள்ளை கள் சாமான்களை உடைத்துச் சண்டையிட்டுக் கொண்டி ருந்தனர். முன்பு கதவைத்திறந்த அதே பையனின் சாய லும் தோற்றமும் அவர்களுக்குமிருந்தன. அவர்கள் அனைவரையும் ஒரு சேரப்பார்க்கும்போது பட்டினி யால் வாடி வதங்கிய எத்தியோப்பியக் குடும்பமொன் றைப் பார்ப்பது போலிருந்தது. எனக்கு செல்ல மணியை ஏன் பார்க்க வந்தோம் என்றிருந்தது.

செல்லமணியின் கண்களில்உயிர் வற்றிப்போயிருந் தது. அவை வெறுமனே வருவது யார் என்று அனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிக்க முடியாமல் வெற்றாக வெறித்துப் பார்த்தன. வந்தவனை வரவேற்கும் திராணிகூட அவளிடம் இல்லை. முகத்திலும் கைகளிலும் காயம்பட்ட தழும்புகள் இருந்தன.

வந்திருப்பது யாரென்று சொன்னால் அவளால் புரிந்து கொள்ள முடியுமா? எனக்கிருக்கும் அதே உணர்வுகள் அவளுக்கும் இருக்குமா? நான் நகரத்துப் பாடசாலைக்குச் சென்று படித்துப் பட்டம் பெற்று இன்று உயர்ந்த நிலையில் இருக்கிறேன் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும். அவள் இருக்கும் நிலையில் அவள் இதற்கு என்ன உணர்வுகளைக் காட்ட முடியும். அவள் இத்தனை காலமும் துன்பத்தையும் துயரத்தையும் மட்டுமே அனுபவித்தவள். இந்த நிலையைக் கண்டு சந்தோசப்படவா இத்தனை தூரம் வந்தேன்.

நான் ஒன்றுமே பேசவில்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்தேன். நான் சிறு வயதில் விளையாடுவதற்கு எங்கள் வீட்டு முற்றத்தில் ஒரு விளையாட்டு வீடு கட்டியிருந்தேன். சமைக்கப் பானை சட்டி எல்லாம் அதில் இருந்தன. செல்லமணியும் நானும் அம்மா அப்பாவாகப் பாவனை செய்து விளையாட்டுச் சமையல் செய்தமை இப்போதும் நினைவுக்கு வந்தது.

என் கண்களில் மெல்ல நீர் கசிய ஆரம்பித்தது. எனக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. கையு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் கொண்டு வந்திருந்த பிஸ்கட், சொக்லட், பேனா, பென்சில், சோக் பெட்டிகள், விளையாட்டுச் சாமான்கள் அடங்கிய பெட்டியை அந்த வாண்டுப்பை யன்களிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து திரும்பி வந்து விட்டேன். மனதும் உடம்பும் கூட அத்தனை கனதியாக இருந்ததை நான் அதற்கு முன்னர் ஒரு போதும் உணர்ந்ததில்லை.

செல்லமணியின் கணவன் மகாகுடிகாரன். தோட்டத் தில் வேலையில்லாமல் போனதால் சிங்கள நாட் டுப் புறத்தில் கூலி வேலை செய்யும் அவன் இரவான தும் நன்கு குடித்து விட்டே வீட்டுக்கு வருவான். செல்ல மணியையும் அடித்து அவள் பிள்ளைகளையும் துன்பு றுத்துவான்.

பல நாட்கள் அவர்கள் பட்டினியுடனேயே வாழ்ந்த னர். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. தோட்டப் பாடசாலை மூடப்பட்டு விட்டதால் அவர்கள் சிங்களக் கிராமத்துப் பாடசாலையிலேயே சேர்க்கப் பட்டிருந்தனர்.

செல்லமணி குடும்பத்துக்குத்தான் இத்தகைய நிலை யென்றால் கணேசன், பாக்கியம், வீரமலை ஆகியோ ரின் குடும்பங்களும் அதே நிலையில்தான் இருந்த னர். பறிக்கப்பட்டுவிட்ட தம் வாழ்வை அவர்கள் விதி என்று நொந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அவர்கள் வாழ்வைப் பறித்துக் கொண்டவர்களின் நோக்கம் என்னவாக இருக்கும்? அவர்களை உயிருடன் கொன்று விட்டவர்கள் யார்?.

தாமரைவள்ளித் தோட்டம் ஒரு பானை சோற்றில் ஒரு பருக்கை மட்டும்தான். இப்படி எத்தனை தோட்டங்கள் எழுபதுகளையொட்டிய தசாப்தங்களில் அழிந்தொழிந்து போய்விட்டன.

தேசிய மயமாக்கலும் காணி உச்ச வரம்புச் சட்டமும் நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன நன்மைகளைச் செய்தன?

இச் சட்டங்களைக் கொண்டு வந்ததன் நோக்கம் அதனைக் கொண்டு வந்தவர்களுக்கு மட்டுந்தான் தெரியும்.

**இன்றுங்கூட**
**செல்லமணியும் செல்லையாக் கங்காணி**
**போன்றவர்களும் வாழ்ந்திருந்த தோட்டங்கள்**
**புல்மண்டி**
**புதர்காடுகளாகப்**
**பாதைகள் அற்றுப் போய்**
**வாழாவெட்டிகளாகவும்**
**மூளிகளாகவும் காணக்கிடக்கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் அவை பொட்டணிந்து, பூவணிந்து மஞ்சள் நீராடி பொங்கிப் பிரவகித்து குதித்துக் கும்மாளமிட்டு வாழ்ந்திருந்தமைக்கு அவற்றின் எச்ச சொச்சங்கள் மட்டுமே சான்று. இனிமேல் இக்கதையும் கூட அதற்கு மற்றுமொரு சான்றாக இருக்கட்டும்.

■

**தாயகம்**

**2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

# சூடேறும் பாறைகள்

பொதுவா தனிம என்னை வாட்டுறப்பெல்லாம் அந்தப் பெரிய பாறாங் கல்லுக்கு மேலதான் நா ஏறி இருப்பேன். அங்கிருந்து பாத்தா சுத்து வட்டாரத்தில உள்ள பத்துத் தோட்டங்களும் தெரியும். எங்க தோட்டத்திலேயே ரொம்ப ஒசரமான ஒரு எடத்துல அது கம்பீரமா ஒரு பாறைக்குன்று போல நிமிர்ந்து நிற்கும். பாறைக்கு நடுவுல இருந்த நீம்பல்ல காட்டு மரம் ஒன்னு ரொம்ப அடர்த்தியா கிளை பரப்பி நெழல் தர்றதால உச்சி வெயில்ல கூட அந்தப் பாற சூடேறாது. அந்தக் காட்டு மரத்தோட பேர எத்தனையோ பேர்கிட்ட கேட்டிட்டேன், இன்னும் கண்டுபிடிக்க முடியல.

இஸ்கூல் லீவு வுட்டு மூணு வாரம் முடியப் போவுது. திங்கக் கெழம இஸ்கூலுக்கு போவனும். ஆனா எப்படி போவப் போறேன்னு எனக்கு புரியல. எல்லா பெரச்சினைகளுக்கும் காரணம் இந்த இஸ்கூல் ரிப்போட்ட அப்பாக்கிட்ட காட்டி சைன் வாங்க முடியாம போனதுதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்கூல் லீவு உட்டதுமே எங்கடா ஓ ரிப்போட்டு அப்படீன்னு அப்பா கேட்டாரு. நா இன்னும் தரல லன்னு பொய் சொல்லிப்புட்டேன்.

என்னா பெரச்சனன்னா வகுப்புல எப்போதுமே ஒன்னாம் புள்ளைல இருந்து ஐந்தாம் புள்ளைக் குள்ளார நா வந்துருவே. இந்த மொற என்னைய பதினாறாம் புள்ளைக்கு தள்ளிப் புட்டாங்க. நா பதினாறாம் புள்ளையா வந்திருக்கிற விசயம் அப் பாவுக்கு தெரிஞ்சா முதுகுத் தோல உறிச்சி உப்புக் கண்டம் போட்ருவாரு.

அவுரு சொல்ற மாதிரியி முதுகுத்தோல உறிச்சி உப்புக்கண்டம் எல்லா போட முடியாதுன்னு எனக்குந் தெரியு. ஆனா அவரு தோட்டத்து வேலியில இருக்கிற நேரான சப்பாத்து செடி கம்ப வெட்டி கைப்பிடியெல்லா வச்சி சீவி காய வச்சி கட்டலுக்கடியில சொருகி வச்சிருப்பாரு. அந்தக் கம்பு முதுகுல பதம் பாக்குறதும் உப்புக் கண்டம் போடுறதும் ஒன்னுதான்.

நா அந்த பாறமேல குந்திக்கின்னு கன்னத்தில கைவச்சிக்கிட்டு கப்பல் கவுந்தது மாதிரி யோசிச் சிட்டு இருக்கையிலதா அந்த ரெண்டு கரிச்சாங் குருவிகளும் வந்து மரத்தில இருந்தாங்க. கரிச் சாங்குருவிங்கன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஏன்னா அவுங்க மாத்திரந்தான் நாம கொடுக்கிற கொரலுக்கு எதிர்க்கொரல் குடுப்பாங்க. நம்மளோட பேசுவாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிச்சி.. கிச்சிக்கிச்சி... கிச்சுகிச்சி... கிச்சுகிச்சி

கிச்சி... கிச்சி கிச்சி கிச்சி... கிச்சி... கிச்சி...

கிச்சுக் கிச்சி கிச்சுக்கிச்சி... கிச்சி...

கிச்சி... கிச்சி... கிச்சி... கிச்சி... கிச்சி...

இந்த நாளு வரிகள நல்லா கவனிச்சிங்கன்னா கிச்சி.. கிச்சி... அப்படிங்கிறதுக்கு மேலாக ஒவ்வொரு வரியிலயும் நெறைய வித்தியாசம் இருப்பது வெளங்கும். கவனிக்காம ரோட்ல போறவங்களுக்கு இந்தக் குருவிப் பாசை காட்டுக் கத்தலாகத்தா தோனும். ஆனா காது கொடுத்து கேட்டா அதன் இசை, தொனி, ராகம், தாளம் இம்மி பிசகாம கேக்கும். ஏதோ அர்த்தம் புரியிறது போலவும் இருக்கும். நா அதோட கதைய கேட்டு நெறயதடவ ரசிச்சிருக்கேன்.

நா இந்த கரிச்சாங் குருவிகளோட நெறைய தடவ பேசி இருக்கேன். அதுங்களோட பேசுறதுல இருக்கிற மகிழ்ச்சி பேசுனவங்களுக்கு மட்டுந்தாந் தெரியும். அவுங்களோட பேசுறதுன்னா விசிலடிக்க தெரிஞ்சிருக்கணும். விசில் பாச தான் அவுங்களுக்கு வெளங்கும். ஏன், மைனாங்களுக்கிட்ட கூட விசில் பாசையில பேசலாம். அதுவும் பூ மைனாங்கிற நாகனவாய் பறவ விசில் பாசைக்கு நல்லாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது கொடுத்து கேட்கும். பயப்படாம கிட்ட வந்து எதையெல்லாமோ பேசும்.

***

நா இந்த மூணுவாரமா சரியா வெளையாடவே இல்ல. இந்தக் கல்லு மேல வந்து குந்திக்கிட்டு கரிச்சாங் குருவியோடயும், மைனாக்களோடயும் பேச நெனைக்கிறேன். முடியல. இந்த ரிப்போட் வெவகாரம் தலைக்குள்ள புகுந்துகிட்டு பயமுறுத் திக்கிட்டே இருக்கு.

நா வகுப்புல ஒன்னாவதுல இருந்து ஐஞ்சாவது எடத்துக்குள்ள வந்துருவேன்னு சொன்னத வைச்சு நா நல்லா படிக்கிற பொடியன் அப்படீன்னு நீங்கள் லாம் தப்பா நெனச்சிற கூடாது. ஏன்னா எனக்கு படிக்கிறதுல கொஞ்சங் கூட விருப்பம் இல்ல. படிக்கிறதுங்கிறது பாவக்கா சாப்பிடுற மாதிரி கசக்கும். எனக்கு வெளையாடுறதான் பிடிக்கும். விட்டா முழு நாளும் விளையாடுவோம். ஆனா வுட மாட்டாங்க. பாதியில இழுத்துக்கிட்டு போயி இவந்தான் லீடர்னு செமத்தியா மொத்துவாங்க. நா அதுக்கெல்லா கலங்கி னதே கிடையாது. பெரியவங்கன்னா சின்ன பொடியங்கள அடிக்கணும்னு நெனச்சிக்கிட்டிருக்க ாங்க..........

எங்க வீட்ல மத்தவங்க எல்லாம் விழுந்து விழுந்து படிப்பாங்க. அவங்க தான் எனக்கு எமங்க. தம்பி, தங்கச்சி, அண்ணா, எங்க மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவோட மூணு புள்ளைங்க எல்லா ஒரே வீட்ல இருந்து இஸ்கூலுக்கு போவோம். அவுங்கல்லாம் நல்ல மார்க் வாங்கும்போது ஓனக்கு ஏன்டா மார்க் கொறையுதுன்னு அடிப்பாங்க. அதனால வகுப்புல ஒன்னாவது ரெண்டாவது புள்ளையா வாரதுக்கு நா ஒரு டெக்குனிக்கு வைச்சிருந்தே. அந்த டெக்னிக்கு என்னான்னு தெரிஞ்சா நீங்க கூட ஆச்சரியப்படுவீங்க.

நா ஒன்னாங்கிளாஸ் ரெண்டாம் கிளாஸ் படிக் கிறப்ப இருந்தே சித்திர பாடத்தில நூறு மார்க் வாங்கிருவே. நா நல்லா சித்திரம் வரைபவன்னு பேர்வாங்கிட்டே. இப்ப எட்டாங் கிளாஸ் வரைக்கும் அது தொடருது. அதுபோல கைப்பணின்னு ஒரு பாடம் இருந்துச்சு. அதுவும் எனக்கு கைவந்த கல. சின்னதா பஸ், லொறி, கார், மாட்டு வண்டி இப்படி எல்லா செஞ்சி செஞ்சி கூட்டாளிங்களுக்கெல்லா கொடுப்பேன்.

வீசுன செமன் டின்ன வெட்டி தட்டையாக்குனா தங்கத் தகடு போல தகதகன்னு இருக்கும். அதுல ரெட்டை மயில்கள், ரெட்டைக் கிளிகள், அப்பொறம் வேற வேற டிசைன் னெல்லா போட்டு அப்பா மெஷின் தைக்கிறதுக்கு வைச்சிருக்கிற கத்திரிக்கோல களவா எடுத்து அழகா வெட்டி நண்பங்க வீடுகளுக்கெல்லாம் குடுத்துருவே. இப்ப கூட நெறைய பேர் வீட்டு செவத்துல இந்த மாதிரி ஜோடனை எல்லாம் தொங்கிக் கிட்டும் ஜொலிச்சுக்கிட்டுந்தான் இருக்கு. சில நேரம் அது கறள் பிடிச்சி இருந்ததும் கழட்டி வீசிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடுவாங்க. அப்பதா எனக்கு மனசு வருத்தமா இருக்கும். இப்படிதா ஒரு மாதிரி கைப்பணி பாடத்திலயும் நூறு மாக்ஸ் வாங்கிருவன்.

எங்க தோட்டத்த சுத்தி சில சிங்கள கிராமங்க இருந்ததால எங்களோட வெளையாட சிங்கள பொடி யங்களும் வருவாங்க. அவுங்களோட சிங்களத்துல பேசி பேசி எனக்குள்ள சிங்கள பாஷையும் கொஞ்சம் வளந்துருச்சி. எங்க இஸ்கூல்ல முதியான்சேங்கிற சிங்கள மாஸ்டர் இருந்தாரு. அவரு சிங்கள பாடம் எடுக்கிற போது பாடப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து என்னத் தான் வாசிக்கச் சொல்லுவாரு. நானுங் கூட சிங்கள பாடத்தில கொஞ்சம் அதிகமா கரிசனை காட்றது எனக்கே தெரிஞ்சது.

ஹெட்ட இஸ்கோல பட்டங் கன்னா தவச, எஹி மா யன்னட்ட பொஹோம கெமத்தி (நாளைக்கு இஸ்கூல் ஆரம்பிக்கும் நாள். எனக்கு அங்கு போறதவிட சந்தோசம் வேறு கிடையாது...) இது நாளாம் வகுப்புல நான் படித்த சிங்கள பாடத்தின் வரிகள். இப்பவுங் கூட அது எனக்கு ஞாபகம் இருக்குன்னா பாத்துக்குங்களே. அது நால சிங்கள மாஸ்டர் எனக்கு நூறு மாக்ஸ் போடுவார்கிறதுல உங்களுக்கு சந்தேகம் வர காரணமிருக்காதுன்னு நெனைக்கிறேன்.

இதுதான் நா வகுப்புல ஒன்றாம் புள்ள, ரெண் டாம் புள்ள வார டெக்குனிக்கு. இந்த மூணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்தில வேற எந்த பயலு நூறு மாக்ஸ் வாங்க மாட்டானுக. அவுங்க எல்லா கணிதம், விஞ்ஞானம் பாடங்களதான் முக்கி, முக்கி படிப்பாங்க. அதுல கூட ஆகக் கூடுதலா வாங்குனா அறுபதுக்கு மேல போகாது. நானு கூட மத்த பாடங்கல்லயும் நாப்பது மாக்ஸ் எப்படியாவது வாங்கிடுவே.

எனக்கு கொஞ்சங் கூட புடிக்காத பாடம்னா கணக்குதா. கணக்கு மாஸ்டர் படிப்பிக்கிறது ஒன்னுமே வெளங்காது. ஆனா தாட்டு பூட்டுனு படிப்புச்சுட்டு பத்து கணக்குப் போட்டுட்டு நாளைக்கு செஞ்சுகிட்டு வாங்கன்னு போயிருவாறு. எனக்கு அப்பவே பாதி உசுறு போயிரும். எப்படியாவது மத்த பயலுங்கக்கிட்ட கெஞ்சி கூத்தாடி கொப்பியடிச்சிக்கிட்டு போனா அத கணக்கு மாஸ்டர் கண்டு பிடிச்சிருவாரு அவரு கேக்கிற ரெண்டு கேள்விக்கு எங்க கிட்ட பதிலு இருக்காது. நாங்க முழியோ முழியோன்னு முழிக்கிறத பாத்துபெரம்ப எடுப்பாரு.

நாங்க ஒரு ஏழெட்டு பேரு எந்த நாளும் அவருகிட்ட அடிவாங்குவோ. அவரு கையில அடிக்க மாட்டாரு. எல்லாரையும் வரிசையா நிக்க வைச்சு செவத்து பக்கம் திரும்பச் சொல்லி பின்னால தட்டத்துல மூணு அடி அடிப்பாரு. குண்டிச்சத பிஞ்சிர்ற மாதிரி இருக்கும். அதுனால கணக்கு பாடம் இருக்கிற நாள்ல ரெண்டு கால் சட்ட போட்டுக்கிட்டு வருவோம். மேலதிக பாதுகாப்பா தடிச்ச கொப்பி புத்தக மட்டைய கிழிச்சுட்டு கால் சட்டைக்கு உள்ளார சொருகி மேல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டய போட்டுருவோம். மட்டையோட கொப்பிய சொருகுனா அடிக்கிறப்ப மடீர்னு சத்தங் கேட்கும். மாஸ்டரு கண்டு பிடிச்சுருவாரு.

***

கரிச்சாங்குருவி பாட்ட நிறுத்தி ரொம்ப நேரமாச்சு. அது எப்போ தனது பாட்ட நிறுத்திச்சின்னு எனக்குத் தெரியாது. ஏங் கவல எனக்கு, யாருக்கிட்ட போயி இதச் சொல்றது. சூரியன் உச்சிக்குப் போக போக எம் மண்டையும் சூடாகிக்கிட்டே போவுது.

இந்த ரிப்போர்டு வெசயத்த சொல்ல வந்து எதையெதையோ சொல்லிக்கிட்டிருக்கே, இல்ல, விசயம் இதுதான். எங்க இஸ்கூலுக்கு கைப்பணி பாடத்துக்கு புதுசா ஒரு மாஸ்டர் வந்தாரு. அவருக்கு இன்னமும் எங்களப் பத்தியெல்லாம் சரியா வெவ ரம் தெரியாது. அப்படி இருக்கும் போதுதா இந்த ஆண்டு இறுதிப் பரீட்ச வந்துச்சி. நானுங்கூட எல் லாரும் மாதிரி வழக்கம் போலதான் பரீட்ச எழுதினே. ஆனா இந்த கைப்பணி பாடத்துக்கு பரீட்ச ஒன்னும் எழுதுறது இல்ல. ஏதாவது ஒரு கைப்பணிப் பொருள வீட்ல இருந்து செஞ்சிக்கிட்டு வரும்படி மாஸ்டரு சொல் லுவாரு. நாங்களும் நாங்க விரும்பினத செஞ்சிக் கிட்டுப் போவம். அதப்பாத்துட்டு மாஸ்டர் மாக்ஸ் போடு வாரு.

இந்த முறை நா ரொம்ப மெனக்கெட்டு வேலைப் பாடுகளெல்லாம் வச்சி ஒரு அழகான அலுமாரி செஞ்சி எடுத்துக்கிட்டு போனே. மாஸ்ட்டரு எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் செஞ்சிக்கிட்டு வந்த கைப்பணிப் பொருள்கள எல்லாம் ஒவ்வொன்னா எடுத்து யாருதுன்னு கேட்டு கேட்டு மாக்ஸ் போட்டுக்கிட்டே வந்தாரு. என் னோட அலுமாரியை அவரு தொட்டுத் தடவி எடுத்த போது எனக்கு தலைய பிச்சுக்கிட்டு போற மாதிரி சந்தோசமா இருந்திச்சி.

பொறகு அத கையில எடுத்து பெரட்டிப் பெரட்டி பாத்தாரு. யாரு செஞ்சுக் கிட்டு வந்ததுன்னு கேட் டாரு. எல்லாப் பயலுகளுக்கும் தெரியும் அத நான்தான் செஞ்சேன்னு. நா, நாந்தா செஞ்சே அப்பி டீங்கிறதுக்கு அடையாளமா எந்திருச்சி நின்னே. கிட்ட வரச்சொன்னாரு. பாராட்டப் போராரர்னு நெனச்சி நானும் துள்ளிக் குதிச்சு மானாட்டம் போனே.

நா சிரிச்சுக்கிட்டே ஏதோ விஞ்ஞானக் கண்டுபிடிப்ப செஞ்சுப் புட்ட செருக்கோடவும் ஆணவத்தோடவும் அவரு பக்கத்தில போய் நின்னே. புது மாஸ்டர் என்னைய புரிஞ்சிக்கிட்டார்னு நெனைச்சே எல்லா பயலுகளையும் எளக்காரமா ஒரு பார்வை பார்த்தேன்.

ஆனா, அதென்னா அவரு கண்ணுல நெருப் பெரியிற மாதிரி கோவம்ல தெரியுது. நா சுதாரிச்சி நிமிர்றதுக்கெடையில கன்னத்துல பளார்னு ஒரு அறை விழுந்துருச்சி. நா ஆசை ஆசையா மெனக் கெட்டு செஞ்சிக்கிட்டு வந்திருந்த அலுமாரி தூரத் தில் போய் விழுந்து ரெண்டா ஒடைஞ்சி என்னப் பாத்து சிரிச்சுது.

மாஸ்டர் என் தோளப் புடிச்சி உலுப்பினாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்டா... வெறும் பயலே....! கைப்பணி பொருள் ஒன்னைய செஞ்சுக்கிட்டு வரச் சொன்னா... ஒங்கப்பன செய்யச் சொல்லி வாங்கிட்டு வந்திருக்கிற... போ... ஒனக்கு மாக்ஸ்சே கெடையாதுன்னுட்டாரு...

அன்னைக்குத்தா ஒலகம் மறுபுறமா சுத்துறது எனக்கு தெரிஞ்சுச்சு. நா கண்ணீர் விட்டு அழுதே. எல்லா பயலுகளும் என் மீது அனுதாப பட்டாங்க. மாஸ்டரத் தவிர. அவரு நெனச்சாரு அடிச்சதால வலி தாங்காம அழுவுறேன்னு. ஆனா எம் மனசுல விழுந்த அடி யாருக்கும் தெரியல.

எங்கப்பா எத்தனை முறை என்ன அடிச்சிருக்காரு. முதுகு பிஞ்சு போற அளவு அடிச்சிருப்பாரு. அப்பவும் நா அழுதுருக்கேன். அது ஏ ஒடம்புல உழுந்த அடி. அதுக்காக நான் மனசால வருத்தப்பட்டது கெடையாது. அப்படியே வருத்தப்பட்டாலும் அம்மா வந்து அப்பாக்கிட்டருந்து ஏங்க... சின்ன பயல போட்டு இப்புடி அடிக்கிறீங்கன்னு இழுத்துக்கிட்டுப் போய் கட்டி அணைத்து தடவுன ஒடன எல்லா வலியும் ஓடிப் போயிரும்.

ஆனா இந்த மாஸ்டர் அடிச்ச அடிய மறக்கேலாது. ஏ உசுறு இருக்கு வரைக்கு மறக்கேலாது. பொறகு மாஸ்டர் எனக்கு கைப்பணி பாடத்துக்கு முப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்ஸ்தான் போட்டாரு. அதனால எனக்கு சேர வேண்டிய எழுபது மாக்ஸ் இல்லாம போச்சி. என்னைய பதினாறாம் புள்ளைக்கு தள்ளிப்புட்டாங்க.

***

என்னதான் மரம் நெழல் தந்தாலும் பாறை சூடாகிறத அதால தடுக்க முடியல. சூரியன் உச்சிக்கு வரும் போது பாற மட்டுமா சூடாகுது. ஒலகமே சூடாகுதுனு ஏ சின்ன மண்டைக்கு புரிஞ்சபோது அதுக்கு மேலயும் அந்த பாற மேல ஒக்காந்திருக்க எம்மனசு விரும்பல. நா பாறையில் இருந்து எறங்கி கீழே வந்தே. எந்தப் பக்கமா எந்த எடத்துக்கு போறதுன்னு கூட நெனைக்க முடியாம குட்டிப் போட்ட நாய் போல அங்கேயும் இங்கேயும் கொஞ்ச நேரம் அலைஞ்சேன். இந்த விசயத்தை எந்த பயலுகிட்டயும் சொல்ல முடியாமலிருக்கிறதுதான் என்னோட தவிப்பு. என்னோட அண்ணந் தம்பிக்கிட்ட கூட சொல்ல முடியாது. அவிங்க அப்பாக்கிட்ட காட்டிக் குடுத்திருவானுங்க. பொறகு முதுகுத் தோல உரிக்கிறே... உப்புக்கண்டம் போடுறேன்னு அவுரு கௌம்பிடுவாரு.

நா என்னா செய்யப் போறே...?
நா என்னா செய்யப் போறே...?

எம் மனசு இந்தக் கேள்விய திரும்பத் திரும்ப கேட்டுக்கிட்டிருந்திச்சி. ஒரே ஒரு வழிய தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இந்த இக்கட்டில இருந்து தப்புறதுக்கு வேற மார்க்கமே இல்லைனு எம் மனசுக்கு தோணுது.

ரிப்போட்ல அப்பாவோட சைன நாமலே போட்ற வேண்டியதுதான். இப்படி நெனச்சப்பவே ஒடம்புக்கு கொஞ்சம் நடுக்கமாத்தான் இருந்திச்சி. தப்பு செய் யப் போறமேன்னு. ஆனா அப்புடியெல்லாம் பாத்தா வேலைக்கு ஆவாதுன்னு யோசிச்சி ஒரு முடிவுக்கு வந்துட்டே. எங்கப்பா கையெழுத்த போடுறது ஒன்னும் கஷ்டமில்ல. அவுரு சு. மு. சு ராமசாமின்னு அச்சா எழுதி யிருப்பாரு. ஏற்கனவே ரிப்போட்ல அவரு கையெ ழுத்து இருக்கு. அத பாத்து அப்பிடியே எழுதிறலாம்.

பாறைக்குன்று வெயில்ல சூடேறி தகிச்சுக்கிட்டி ருந்துச்சு. இனிமே அது நாலு மணிக்குப் பொறகுதான் குளிர்வடையு. கரிச்சான் குருவிகளையோ, மைனாக் களையோ கண்ணுக்கெட்ற தூரம் வரை காண முடி யல.

நா வீட்டை நோக்கித்தா போய்க்கிட்டிருக் கேனாங் கிறது என் கால்களுக்கு மட்டுந்தான் தெரியும்.

■

**தாயகம்**
**2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

# சொந்த மண்ணின் அந்நியர்

அதிகாலை ஐந்து மணி நாற்பத்தைந்து நிமிடங்கள்.

அன்றைய காலைப்பொழுது இன்னமும் முற்றாகப் புலர்ந்திருக்கவில்லை. அன்றிரவு பெய்த மழையின் ஈரம் இப்போதும் பாதையில் சேற்றுப்பசையாய் பிசு பிசுத்துக் கொண்டிருந்தது.

கொழும்பில் இருந்து மலை நாட்டை நோக்கிச் செல்லும் பிரதான ரயில் வண்டியான உடரட்ட மெனிக்கேயைப் பிடித்து விட வேண்டும் என்று நான் விரைந்து கொண்டிருந்தேன்.

ரயிலுக்கு இன்னமும் பத்து விநாடிகளே இருந்தன. நான் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் பிளாட்பாரம் இலக்கம் இரண்டை அடைவதற்கு முன்னமே ரயில் வண்டி வந்து சேர்ந்திருந்தது.

அன்று சாதாரண கிழமை நாட்களில் ஒன்றாக இருந்ததால் ரயில் வண்டியில் சனக் கூட்டம் அதிக மில்லை. அதற்காகவே எந்தவிதப் பண்டி கையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை ஆரவாரங்களோ இல்லாத ஒரு தினத்தை எனது பிரயாணத்துக்குத் தேர்ந்தெடுத்திருந்தேன். முன்னெச்சரிக்கையாகவே ஆசனப்பதிவும் செய்து வைத்திருந்ததால் விரைந்தோடி ஆசனம் ஒன்றைப் பிடிக்க வேண்டும் என்ற அவசரம் எனக்கிருக்கவில்லை.

எனக்கான ஆசனத்தை முற்பகல் வெய்யில் தாக்காத விதத்திலும் ஜன்னலோரம் இருக்கும் விதத்திலும் யோசித்துத் திட்டமிட்டு முன் கூட்டியே ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன்.

நான் ரயில் வண்டியில் ஏறி அமர்ந்து ஐந்து நிமிடங்களில் வண்டி புறப்பட்டது. அந்த நீண்ட ரயில் பிரயாணத்தை வீணாக்கக்கூடாது என்பதற்காக ரஷ்ய புரட்சிகர நாவலாசிரியர் மார்க்ஸிம் கார்க்கியின் தாய் நாவலையும் கையோடு எடுத்துச் சென்றிருந்தேன். இந்த நாவலை நான் பலமுறை படித்திருந்த போதும் அதனை இந்தச்சந்தர்ப்பத்தில் மீண்டும் படிக்க வேண்டும் போல் தோன்றியது. அந்த நாவலில் நான் விரும்பும் பகுதிகளைச் சிவப்பு மையினால் அடிக்கோடிட்டிருந்தேன். எனது விரல்கள் அத்தகைய பக்கங்களை ஒவ்வொன்றாகப் புரட்டிய போதும் மனம் என்னவோ அதில் லயிக்கவில்லை. எனது சிந்தனைகளும் இருபத்தைந்து ஆண்டுகள் பின் நோக்கி நகர்ந்தன.

*************

ஊருக்குப் போக வேண்டுமென்ற இந்த எண்ணம் இன்றோ நேற்றோ ஏற்பட்டதல்ல. சுமார் இரண்டரைத் தசாப்த காலமாக இருந்து வரும் மனப்போராட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி. ஆரம்பத்தில் சில ஆண் டுகள் ஊர்ப் பக்கமே போகக்கூடாது என்று சங்கற் பம் பூண்டிருந்தேன். அப்போது அது அத்தனை மனக் கசப்பூட்டும் யோசனையாக இருந்தது. அக் காலத் தில் அந்தக் கசப்பான அனுபவங்களை மனத் திரை யில் இருந்து நீக்குவதற்கு எவ்வளவு முயன்ற போதும் அவை பீனிக்ஸ் பறவையைப் போல மீண்டும் மீண்டும் புத்திளமை பெற்றுப் பசுமையுடன் உயிர்த் தெழுந்த வண்ணமிருந்தன.

அதன் பின் நான் ஊருக்குப் போகப் பல முறைகள் முயன்ற போதும் ஆகஸ்ட்டுக் கலவரங்களும் கறுப்பு ஜூலைகளும் அவ்வப்போது வந்து வந்து என் எண்ணத்தை இருட்டாக்கின. இம்முறை மிகப் பிரயத்தனத்தின் பின் தீர்மானித்து விட்டேன். எப்படி யும் போயே ஆவதென்று இப்போது நான் தனியாள் அல்ல. எனக்கெனக் குடும்பமும் குழந்தையும் குட்டிக ளும் உண்டு. ஆனால் அவர்கள் இந்தப் பயணத்துக்குப் பொருத்தமானவர்கள் அல்ல என்பதால் தனியாகவே போவதென்று தீர் மானித்தேன்.

ஊருக்குச் செல்ல வேண்டும் என்று தீர்மானித் ததில் இருந்தே என்னுள் ஒரு பரவசமும் உந்துதலும் மேலோங்குவதனை நான் உணராமல் இல்லை. ஊரை விட்டு வந்து இருபத்தைந்து ஆண்டுகளின் பின் ஊருக்குச் செல்ல நினைத்ததினால் ஏற்பட்ட விளை வாக இது இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குப் போகிறேன் என்று சொன்னதும் தனது சொந்தக் கிராமத்தைத்தான் இவன் குறிப்பிடுகிறான் என்று நீங்கள் தவறாக எண்ணி விடக்கூடாது. பொது வாக ஊர் என்பது பிறந்ததில் இருந்து வசித்து வரும் கிராமத்தையோ நகரத்தையோதான் குறிக் கும். அங்குதான் ஒவ்வொருவனுக்கும் நிரந்தர முக வரியும் சொந்த வீடும் காணியும் பூமியும் இருக்கும்.

ஆனால் இந்த உரிமைகள் எங்களுக்கு எப்போதோ மறுக்கப்பட்டு விட்டன. 1948ஆம் ஆண்டு இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரசா உரிமை ரத்துச் செய்யப்பட்ட பிறகு காணி பூமி வைத்திருந்த ஒரு சிலரும் அந்த உரிமைகளை இழந்தனர். வாக்குரிமை கூட மறுக்கப்பட்டது. அரசாங்கத் தொழில் செய்ய முடியாது. தப்பித்தவறிப் பல்கலைக்கழகம் வரை படிக்கவென்று சென்று விட்டால் அந்நிய நாட்டு மாணவர்கள் போல் படிப்புக்கும் காசு கட்ட வேண் டியிருந்தது.

ஊருக்குப் போகிறேன் என்று இங்கு குறிப்பிட் டது நான் பிறந்து வளர்ந்த அந்தத் தேயிலைத் தோட்டத்தைத்தான். என்னையும் என் குடும்பத் தினரையும் உற்றார், உறவினர்களையும் நண்பர்களை யும் சுமார் இருபத்தைந்து வருடத்துக்கு முன் அந்தத் தோட்டத்தை விட்டு வெளியேற்றி விட்டார்கள். அரசாங்கத்தின் காணி உச்ச வரம்புச்சட்டத்தின் கீழ் அயலில் உள்ள சிங்களக் கிராமத்தவர்களுக்குக் காணி பகிர்ந்தளிப்பதற்காகவே எங்களை அந்தத் தோட்டத்தில் இருந்து வெளியேற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அந்தச் சிங்களக் கிராமத்தவர்களுக்கு நாடு என்று அழைக்கப்படும் அவர்கள் ஊரிலேயே நிறையக் காணிகள் ஏற்கனவே சொந்தமாக இருந்தன. ஒரு அங்குலக்காணி கூட இல்லாதவர்கள் நாங்களே.

உரிமையும் காணியும் இல்லாத எங்களுக்கு அவற்றைக் கொடுக்காமல் இவை எல்லாவற்றையும் அனுபவிக்கும் அவர்களுக்கு அவற்றைக் கொடுக்கின்றார்களே என்று அப்போது சிறுவனாக இருந்த என் சிறு மூளையில் எழுந்த சந்தேகத்தை என் தந்தையாரிடம் கேட்டபோது பளார் என்று விழுந்தது முதுகில் ஒரு அடி.

இருக்க இடம் மறுக்கப்பட்ட என் தந்தை என் கேள்வியால் பாதிப்படைந்து இயலாமையின் மேலீட்டால் என் முதுகுத் தோலை உரித்து மிளகாய் தடவுவதாக உறுமினார். இத்தகைய தருணங்களில் அபயக்கரம் நீட்டி அரவணைக்கும் தாயுள்ளம் அன்றும் என்னை அணைத்துக் கொண்டமையை நினைவு கூர்ந்தபோது இப்போதும் என் கண்களில் ஒரு துளிக்கண்ணீர் சொரிந்து உருண்டோடிக் கன்னத்தை நோக்கி வழிந்தபோது அதனைத் துடைத்தெறிய வேண்டுமே என்ற அறிவு பூர்வ சிந்தனையை உள்ளத்தின் மென்னுணர்வுகள் மறுத்து விட்டன. அந்தக் கணங்களை அப்படியே நீடிக்கச் செய்ய வேண்டும் என்று என் உள்ளம் எனக்குக் கட்டளையிடுவதை என் காதுகள் தெளிவாகக் கேட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் புத்தி அதற்குக் கட்டுப்பட்டே இருந்தது. நான் அந்த எண்ணங்களில் தொடர்ந்தும் ஆழ்ந்திருக்கவே விரும்பினேன்.

*************

அந்தக்காட்சி இப்போதும் என் மனதில் அச்சடித்த படம் போல் பதிந்திருந்தது. நாடெங்கும் பஞ்சம் தாண்டவமாடிக் கொண்டிருந்த காலம். அரிசியையும் பானையையும் கண்டு நாட்கள் பலவாகியிருந்தன. மரவள்ளிக் கிழங்கையும் இலை தழைகளையும் பழங்களையும் உண்டு பஞ்சம் போக்கிய காலம். உடம் பில் இருந்த எல்லா ஊட்டச்சத்துக்களும் வெளியே றிப் பஞ்சடைந்த வெருளிகளாகி உடம்பும் மனதும் சோர்ந்திருந்த காலம். வாழ்க்கையில் எந்த விதப்பிடிப்பு மின்றி தொழிலாளர்கள் சோம்பிக் கிடந்தார்கள்.

அப்போது தான் பேரிடியென அந்தச் செய்தி வந்தது. காணி உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எங் கள் தோட்டத்தின் அரைவாசிக் காணியை அர சாங்கம் சுவீகரித்து விட்டதென்றும் அவற்றை அருகாமையிலுள்ள சிங்கள நாட்டவர்க்குப் பகிர்ந் தளிக்கப் போகிறார்கள் என்றும் பரவலாகப் பலர் கதைக்கத் தொடங்கினர்.

அதனை அடுத்துத் தோட்ட முகாமையாளர் எமது தோட்டத்தின் பணிய கணக்குப் பிரிவைச் சேர்ந்த தோட்டத்தொழிலாளரை அழைத்துக்கூட்டம் ஒன்றை நடத்தினார். அதில் சில தினங்களுக்குள் தோட்டத்தின் பணிய கணக்கைச் சேர்ந்த தொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளர்களின் பட்டியல் ஒன்று வெளியிடப்படும் என் றும் அதில் தோட்டத்தில் இருந்து யார் யார் வெளி யேற வேண்டுமென்று அறிவிக்கப்படும் என் றும் ஏனையோர் பணிய கணக்கில் இருந்து மேல் கணக் குக்கு (தோட்டத்தின் மற்றுமொரு பிரிவு) மாற்றப்ப டுவர் என்றும் கூறப்பட்டது.

எங்கள் தோட்டத்தின் அந்த டிவிஷனில் மாத்திரம் சுமார் 150 குடும்பங்கள் இருந்தோம். இதில் யார் போவார்கள்? யார் இருப்பார்கள்? அனைவரும் குழம்பிப் போனார்கள்.

சில நாட்களின் பின் எதிர்பார்த்த மற்ற அறி வித்தல் வந்தது. இதனைச் சக தொழிலாளர்கள் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தார்கள். அந்த டிவிஷனில் இதுவரை காலம் கடுமையாக உழை த்து நிர்வாகத்துக்கு அதிக பிரயோஜனமாக இருந் தவர்களைத் தவிர ஏனையோர் பத்துச் சீட்டுகளை வாங்கிக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது.

அந்தக்கால கட்டம் மிகச்சோக மயமானது. எதற்கு இறைவன் இப்படிச் சபிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை இவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்? ஒரு பக்கம் பசி பட்டினி மறுபக்கம் தோட்டங்களில் வேலை மிகக்குறைவு. இந்த நிலையில் இந்தப் பாவப்பட்ட ஜன்மங்களை வேறு எந்தத் தோட்டத்தில் சேர்ப்பார்கள். இந்தியாவில் இருந்து இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்குப் புறப்பட்ட நேரஞ்சரியில்லை என்றே பலர் அழுது புலம்பினர்.

**************

அன்று ஏன் அப்படியொரு மழை பெய்ததென்று யாருக்கும் தெரியவில்லை. தொழிலாளர் கண்ணீர் வடித்ததால் அதனைவிட அதிகக் கண்ணீரைத் தான் உகுத்து அவர்களுக்கு அனுதாபம் காட்ட வேண் டுமென்று வருணபகவான் நினைத்தாரோ என்னவோ அப்படியொரு அடை மழை அன்று பெய்தது.

இருந்தாலும் தாம் வந்த வேலையை அன்றைக் குள் முடித்து விட வேண்டுமென்பதில் அவர்கள் மிகத் தீவிரமாக இருந்தார்கள்.

அரசாங்க நில அளவைத் திணைக்களம், காணி மதிப்பீட்டுத் திணைக்களம், பட வரைஞர் திணைக் களம், நகர அபிவிருத்திச் சபை இப்படிப் பல திணைக் களங்களில் இருந்து அதிகாரிகளும் ஊழியர்களும் குவிந்திருந்தனர்.

தொழிலாளர்களில் இருந்து அவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கருதியதால் அவர் களைப் பாதுகாக்கப் பொலிஸ் படையொன்றும் அனுப்பப்பட்டிருந்தது. அந்தத் தோட்டத்தில் இப்படி யொரு பரபரப்பான சம்பவம் நிகழ்ந்து நான் பார்த்த தில்லை.

தொழிலாளர்களும் காற்று, மழை என்று பொருட் படுத்தாது ஒரு புறம் கூடியிருந்தார்கள். நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சிங்களக் கிராமத்தவர்களும் நிறையப் பேர் வந்து கூடியிருந்தார்கள்.

அன்று அந்தத் தோட்டத்தின் 150 ஏக்கர் காணியைச் சிறு சிறு துண்டுகளாகப் பிரித்து நாட்டுச் சிங்களவர்க்கு வழங்குவதாக அளந்து குறியீடு செய்வதற்காகத் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

தாம் பிறந்து வளர்ந்து இத்தனை காலம் வளர்ந்து நேசித்த பூமியைப் பிளந்து கூறுபடுத்தி யாருக்கோ வழங்கப்போகின்றார்கள் என்பதால் அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் நெஞ்சு வெடிக்கும் சோகத்தில் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

மறுபுறம் ஆங்கிலேயரால் கண்டிச் சிங்களவரிடமிருந்து பறிக்கப்பட்டுத் தேயிலைத் தோட்டங்களாக உருவாக்கப்பட்ட தமது மூதாதையரின்காணி நிலங்களின் ஒரு பகுதி தமக்கு மீண்டும் வழங்கப்படுகின்றதென்பதில் நாட்டுச் சிங்களவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இருவேறு சமூகங்களின் நலன்கள் மாபெரும் முரண்பாடுகளாக உருவாக்கப்பட்டு மோத விடப்பட்டு அவற்றால் கனன்றெரியும் வெப்பத்தில் குளிர்காய அரசியல்வாதிகள் நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பது எத்தனை பேருக்குப் புரிந்திருக்கும்?

ஏற்கனவே தொழிலாளர்கள் மேற்கணக்குக்கும் வேறிடங்களுக்கும் வெளியேறியிருந்ததால் அவர்கள் இதுவரை வாழ்ந்து வந்த அந்த நீளமான பதினெட்டு லயன் காம்பிராத் தொகுதிகளும் வெறிச் சோடிப் பாழடைந்து கிடந்தன.

அவற்றை உடைத்துத் தகர்த்தெறிந்து சம தளமாக்கவெனப் பாரிய புல்டோசர்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. அவற்றின் உறுமல் சத்தங்கள் பேரிடியாக அந்தப் பிராந்தியத்தையே குலுக்கிக் கொண்டிருந்தன.

அவை மேலும் பாரிய சத்தத்துடன் வெப்பத்தையும் மூர்க்கத்தனமாக அந்த உயிரற்ற லயன் காம்பிராத் தொகுதிகளில் தமது அரக்கத்தனமான இரும்புப் பற்களை வாய் பிளந்து ஆழமாகப் பதித்து உந்தித்தள்ளி உடைத்தெறிந்தபோது... அந்த சோகத்தை எப்படி எழுதுவது.

தொழிலாளர்கள் தமது உடலையும் உள்ளத்தையும் கூரிய முள் கொண்டு குத்திக் குதறுவது போன்ற வேதனையை அடைந்தார்கள். பலர் வாய்விட்டுக் கதறி அழுதனர். மற்றவர்களின் சோகத்தைப் பார்த்த என் கண்களும் கூட பனித்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் ஒரு மணித்தியாலத்துக்குள் அந்த ராட்சத இரும்பு அரக்கன்கள் எங்கள் நூற்றாண்டுக் கால வாசஸ்தலங்களைச் சின்னா பின்னப்படுத்தி இருந்த இடம் தெரியாமல் மண் மேடாக்கி விட்டன.

நாங்கள் நூற்றாண்டு காலமாக எங்கள் பிறந்த மண்மீது கொண்டிருந்த பற்றும் பாசமும் அன்பும் நேசமும் சில கணங்களுக்குள்ளேயே மண்ணோடு மண்ணாய்த் தூசிகளாக்கப்பட்டு நசித்துத் தேய்பட்டு விட்டன. அவை எம் கண்ணீருடன் இணைந்து அந்த அடை மழையில் பெருக்கெடுத்தோடும் நீர்ப்பிரவா கத்தில் பொங்கிப் பிரவகித்துச் செம்மண்ணுடன் கலந்து இரத்தமெனச் செந்நீராய் அருகிலுள்ள ஓடை யில் வடிந்து போய்விட்டன.

எங்கள் உணர்வுகளும் அப்படித்தான். கண்ணீ ருடன் வடிந்து கரைந்து போய்விட்டன. எங்கள் போரா ட்ட உணர்வுகளை மழுங்கச் செய்துவிட்ட அரசியல் வாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் எங்கள் கண்ணீரில் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடி யாமல் எங்கோ சென்று ஒழிந்து கொண்டு விட் டார்கள். எங்கள் பிறந்த மண்ணிலேயே மீண்டும் ஒரு முறை நாங்கள் வேற்று மனிதர்களாக ஆக்கப் பட்டோம்.

*************

ரயில் வண்டி கடக்கடக் ஓசையுடன் ஏதோ ஒரு ரயில் நிலையத்தில் சென்று குலுங்கி நின்றது. திடீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரென ஏற்பட்ட சூழ்நிலைகளின் மாற்றமும் புதிய ஒலிக ளும் என் சிந்தனையைக் கலைத்தன.

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்து அப்போது தான் விழித்தது போன்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது.

இப்போது எந்த இடத்தில் இருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ஜன்னலுக்கூடாகத் தலை யைச் செலுத்தி வெளியே நோக்கினேன்.

ரயில் பேராதனைச் சந்தியை அடைந்திருந் தது. அடுத்த ரயிலுக்கு வழிவிடுவதற்காகச் சுமார் அரை மணி நேரம் தாமதமாகும் என்ற அறிவிப்பும் ஒலிபரப்பப்பட்டது.

கனத்த சிந்தனையின் பின்னர் மீண்டும் மனம் வெறிச்சோடியது. என் சிந்தனையை விட்ட இடத்தில் இருந்து தொடரலாம் என்று சிறிது பிரயத்தனம் செய் தேன். அதுவும் சாத்தியப்படவில்லை மாறாக மனம் எதிர்மறையாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டது.

உண்மையில் நான் எதற்காக இந்தப் பிரயா ணத்தை மேற்கொண்டேன் என்பதே அர்த்த மற்ற தாகத் தோன்றியது. பிறந்த ஊர் என்று அங்கே ஒன் றும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த இடத்தில் வேற்றார் வீடு கட்டிக்குடி யேறி இருபத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. சுற்றம், சூழம், நண்பர்கள் எங்கெங்கோ சிதறிப் போய் விட்டனர். நான் அந்த ஊரை அடைந்தாலும் யாரிடம் யாரென்று என்னை அறிமுகம் செய்து கொள்வது?

சிலவேளை அந்த இடத்துக்கு நான் சென்று என்னைப்பற்றியும் என் வரவைப் பற்றியும் எனது பிரயாணத்தின் நோக்கத்தைப் பற்றியும் கூறினால் அவர்கள் என்னைச் சித்த சுவாதீனம் அற்றவன் என்று கருதி ஏளனம் செய்யவும் கூடும்.

உண்மையில் இந்தப் பிரயாணத்தின் மூலம் நான் எதனைச் சாதிக்க விரும்புகிறேன்? எனது பழைய நினைவுகளை ஒரு முறை மீட்டுக்கொண்டு அந்தப்பழைய நினைவுகளில் சுகமான அரவணைப் பில் இதம் பெற நினைக்கிறேனா?

அப்படிச் சொல் வதும் பொருத்தமானதன்று. ஏனெனில் நான் பெற்ற சுகமான அனுபவங்களை விட துக்ககரமான அனுபவங்களையே இந்த மனது தேர்ந்தெடுத்து மீட்டுப்பார்க்க விரும்புகிறது ஏன்? அதுதான் மனித இயல்போ?

என் மனம் மீண்டும் குழம்பிப் போனது இந்தப் பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமா?

நான் தீர்மானித்து விட்டேன். அடுத்த அரை மணி நேரத்தில் கொழும்பு நோக்கிச் செல்லவிருக்கும் புகைவண்டியில் கொழும்புக்குச் செல்ல டிக்கட் பெற்றுக்கொள்வதற்காக கவுண்டரை நோக்கி விரைகின்றேன்.

■

**தினகரன்**
**(துரைவி-தினகரன் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

# நெஞ்சினலைகள்

"அத்தை இறந்து விட்டார் உடனே புறப்பட்டு வா" என்று வந்திருந்த அந்த தந்திச் செய்தியை நான் நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். சந்திரா அத்தை இறந்து விட்டார் என்ற செய்தி என்னில் பெரும் சோகத்தை தோற்றுவிக்கவில்லை. ஆனால் ஒரு காலத்தில் சந்திரா அத்தை எங்கள் வீட்டுக்கு வர மாட்டார்களா என்று தவம் கிடந் திருக்கிறேன். அதற்குக் காரணம் சந்திரா அத்தை மேலுள்ள பாசம் அல்ல. சந்திரா அத்தை எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவர் மகள் புவ னாவையும் கூட்டி வருவார். ஏனோ தெரியாது புவனா வருகிறாள் என்ற நினைப்பே என்னுள் அத் தனை பரவசத்தை ஏற்படுத்தும். அது ஒரு காலம்.

சந்திரா அத்தை இறந்து விட்டார் என்ற செய்தி எனக்குள் துக்கத்தை ஏற்படுத்தாததற்குக் காரணம் நீண்ட நாட்களாக அவர்களைப் பார்க்காததும், பழகாத துமாக இருக்கலாம். நான் நகரத்துப் பாடசாலைக்கு வந்த பின் லீவுக்கு மட்டுமே வீட்டுக்குப் போவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் கொழும்பில் வேலை கிடைத்து இங்கு வந்து விட்டபின் எப்போதாவது பண்டிகைக்கு மாத்திரமே வீட்டுக்குப் போவதுண்டு. இந்த நீண்ட நாட்களில் சந்திரா அத்தையையும் புவனாவையும் நான் சந்தித்ததே இல்லை. அவ்வப்போது புவனாவின் நினைப்பு வந்து என் மனதை கசக்கிப்பிழியும். ஆனால் என்ன காரணத்தைக் கூறிக் கொண்டு நான் அவளைச் சென்று பார்ப்பது என்று குழம்பிப் போய் அவள் நினைவுகளை நெஞ்சுக்குள்ளேயே புதைத்து விடுவேன்.

இப்போது இந்தத் தந்தி புவனாவின் நினைப்பை மீண்டும் என்னுள் ஏற்படுத்தியது. அத்தை இறந்து விட்டார் என்பதைப் பார்க்கிலும் புவனாவை சந்திக்கப் போகிறோம் என்ற ஆவலே எனக்குள் மேலோங்கியிருந்தது. கடைசியாக அவளைப் பார்த்தது அவளது பூப்புனித நீராட்டு விழா நாளன்று. நானும் அம்மாவும் அப்பாவுடன் அவள் வீட்டுக்குப் போயிருந்தோம். நான் முதன் முதலாக அவள் வெட்கப்பட்டதை அன்று தான் பார்த்தேன். அவளுக்கு மட்டுமென்ன என்னுள்ளும் வெட்கம் என்ற உணர்வு அன்று தான் புகுந்து கொண்டது.

அவள் எனது விளையாட்டுத் தோழி தானே என்ற நினைப்பில் அன்று அவள் அருகில் சென்று அமர்ந்து அவளுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவளை மணப் பெண் போல அலங்கரித்திருந்தார்கள். வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார் உறவினர் எல்லாம் கூடியிருந்தார்கள். முதல் முதல் எங்கள் சித்தி தான் அந்தப் பேச்சை ஆரம்பித் தாள். எங்கள் இருவரையும் பார்த்து “என்ன! அதற்குள்ளேயே புவனா மாப்பிள்ளையைப் பார்த்து விட்டாள் போல் இருக்கிறதே அத்தை மகன் தானே பரவாயில்லை.....” அவள் சத்தமாகச் சொன்னது எல்லோர் கவனத்தையும் எங்கள் பால் ஈர்த்தது. கூடி யிருந்தோர் எல்லோரும் பெரிதாக வாய் விட்டுச் சிரித்தார்கள்.

புவனா வெட்கத்தால் நெளிந்தாள். எனக்கு வாழ் வில் முதன் முறையாக வெட்கமும், அதனால் சங் கடமும் தோன்றியது. அந்த உணர்வு மனதுக்குள் குடைந்தாலும் அது எனக்கு மட்டுமே சொந்தமான இன்ப உணர்வாக இருந்தது. அன்று முழுவதும் உறவினர் பலரும் என்னையும் புவனாவையும் இணைத் துக் கேலி பேசி வேடிக்கையில் சிரித்து மகிழ்ந்தார் கள். அவர்கள் கேலி பேசியது என்னை நோகடிக்கும் நோக்கத்திலும் இருந்திருக்கலாம். ஆனால் அன்று தான் புவனா என்னுள் மிக ஆழமாகப் புகுந்து கொண் டாள். அதன் பின் எத் தனை நாள் அவள் நினைவை எண்ணி எண்ணி குமைந்திருக்கிறேன்.

ஆனால் நான் ஒரு நாளும் அவளைப் போய்ச் சந்திக்க வேண்டும் என்று முயற்சித்ததில்லை. கடிதம் எழுத வேண்டும் என்று கூட கருதியதில்லை. என்ன காரணத்தைக் கொண்டு அதனை நான் செய்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள் தோன்றியிருக்கும் இந்த உணர்வு என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏன் அவளது நினைவு இத்தனை இன்ப உணர்வை ஏற்படுத்துகிறது? ஏன் என் மனம் அவள் அண்மையை நாடுகிறது? அவள் இல்லையே என ஏங்குகிறது. என் தவிப்பை யாரால் விளங்கப்படுத்த முடியும்.

நான் வசித்த தேயிலைத் தோட்டம் தான் இந்த உலகத்திலேயே மிக அழகானது என்று நான் கருதினேன். சுற்றிவர மலைக் குன்றுகள், பசுமையான மரங்கள், மலையருவிகள், மைனாக்கள், குருவிகள் அத் தோட்டத்துக்கு அழகூட்டின. சிவப்பும் மஞ் சளும் கலந்து ஒரு குருவிக் கூட்டம் அங்கு வந் திருந்தது. மக்கள் அதனை **நெருப்புக் குருவிகள்** என்று அழைத்தார்கள். அதன் வர்ணம் காரணமாக அவற்றை அவர்கள் அப்படி அழைத்திருக்கக் கூடும். அக் குருவிகளின் உண்மைப் பெயரை அறிந்து கொள்ள நான் ஆசைப்பட்டிருக்கிறேன். ஆனால் யாருக்குமே அது தெரியவில்லை என்ற போது ஏமாற்றமடைந்திருக்கிறேன். எனக்கு அந்தக் குருவிகளை ரொம்பப் பிடிக்கும். அவற்றைப் பிடித்து வீட்டில் வளர்க்க வேண்டுமென்று கருதியிருக்கிறேன். ஆனால் குருவிகளைப் பிடிப்பது பாவம் என்று வீட்டில் கூறுவார்கள். எனது ஆசை ஒரு போதும் நிறைவேறியதில்லை.

நான் வசித்த தோட்டம் எத்தனை அழகானது என்று யாரிடம் சொன்னாலும் யாரும் ஏற்றுக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டதே இல்லை. ஏனென்றால் அவர்கள் ஒருவரும் அந்த அழகைப் பார்த்ததில்லை. நான் அந்த தோட் டத்தையும் அதனைச் சூழவுள்ள மலைச் சாரலை யும் அனுபவித்து நேசித்த அளவுக்கு அவர்களால் அந்த சூழலை விரும்ப முடியவில்லை. அவர்கள் கணிப்பில் நான் வெறும் வேலையற்ற வெட்டிப்பயல். அவ்வளவுதான்.

புவனாவும் அவர்கள் குடும்பத்தினரும் முன்பு எங்கள் தோட்டத்தில் தான் வசித்தனர். புவனாவின் அப்பாவான எனது அம்மாவின் தம்பி என் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். நான் எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுப்பார். நானும் அவரை மாமா..... மாமா என்று எப்போதும் அவர் தோளில் தான் தொங்கிக் கொண்டிருப்பேன். அப்போதெல்லாம் புவனா வும் அநேகமாக எங்கள் வீட்டில் தான் இருப்பாள். நான் எப்போதும் அவளுடன் தான் விளையாடிக் கொண்டிருப்பேன். பாடசாலைக்கு நாங்கள் தோட்டத் தில் ஏனைய பிள்ளைகளுடன் ஒன்றாகவே சென்று வருவோம்.

பாடசாலை அடுத்த டிவிசனில் இருந்தது. அதனை மேற்கணக்கு என்று அழைப்பார்கள். எங்கள் டிவி சனை பணிய கணக்கு என்று அழைப்பார்கள். மேல் கணக்கு மலைக்கு மேல் உயரத்தில் இருந்தது. படிக்கட்டில் ஏறி நீண்ட தூரம் செல்ல வேண்டும். அந்தப் படிக்கட்டில் ஏறுவது ஒரு போதும் எங்க ளுக்கு கஸ்டமாக இருந்ததில்லை. அதில் ஆயிரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தெட்டுப்படிகள் இருந்தன. நாங்கள் அவ் வப்போது யார் அந்தப் படிகளை முதலில் ஏறிக் கடப்பது என்று போட்டி வைப்போம். என்னால் அந்தப் போட்டிகளில் இலகுவாக வெல்ல முடி யும். ஆனால் புவனாவால் அந்தப் படிகளில் வேகமாக ஏறிச் செல்ல முடியாது. அவளுடன் ஒன்றாய்ச் செல்ல வேண்டும் என்பதாலேயே நான் அந்தப் போட்டிகளில் தோற்றுப் போவதுண்டு. புவனாவுக்காக நான் அடையும் தோல்விகள் எனக்கு வருத்தத்தைத் தருவதில்லை.

எனக்குப் பத்து வயதாக இருக்கும் போது மாமா இறந்து போய் விட்டார். புவனாவுக்கு அப்போது வயது எட்டு, மாமா கொழுந்து மலையில் தான் கங்காணி வேலை பார்த்து வந்தார். அன்று கொழுந்து மலையில் இருந்து அந்த சோகமான செய்தி வந்தது. மாமாவை நாகபாம்பு தீண்டி விட்டது. அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இறந்து போய்விட்டார் என்று செய்தி வந்தது.

அந்தச் செய்தியைக் கேட்டு புவனாவும் அத் தையும் அழுத காட்சி எனக்கு இப்போதும் நேற்று நடந்ததைப் போல் ஞாபகமிருக்கிறது. அத்தை மயக்கம் போட்டு விழுந்து விட்டார். புவனா அத்தை யைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினாள். எனக் கும் அழுகை அழுகையாகத் தான் வந்தது. மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிலும் அந்த அளவுக்குப் பிரியம் வைத்திருந்தார். ஆனால் எல்லாவற்றையும் விட புவனாவின் சோகத் தையே என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் விக்கி விக்கி அழும்போதெல்லாம் என் தொண்டையிலும் ஏதோ வந்து அடைத்துக் கொள் கிறது. அது ஏனென்று எனக்குத் தெரியவில்லை. மாமா இறந்ததைவிட புவனாவுக்காகவே நான் அழு தேன்.

அடுத்த வருட முற்பகுதியில் என்னை நக ரத்துப் பாடசாலையில் ஆறாம் வகுப்பில் சேர்த்து விட்டார்கள். அது மட்டுமன்றி போடிங்கிலும் போட்டு விட்டார்கள். மிக மகிழ்ச்சியாக தோட்டத்தின் காடு, மலை, ஆறு, அருவி, புல், புதர் என சுதந்திரமாக சுற்றிக்கொண்டிருந்த என்னை நரகத்தில் தூக்கிப் போட்டது போல் இருந்தது. எனக்கு படிப்பு வேணாம் என்று எவ்வளவு அழுது அடம் பிடித்தும் என் அப்பா அதை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

எனக்கு அந்த போடிங்கில் இருக்க கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. அடிக்கடி காய்ச்சல் வந் தது. நன்றாக மெலிந்து போய்விட்டேன். சீக்குப் பிடித்த கோழி என்றெல்லாம் என்னை அழைத்தார் கள். வீட்டுக்கு செய்தி அனுப்பி அப்பா வந்து பார்த் தார். அப்பாவுக்கு என்னைப் பார்க்க பரிதாபமாக இருந்தாலும் அவர் என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லவில்லை. போடிங் உரிமையாளராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் பராமரிப்பவராகவும் இருந்த லலிதா அன்ரி யிடம் என்னை நல்லா பார்த்து கொள்ளும்படி கூறி கொஞ்சக் காசையும் கொடுத்து விட்டுப் போய்விட்டார். எனக்கு அப்பாமேல் வந்த கோபத் துக்கு அளவேயில்லை. அவர் எங்கள் தோட்டத் துக்குப் போகும் வழியில் காட்டாற்றுக்கு மேல் போடப்பட்டிருக்கும் மரப்பாலத்தில் இருந்து விழுந்து செத்துப்போக வேண்டுமென்று மனதுக்குள் கருவிச் சாபமிட்டேன்.

புவனா இல்லாத அந்தப் பாடசாலை என்னை வருத்தும் சிறைக் கூடமாகவே இருந்தது. எங்கள் தோட்டத்துப் பாடசாலை எத்தனை மகிழ்ச்சியானது. அந்தப் பாடசாலையில் நாங்கள் ஐம்பது பிள்ளைகள் படித்தோம். எங்களுக்கு ஒரே ஒரு வாத்தியார்தான் இருந்தார். அவர் தான் எல்லாப் பாடங்களையும் படிப்பிப்பார். சில நாட்கள் அவர் தமது காய்கறித் தோட்டத்தில் வேலை செய்யச் சொல்வார். வீட் டைக் கூட்டித் துப்பரவு செய்யச் சொல்வார். சில நாட்கள் விருப்பமான கதை சொல்வார். நானும் புவனாவும் அருகருகேதான் அமர்ந்திருப்போம்.

எனினும் நாங்கள் சிரித்துப் பேசி அகப்பட்டால் அவர் எங்களை அருகருகே இருக்க அனுமதிக்க மாட்டார் என்பதனால் நாங்கள் பாடசாலை நேரத் தில் வாத்தியார் கவனிக்கும் விதத்தில் எதுவும் செய்வ தில்லை. மிக நல்ல பிள்ளைகளாக இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனா என்னருகில் இருக்கிறாள் என்பதே எனக்கு மிகத் திருப்தியாக இருக்கும்.

நான் நகரத்துப் பாடசாலையில் சேர்ந்து மூன்று மாதம் கழிந்து விட்டிருந்தது. இந்த மூன்று மாதங்களே நான் என் வாழ்நாளில் அனுபவித்த மிக துன்பகரமான நாட்கள். மீன்களை ஆற்றிலிருந்து எடுத்து கரையில் தூக்கிப் போட்டது போன்ற துன்பம். யாராவது மீண்டும் ஆற்றில் எடுத்து போட மாட்டார்களா என்பது போன்ற ஏக்கம். என்னால் பாடங்களைப் படிக்கவே முடியவில்லை. நான் முதல் தவணை விடுமுறையை எதிர்பார்த்துத் தவம் கிடந்தேன்.

முதல் தவணை விடுமுறை நாள் வந்தது. உலகத்தில் நான் அனுபவித்தறியாத மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. வீட்டுக்கு நான் போகலாம். அங்கே நான் எனது தோட்டத்து நண்பர்களையும் சந்திக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக புவனாவை நான் பார்க்கப் போகிறேன். அதைவிட என் வாழ்வில் வேறு என்ன பேறு எனக்கு கிடைக்க வேண்டும். எனது தோற்றம் முன்னர் இருந்ததிலும் பார்க்க மூன்றில் ஒன்றாகக் கரைந்து இருந்தது. என் அம்மா என்னைப் பார்த்தால் எவ்வளவு துன்பப்படுவாள். எனது இந்த மெலிந்த தோற்றம் அவளுக்கு உண்மையில் துன்பத்தைத் தரத்தான் போகிறது. புவனாவுக்கு அடுத்தபடியாக எனக்குப் பிடித்த ஜீவன் என் அம்மாதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நினைப்புக்கள் எல்லாம் என் விடுமுறையை நோக்கிய பயணத்தை மாபெரும் எதிர்பார்ப்பு நோக்கித் தள்ளியது. நான் அந்தக் குளிரிலும் விடிய முன்பே எழுந்திருந்து பிரயாணத்துக்கு ஆயத்தமானேன். என்னிடமிருந்த பிரயாணப் பெட் டியை எடுத்து தூசி தட்டி என் துணிமணிகளை எல்லாம் அடுக்கிக் கொண்டிருந்தேன். நான் போட்ட சந்தடியால் மற்றவர்களும் எழுந்து விட்டனர். அவர்களுக்கும் விடுமுறைக்கு வீட்டுக்குப் போகும் எதிர்பார்ப்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் என் மனது தவித்த அளவுக்கு அவர்கள் ஏங்கித் தவித்திருக்கக் கூடுமா? அதைப்பற்றி சிந்திக்கும் பொறுமை எனக்கில்லை.

என் அப்பா வரத் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் நீண்ட யுகமாகத் தோன்றியது. எனக்குத் தெரியும், அவர் பகலாகித்தான் வருவார் என்று. இருந்தாலும் இந்த மனதை எப்படி நான் சமாதானப்படுத்துவேன். அதற்கு எப்படிச் சொல்லியும் புரியமாட்டேன் என்கிறது. என் எதிர்பார்ப்பு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

என் தந்தை நகரத்துக்கு வந்து நேரே என்னிடம் வரவில்லை. அவர் தனது வேலைகளை எல்லாம் திட்டமிட்டபடி முடித்துக்கொண்டு போகும் வழியிலேயே என்னிடம் வந்தார். அப்பா போடிங் வீட்டில் நுழைந்த கணத்திலேயே நான் எனது பிரயாணப் பெட்டியை கையிலெடுத்துக் கொண்டேன். என் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆவலைக் கொஞ்சமும் புரிந்து கொள்ள வில்லை. அவர் போடிங் உரிமையாளரான லலிதா அன்ரியுடன் ஆறுதலாக நாட்டு நடப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். பின் அவருக்கு கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளை கொடுத்து விட்டு ஆறுதலாகவே புறப்பட்டார்.

நாங்கள் பஸ்ஸை விட்டிறங்கி எங்கள் தோட் டத்தை வந்தடைய மூன்று கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டும். அந்தப் பாதையில் நடந்து செல் வது எனக்கு மிகப் பிடித்த விடயங்களில் ஒன்று. ஏனெனில் பாதைக்கு மேலே வளர்ந்திருக்கும் பற்றை களுக்கூடாக புளிச்சங் கொய்யாக்கா சிவப்பாகப் பழுத்திருக்கும். புவனாவுக்கும் நண்பர்களுக்கும் கொடு ப்பதற்கென அவற்றை முன்பு பிடுங்கிச் செல்வ துண்டு.

வழியில் இருந்த காட்டாற்றுக்கு குறுக்கே போடப்பட் டிருந்த மரப் பாலத்தில் நண்பர்களுடன் வரிசையாக நின்று ஆற்றுக்குள் சர்ரென்று மூத்திரம் பெய்வது எத்தனை மகிழ்ச்சிக்குரிய விடயம். அந்த ஆற்றோ ரம் நெல்லி, விரலிக்காய் மரங்கள் கூட இருக்கும். அவற்றில் எல்லாம் எத்தனை முறை ஏறி காய் பிய்த்திருக் கிறேன். அந்த வழியால் செல்லும் போதெல்லாம் கற் களை பொறுக்கி எடுத்து அந்த ஆற்றுக்குள் தெப்பக் குளம் கட்டி நிறைந்திருக்கும் நீருக்குள் விட்டெ றிந்து அவை எழுப்பும் நீர்த்திரலைகளை எத்தனை முறை ரசித்தாலும் அலுக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இம்முறை இந்தச் செயல்கள் எதனையும் செய்ய எனக்குப் பிடிக்கவில்லை. அப்பாவுக்குப் பின்னால் அமைதியாக நடந்து கொண்டிருந்தேன். எத்தனை முறை அடித்து வெளுவல் கொடுத்தாலும் அவை உறைக்காமல் அடுத்த கணத்தில் இன்னு மொரு சுட்டித்தனம் செய்யும் பயல் இன்று என்ன இப்படி அமைதியாக வருகிறான் என்று என் அப்பா நினைத்தாரோ என்னவோ ஒரு முறை திரும்பி என்னைப் பார்த்தார். ஆனால் ஒன்றும் பேசவில்லை. நான் மௌனமாகவே தொடர்ந்தும் நடந்து சென்றேன்.

எனது முழுக்கவனமும் வீட்டை அடைவதிலும் நண்பர்களைப் பார்ப்பதிலும் புவனாவை சந்திப்பதிலும் தான் இருந்தது. இந்த மூன்று மாதத்தில் அங்கே எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். மாடசாமி கோவிலுக்கு இடது பக்கமாக இருந்த பட்டுப்போன வாகை மரத்தின் பொந்தில் குடியிருந்த மைனாக்கள் குஞ்சு பொரித்துக் கொண்டு போயிருக்கும். வீராச் சாமி வீட்டு நாய் போட்டிருந்த மூன்று குட்டிகளும் பெரிதாக வளர்ந்திருக்கும். வீட்டுக்கு முன்னால் களிமண் குழைத்து வரிச்சு கட்டி கூரை போட்டு செய்து வைத்திருந்த விளையாட்டு வீட்டை யாரும் உடைத்திருப்பார்களோ?நான் பந்தயங்கட்டி ஜெயித்து ஜெயித்து சேர்த்து போத்தலில் போட்டுக் கவனமாக வைத்திருந்த என் ஜில் போலைகள் அப்படியே இருக் குமா? இப்படிப் பல சந்தேகங்கள் என் மனதில் தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி வெயில் சுரீர் எனச் சுட்டுக் கொண்டிருந்தது. என் அப்பா நகரத்தில் வாங்கிய மரக்கறி, மீன், தேங்காய் மற்றும் பொருட்களை ஒரு உமல் பையில் வைத்துக் கட்டி அதனை தலையில் சுமந்து சென்று கொண்டிருந்தார். அவர் வாங்கியிருந்த பெரிய நீண்ட கருவாட்டு மீனின் வால் உமல் பைக்கு மேலாக வெளியில் துருத்திக் கொண்டிருந்தது. சில வேளைகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஐந்து மைல் தூரத்துக்கு அப்பால் வெட்டகத்தெனிய என்ற இடத்தில் கூடும் சந்தைக்கு என்னையும் அப்பா அழைத்துச் செல்வார். இப்படித்தான் ஒரு உமல் பையில் சாமான்களை வாங்கிக் கட்டி என் தலையிலும் ஏற்றி விடுவார். நான் வழியெல்லாம் சபித்துக் கொண்டே சுமந்து வருவேன்.

நாங்கள் ஒருவாறு வீடு வந்து சேர்ந்து விட்டோம். நான் நினைத்தபடியே அம்மா என் வரவை வழிமேல் விழி வைத்துத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். ஓடி வந்து என் தோளில் இருந்து பெட்டியை இறக்கி வைத்து கட்டித் தழுவிக் கொண்டார். என் அம்மா ஒருபோதும் இவ்வளவு நாள் என்னைப் பிரிந்திருந்ததில்லை. என் மெலிந்த உருவத்தைப் பார்த்து அவள் கண்களில் பொல பொலவெனக் கண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. அவள் என்னைத் தழுவியவாறே தேம்பியழுதாள். நானும்தான் அழு தேன். அந்த அழுகையை நீண்ட நேரம் நிறுத்த முடிய வில்லை. அப்பா ஒன்றுமே பேசவில்லை. தலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தை இறக்கி வைத்து விட்டு வீட்டுக்குள் சென்று செம்பு நிறைய தண்ணீரை எடுத்துக் குடித்த கையு டன் நெற்றியில் வடியும் வியர்வையை வழித்து சுண்டி யெறிந்தார்.

அம்மா அன்று எனக்கு மிகக் கரிசனையுடன் சோறு பரிமாறினாள். இடைக்கிடை என் முகத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டாள். தன் இடது கையால் என் தலையைக் கோதி விட்டாள். அம்மா என்றால் அம்மாதான். அவள் விரல்களுக்கு எங்கிருந்து வருகிறது இவ்வளவு சக்தி. அவள் விரல்கள் என் நெற்றியிலும் கன்னங்களிலும் வருடும் போது எவ்வளவு இதமாக இருக்கிறது. அவளது ஸ்பரிசம் எனக்கு மிக ஆறுதலளித்தது.

நான் சாப்பிட்ட உடனேயே நண்பர்களையும் புவனாவையும் பார்க்க திட்டமிட்டேன். நான் கிளம்பு வதை அறிந்த அப்பா “வந்தவுடன் எங்கேடா போறாய்?” என்று அதட்டினார். நான் அதனைப் பொருட்படுத்தவில்லை. புவனாவுக்காக கள்ளமாக வாங்கி வந்திருந்த சொக்லட்டையும், நண்பர்களுக்காக வாங்கி வைத்திருந்த பிஸ்கட் பக்கற்றையும் எடுத்து சட்டையின் முன் பட்டனை திறந்து நெஞ்சுக்கூடாகத் திணித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வெளியேறினேன்.

நாங்கள் வழக்கமாகக் கூடும் இடமான பிரட் டுக்களச் சந்திக்கு வந்த போது ஏற்கனவே என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவை கேள்விப்பட்டிருந்த பாலா, முத்து, பெரிய சாமி, கந்தையா, சுந்தரம் எல்லோரும் என் வரவை எதிர்பார்த்திருந்தனர். நாங்கள் முனியாண்டி கோயில் ஆலமரத்தடிக்குச் சென்று பேசுவதென்று தீர்மானித் தோம். சிலவேளை செய்தியறிந்தால் புவனாவும் வரு வாள். அல்லது அத்தை வீட்டுக்குப் போய்ப் பார்க்க லாம் என்று நினைத்துக் கொண்டேன்.

நண்பர்களிடமும், புவனாவிடமும் சொல்ல எவ்வ ளவு விசயங்கள் இருக்கின்றன. அதுபோல எனக் குச் சொல்ல அவர்களிடமும் நிறைய விசயங் கள் இருக்கும்.

நாங்கள் எல்லோரும் முனியாண்டி கோயில் ஆலமரத்தடியில் சென்று அமர்ந்தோம். அவர் களில் பாலாதான் என் நெருங்கிய நண்பன். நான் பிஸ்கட்டை எடுத்து அவனிடம் நீட்டினேன். சொக்லட் இருக்கும் விடயத்தைக் காட்டிக்கொள்ளவில்லை.

பாலாதான் மௌனத்தைக் கலைத்தான்.

“உனக்கு விசயம் தெரியுமாடா?”

“என்னடா” எனக்கு ஆவலாக இருந்தது.

“புவனா இப்ப இங்கே இல்லடா” எனக்கு திகீர் என்றது.

“என்னடா சொல்ற. அவ எங்கே போய்ட்டா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவ அப்பா செத்ததோட அவுங்களுக்கு வருமானம் இல்லாம போச்சு. அவுங்க வேற தோட்டத்துக்குப் போய்ட்டாங்க”

“எந்த தோட்டத்துக்கு...” என் குரல் பலவீனமாக ஒலித்தது.

“மேரிவலைத் தோட்டத்துக்கு....”

மேரிவலைத் தோட்டம் எங்கள் தோட்டத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருந்தது. அங்கே எப்படிப் போவது. அம்மாவிடம் தான் கேட்டுப் பார்க்க வேண்டும். அத்தையைப் பார்க்கப் போகவேண்டுமென்று, இந்த ஏமாற்றத்தால் அதன் பின் நண்பர்கள் கூறிய கதைகள் எல்லாம் சுவைக்கவில்லை. நான் புவனாவுக்காக வாங்கி வைத்திருந்த சொக்லேட்டையும் அவர்களுக்கே கொடுத்து விட்டேன்.

அம்மா முன்பைவிட இப்போது என் மீது அதிக அக்கறை காட்டினாள். நான் அம்மாவிடம் பேச்சுக் கொடுத்தேன். அத்தைக்கும் புவனாவுக்கும் என்ன நடந்ததென விசாரித்தேன். மாமா இறந்த பின் அவர்களுக்கு வாழ்க்கை நடத்த வருமானம் போதவில்லை என்றும் அத்தை மலையில் வேலை செய்ய விரும்பவில்லை என்றும், அதனால் மேரிவலைத் தோட்டத்திற்குப் போய்விட்டார்கள் என்றும் தனக்கு நண்பர்கள் கூறிய தகவலையே அம்மாவும் கூறினாள்.

அத்தையைப் போய் பார்த்து வரலாமா என்று அம்மாவிடம் கேட்டேன். வரப்போகும் சித்திரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநாளுக்கு அப்பாவையும் கூட்டிக் கொண்டு போய் வரலாம் என்று கூறினாள் அம்மா. எனக்கு அந்த யோசனை பிடிக்கவில்லை. அப்பாவுடன் போனால் அன்றே அவர் திரும்பி வந்துவிடுவார். அம்மாவுடன் போனால் இரண்டு நாட்கள் அடம் பிடித்து தங்கிவிட்டு வரலாம்.

சித்திரைப் புத்தாண்டுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருந்தன. அவ்வளவு நாட்கள் என் மனம் காத்திருக்குமா? வேறு ஏதும் மார்க்கம் இருக்கிறதா? என் சுறுசுறுப்பும் உற்சாகமும் எங்கோ போய் மறைந்து விட்டன. முதல் முறையாக அந்த அழகிய தேயிலை மலைகள் அவற்றின் சௌந்தரியத்தை இழந்து விட்டவை போன்று தோன்றின. எல்லா வற்றுக்கும் இந்த உணர்வுகள் தான் காரணம். நாடி, நரம்பு, கை, கால், மூட்டுக்கள் எல்லாம் உணர்வுகளாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன போல் தோன்றியது. நான் ஏன் இப்படி சோர்ந்து போய்க் கிடக்கிறேன். எறும்பு போல் ஊறித்திரிந்த நான் இப்படி முடங்கி விட்டதன் காரணம் என்ன?

அந்த இரண்டு வாரங்களும் என்னை மேலும் சித் திரவதைக்குள்ளாக்கின. முன்பெல்லாம் அம்மா சமைக் கும் சாப்பாடு, அமிர்தமாக ருசிக்கும். ஆனால் இப்போது கை சாதத்தை பிசைகிறதே தவிர வாயில் ஊட்ட மறுக்கிறது. அப்பா அத்தை வீட்டுக்குப் போய் வர மறுப்புத் தெரிவிக்கவில்லை. அவருக்கும் தன் தங்கையைப் பார்க்க ஆசையாய் இருந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தை வீட்டுக்கு கொண்டு செல்ல அம்மா முதல் நாளே பலகாரங்கள் எல்லாம் தயார்படுத்தியிருந்தார். மேரிவலைத் தோட்டத்துக்கு நடந்துதான் போக வேண்டும். அதுவும் ஏத்தத்தில் ஏறி இறக்கத்தில் இறங்கி ஆற்றைத் தாண்டி போக வேண்டும். புவனாவைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பு என்னில் பழைய உற்சாகத்தையும் தெம்பையும் வரவழைத்திருந்தது. அப்பா வாங்கித் தந்திருந்த புதுச் சட்டையும் அதற்கேற்றாற் போல் பெல்ட், எல்லாம் அணிந்து கொண்டேன்.

நாங்கள் புவனாவின் வீட்டையடைந்தபோது பகல் பத்து மணியாகி விட்டது. அத்தை மலர்ந்த முகத்துடன் எங்களை வரவேற்றார். என்னை அணைத்து உச்சி முகர்ந்தார். பாடசாலை பற்றியெல்லாம் விசாரித்தார். என் கண்கள் புவனாவைத் தேடித் துலாவின. அவளைக் காணவில்லை. எனது தேடலை புரிந்து கொண்ட அத்தை "யாரைத் தேடுற தம்பி... புவனாவா... அவ அங்கே தோட்டத்துப் பக்கம் செல்வராசாவுடன் விளையாடப் போனா..."

அம்மா, அப்பா, அத்தை தங்களது விவகாரங்களை பேச ஆரம்பித்தனர். நான் வெளியில் இறங்கிச் சென்றேன். அங்கே தோட்டத்துப் பக்கம் சிரிப்புச் சத்தம் பெரிதாகக் கேட்க அங்கே புவனாவும் செல்வராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அத்தை குறிப்பிட்ட பையனும் சிறு வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களும் புத்தாடை அணிந்திருந்தனர்.

புவனா என்னைக் கண்டதும் ஓடோடி வந் தாள். என் கைகளைப் பிடித்து இழுத்துச் சென்று செல்வரா சாவுக்கு அறிமுகப்படுத்தினாள். செல் வராசாவுக்கு என்னை விட இரண்டு மூன்று வயது அதிகமாக இருக்க வேண்டும். ஏனோ அவனை எனக்குப் பிடிக்க வில்லை. புவனா முன் பெல்லாம் எனது நண்பர் களான பாலா, சுந்தரம், முத்து, பெரியசாமி ஆகியோரு டனெல்லாம் விளையாடுவதுண்டு. ஆனால் எனக்கு ஏனோ இந்த செல்வராசாவுடன் புவனா விளை யாடுவது பிடிக்கவில்லை. இருந்தாலும் நானும் அன்று முழுவதும் அவர்களுடன் மகிழ்ச்சியுடன் விளையாடினேன்.

எனக்கு புவனாவுடன் விளையாட அன்று மட்டும் தான் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்பா மாலையானதும் புறப் பட்டு விடுவார். என்னால் வேறு என்ன செய்ய முடியும். நான் அன்று மிகத் துயரத்துடன்தான் புவ னாவைப் பிரிந்து சென்றேன்.

அதன் பின் நான் புவனாவைச் சந்தித்தது அவளது பூப்புனித நீராட்டுவிழா அன்று தான். அதைப்பற்றி உங்களுக்கு ஏற்கனவே சொல்லி விட்டேன். நான் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை விடுமுறைக்கு வீட்டுக்குப் போகும் போதெல்லாம் அத்தை வீட்டுக்குப் போக எத்தனை முறை முயற்சித்தும் அது கைகூடவில்லை.

நான் க.பொ.த (உ/த) பாஸ் பண்ணியவுடன் என்னை கொழும்பிலுள்ள தனியார் கம்பனியொன்றில் வேலைக்குச் சேர்த்து விட்டார் அப்பா. இக்காலத்தில் அத்தை வீட்டுடனான உறவு தூரத்தில் விலகிப்போயிருந்தது.

இப்போது அத்தையின் சாவுச் செய்தி வந்திருக்கிறது. கட்டாயம் நான் போகத்தான் வேண்டும். இது நான் புவனாவைச் சந்திக்கும் கடைசிச் சந்தர்ப்பமாக இருக்கக்கூடும்.

நான் புவனாவின் வீட்டை சென்றடைந்த போது மாலையாகியிருந்தது. எனது உற்றார் உறவினரெல்லாம் அங்கே கூடியிருந்தனர். அத்தையின் உயிரற்ற உடல் பெட்டியில் வளர்த்தப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நான் நேரே சென்று அத்தைக்கு எனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினேன்.

பின் அங்கே போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் சென்றமர்ந்தேன். உறவினர்கள் ஒவ்வொருவராக வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரிக்கத் தொடங்கினர். என் கண்கள் அங்கிருந் தோரை நோட்டம் விட்டன. எங்கேயும் புவனாவைக் காணவில்லை. நீண்ட நேரமாகியும் புவனா வர வில்லை.

அங்கே கூடியிருந்தோரில் என் நண்பர்கள் யாரா வது இருக்கிறார்களா என்று பார்த்தேன். தூர த்தே பாலா அப்போதுதான் வந்து கொண்டிருந் தான். நான் அந்தக் கூட்டத்திலிருந்து மெல்ல விலகிச் சென்றேன். பாலாவை வழிமறித்து ஓரமாக அழைத்துச் சென்றேன். "ஏன் இங்கே புவனாவைக் காணவில்லை".

அவன் என்னைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் என் மண்டையில் கூரிய ஊசி கொண்டு குத்தியது போலிருந்தது.

"புவனா செல்வராசாவுடன் ஓடிப் போய் விட்டாள். அந்த சோகத்திலேயே அத்தை மனமுடைந்து நோயா ளியாகி செத்துப் போய்விட்டார். தன் மரணத் துக்குக் கூட அவளை வரக் கூடாது என்று அத்தை கூறி விட்டாள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் பாலா என்ன சொன்னான் என்பது என் காதுகளுக்குக் கேட்கவில்லை.

■

**தாயகம்**

**2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# செவப்பு கலருல ஒரு காரு

அப்பாவோட டவுனுக்கு போறதுல இருக்கும் சந்தோசம் வேறெதுலயும் கெடையாது. சாப்பிடறதுக்கு நெறைய கெடைக்கும். எல்லாத்தையும்விட குச்சி ஐஸ் பழம் எனக்கு ரொம்ப பிரியம். அண்ணாவும் தம்பியும் கூட வருவாங்கதான். ஆனா அப்பா என் மேல தான் அதிகம் பிரியமா இருப்பாரு.

அன்னைக்கு நாயித்துக் கெழம. பொதுவா நாயித் துக் கெழமையிலதா டவுனுக்குப் போவம். அன்னைக் குத்தா மரக்கறி சந்த, மீன் சந்தயெல்லாம் கூடு வாங்க. டவுனுக்குப் போற விசயத்த அப்பா நேத்தே அம்மாக்கிட்ட சொல்லிட்டதால இன்னிக்கு காலங்காத் தால விடியறதுக்குள்ளேயே நாங்கள்லாம் எந்திரிச்சிட் டோம்.

தோட்டங்கள்ல கக்குசு குழியெல்லாம் கெடை யாது. ஒன்னுக்கு ரெண்டுக்கு போறதெல்லாம் தேயிலைச் செடி மறப்புலதா. மறவான எடத்துல ரெண்டு கல்ல வச்சி குதிகால தூக்கி வச்சி அதுல ஒக்காந்து தான் கக்கா போவனும். அப்பிடியே காணுத் தண்ணியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறத்திய கழுவிக்கிட்டு ஓடியாந்திடுவோம். இப்
பிடித்தா விடியறுதுக்குள்ளேயே எல்லா ஆளுகளும்
போய்ட்டு வந்திடுவாங்க.

நானும், அண்ணாவும், தம்பியும் ஒன்னாத்தான் மூஞ்சிக்கழுவ போவம். பல்லுத் தீட்ட பிரசெல்லாம் கெடையாது. தேயிலைச்செடியிலிருந்து பச்சையான வாது ஒன்ன ஒடச்சிக்கணும். அத ஒரு முனைய கடவாப் பல்லால நல்லா சுத்திவர வர கடிச்சி தும்புத் தடிமாரி கொண்டு வரணும். அதுதா எங்க பிரசு. அதுல பல்லத் தீட்டறது கூட சொகமாத்தான் இருக்கும். ஆனா குச்சிய நல்லா கடிச்சி மெல்லிசாக்கனும். இல்லாட்டி குச்சி மொறசுல கீறி ரத்தம் வந்திடும்.

இதெல்லாம் முடிஞ்சதும் பீலித் தண்ணியில மூஞ்சியை புடிச்சா எண்ணப்பிசுக்கெல்லா கழண்டு ஓடிடும்.

மூஞ்சிய ரொம்ப நேரம் தண்ணில புடிக்கேலாது. ஜில்லுனு குளிரும். அப்படியே மூஞ்சிய தண்ணியிலிருந்து இழுத்து சாரத்தில தொடச்சி புட்டு ஓடியாந்திர வேண்டியதுதா.

சொணங்குனா அப்பா சத்தம் போடுவாரு. அம்மாவைத் தான் ஏசுவாரு "கம்மனாட்டி கழுத" ங்கறது எப்போதும் சொல்ற வார்த்த. அதுனால வேலைய கம்முன்னு முடிச்சிட்டு டுர்ரு......டுர்ருண்ணு ஓடியாந்துட்டோ.

அப்பா டவுனுக்குப் போறதுன்னா நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமான முழுக்கை வெள்ளைச்சேட்டும் வெள்ளை வெளேருன்னு வெளுத்த வேட்டியுந்தா உடுப்பாரு. வேற எங்க போறதுனா கூட வெள்ளை உடுப்புதான். அவரு அத மாத்துனத நா பாத்ததே இல்ல. நாங்க போறதுக்குள்ளயே அப்பா உடுத்தியிருப்பாரு.

"எங்கடா பயலுக போனீங்க. நேரமாவல. சுருக்கா பொறப்படுங்க. ஏழு மணி பஸ்ஸ புடிக்கனும்"

அது அப்பாவோட பழக்கம். எல்லாத்துக்கும் அவ சர படுத்துவாரு. எதையும் குறிச்ச நேரத்துக்கு ஒரு ஐஞ்சு நிமிசத்துக்கு முந்தியே முடிக்கனும்னு சொல்லுவாரு. அப்ப பொறப்பட்டா கூட ஏழு மணி பஸ்ஸ புடிக்கிறது லேசுப்பட்ட காரியமல்ல. ஏன்னா எங்க லயத்து வூட்லருந்து பஸ்ஸ புடிக்கிறதுக்கு மூணரை கட்ட தூரம் நடக்கனும். அதுவு லெவலு ரோட்டு கெடயாது. கொஞ்ச நடக்கணும். பெறகு படியேறனும். இன்னும் கொஞ்சத் தூரம் ஒத்தயடிப் பாதையில போவனும். கடசியா இருக்குறதுதா பெரிய ஏத்தம். அதுல ஏறும்போது மூச்சு வாங்கும். போறதுதா ரொம்ப கஸ்டம். வாறப்போ பள்ளத்தில இறங்கி "குடுகுடு" ன்னு ஓடியாந்திடலாம்.

அம்மா எடுத்து வெச்சிருந்த நல்ல உடுப்புங்கள எங்க மூத்த அக்கா தான் உடுத்தி உட்டாங்க. எங்க வீட்ல மொத்தமா பத்துப்பேரு. எனக்கு முன்னால அண் ணனும் நாலு அக்காமாரும் இருந்தாங்க. நா ஆறா வது ஆளு. எனக்கு பொறகு தம்பியும் மூனு தங்கச் சிமாரும் இருக்காங்க. பொம்பளப் புள்ளங்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐஞ்சாங்கிளாசோட படிப்ப உட்டுட்டாங்க. அண்ணா இப்ப ஐஞ்சாங் கிளாஸ் தான் படிக்கிறான். அடுத்த வருசம் அவன டவுனு ஸ்கூல்ல சேத்துவுடுறேன்னு அப்பா சொல்லி இருக்காரு. அண்ணா டவுன் ஸ்கூ லுக்கு போய்ட்டான்னா நானும் போவலாம். இப்ப எங்க தோட்டத்து வாத்தியாரோட மவன் மட்டுந்தா டவுனுக்கு படிக்கப் போறான்.

டவுனுக்கு போறதுன்னா மூனரை கட்ட நடந்து போவனும். அப்புறம் பன்னண்டு கட்ட பஸ் சுல போவனும். ஏழு மணிக்கு ஐஞ்சு நிமிசம் இருக் குறப்பவே நாங்க நாலு பேரும் பஸ் டாப்புக்கு வந்துட்டம். ஆனா இந்த படவா பஸ்காரன் பதி னைஞ்சு நிமிசம் லேட்டா தான் வந்தான். அப்பா நெத்தி வேர்வையை தொடைச்செறிஞ்சி ஆசுவாசப் படுத்திக் கிட்டாரு. எங்களுக்குன்னா இந்த வேர்வை யெல்லாம் கணக்கே இல்ல. டவுனுக்கு போறதுல்ல அவ்வளவு சந்தோசம்.

பஸ்சுக்கு காத்திருந்த இந்த இருபது நிமிசத்துல களவாணிப்பய பயபுள்ள. திருட்டுப்பய. நாசமா போன வன். நேரத்துக்கு வரமாட்டானான்னு ஒரு நாலு தடவ அப்பா பஸ்காரனை திட்டியிருப்பாரு. எங்களுக்கும் கூட பொறுமையா இருக்க முடியல.

என்னோட அண்ணா ஒரு சாதுவான பிராணி. அத னால அப்புராணின்னு பேர் வாங்கியிருந்தான். அவன் மூணு வயசு இருக்கும் போது கணச்சூடு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்துப்போற அளவுக்கு மோசமா கெடந்தான்னு அம்மா அடிக்கடி சொல்லுவா.

இந்தியாவுல இருக்கிற குல தெய்வத்துக்கு நேர்த்திக்கடன் வச்சித்தான் காப்பாத்துனாங்களாம். அவன ஒரு தடவாவது இந்தியாவுக்கு கூட்டிப்போய் தங்களோட சொந்த கிராமத்துல இருக்கிற குலதெய்வத்துக்கு வைச்சிருக்குற நேத்திக்கடன முடிச்சிடனும்னு அவனுக்கு சொகமில்லாம போற நேரமெல்லாம் அம்மா பொலம்புவா. அந்த குல தெய்வத்தோட பேரு என்னான்னு நா பல தடவ கேட்டப்பவும் சொல்லல.

சொன்னா அதோட சக்தி கொறஞ்சிடுமாம்.

ஒரு நா "நீ செத்திட்டின்னா ஒங் கொல தெய்வத் தோட பேரு எங்களுக்கு தெரியாமலே போயிருமே" அப்புடீன்னு வாய்க்கு வந்தபடி கேட்டுட்டேன்.

அம்மா கண்ணுல பொல பொலன்னு தண்ணி வந் திடுச்சி. நா அப்படி என்ன சொல்லிட்டேன்னு எனக்கு வெளங்கல. பொறகு அம்மா என்னை இறுக்கி அனைச் சிக்கிட்டு காதுக்குள்ள பய பத்தியோட குசு குசுன்னு சொன்னா. எங்க குல தெய்வத்தோட பேரு கள்ளண்ணன் புள்ள பெருமாள்.

எந்தம்பி என்னளவுக்கு சுட்டிப்பயலா இல்லாட்டியும் சுறுசுறுப்பா இருப்பான். நான் சுட்டித்தனம் பண்ணும் போது அவனும் என்னோட இருக்குறதால எனக்கு விழுற அடி உதையில ஒண்ணு ரெண்டு அவனுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் உழும். அடிக்கடி என்னைய அவன் காட்டிக் கொடுக்குறதால எனக்கிட்டையும் அவன் ஒத வாங்கு வான்.

நாங்க போற பஸ் பாதைய நீங்க பாத்திருக்க மாட் டீங்க. வளைஞ்சி வளைஞ்சி கோணா மாணலா தேயி லைத் தோட்டத்துக்குள்ளாற போகும். புள்ளத்தாச்சி எல்லாம் அந்த பஸ்ல போனா பஸ்சுக்குள்ளேயே புள்ள பொறந்துரும்னு எங்கப்பா சொல்லுவாரு. வெள்ளக்காரன் போட்ட ரோட்டு. அதுக்குப் பொறகு ஒரு மவ புள்ளையும் வந்து பாக்கலையாம்.

டவுனுக்கு வாறதுக்கு ஒன்னவர் பிடிச்சிருக்கும். பஸ் காரன் மணியடிசிக்கிட்டு போற வண்டி மாதிரிதான் போவான். அதோட ஆளுங்கள அங்க ஏத்தி... இங்க எறக்கி... வலு வட்ட பய... டவுன்னா டவுன்தான் தோட்ட முன்னா தோட்டம்தான். அவ்வளவு வித்தியாசம். எங்கவூட்டு தோட்ட லயம் எப்பவும் கரியும் புகையும் அப்பி கருப்பாதான் இருக்கும். மனுசங்கூட வெயில் லயும், மழையிலயும், குளிர்லயும் வாடி கருகிப் போயி மரக்கட்டையாட்டம் இருப்பாங்க. மூஞ்சில பளபளப்பே இருக்காது. எண்ண வடிஞ்ச மூஞ்சும் பரட்டத்தலையும் சகிக்காது.

டவுன்ல ஆளுங்க எவ்வளவு சந்தோசமா இருக் காங்க. காரு பஸ்செல்லாம் புர்ரு புர்ருன்னு ஓடுது. வெள்ளையடிச்ச கட்டிடங்க கடைங்க.... எல் லோரும் கலகலப்பா, துருதுருன்னு இருக்காங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவோட, அப்ப...அப்ப....அந்த டவுனுக்கு வந்த தால அந்த டவுனப் பத்தி கொஞ்சம் தெரியும். அந்த டவுன் நடுவுல ஒரு முச்சந்தி இருக்கு. அதுல இருந்து பிரிஞ்சு போற மூனு ரோட்டுக்கு ரெண்டு பக்கமும் கடைங்க வரிசையா இருக்கும். பெரிய பஸ்டாண்டு. கோச்சி வந்து நிக்கிற இடம். சந்தைங்க. சினிமா தேட்டர் எல்லா இருக்கு. பெரிய பள்ளிக்கூடங் கூட இங்க தானிருக்கு.

அண்ணா அடுத்த வருசம் அதுல சேர்ந்திட்டான்னா அதுக்கடுத்த வருசம் நானும் சேர்ந்துரலாம்.

கடைங்கள்ளேயும், சந்தைலேயும் வீட்டுக்கு சாமான் வாங்குறதுல ரொம்ப அப்பா அக்கறையா இருந்தாரு.

எங்களுக்கு வேர்க்கடலை, சீனி போலைங்கக் கொறி க்க வாங்கித் தந்தாரு. நா அதெல்லாத்தையும் கால் சட்டை பைக்குள்ள போட்டு கிட்டு குச்சி ஐஸ் பழம் சாப்பிட்ட பொறகுதான் அதச் சாப்பிடுவேன்னு சொல் லிப்புட்டேன். அப்பா எங்களுக்கு குச்சி ஐஸ் பழம் வாங்க காசு கொடுத்தாரு. அப்படியே டவுன சுத் திப் பாத்துட்டு வரும்படியும் தான் சந்தையில் யாழ்ப்பாணத்து சொக்கநாதன் வெத்தல கடயில இருக்கிறதாகவும் சொன்னாரு.

எங்களுக்கும் அதுதானே வேணும். சிட்டாப் பறந்துட் டம். அப்படி சுத்திக்கிட்டு போற நேரத்தில தான் அந்த வெளயாட்டு சாமான் கட எங்கண்ணுல பட்டுடுச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க சோக்கேசுல செவப்புக்கலருல ஒரு வெளயாட்டு காரு வச்சிருந்தான். கொஞ்சம் பெரிசு. பெட்ரியில ஓடுறது. அண்ணாவும் தம்பியும் கூட அத கண்டுட் டாங்க. அது மட்டும் எனக்கு கெடச்சா.....ஆனா அதெல் லாம் பேராசைன்னு எங்களுக்குத் தெரியும். எங்க அப் பாவால அவ்வளவெல்லாம் செலவு பண்ண முடி யாது.

ஒரு நாளு கூட கடையில் வெளயாட்டுச் சாமா வாங்கி நாங்க வெளயாடுனதில்ல. தென்ன மட்டையும், டின்னும், தகரமும், காட்போட் பெட்டிங்களுந்தான் எங்கவுட்டு வெளயாட்டு சாமாங்க. ஆனா அந்த வெளயாட்டுக்காரைப்பத்தி எங்களால பேசாம இரு க்க முடியல. அதோட மின்னுற செவப்பு கலரு, பளிச் பளிச்னு வெளிச்சம். அது போடுற சத்தம், அது சொய்ங்ங்ன்னு...ரிவசுல திரும்புற வெதம்...இது தான் பேச்சு. அப்பாவும் இவிங்க அந்தக் காரப்பத்தி இவ்வளவு பேசுறாங்களேன்னு வாங்கடா போய் பார்க்கலாம்னு ஒரு ஆர்வத்துல வந்துட்டாரு. அப்பா அப்படி சொன்னோன்ன எங்களுக்குள்ள ஒரு பெரிய எதிர்பார்ப்பு வந்துருச்சி. அப்பாவ ரெண்டு கையாலயும் இழுத்துக்கிட்டே அந்த கடைக்கு வந் துட்டம்.

இந்தக் கடைய ரெண்டு பொம்பள புள்ளங்கதா கவனிச்சிக்குட்டு இருந்தாங்க. அப்பா அந்த கார பாத்ததுமே கொஞ்சம் தயங்கினாரு. பொறவு ஒரு பொம்பளப்புள்ளக்கிட்ட அந்தக் கார எடு க்க சொன்னாரு. அந்த புள்ள அப்பாவையும் எங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் ஒரு மாதிரி பாத்துச்சி. எங்களோட சாயம் மங்கிப் போன உடுப்பு, உழைத்து உக்கிப் போன அப்பாவின் தோற்றமும் “இந்தப் பயலுகளா இத வாங்கப்போறானுகன்னு அந்தப் புள்ள எலக்காரமா நெனச்சிருக்கனும்” இருந்தாலும் அந்த புள்ள அத எடுத்துக்காட்டுச்சி. அப்பா அதோட வெல எவ்வள வுனு கேட்டாரு அந்த புள்ள இருநூத்து நாப்பது ரூவான்னு சொன்னுச்சி.

அதக் கேட்ட ஒடனே அப்பாவோட மொகம் டக்னு மாருனத நா கவனிச்சேன். அப்பா ஒரு ஒணர்ச் சியையும் காட்டல.

“தம்பிங்களா...இது வெல கூடவா இருக்கு இன் னொரு நாளைக்கு வரப்போ வாங்குவோம்” அப்புடீன் னாரு.

நாங்களும் கப்புச் சிப்புனு ஆயிட்டோம். எங்கப் பாவ எனக்கு ரொம்ப நல்லா தெரியும். ரொம்ப துணிச்சல் காரரு. வேட்டைக்கெல்லாம் போயி காட் டுப்பண்டி கொண்டாந்து சமச்சுத்தருவாரு. எங்க மேல ரொம்ப பாசம் வச்சியிருந்தாரு. அந்தக் கடையில இருந்து எந்த மூஞ்சியோட எங்கள கூட்டிக்கிட்டுப் போவா ருன்னு எனக்கு ரொம்ப வருத்தமா போயிடுச்சி.

அண்ணனும் தம்பியும் மௌனமாவே வந்தாங்க. எனக்கு ஏன் அந்தக் காரப் பத்தி அப் பாகிட்ட சொன் னோம்னு ஆயிருச்சி. எங்கள மாரி உள்ளவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெல்லாம் அதிகமுனு தெரிஞ்சும் அப்பா மனச நோகடிச்சிட்டோம்.

எல்லா இந்த ரெண்டு பயலுகளாலும் வந்த வென தா.

இனி கொஞ்ச நாளைக்கு அப்பா மனசுல ஒரு வருத்தமான வடு உறுத்திக்கிட்டே இருக்கும். எனக்குங் கூடதான்.

அப்பா கிட்டத்திலெதா இறந்து போனாரு. நாங்கெல் லாம் படித்து பெரியவர்களாகி பட்டம் வாங்கிட்டோம்.

எனக்கு ஏழு வயதில் ஒரு மகனிருக்கிறான். நானும் மனைவியும் சேர்ந்தே டவுனுக்கு கூட்டிக்கிட்டுப் போனோம். அங்கே கடையில அதே மாதிரி ஒரு செகப்பு காரை பாத்து மகன் ஆசைப்பட்டான். அத அவனுக்கு வாங்கிக் கொடுத்தபோது எம் மனசு அடைஞ்ச மகிழ்ச்சி எனக்கு மட்டுந்தான் தெரியும். இந்த கதைய எம் மனைவிக்கிட்ட அப்ப நா சொன் னேன். அவ கண்ல ரெண்டு சொட்டு தண்ணி வந்தி ருச்சி. ஓங்க கிட்டயு சொல்லனும்னு நெனச்சே. சொல் லிப்புட்டேன். அம்புட்டுதான்.

■

**தாயகம்**
**2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

# தேன் மொழி அல்லது இளம் பரிதி

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இளம் பரிதியும் தேன் மொழியும் செங்கந்தன் கந்தையின் (செங்கடகல) அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்து வந்தாலும் இரண்டு வீடுகளும் உயர்ந்த கெட்டியான செங்கற் சுவர்களால் சுற்றுச் சுவர் கட்டி பிரிக்கப்பட்டிருந்தன. இளம்பரிதி உலகெங்கும் வியக்கும் கட்டிளங்காளையாவான். தேன் மொழி அழகுக்கே அரசியான யுவதியாவாள். அவர்கள் இரு வரும் அயல் அயல் வீடுகளில் வசித்த படியால் ஒரு வரை ஒருவர் நன்கு தெரிந்து கொண்டிருந்தனர். எனவே விரைவிலேயே காதல் வசப்பட்டு விட்டனர்.

அவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினர். எனினும் அதற்கு அவர்களின் பெற்றோர் தடை விதித்து விட்டனர். அவர்களின் காதலை யாராலும் தடை செய்ய முடியவில்லை. அது முன்னெப்போதும் இல்லாதபடி நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மனங்களின் இரகசிய காதலுக்கு உதவி புரிய யாரும் இருக்கவில்லை என்றாலும் அவர்கள் சைகைகளாலும் தலையசைப்புக்களாலும் கண்களின் பாசையாலும் மட்டுமே பேசிக் கொண்டனர். அவர் களின் உணர்வுகளைத் தடுக்கத் தடுக்க உள்ளுணர் வுகள் மேலும் மேலும் பீறிட்டு எழுந்ததால் எந்த சக்தி யாலும் அவர்களைப் பிரிக்க முடியாது என்ற நிலைக் குத் தள்ளப்பட்டு விட்டனர்.

அவர்கள் வீட்டைச்சுற்றி இறுக்கமான தடித்த சுவர் கள் கட்டப்பட்டிருந்த போதும் பின்புறத்தில் ஓரிடத் தில் சுவரில் ஒரு சிறு இடைவெளி அடைக்கப்படா மல் விடப்பட்டிருந்தது. இந்த இடைவெளி நீண்ட கால மாக அவ்விடத்தில் இருந்து வந்த போதும் அதனை யாரும் கவனித்திருக்கவில்லை. ஆனால் காதல் உறவைத் தேடிய அவ்விரு காதல் பறவைகளுக்கும் அந்த சிறு இடைவெளி பெரும் பாலமாகத் தெரிந் தது. அவர்கள் யாருக்கும் தெரியாமல் அவ்விடை வெளியூடாக காதல் மொழிகளைப் பேசிக் கொண்ட னர். கனவுகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொண் டனர்.

அந்த சுவர் அவர்கள் காதல் உறவுக்கு புஷ்பக விமானமாக இருந்து தாலாட்டியது. சில நேரம் அவர் கள் அந்த சுவரை கோபித்துக் கொண்டனர். இன்னுங் கொஞ்சம் இடைவெளி விட்டிருந்தால் தாம் ஒரு வரை ஒருவர் ஸ்பரிசித்துக்கொள்ளலாமே என்று அங்க லாய்த்தனர். ஒரு புறம் இளம்பரிதியும் மறுபுறம் தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியும் அந்த சுவற்றில் ஒட்டி உரசி அந்த ஓட்டைக் கூடாக பேசிக் கொள்ளும்போது அவர்கள் மூச்சுக் காற்றுகள் அவர்கள் உதடுகளில் பட்டுத்தெறிக்கும். அப்போது அவர்கள் தம் இருவருக்கிடையில் பெருந் தடையாக இருந்த அச்சுவரை ராட்சசி என சபித்தனர். ஆனால் அந்தச்சுவரிடம் தாம் அதிகமாக எதிர்பார்த்தது சுவரே நீ விலகிக்கொள் என்று கேட்பது பேராசை என்று நினைத்தனர். இருந்தாலும் இன்னும் கொஞ்சம் விலகியிருந்தால் தாம் முத்தங்களையாவது பரி மாறிக் கொள்ளலாமே என்று ஆதங்கப்பட்டனர். ஆனால் உண்மையில் அந்த சுவருக்கு அவர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாக இருந்தனர். அந்தச் சுவரால் தானே தாம் காதல் மொழிகளை பேசிக் கொள்ள முடிகிறது என்று மகிழ்ந்தனர்.

இப்படி அந்த சுவருக்கருகில் அந்த இடை வெளி யூடாக மணிக்கணக்கில் அவர்கள் பேசிக் கொள்வார் கள். பின்பு இரவு நெருங்கியதும் பிரிய மன மின்றி பிரிந்து செல்வார்கள். அவர்கள் பிரிந்து செல் லும்போது இறுதியாக ஒருவருக்கொருவர் முத்தமிடுவ தாக நினைத்து அந்த சுவரில் தம் உதடுகளைப் பதித்துக் கொள்வர்.

இப்படி சந்திக்காமல் சந்தித்துப் பேசிப் பேசி அலுத் துப் போய் விட்ட அவர்கள், ஒரு நாள் சூரியன் மறைந்த பின்பு இரவு வந்ததும் வெண்நிலாவின் அரவ ணைப்பில் வீட்டுக்கு வெளியில் சந்திக்க நினைத் தனர். இதற்கென ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றோடைக்கரையைத் தேர்ந்தெடுத்தனர். அந்த ஓடைக்கரையில் யாரோ, எப்போதோ நட்டு வைத்த கொடி மல்லிகை பெரும் புதராக வளர்ந்து விசாலமான பந்தலாக விசாலித்திருந்தது. இந்த பந்தலுக்குள் யார் இருந்தாலும் வெளியில் தெரியாதபடி கொடி அடர்ந்து பரந்திருந்தது. தாம் சந்திப்பதற்கு இதுவே பொருத்தமான இடம் என அவர்கள் தீர்மானித்தனர். அன்றைய பகல் பொழுது அவர்களுக்கு மிக நீண்ட தாக இருந்தது. இறுதியில் பகலவன் மெல்ல நீங்கி இரவுச் சாமத்தின் கதவுகளுக்கு அப்பால் ஒளிந்து கொண்டு விட்டான்.

இரவானதும் ஊரடங்கிய வேளையில் தேன்மொழி வீட்டின் பின் கதவு வழியாக மெல்ல வெளியேறிச் சென்றாள். நடந்து வந்த பாதையில் யாரும் அவளை பார்க்கா விட்டாலும் கூட தன்னை யார் பார்த்தாலும் அடையாளம் தெரியாதவாறு வெண்பட்டு சால்வை கொண்டு முக்காடு போட்டுக் கொண்டாள். அவள் விரைந்து நடந்து வந்து அவர்கள் திட்டமிட்டிருந்த படி ஓடைக்கரையோரம் விரிந்து பரந்திருந்த மல் லிகைப் பந்தலுக்குள் நுழைந்து அங்கிருந்த திட்டியில் அமர்ந்து கொண்டாள். அந்த நள்ளிரவில் அவள் அப்படிச் செய்வதற்கு அவள் கொஞ்சமும் அச்சம் கொள்ளவில்லை. இளம் பரிதியின் மேல் அவள் கொண்டிருந்த சொல்லவொண்ணாக் காதல் அவளுக்கு மிகுந்த துணிச்சலைக் கொடுத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அங்கு வந்த சில நொடிகளில் பந்தலுக்கு வெளியில் இலையுதிர்ந்து காய்ந்த சருகுகள் மிதிபடும் ஓசை கேட்டது. அவள் தன் காதலன் வந்து விட்டானோ என்று ஆவலுடன் வெளியில் எட்டிப்பார்த்தாள். அங்கே சற்று தூரத்தில் அவளுக்கு பேரச்சம் ஏற்படுத்தும் விதத்தில் ஒரு சிங்கம் நடந்து வந்து கொண்டிருந்தது. அதன் வாயில் ஆட்டையோ மாட்டையோ கடித்துத் தின்றதால் செங் குருதி வடிந்து கொண்டிருந்தமையை அந்த பால் நிலவில் அவள் தெளிவாகப் பார்த்தாள். அச்சத் தால் அவளுக்கு தன் குருதியும் உறைந்து விடும் போல் தோன்றியது. அவள் பயத்தால் நடு நடுங்கி விரைந்தோடி அருகிலிருந்த இருளான குகை ஒன்றுக் குள் ஒளிந்து கொண்டாள். அவள் விரைந்தோடும் போது தான் போர்த்தியிருந்த வெண்பட்டுச் சால்வை கழுத்திலிருந்து நழுவி விழுந்து போய்விட்டதை கவனிக்கவில்லை.

நன்கு கொழுத்து வளர்ந்திருந்த அந்த கொடூரத் தோற்றம் கொண்ட சிங்கம் மாமிசத்தை வயிறு நிறைய தின்றதால் ஏற்பட்ட தாகத்தை தீர்த்துக் கொள்ள நேராக ஓடைக்குச் சென்றது. அங்கே நீரைக் குடித்த பின் காட்டுக்குத் திரும்பும் வழியில் மல்லிகைப்பந்தல் அருகே தேன்மொழியின் வெண் பட்டுச் சால்வையைக் கண்டது. அதில் இருந்த மனித வாடையை நுகர்ந்த அச்சிங்கம் வெறியுடன் அச்சால்வையை தன் நகங்களாலும் பல்லாலும் நார் நாராகக் கிழித்துத் துண்டாக்கியது. சிங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலும் தாடையிலும் காணப்பட்ட இரத்தம் வெண் பட்டாடையில் தோய்ந்து அதனை சிவப்பாக்கியது.

சிறிது நேரத்தில் இளம்பரிதி அங்கு வந்து சேர்ந் தான். மல்லிகைப் பந்தலை அண்மியபோது அங்கே மணற்தரையில் கொடுஞ்சிங்கத்தின் வலிய பாதத்தின் அடிச்சுவடுகளைக் கண்டான். அவன் நெஞ்சில் நடுக் கம் ஏற்பட்டது. முகம் வெளிறிப் போய்விட்டது. உடம்பின் இரத்த நாளங்கள் அனைத்தும் செயலற் றுப்போய் விட்டன. இரத்தம் தோய்ந்த தேன்மொழியின் வெண் பட்டாடைச் சால்வையை இனம் காண அவ னுக்கு நீண்ட நேரம் தேவைப்படவில்லை.

"ஐயோ! நானே என் அன்பரசியின் சாவுக்கு காரண மாக இருந்து விட்டேனே" என்று அலறினான். பிதற் றினான். "எம் அருங்காதல் இப்படியா முடிவுற வேண் டும். உன்னை இந்த ஆபத்தான இடத்துக்கு நள்ளிரவு நேரத்தில் வரச் சொன்னது எவ்வளவு பெரிய தவறு. வரச் சொன்ன நான் அல்லவா முதலில் வந்திருக்க வேண்டும். அப்போது என்னையல்லவா அந்த கொடுஞ் சிங்கம் கொன்றிருக்கும்.

நீ நீண்ட காலம் வாழ்ந்திருப்பாயே நம் காத லுக்காக நான் என்னுயிரை ஈந்திருப்பேனே! ஓ இந்த காட்டில் வாழும் கொடுஞ்சிங்கங்களே! வாருங்கள் என்னுடலையும் குதறியெறியுங்கள் என்னுயிர் என் காதலி இருக்குமிடம் போய் விடட்டும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழைகள் அல்லவா மரணத்தை தீர்வாகக் கேட் பார்கள் நான் என்ன செய்வேன்" என அவன் பைத் தியக்காரன் போல் அரற்றினான்.

பின்னர் அவன் இரத்தம் தோய்ந்த தேன்மொழியின் அந்த வெண்பட்டு சால்வையை மிகுந்த கவனமுடன் பட்டுப்போல் எடுத்தான். அதனை தன் தோளில் போட்டு தழுவிக் கொண்டான். கையால் தடவி முத் தங்கள் பொழிந்தான். பின் அவன் அந்த சால்வை யைப் பார்த்துக்கூறினான் "நீ என் காதலியின் இரத் ததைக் குடித்தது போல் என் இரத்தத்தையும் குடித்து விடு" அவன் தன் இடையில் கட்டி இருந்த உடை வாளை உருவியெடுத்தான். அதனை தன் நெஞ் சுக்கு நேரே உயர்த்தி வலுவுடன் நெஞ்சை ஊடுரு வச் செருகி பின் மீண்டும் இதே வேகத்தில் வாளை உருவி எடுத்து அப்பால் எறிந்தான். அடுத்த கணத் தில் அவன் மல்லாந்தபடி வெற்றுடம்பாய் நிலத் தில் வீழ்ந்தான். அவன் உயிர் அவனைவிட்டு பிரிந்து விட்டது. அவன் நெஞ்சில் ஏற்பட்ட துளையில் இருந்து பீறிட்ட இரத்தம் உயர வீசி விசிறியடித்தது. சுற்றுப்புறம் எங்கும் சிவப்பானது. மல்லிகைப்பந்தலில் வெண்மையாகப்பூத்திருந்த பூக்களும் சிவப்பு நிறமா யின. மல்லிகைச் செடியின் வேர்களும் அவன் இரத் தத்தை உறிஞ்சிக் கொண்டன.

இருண்ட குகைக்குள் அச்சம் மேலிட ஒளிந்துகொண் டிருந்த தேன்மொழிக்கு இப்போது மற்று மொரு பயம் தோன்றியது. தன்னைத் தேடி வரும் தன் காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லன் சிங்கத்திடம் சிக்கி விட்டால்! அவனை எப்படி எச்சரிப்பது என்று நினைத்தாள். உடனே அங்கிருந்து வெளியேறி தான் அந்த பேராபத்தில் இருந்து எவ்வாறு தப்பினேன் என்று கூறி அவன் தோளில் சாய்ந்து ஆறுதல் தேட வேண்டும் என்று ஆவல் கொண் டாள். அவள் மெதுவாக மல்லிகைப்பந்தல் இருக்கும் இடத்துக்கு வந்தாள்.

அங்கே சூழ்நிலையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை கண்டு துணுக்குற்றாள். அந்த மல்லிகைப்பந்தலை அவள் சிறு பருவம் முதல் நன்கறிவாள். அது எப்போ பார்த்தாலும் வெண் குடை விரித்திருப்பது போல் அடர்ந்து பரந்திருக்கும். இப்போது என்ன சிவப்பாக நிறம் மாறி இருக்கிறதே? ஒரு கணம் இடம்மாறி வந்து விட்டேனோ என்று சந்தேகம் கொண்டாள். அவள் சுற்றும் முற்றும் பார்த்த போது ஒரு மனிதனின் உடல் கீழே வீழ்ந்து கிடப்பதை நிலவொளியில் கண்டாள். அவள் மனம் பதைத்தது. அவள் கால்கள் இரண்டடிகள் பின் நோக்கி நகர்ந்தன. அவள் முகம் வெளுத்தாள். கண்கள் இருண்டன. பின் நோக்கிச் செருகி இருண்டன. அங்கே வெற்றுடலாய் வீழ்ந்து கிடப்பவன் தன் காதலனே என்பதை புரிந்து கொள்ள அவளுக்கு கன நேரம் பிடிக்கவில்லை. அவள் பேதை மனம் அப்படியே துவண்டு போய் விட்டது.

"அன்பே! எந்த சக்தி உன்னை என்னிடம் இருந்து பிரித்தது? நீ எழுந்து வர மாட்டாயா?" எழுந்திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்பே! எழுந்திரு! நான் உன் அன்பான தேன் மொழி அழைக்கிறேன். உன் மூடிய கண்களை திறந்து ஒரு முறை பார்க்க மாட்டாயா?" அவள் ஏக்கத்துடன் பிதற்றினாள்.

தேன்மொழி மண்டியிட்டு அவனுடலைத் தழுவிக் கொண்டாள். அவள் வடித்த கண்ணீர் அவன் காய த்தை கழுவியது. அவள் அவன் கன்னங்களில் முத்த மிட்டாள். அவன் தன் நெஞ்சுடன் அவளின் பட்டுச் சால்வையை அணைத்துக் கொண்டிருப்பதை கண்ணுற் றாள். அவனது இடை வாள் அதன் உறையில் இல்லாததையும் கண்ணுற்றாள். இப்போது அவளு க்கு எல்லாம் புரிந்தது. எப்படி இளம்பரிதி தன் உயிரை மாய்த்துக் கொண்டான் என்பதும் தெரிந்தது. அவள் மீது அவன் கொண்ட மேலான காதலே அவனுக்கு எமனாக வந்து விட்டது.

"என் மீது கொண்ட காதல் உன் உயிரைத் துறக் குமளவுக்கு சக்தியைத் தருமானால் அதே காதல் எனக் கும் அதே சக்தியை கொடுக்கட்டும் நானும் உன்னுட னேயே வந்து விடுகிறேன். நான் தான் உன் சாவுக்கு காரணமாக இருந்து விட்டேன் என்று மக் கள் தூற்றக்கூடாது. நாம் சாவிலும் இணை பிரியா திருந்துள்ளோம் என்று அவர்கள் கருதட்டும். நாம் ஒருவேளை ஒன்று சேர்ந்திருந்தால் சாவுக்கு மட் டுமே நம்மை பிரிக்கும் சக்தி இருந்திருக்கும். ஆனால் இப்போது அந்தச் சாவால் கூட நம்மைப் பிரிக்க முடியாது என்ற நிலை தோன்றிவிட்டது. எங்களை பிரித்து வைக்கப்பார்த்த மகிழ்ச்சியற்ற உன் பெற்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் என் பெற்றோருக்கும் ஒன்று சொல்கிறேன். நாங்கள் மரணத்தில் ஒன்று சேர்ந்து விட்டோம் என்பதை உங்களால் மறுக்க முடியாது. அதே போல் எங்கள் உடல்களையும் பிரித்து விடாதீர்கள். அவை ஒரு கல்லறையில் உறங்கட்டும். இந்த மல்லிகைப்பந்தலில் வெண்மையாகப்பூத்திருந்த மல்லிகை மலர்கள் எங்கள் இரத்தத்தில் இனி சிவப்பாக பூக்கட்டும் அவை என்றென்றும் எங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்தட்டும்"

அவள் இதைக்கூறி விட்டு இளம் பரிதியின் இரத்தம் தோய்ந்திருந்த அந்த கூரான வாளை தன் மார்புக்குக்கீழே பொருத்தினாள். பின் வாளின் பின் புறம் நிலத்தில் ஊன்றும் படி அதன் மீது வீழ்ந்து வாளை நெஞ்சில் ஊடுருவச் செய்தாள். அவளது உயிரற்ற உடல் இளம்பரிதியின் உடலுக்கு இடப்புறமாக வீழ்ந்தது.

தேன்மொழியின் இறுதிப் பிரார்த்தனைகள் உலகத்தோர் மனதைத் தொட்டது. அவர்களின் பெற்றோர்களும் மனமிளகி வருந்தினர். இப்போதும் கண்டிக்கருகாமையில் செங்கந்தன் கந்தை என்ற இடத்தில் அந்த ஓடைக்கருகாமையில் இருக்கும் அந்த மல்லிகைக் கொடியில் சிவப்பு நிறப்பூக்களே பூக்கின்றன. அங்கே அவர்களுக்கு ஒரு கல்லறையும் காணப்படுகின்றது. ■

**இலக்கியம்-தேசிய சாஹித்திய விருது**

**விழா மலர்- 2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

# கருஞ் ஜூலை

1983, ஜூலை 29ஆம் திகதி.

அந்த நாளை மறந்து விட வேண்டுமென்று எத்தனை தினங்கள் நான் நித்திரையின்றி உழன்றிருக்கின்றேன். என்னை, என் குடும்பத்தை சின்னாபின்னமாக சிதைத்த நாள். என் நெஞ்சைக் கீறி, என் கனவுகளைக் கலைத்து, என் கற்பனைகளை மண்ணோடு மண்ணாக்கி இப்போதும் என் கனவு களில் சிவப்பு இரத்தம் கொப்பளிக்க என்னை மீண்டும் மீண்டும் சித்திர வதை செய்து சிறுகச் சிறுகக் கொன்று கொண்டிருக்கும் கரிய நாள்.

அந்த நாளை நினைத்துப் பார்க்க நான் ஒருபோதும் விரும்பியதில்லை. அவை நினைத்துப் பார்த்து பூரித்துப் போகும் நினைவுகளாக இருக்கவில்லை. ஏனோ தெரியவில்லை, வாழ்வின் வசந்தமயமான நினைவுகளை விட நெஞ்சை வதைத்து வாட்டும் கோர நினைவுகளே மனதில் ஆழப்பதிந்து விடுகின்றன. இந்த நினைவுகளும் அப்படித்தான். மனதின் ஆழத்தில் இறுகப் பதிந்து கொண்டு என் எதிரிகளாக என் தலை மீது ஏறி அமர்ந்து கொண்டு என் மார்பைக் கீறிக் கீறி ரணகளமாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. வானுயர செந்நீரைப் பீறியடிக்கச் செய்து கோரக் காட்சிகளையே நினைவுக்குக் கொண்டு வரு கின்றன.

இப்போதும் கூட என் சுயநலத்துக்காகத்தான் இவ ற்றை என் மனதில் இருந்து கொட்டி விடத் தீர்மானித் தேன். இப்படிப் பல முறை நான் முயற்சித்திருக் கிறேன். ஆனால் அந்தப் பாழாய்ப் போன நினைவுகள் என் நெஞ்சை விட்டு நீங்க மறுக்கின்றன.

அப்போது எனக்கு இருபத்து மூன்று வயது முடிந்து இருபத்து நான்கு வயது ஆரம்பமாகியிருந்தது. அப் போதுதான் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து தனி யார் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் ஆய்வு அலு வலராக உத்தியோகத்தில் சேர்ந்திருந்தேன். வாழ் வில் பல துன்பங்களையும், வறுமையின் கொடுமைக ளையும், மேடு பள்ளங்களையும் அச்சிறு வயதி லேயே அனுபவித்து வளர்ந்திருந்த என்னில் ஒரு முரட் டுச் சுபாவமும், அநீதிக்கெதிரான போர்க் குணமும், தைரியமும், துணிச்சலும், உலகின் சகல அதர்மங்களை யும் அழித்தொழித்து விடவேண்டும் என்ற ஓர்ம மும் என்னை தன்னம்பிக்கையின் சிகரத்துக்கு இட்டுச் சென்றிருந்தன. காலம், இளமைத் துடிப்பு என்ற வெட்ட றிவாளையும் என் கைகளில் தந்திருந்தது. அநீதி எங்கு தோன்றினாலும் அதனை அறுத்தெறிந்து விடவேண்டும் என்ற வேகமும் என் னுள் கிளர்ந்தெழுந்திருந்தது.

மத்திய மலை நாட்டின் வளர்ச்சியே கண்டிராத பின்தங்கிய தேயிலைத் தோட்டமொன்றில் பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு சுற்றியிருந்த சிங்களக் கிராமங்களே விளை யாட்டுக் களங்களாக இருந்ததால் சிங்கள நண்பர் களே அதிகமிருந்தனர். சரளமாக சிங்களம் பேசும் என்னை சிங்களவனா தமிழனா என்று பிரித்துப் பார்க்க கடினமாக இருக்கிறது என சில நண்பர்கள் தெரிவித் திருந்தனர்.பல்கலைக்கழகத்தில் என் ஆங்கிலப் புல மையையும் வளர்த்துக் கொண்டிருந்தேன். இந்த மும் மொழிப் புலமையே எனக்கு சந்தைப்படுத்தல் ஆய்வு உத்தியோகத்தைப் பெற்றுக் கொடுத்தது. எங்கள் சந் தைப்படுத்தல் ஆய்வுக் குழுவில் நாங்கள் பன்னி ரண்டு பேர் அங்கம் வகித்தோம். நான் ஒருவன் தமி ழன். இன்னுமொருவன் முஸ்லிம். ஏனையவர்கள் சிங் கள இளைஞர்கள். நாங்கள் ஒரு நல்ல நண்பர்கள் குழுவாக இயங்கினோம். எனினும் எனது யதார்த் தமான திறமைகள் ஏனையோர் மத்தியில் பளிச்சிட்ட போது எங்கள் முகாமைத்துவப் பணிப்பாளர் அதனை அடிக்கடி சிலாகித்துப் பேசியபோது ஏனைய வர்கள் மத்தியில் அது என் மீது பொறாமைத் தீயைத் தூண்டி யது. தொடர்ந்தும் முகாமைத்துவப் பணிப்பாளர் என் னுடன் மிக நட்பாக இருந்தமை ஏனையவர் மனதை உறுத்தியது.

கொழும்பு நகரையும், சுற்றுப்புற சிறு நகர்களை யும் சுற்றிவந்து எங்கள் ஆய்வுப்பணியில் ஈடுபட எங் களுக்கு விசாலமான, வசதியான வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது. அநேகமான நேரத்தை நாங்கள் கொழும்பு நகர வீதிகளிலும், தொழிலாளர்கள் திர ளாக பணியில் ஈடுபட்ட தொழிற்சாலைகளிலும் வினாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்துக்களுக்கு விடைதேடி ஆய்வில் ஈடுபடும் நட வடிக்கையில் ஈடுபட்டு வந்தோம். வாழ்வில் கிடைத்த முதல் தொழில், குதூகலமான நண்பர் குழாம். அது ஒரு பொற்காலம்.

முதல் முறையாக தொழில் ஒன்று செய்து, மாதா மாதம் கை நிறைய சம்பளம் வாங்கி, சொந்தப் பணத் தில் செலவு செய்து ஜீவித்த வாழ்வின் அந்த இன் பத்துள்ளல் எத்தனை இனிமையானது. எல்லார் வாழ்வி லும் அத்தகைய காலம் ஒன்றிருந்திருக்கத்தான் செய் யும். ஆனால் எனக்கு அந்த செங்கதிரோனின் பொற்கிர ணங்கள் பரப்பிய பொற்காலம் சுமார் ஏழு மாதங்கள் மட்டுமே நீடித்தது. *1983* ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமான எனது பொற்காலம் *1983* ஜுலை *23*ஆம் திகதி முற்றுப் பெற்றது. அன்று தான் தமிழ் மக்கள் வாழ்வில் பெரும் பள்ளத்தையும், ஆழமான வடுவை யும், சிங்கள இனவாதிகளின் சகிக்க முடி யாத பேயாட் டத்தின், கருஞ் ஜுலையின் முதல் கரி நாள் ஆரம்ப மாகியது.

அன்றைய காலைப் பொழுது எனக்கு வழக்கமான தாகவே இருந்தது. அண்மைக் காலமாகவே நாட்டில் நிலவிய இன முறுகல் காரணமாகவும், வடக்கில் முடுக்கி விடப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் நாட்டில் ஆங்காங்கே இன வன் செயல்கள் வெடித்த வண்ணமே இருந்தன. *1977*ஆம் ஆண்டு ஆகஸ்ட் இனக் கலவரம், அதனைத் தொடர்ந்து *1978*, *1980*, *1981* ஆகிய ஆண்டுகளில் பரவலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன வன்செயல்கள் கண்டியிலும், இரத்தினபுரியிலும் மற்றும் பல மலையகத்தின் நகர்களிலும் ஏற்கனவே இரத்தக் களறிகளை ஏற்படுத்தியிருந்தன. அவற்றா லெல்லாம் மலையக மக்கள் சொல்லவொண்ணா துன்பங்களை அனுபவித்திருந்தாலும் யுத்த அழிவுக ளுக்கு மத்தியில் அவற்றை யாரும் பெரிதாகப் பேசவில்லை. அதன் காரணமாக மலையக மக்கள் இதற்கெல்லாம் பழக்கப்பட்டுப் போனரேயன்றி அதற் கெதிரான குரல்கள் எங்குமே எடுபடவில்லை. இனமுறுகல் கடுமையாக ஏற்பட்டு இனப்பிரச்சினைக் கான தீர்வுகள் விவாதிக்கப்பட்டபோதெல்லாம் மலை யக மக்களுக்கான தீர்வு பற்றி ஒருவரும் வாய் பேசாதிருந்தனர். யுத்தம் முடிந்த பின்னரும் இன்றும் கூட மலையக மக்களின் மீதான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

எனக்கும் இத்தகைய சம்பவங்கள் எல்லாம் பழக்கப் பட்டுப் போயிருந்தன. என்னிடமிருந்த துணிச்சல், சிங்கள மொழி வளம் எல்லாம் இணைந்து இவற் றைப் பொருட்படுத்தாத ஒரு தன்னம்பிக்கையை ஏற்ப டுத்தியிருந்தன. அன்று எங்கள் சந்தைப்படுத்தல் ஆய் வுக்குழுவினர் பாண ந்துறைப் பிரதேசத்துக்கு செல்ல ஏற்பாடாகி இருந்தது. நேற்றைக்கு முந்தைய தினம் யாழ்ப் பாணத்தில் திருநெல்வேலி என்ற இடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பால் பதின்மூன்று இரா ணுவ வீரர்கள் இறந்து போய் விட்டனரென்றும், அவர் களின் இறுதிக் கிரிகைகள் கொழும்பு பொரளை மயானத்தில் இடம்பெறவிருந்ததால் இன வன்செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இடம்பெறலாம் என்ற செய்தி பரவலாக அடிபட்ட போதும் அதனை ஒரு எச்சரிக்கையாகவும், பயப்ப டத்தக்கதாகவும் நான் எடுத்துக் கொள்ளவில்லை. வழக்கம் போல வேலைக்குச் செல்லத் தயாரானேன். அன்றும் எங்களுக்கென வழங்கப்பட்டிருந்த வாகன மும் காலை எட்டு மணிக்கெல்லாம் வந்தது. நானும் நண்பர்கள் குழாத்துடன் இணைந்து கொண்டேன். நாங் கள் காலி வீதியூடாக பாணந்துறைக்குச் சென்றோம்.

அந்த காலை வேளையில் எல்லாமே வழமை போல்தான் நடந்து கொண்டிருந்தன. வழியில் எந்த விதமான அசம்பாவிதங்களும் நடைபெற்றதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. நாங்கள் வழமை போல் எங்கள் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக் கும்போது சுமார் பதினொரு மணியளவில் "நிலைமை சரியில்லை என்றும் பொரளை கனத்தையில் வெடிகுண் டில் இறந்த இராணுவ வீரர்களுக்கு இறுதி மரியாதை செய்யச் சென்றவர்கள் ஊர்வலமாகச் சென்று வன் முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், பல தமிழ்க் கடைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதென்றும் எங் களை திரும்பி வந்து விடுமாறும்" தலைமையகத் தில் இருந்து எங்கள் முகாமையாளர் பணிப்புரை தந் திருந்தார்.

நாங்கள் திரும்பி வரத் தீர்மானித்த போதும் என் னிலோ எங்கள் குழுவினரிடமோ எந்தவிதமான பதற் றமோ கலவரமோ தோன்றவில்லை. இளமையின் உச்சத்தில் இருந்தபோது குழுவினர் ஒரு பயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமல் சிரித்துப் பேசி தமது குரங்குச் சேட்டை களை செய்த வண்ணமே வந்தனர். எனினும் அதன் பின் தொடர்ச்சியாக ரேடியோ மூலமும், தொலை பேசி வாயிலாகவும் கிடைத்த செய்திகள் எங்களுக் குள் ஒரு மௌனத்தை ஏற்படுத்தியிருந்தன. வெள்ளவத் தையில் பல தீ வைப்புச் சம்பவங்களும் கொழும்புக் கோட்டை, மெயின் வீதி, ரெக்லமேசன் வீதி என்பன பற்றிக் கொண்டு எரிந்தன. அப்போதும் எனக்கு எந்தப் பதற்றமும் இல்லை. என்னைச் சுற்றி பத்து சிங்கள நண்பர்கள் இருக்கின்றனர் என்ற துணிச்சலாக இருக்க லாம்.

இருந்தாலும் என்னை அவர்களுடன் அழைத்துப் போவது சங்கடத்துக்குரியதாக இருந்திருக்கலாம் என்று எனக்குப் பின்னர் தோன்றியது. நாங்கள் கொழும் புக் கோட்டையில் துறைமுகத்துக்கு சற்று சமீபமாக இருந்த வழமையாக தேநீர் அருந்தும் ஹோட்டலான 'கொழும்பு பிளாஸா' வுக்கு சென்று தேநீர் அருந்தி னோம். அங்கே சுற்றிவர பெரும் கலவரம் நிகழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிந்தது. மெயின் வீதி ஆரம்பிக்கும் இடமும், ரெக்லமேஷன் வீதி இரண்டு புறமும் வானளாவ தீ எரிந்து கொண்டி ருந்தது. இடையிடையே வெடிச் சத்தங்கள் கேட்டன. யார் சுடுகிறார்கள் என அனுமானிக்க முடியவில்லை. எனக்குள் முதற் தடவையாக சற்று பதற்ற நிலை தோன் றியது. அதனை நான் வெளியில் காட்டிக் கொள்ள வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் சென்றதும் நண்பர்கள் நிலைமையை ஆலோசித்துப் பார்த்தனர். வாகனங்களில் செல் வோரை இறக்கி தேசிய அடையாள அட்டையை பரி சோதித்த பின்னர் தமிழர் என்று தெரிந்தால் தாக்கப் படுகின்றனர் என தகவல் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து என்னை அவர்களுடன் அழைத்துச் செல்வது பாதுகாப்பல்ல என்று கூறிய நண்பர்கள் தாங்கள் தலை மையகத்துக்குச் சென்று எனக்கு வேறு பாதுகாப் பான வாகனம் அனுப்புவதாகக் கூறி எங்கேயும் போகா மல் இருக்கும்படி பணித்துவிட்டு அவர்கள் சென்று விட்டனர். அந்த இடமும், அங்கிருந்தவர்களும், முகா மையாளரும் எனக்குப் பரிச்சயமானவர்களாதலால் எனக்கு அவர்கள் தீங்கு விளைவிக்கமாட்டார்கள் என என் மனது கூறியது.

வெளியில் கலவரங்கள் மேலும் அதிகரித்துக் கொண் டிருந்தன. நான் செய்வதறியாது திகைத்து என்னை அழைத்துப் போக வாகனம் வராதா என்று காத்திருந் தேன். ஏன் இன்னும் வாகனம் வரவில்லை என்று ஒரு கட்டத்தில் சந்தேகம் எழுந்தது. விசாரிக்கலாம் என்று நினைத்து ஹோட்டல் முகாமையாளரின் உதவியுடன் எனது சந்தைப்படுத்தல் ஆய்வு முகாமையாளருடன் தொடர்பு கொண்டேன். அவர் அதிர்ச்சியும் பதற்றமும் கலந்த குரலில் பேசினார். என்னை பத்து நிமிடம் பொறுக்கும்படியும் தான் வந்துவிடுவதாகவும் கூறி னார்.

அவருடன் பேசிய பின் எனக்கு ஒரு விடயம் சட் டென விளங்கியது. நான் என்னுடன் வந்த நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைத்துக்கொண்டிருந்த அந்த பதினொரு பேரும் பாதுகாப்புடன் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். அதிலும் அத்தகைய ஒரு இக்கட்டான கையறு நிலையில் என்னை பரிதாபத்துக்குரியதாக்கிய உணர்வு, அவர்கள் என் நிலைபற்றி தலைமையகத்துக்கு அறிவிக்க வில்லை என்ற விடயமாகும். நான் அதன் பிறகும் பட்ட துன்பங்களை விட அன்று அவர்கள் இழைத்த நட்பின் துரோகம் எப்போதும் என் வாழ்வில் ஆறாத புண்ணாகவும், நட்புக்கு இடமற்றதாகவும் ஆக்கியது.

எனது இரத்தம் பதற்றத்தாலும் அவர்கள் செய்த துரோகத்தாலும் எனது மதிப்புக்குரிய முகாமையாளர் மீதும் சந்தேகம் கொள்ள வைத்தது. அவர் வருவாரா என்று நம்பிக்கையற்ற நிலையில் நான் தவித்துக் கொண்டிருந்தபோது அவர் வந்தார். எனது எல்லாப் பயமும் உடனேயே சூரியனைக் கண்ட பனிபோல் விலகிப் போய்விட்டன. எனக்கு பழைய தைரியம் வந்து விட்டது. அவர் என்னைத் தோளைத்தொட்டு அழைத்துச் சென்று தனது வாகனத்தின் பின்புறத்தில் ஏற்றி பயப்பட வேண்டாமென்றும், கூடிய மட்டும் சீட்டுக்கடியில் தாழ்ந்து படுத்துக்கொள்ளுமாறும் கூறி னார்.

அது ஒரு பெரிய விசாலமான ஆடம்பர வாக னம். சுற்றிலும் சாயம் பூசப்பட்ட கண்ணாடிகள். யார் உள்ளே இருக்கிறார்கள் என்று தெரியாது. கீழே படுத்துக்கொள்ள வசதியாக இடமிருந்தது. நான் அடியில் முடங்கிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் முகாமையாளருக்கு நான் தங்கியிருந்த வீட்டைத் தெரியும். முன்னரும் அங்கு வந்து சில தட வைகள் என்னை அழைத்துச் சென்றுள்ளார். வாக னம் வேகமாக நான் வசித்த ராஜகிரிய நாவல வீதியை நோக்கிச் சென்றது. நான் வசித்து வந்த அந்த இடம் இலங்கையின் மிக மோசமான இனவெறியர் வாழ்ந்த இடம் என்பதை பின்னர் அவர்கள் என் முது கில் கோடுபோட்டு தோலுரித்துக்காட்டியபோது உணர்ந் தேன்.

நான் சென்ற வாகனம் இடையிடையே சில தடவை கள் மறிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. 'கௌத எத்துலே' (உள்ளே யார்) என்ற வெறிக் குரல்கள் கேட்டன. 'கௌருத் நே' (யாரும் இல்லை) என்று பதிலளிப்பதும் "யனவா.... யனவா.' (போ...போ...) என்ற குரல்களும் கேட்டன. எனது மனம் 'திக்...திக்..' என அடித்துக் கொண்டது. அன்று நான் தப்பித்துக் கொண்டேன். என் நண்பர்கள் எனக்கு இழைத்த துரோகத்தை நினைத்து நான் நொந்து போயிருந்தாலும் எனது முகா மையாளர் என்மதிப்பில் உயர்ந்து நின்றார். அவர் என்னை வீட்டில் சேர்த்து விட்டு சில தினங்களுக்கு எங்கும் போக வேண்டாம் என்று எச்சரித்து விட்டுச் சென்றார்.

அன்றைய இரவும் அடுத்தடுத்த தினங்களில் வந்த இரவுகளும், ஏன் பகல்களும் கூட இந்நாட்டில் தமிழர் வாழ்வின் மிகக்கரிய, கொடூரமான பொழுதுகளாக பதியப்பட்டுப் போய்விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு முழுவதும் என்னிடமிருந்த சிறு ரேடி யோவை காதுக்கருகில் வைத்து சத்தம் வெளியில் வந்துவிடாத படி உலகின் எல்லா மூலை முடுக்கு களிலிருந்தும் ஒலிபரப்பப்பட்ட எல்லா செய்தியலை களையும் திருகித்திருகிக் கேட் டுக் கொண்டிருந் தேன். பிலிப்பைன்ஸ் நாட்டின் வெரிட்டாஸ் வானொலி தமிழர்கள் மீதான சிங்கள இனவெறித் தாக்குதல்களை விலாவாரியாக அறிவித்திருந்தது. இத்தாக்குதல்களில் அரசியல் பின்னணி இருப்பதாகவும் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலருக்கும் சம்பந்தம் இருப்ப தாகவும் கூறியிருந்தது. இனவெறிக் கலவரங்கள் தொடர்ந்து கொண்டு தான் இருந்தன.

என்னதான் இருந்தாலும் எனக்கு வீட்டில் அடைந்து கிடக்க முடியாமல் இருந்தது. கொழும்பு புறக்கோட்டை பழைய சோனகத் தெருவில் என் அண்ணன் ஒருவர் கடையொன்றில் கணக்காளராக தொழில் பார்த்து வந்தார். அவருக்கு என்ன நடந்ததென்று தெரியாது. தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அவரை சென்று பார்த்து வரலாமென்று புறப்பட்டேன். வீட்டில் இருந்தவர்கள் போக வேண்டாமென என்னை எச்சரித் தனர். உண்மையில் நான் போடிங் இருந்த வீடு ஒரு சிங்கள வீடாக இருந்த போதும் என்னையும் அவர்கள் தங்கள் பிள்ளை போல் பாசம் வைத்து பழகினார்கள். அவர்களுக்கும் ஒரே பையன்தான். க.பொ.த (உ/த) படித்துக் கொண்டிருந்தான். அவனும் என்னை அண்ணா, அண்ணா என்று ஒட்டிக்கொண்டான். நான் கற்று வைத்திருந்த ஓவியக் கலையை அவனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொடுத்திருந்தேன். அத்துடன் என்னுடைய கம்யூனிச தத்துவங்களும் அவனில் ஒட்டிக் கொண்டு விட்டன.

இவர்களை விட என்னில் அதிக பாசம் வைத்திருந்தவள் அடுத்த வீட்டில் வசித்து வந்த அந்த அனோமா என்ற சிட்டுக்குமரி. அவள் அடிக்கடி தன் காதலை சில சில்மிசங்கள் வாயிலாக வெளிப்படுத்தி 'நீ என்ன சொல்கிறாய்' என்று தன் காந்தக் கண்களால் கேட்ட போதும் நான் ஒருபோதும் அவளை அண்மிக்க வில்லை. அவளும் அன்று காலையிலேயே என்னைத் தேடிவந்து "நாங்கள் இருக்கும்போது ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை" என்று கூறிவிட்டுப் போனாள்.

நான் எல்லாத் தயக்கங்களுக்கும் விடை கொடுத்துவிட்டு பகல்பட்டே வெளியே கிளம்பினேன். பஸ் வண்டிகள் வழக்கம் போலவே ஓடிக் கொண் டிருந்தன. 176ஆம் நம்பர் பஸ்ஸைப் பிடித்து மருதானைக்குப் போய் அப்புறம் கோட்டை பஸ்ஸில் போகவேண்டும். 176 பஸ் ராஜகிரியவுக்கு வந்தபோது என் மனதில் மறுபடியும் திக்கென்ற பயம் எழுந்தது. ஒரு பெருங் கூட்டம். தமிழர் கடைகளை உடைத்துக் கொண்டிருந்தது. பலர் கிடைத்த பொருட்களை தோளிலும் கையிலும் தூக்கிக்கொண்டு ஓடினர். ரோட்டில் பல இடங்களில் டயர்கள் எரிந்து கொண்டிருந்தன. எத்தனை பேர் எரிக்கப்பட்டனர் என்று எண்ணுவதற்கெல்லாம் அவகாசம் இல்லை. பொறளையில் இருந்து மருதானை வரை வீதியின் இருபுறமும் ஒரே சாம்பற் காடாக கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஞ்சி பொறளைச் சந்தியில் பஸ் செல்ல முடி யாத அளவுக்கு கூட்டம் அலைமோதிக் கொண்டிருந் தது. நான் சிங்கள மக்கள் மத்தியில் பிறந்து அவர் கள் மத்தியிலேயே வாழ்ந்தவன் என்ற ரீதியில் அவர்களை நன்கு புரிந்து கொண்டவன் என்று கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் அன்று அவர்கள் என் நம்பிக்கையைப் பொய்ப்பித்தார்கள். அவர்கள் கண்களில் அப்படியோர் கொலைவெறி தாண்டவமாடி யது. அன்று நான் சுமார் பதினைந்து பேர் வரை கொல்லப்படுவதைப் பார்த்தேன். கூட்டத்தினரிடம் இருந்து தப்பியோடிய சிறுவனொருவனை நான்கு பேர் துரத்திச் சென்றனர். தடுக்கிக் கீழே விழுந்த அவன் தலையில் ஒருவன் கொங்கிறீட் கல்லைத் தூக்கிப் போட்டான். இன்னொரு சமயம் ஒரு டொயோட்டா ஹை ஏஸ் வேனில் இருந்து நான்கைந்து இளைஞர்களை ஜன்னலுக்கூடாக உருவியெடுத்தனர். அவர்களை நான்கு புறமிருந்தும் கால்களையும் கைகளையும் இழுத்துப் பிடித்து நார்நாராக பிய்த்துப் போட்டனர். அவர்கள் சிங்கள இளைஞர்களா? தமிழ் இளைஞர் களா என்று எப்படி இனங்கண்டு பிரித்துப் பார்த்த னர் என்று விளங்கவில்லை. உண்மையில் அவர்கள் சிங்கள இளைஞர்களாக இருக்கலாம் என்று எனக்குள் எழுந்த சந்தேகம் இன்றுவரையும் தீர்ந்தபாடில்லை. அவர்களின் ஒரே ஒரு தாரக மந்திரம் "கொட்டியா... கொட்டியா... மரணவா... மரணவா' (புலி.. புலி... கொல்லு) என்பதாகும்.

அதற்குமேலும் அந்த பஸ்ஸில் தொடர்ந்து பிர யாணம் செய்ய என்னால் முடியவில்லை. எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பின் சகல இரத்தமும் நீராகி உடலுக்குள்ளேயே கரைவது போன்றதொரு உணர்வு. அடிவயிற்றில் குடல் சுருட்டிக் கொண்டது. ஓங்களிப்பும் வாந்தி எடுக்கும் உந்துதலும் ஏற்பட்டது. நான் திக்பிரமை பிடித்து பஸ்ஸைவிட்டு இறங்கி எதிர்த்திசையில் நடந்தேன். என்னை யாரும் பின் தொடர்கிறார்களா என்று திரும்பிப்பார்க்கும் தைரியம் எனக்கிருக்கவில்லை. வீதியில் கலவரத்தின் இரைச்சல் என் மண்டைக்குள் சென்று என்னவோ செய்தது. சற்றுதூரம் செல்லும் போது நான் போக வேண்டிய பாதையில் செல்லும் பஸ் ஒன்று வந்தது. அந்த பஸ்ஸில் இன்னும் ஒருவனையாவது ஏற்றிச் செல்லும் அளவுக்கு இடம் இருக்கவில்லை. கதவிலும், ஜன்னல்களிலும் பலர் தொங்கிக் கொண்டிருந்தனர். நான் எனது சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி பல்லைக் கடித்துக் கொண்டு ஜன்னலில் ஒருகையும், கதவில் ஒரு காலுமாக தொங்கிக்கொண்டேன். எவ்வாறு நான் வீட்டைச் சென்றடைந்தேன் என்பது இப்போது நினைவுக்கு வரவில்லை.

நான் இந்த இரண்டு நாட்களில் இரண்டுமுறை உயிர் தப்பிவிட்டேன். இன்னும் எத்தனை முறைதான் செத்துப் பிழைக்க வேண்டுமென்று தெரியவில்லை. ஆதலால் அடுத்தடுத்த நாட்களில் வெளியில் போகும் தைரியம் எனக்கு வரவில்லை. கிடைக்கப்பெற்ற செய்தி களின்படி இன்னமும் வன்முறைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. மலைநாட்டின் பல நகரங் களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு அனுமான் எரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்காபுரியாகிவிட்டது. இங்கே எரித்தவன் இராவணன். எரிக்கப்பட்டவர்களோ சீதையும் ராம லக்ஷ்மணர்களும்.

எத்தனை நாளுக்கு எனது அஞ்ஞாதவாசம் நீடி க்கப் போகின்றதென்று தெரியவில்லை. பாண் டவர்கள் காட்டுக்கு விரட்டப்பட்டு பதினான்கு வருடகாலம் கானக வாழ்க்கையும் ஒரு வருட அஞ்ஞாதகால வாசத்தையும் கழித்தபின்பு ஊர் திரும்பிய பின்பும் அவர்களுக்கு விடிவுகாலம் ஏற்படவில்லை. உண்மையில் அதன் பின்னர் தான் குருஷேத்திரப் போரே ஆரம்பமானது. அப்படியானால் அடுத்துவரப்போவது குருஷேத்திரப் போராகத்தான் இருக்கப் போகின்றதோ? உலகத்தின் மீதான மனித பாரத்தைக் குறைக்க போர்களையும் யுத்தங்களையும் இவர்கள் இலகுவான வழிமுறைகளாகப் பயன்படுத்துகிறார்களோ? இருக்கலாம்!

குரூரமான இரவுகள் தொடர்ந்தன. உறங்க வேண்டுமென்று கண்களை மூடிக்கொண்டால் முதல்நாள் பார்த்த கொலைகள் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தன. என்னை மறந்து சற்றே கண்ணயர்ந்து விட்டாலோ அவர்கள் என்னையும் துரத்தி தலைமேல் கல்லைப் போடுவது போன்ற சொப்பணம் தொடர்ந்து... தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. நாசமாய்ப் போன சொப்பணம் கூட சித்திரவதை செய்தது.

இவ்விதம் ஆறுநாட்கள் கடந்து போய்விட்டன. டி.வி, ரேடியோவில் செய்திகள் கேட்பதும், டெலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன் செய்து அலுத்துப்போவதுமாக இருந்தது. கொழும்பில் இருந்து வட பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். தரைவழிப் பயணம் செய்ய முடியாத நிலை. நான் டெலிபோன் செய்து அண்ணனின் நிலையையும் நண்பர்களின் நிலையையும் விசாரித்துக் கொண்டிருந்தேன். எனது அண்ணன் ஜிந்துப்பிட்டிக் கோயிலில் அடைக்கலம் பெற்றுள்ளதாக வேறு ஒருவர் வாயிலாக செய்தி கிடைத்தது. பல நண்பர்கள் அருகருகே காணப்பட்ட அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர். சிவராம் என்ற மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டு பொறியியல் கல்வியைப் பூர்த்தி செய்திருந்த எனது நல்ல நண்பன் கத்தி வெட்டுக்கு இலக்காகி களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படாததால் உயிரிழந்திருந்தான். ஆனால் அவனை போய்ப்பார்க்கும் சூழ்நிலை இல்லை. அப்போது எங்கள் வீட்டிலிருந்து மிகக் கொடூரமான மற்றுமொரு செய்தி கிடைத்தது.

முதல்நாள் இரவு எங்கள் வீடு இருந்த பிரதேசத்தின் சுற்றுப்புறக் கிராமங்கள் தாக்கப்பட்டதாகவும் அன்றிரவு தாமும் தாக்கப்படலாம் என்ற அச்சம் கருதி அவர்கள் எல்லோரும் அருகிலிருந்த பற்றைக்காட்டிலேயே இரவைக் கழித்துள்ளனர். எங்கள் அப்பாயிக்கு (பாட்டி) வயது தொண்ணூரைத் தாண்டியிருந்தது. அவரை அழைத்துச் செல்ல முடியாமல் வீட்டில் தனியே விட்டுச்செல்ல வேண்டியிருந்துள்ளது. காலையில் சென்று பார்த்தபோது அவர் இறந்து போய் காணப்பட்டுள்ளார். பயம் காரணமாகவே அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்திருக்க வேண்டும். அப்படியானால் அவர் இரவு தன்னந்தனியாக என்ன பாடுபட்டிருப்பார்? இந்த செய்தியை சொன்ன கையோடு என்னை தயவுசெய்து வீட்டுக்கு வர முயற்சிக்க வேண்டாமென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். என்னால் சுவற்றில் மண்டையை முட்டிக்கொண்டு அழுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை.

இத்தகைய சோகங்களை எண்ணி நான் மிகச் சோர்ந்து போயிருந்தபோது தான் அந்த எம கண்டம் வந்தது. அன்று ஜூலை 29ஆம் திகதி மாலைப்பொழுது, இந்த சில நாட்களில் அநேகமாக கொழும்பில் இருந்த எல்லா தமிழர் வீடுகளும் கடைகளும் சூறையாடப்பட்டுவிட்டன. எஞ்சியிருந்தவர்கள் என்னைப்போல் இவ்விதம் மூலைமுடுக்குகளில் ஒளிந்து கொண்டிருந்தவர்கள் மட்டுமே.

அன்று காலையில் இருந்தே புலிகள் கொழும்பைக் கைப்பற்றப் போகிறார்கள் என்ற வதந்தி பரவி ஒரே பதற்றமாக இருந்தது. நானும் மிகப் பயந்து அகதி முகாமுக்கு ஓடிவிடலாமா என்று தவித்துக் கொண்டிருந்தேன். எனினும் நான் தங்கியிருந்த வீட்டினர் எனக்கு ஆறுதல் கூறி தம்மை மீறி ஒன்றும் நடந்து விடாது என்று சமாதானப்படுத்தினர்.

அவர்கள் வார்த்தைகள் எனக்குத் தெம்பைத் தந்தாலும் ஏதும் நடக்கலாம் என்று ஒரே தவிப்பாகவே இருந்தது. வீட்டுக்கு முன்னால் இருந்த பிரதான வீதியில் வெறியர் கூட்டம் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலைந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அந்தவீட்டுப் பொடியன் லலித், அடுத்த வீட்டு யுவதி அனோமா ஆகியோரும் சீட்டுக் கட்டை வைத்துக்கொண்டு மூன்று பேர் மட்டும் விளையாடும் விளையாட்டொன்றை விளையாடிக் கொண்டிருந்தோம். இந்த சில நாட்களாகவே சீட்டு விளையாடுவதும், கெரம் அடிப்பதும் தான் எங்கள் பொழுதுபோக்கு. லலித்தும் அனோமாவும் நான்படும் அவஸ்தையை கொஞ்சம்கூட புரிந்து கொள்ளவில்லை. நான் ஒரு தமிழன் என்பதையும் மறந்து என்னை ஒரு சிங்களவனாகவே அவர்கள் பார்த்தார்கள். ஊரெங்கும் சிங்கள வெறியர்கள் தமிழர்களை கொன்று குவிக்கிறார்களே என்ற கவலையும் அவர்களுக் கில்லை. நடப்பது ஒன்றும் நம் கட்டுப்பாட்டில் இல்லாத போது அதனை 'விதி' யென்று நாம் ஏன் அழைக் கிறோம் என்பதன் உண்மையான அர்த்தம் அப்போது எனக்கு தெளிவாக விளங்கியது.

அப்போது யாரும் எதிர்பார்க்காத விதத்தில் முன்கதவின் கண்ணாடிகளும் ஜன்னல்களின் கண் ணாடிகளும் படீர்... படீர்....' என உடைந்து வீழ்ந்து நொருங்கின. எங்கள் மனங்களும் திகிலால் 'திக்....திக்.. கென' அடித்துக் கொண்டன. யாரோ கல்லெறிகிறார்கள் என்று யோசிப்பதற்குள் ஏழெட்டுப்பேர், முன் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்தார்கள்.

'கொட்டியா...கோ? கொட்டியா...கோ...?' (புலி எங்கே... புலி... எங்கே?) என்று கத்தியபடி அவர்கள் வெறித்தனமாக வந்தார்கள். அவர்கள் கண்களில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கொலைவெறி. எல்லா தமிழனையும் இல்லா தொழித்து விட வேண்டுமென்ற கொலைவெறி. மருதா னையில் அந்தச் சிறுவனின் தலைமீது கல்லைத் தூக்கிப்போட்ட அதே கொலை வெறி. இனி நான் தப்பிப்பிழைப்பேன் என்பதற்கான எந்தவிதமான உத்த ரவாதமும் இல்லை என்று என் மனசுக்குத் தோன் றியது. அவர்கள் நேராக என்னிடம் வந்து என் சட்டை யைப் பிடித்துத் தூக்கினர். பின் 'தர...தரவென' என் இரண்டு கைகளையும் பிடித்து இழுத்துச் சென் றனர். என்னுடன் இருந்த லலித்தும் அனோமாவும் ஓ...வென அலறினர்.

சத்தம் கேட்டு வீட்டுக்காரர்கள் ஓடிவந்து 'எப்பா... எப்பா.. அரயாட்ட கான்ட எப்பா... எயா அஹிங்சகயா.... (அவனை அடிக்காதீர்கள்...அவன் அப்பாவி) எனக் கத்தி தடுக்கப்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

அவர்களில் ஒருவன் தடியுடன் எகிறிக்குதித்தான். தடியைக் காற்றில் விசுக்கி 'கவுருத் மெயாவ பேர கண்ட ஹெதுவொத்... ஒக்கொமலாவ மரணவா...' (யாராவது இவனைக் காப்பாற்ற முயற்சித்தால் எல்லோரையும் கொல்லுவோம்) என்று வீட்டுக்காரர் களை மிரட்டினான்.

அவர்கள் என்னை நாயைப்போல் இழுத்துச் சென் றார்கள். வாசலில் திரளாகக் கூடியிருந்த வெறித்தனம் மிக்க கும்பலொன்றுக்குள் வீசியெறிந்தார்கள். என்கதி.. பசியோடு காத்திருந்த சிங்கக் கூட்டத்துக்குள் தூக் கிப்போட்ட வெள்ளாட்டுக் குட்டிபோல் ஆனது. என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பில் எந்த இடமும் தப்பிப் பிழைக்கவில்லை. அடி, உதை, மிதி என என்னை அவர்கள் நிலத்தில் இருந்து எழுந்திருக்க கடைசிவரை விடவேயில்லை.

என் உடம்பிலிருந்த திராணியெல்லாம் ஒவ் வொரு அடிக்கும், ஒவ்வொரு உதைக்கும் ஈடு கொடுக்க முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போய்க் கொண்டிருந்தது. அவர்கள் என்னை அங்கும் இங்கும் தூக்கி வீசினார்கள். பந்தாடினார்கள். உடலில் இருந்த ஆடைகள் நழுவிக்கொண்டிருந்தன. உடம்பில் இருந்து ஜீவன் மெதுமெதுவாக விடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன்பின் என் உடம்பில் எந்த அசைவும் தெரியவில்லை. ஒருவன் ஒரு பெரிய டயரை உருட்டிக் கொண்டு வந்தான். மற்றுமொருவன் பெற்றோல் கேன் ஒன்றை கொண்டு வந்தான்.

தெருவோரத்தில் டயரைக் கவிழ்த்து அதன் மீது என்னைத் தூக்கிப் போட்டார்கள். என்னைத் தீக் கிரையாக்கும் அந்த நிலையிலும் ஒருவன் கட்டையால் ஓங்கி மண்டையில் அடித்தான். அந்த அடி என் சுய நினைவை பறித்துக் கொண்டது. நான் மீள முடியாத அந்தகாரத்துக்குள் தள்ளப்பட்டேன்.

■

**மல்லிகை**
**2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# புன்னகை மறைந்த அந்த நாளில்...

அந்த சம்பவம் நடந்து மூன்று தசாப்தங்கள் கழிந்து போய் விட்டன. ஆனால் நான் எப்போதெல் லாம் எனது கடந்த காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேனோ அப்போதெல்லாம் முதல் முதலாக என் நினைவுக்கு வருவது அந்த சம்பவம் தான். அத் தகைய ஆழமான வடுவை அந்த சம்பவம் என் மன தில் ஏற்படுத்தியிருந்தது.

ஒரு மனிதனின் வாழ்வில் பாடசாலைக் காலம்தான் எவ்வளவு இனிமையானது. எனக்கும் அப்படித்தான். என் பாடசாலைக் காலத்தை முற்றிலும் அனுபவித்து மகிழ்ந்தவன் நான். அந்த சம்பவத்தைத் தவிர.

எனது பாடசாலை நகரத்தை சற்றே தாண்டி ஒரு மலைக்குன்றின் சாரலில் அமைந்திருந்தது. அது ஒரு சிறிய குன்றுதான். மலையின் உச்சிக்குச் செல்ல ஒரு நேரான கம்பியை எட்டாக வளைத்து வைத்தது போல் ஒரு பாதை. எத்தனை முறை அதில் ஏறிச் சென்று சறுக்கி விளையாடி இருப்போம். அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கணக்கற்ற நாட்களில் கண்ணாமூச்சி விளை யாடியமை இன்னமும் என் கண்ணுக்குள் வண்ண வண்ணக் கனவுகளாக தெரிகின்றன.

எங்கள் நகரம் மத்திய மலைநாட்டின் எல்லை யில் அமைந்திருந்தது. நாவலப்பிட்டி என்ற எமது நகரத்தை நாவல் நகர் என்று செல்லமாக அழைப்பார் கள். எங்கள் நகரத்தை ஒரு சுற்று சுற்றி விட்டுத்தான் மகாவலிகங்கை கிழக்கு நோக்கித் திரும்புகிறது. மகாவலி கங்கைக்கும் எங்கள் பாடசாலைக்கும் நடுவில் தான் நகரின் பெரிய விளையாட்டு மைதானம் இருந்தது. அந்த விளையாட்டு மைதானத்தில் விளையாடச் சென்றபோதெல்லாம் நாங்கள் மகாவலி கங்கையில் குளிக்கத் தவறுவதில்லை.

அப்போது நாங்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந் தோம். எங்கள் பாடசாலையில் தமிழ் இலக்கிய மன்றம் நீண்டகாலமாக இயங்கி வந்தது. இம்முறை இலக்கிய மன்றத் தலைவராக என்னைத் தெரிவு செய்திருந்தார்கள். பேச்சு, கவிதை, நாடகம் போன்ற துறைகளில் நான் காட்டி வந்த ஆர்வம் அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

நாங்கள் எமது இலக்கிய மன்றம் வாயிலாக பல கலை, இலக்கிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து மேடையேற்றினோம். தேசிய நாடகப் போட்டிகளில் கலந்து கொண்டு பாடசாலைக்குப் பல விருதுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொடுத்தோம். இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் அமைவது தான் வருடாந்தம் நாங்கள் வெளியிடும் 'அருவி' என்ற இலக்கிய மலர். இம்முறை இம் மலரை சிறப்பாக அச்சிட்டு வெளியிடவும் அவ் வெளியீட்டு விழாவை பெரு விழாவாகச் செய்யவும் எனது தலைமையில் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அதிபரும் மன்றத்துக்குப் பொறுப்பாசிரியராக இயங்கிய எங்கள் புவியியல் பாட ஆசிரியரும் எமக்குப் பெரும் உற்சாகத்தை தந்தார்கள்.

மலரை அச்சிடுவதற்கும் விழா ஏற்பாடு செய்வதற்கும் போதுமான நிதியைத் திரட்டுவதே எமக்கு அப்போதிருந்த மனதைக் கசக்கும் பிரச்சினையாக இருந்தது. மலர் அச்சிடுவதற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவும் விழா ஏற்பாட்டுக்கு மூவாயிரம் ரூபாவும் செலவாகலாம் என மதிப்பீடு செய்திருந்தோம். நிதி தொடர்பாக அதிபரை அணுகி ஆலோசனை கேட்டபோது பாடசாலை நிதியில் இருந்து பணம் செலவிடுவதைத் தவிர்த்து கூடுமானவரை பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பெற்றோர், நகரத்தின் வர்த்தகப் பிரமுகர்கள் வாயிலாக நிதி திரட்டிக்கொள்ளும்படி அதிபர் ஆலோசனை தெரிவித்து அனுமதி வழங்கினார்.

விழாவுக்கு ஒன்றரை மாதம் தள்ளி நாட்குறித்தோம். பிரதம விருந்தினராக பேராதனை பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ்ப் பேராசிரியரை அழைப்பதற்கு தான் உதவுவதாக எங்கள் மன்றத்தின் பொறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசிரியரும் புவியியல் பாட ஆசிரியருமான குலசேக ரன் மாஸ்டர் உறுதியளித்தமை எமது உற்சாகத்தை கரைபுரளச் செய்தது. குலசேகரன் மாஸ்டர் அப்போது தான் பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவந்திருந்த இளம் பட்டதாரி. அவ ருக்கு இப்போதும் பல்கலைக்கழகத்துடன் மிகுந்த தொடர் பிருந்தது. அவர் பல விதங்களில் எமக்கு வழிகாட்டி யாக இருந்தார். மனித நேயம் என்றால் என்ன என்பதை எமக்கு புரிய வைத்தவர் அவர்தான்.

அடுத்த இரண்டு வாரங்களை நாம் நிதி திரட்டுவ திலேயே செலவிட்டோம். அன்றைய கால கட்டத் தில் நாம் திரட்ட வேண்டியிருந்த தொகை எமது சக்திக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது. நாங்கள் நன்கொடை வசூலிப்பதற்கு வசதியாக ரூ. 50, ரூ. 100, ரூ. 200 என்று வேறு வேறான பட்டியல்கள் தயாரித் துக் கொண்டோம். 'அருவி' சஞ்சிகையை அச் சகத்தில் பிரின்ட் செய்ய கொடுக்கும்போது அவர் களுக்கு முற்பணம் கொடுக்க வேண்டியிருந்தது.

நாங்கள் இது பற்றி யோசித்துக் கொண்டிருந்த போதுதான் மன்றச் செயலாளராகப் பதவி வகித்த செல்வா என்ற செல்வகுமாரன் சிங்கார் என்ற சிங் காரவேலன் என்ற மாணவனை அழைத்து வந்தான்.

சிங்கார் அண்மையில் தான் எமது பாடசா லையின் உயர் வகுப்பில் விஞ்ஞான பிரிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்திருந்தான். இதற்கு முன் கண்டி நகரில் பெரிய பாடசாலையில் படித்தானாம். ஏதோ காரணத்தின் நிமித்தம் அங்கிருந்து விலகி எங்கள் பாடசாலையில் சேர்ந்திருக்கின்றான். அவன் கொஞ்சம் பணக்காரப் பொடியன். பணத்தை அள்ளி வீசி செலவழிப்பானாம். இவை நான் கேள்விப்பட்ட விடயங்கள். அவனுடன் பழகும் வாய்ப்பு எனக்கு இன்னமும் அதிகமாக கிடைக்கவில்லை.

“சிங்கார் அவன் அப்பாவிடம் சொல்லி நமக்கு கொஞ் சம் டொனேசன் வாங்கித் தருகிறேன் என்று சொல் கிறான்” செல்வா என்னைப் பார்த்துக் கூறினான்.

“அப்படியானால் அவனிடமும் ஒரு நன்கொடைப் பட்டியலைக் கொடுப்போமே. அவனால் முடிந்ததை சேர்த்துத் தரலாம்தானே” நான் கூறினேன்.

“அப்படி அவனால் முடியாதாம், தாம் வீட்டுக்கு வந்தால் அப்பாவிடம் கூறி ரூ. 2500 ஐ தன்னால் பெற்றுத் தரமுடியும்” என்கிறான்.

“அது பெரிய தொகை. ஒரேயடியாக கிடைக்கு மென்றால் பெரிய காரியம். நாளையே போகலாம” நான் ஆமோதித்தேன்.

“ஆனால் அவன் வீடு தூரத்தில் இருக்கிறது”.

எங்கே?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நுவரெலியா நகருக்கப்பால் இரும்புப்பாலம் என்ற இடத்துக்கருகில் அங்கே போவது சாத்தியப்படுமா? செல்வா. ஒரு நாளில் போய் வருவது முடிகிற காரியமல்ல” நான் தயங்கியபடியே கூறினேன்.

“இல்லை நாம் சனிக்கிழமை பகல் கோச்சியில் போனால் அன்றிரவு அவர்கள் வீட்டில் தங்கியிருந்து விட்டு அடுத்த நாள் காலையிலேயே புறப்பட்டு வந்து விடலாமாம்”.

செல்வா சொன்னதை சிங்கார் உறுதிப்படுத்தி னான். நாங்கள் இதுநாள் வரை அறிமுகமில்லாத மூன்றாவது நபர் வீட்டில் தனியாக சென்று இரவு தங்கியது கிடையாது. எனினும் அருகில் உள்ள அருவியுடன் கூடிய காட்டுக்குச் சென்று பாசறையமைத்து மூன்று நான்கு நாட்கள் வரை தங்கியிருந்திருக்கிறோம். அதனால் கொஞ்சம் கூச்சமாக இருந்தது.

இருந்தாலும் சிங்கார் வாங்கித் தருவதாகச் சொன்ன தொகை பெரிதாக இருந்ததால் ஒத்துக் கொண்டேன். நானும் செல்வாவும் மலராசிரியர் றொபர்ட் அந்தனியும் செல்வதென்று ஏற்பாடாயிற்று. சிங்கார் வெள்ளிக் கிழமை பின்னேரமே சென்று வீட்டில் விசயத்தைக் கூறி தயார்ப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறினான்.

ஏனோ தெரியவில்லை எனக்கு படிப்பை விட இத்தகைய கலை இலக்கியம் மற்றும் பொது வேலைகள் என்றால் அன்னம், தாகம், பசியின்றி உழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேன். என் தங்கை, தம்பிகள் படிப்பு படிப்பு என்று படிப்பில்மூழ்கிப் போயிருப்பார்கள், நான் எப்போதுமே வீட்டில் பகல் தங்கியது கிடையாது, பகலெல்லாம் நண்பர்களுடன் இத்தகைய வேலைகளில் கழித்து விட்டு இரவு வெகுநேரம் சென்றதும் தான் வீடு திரும்புவேன். இதனால் வீட்டில் தறுதலை என்று பட்டம் சூட்டியிருந்தார்கள்.

ஆனால் எனக்கு பாடசாலையில் மாணவர் மத்தியிலும் அதிபர், ஆசியர்கள் மத்தியிலும் நல்ல செல்வாக்கு காணப்பட்டது. இதனால் நானே சிரேஷ்ட மாணவர் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தேன்.

அந்த சனிக்கிழமையும் கூட நாங்கள் அதிகாலையிலேயே பாடசாலையில் கூடினோம். அன்றிரவு நுவரெலியா போகிறோம் என்பதால் இரவுக்கு வீட்டுக்கு வரமாட்டோம் என்று முன்கூட்டியே தெரிவித்து விட்டோம்.

பகல் முழுவதும் எங்களுக்கு மலர் தொடர்பானதும் விழா தொடர்பானதுமான வேலைகள் நிறைய இருந்தன. அவற்றையெல்லாம் முடித்து விட்டு மத்தியானத்துக்கு மேலேயே நானுஓயா நோக்கி செல்லும் கோச்சியை பிடித்தோம். நேரடியாக நுவரெலியா நகருக்கு ரயில் போகாது நானுஓயாவில் இருந்து நுவரெலியாவுக்கு சென்று அதன் பின் இரும்புப் பாலத்துக்குச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரின் தந்தை தொழில் பார்க்கும் தோட்டம் ஒரு பிரச்சித்தமான தோட்டமாக இருந்ததால் அதனைக் கண்டுபிடிப்பது கடினமானதாக இருக்காதென நான் நினைத்தேன். நாங்கள் மூவரும் ஒருவாறு காத்திருந்து பஸ்ஸைப் பிடித்து அந்த தோட்டத்தைச் சென்றடைந்தோம்.

சிங்காரின் தந்தை தோட்டத் துரையாதலால் சுப்பிரிண்டன் பங்களாவைக் கண்டுபிடிப்பது கடினமான காரியமாக இருக்கவில்லை. ஆனால் பிரதான பாதையில் இருந்து குறுக்குப் பாதையூடாக சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தேயிலை மலைக்குள் நடக்க வேண்டியிருந்தது.

மாலை மறைந்து இருள் சூழ வாரம்பித்திருந்தது. அதற்கேற்றால்போல் பனி மூட்டம் நுவரெலியாக் குளிரை விட இங்கே குளிர் மிக அதிகமானதாக இருந்தது. எங்கள் கரங்கள் சில்லிட்டுப் போகவே நாங்கள் கைகளை காற்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டோம்.

சுப்ரின்டன் பங்களா பெக்டரியைத் தாண்டி தோட்டத்தின் நடு நாயகமாக விளங்கியது. சுற்றிவர கனத்த வேலியும் வாயிலில் பெரிய கேட்டும் போடப்பட்டிருந்தது. நாங்கள் வாழ்வில் அத்தகைய ஒரு பங்களாவுக்குள் நுழைந்தது கிடையாது. இன்று சிங்காரின் தயவால் ஒரு நாள் அங்கு தங்கப் போகிறோம் என்ற நினைப்பு மகிழ்ச்சியைத் தந்தாலும் அது அந்நியமாகவும் ஒரு கூச்ச உணர்வையும் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கதவைத் தட்டினோம். எங்களை எதிர்பார்த் திருந்தவன் போல் சிங்கார் வீட்டுக்குள்ளிருந்து ஓடி வந்தான். அவன் கேட்டைத் திறந்து எங்களை உள்ளே அழைத்துச் சென்றான். அங்கே கூடத்தில் எங்களை அமரச் செய்தான்.

"என்ன சிங்கார் எல்லாம் சரியா?" நான் தான் மௌனத்தை கலைத்தேன். அவன் பதில் பேச வில்லை. எங்கள் முகத்தை நேருக்கு நேர் பார்க்கத் தயங்கினான். நான் வந்த உடனேயே அவன் முகத்தைப் பார்த்தேன். அதில் சந்தோசமில்லை. நண்பர்களை சந்தித்த பூரிப்பு இல்லை. புன்னகை இல்லை.

என்ன நடந்திருக்கும்? என் மனதில் முதன் முறை யாக ஒரு பய உணர்வு தோன்றியது. இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். வந்த காரியம் கைகூடுமா என்ற சந்தேகமும் உடனே எழுந்தது.

சிங்கார் என் கேள்விக்கு ஒன்றுமே பதில் பேசாமல் தலையாட்டினான். அவன் வலிந்து புன்னகைக்க முயன்றான். எங்களுக்கு குடிக்க ஏதாவது கொண்டு வருவதாக சொல்லி உள்ளே சென்றான்.

நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். செல்வாவுக்கும் றொபேட்டுக்கும் கூட சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்கள் கண்களில் கேள்விக் குறிகள் தெரிந்தன.

நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். சுவர்களில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படங்கள் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தன. அநேகமான படங்களில் கொடுக்கு மீசையுடனான ஒரு வாட்ட சாட்டமான உயரமான மனிதர் பல கோணங் களில் காட்சியளித்தார். அவர் வேட்டைப் பிரியர் போலும். வேட்டைக்காரன்போல் உடை யணிந்து தோளில் ஏந்திய வேட்டைத் துப்பாக்கியுடன் நண்பர் களுடன் காட்சியளித்தார். ஏனைய படங்கள் குடும் பப்படங்கள்.

சுவர்களில் கூட மான் கொம்புகள், புலித்தலை என் பன அலங்கரித்தன. பழைய வேட்டைத் துப்பாக்கி ஒன்று சுவரில் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்தது.

வீட்டுக்குள் சென்ற சிங்கார் சில நிமிடங்களாகியும் வருவதாயில்லை. வீட்டுக்குள்ளிருந்து யாரோ சில பேர் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது. வரவர சத்தத்தின் வேகம் அதிகரித்தது. ஒன்று அதிகாரம் மிக்க கடுமை யான ஆண் குரல். தோட்டத்துரைக்கேயுரியது. அது சிங்காரின் தந்தை யுடையதாக இருக்க வேண்டும். அடுத்தது நடுத்தர வயதுடைய ஒரு பெண் குரல். அது சிங்காரின் அம்மாவுடையதாக இருக்க வேண்டும். மூன்றாவது அவர்களுக்கு பரிச்சயமானது. சிங்காருடை யது.

சற்று உயர உயர ஒலித்த பேச்சு சத்தங்கள் ஒரு விவாதமாக மாறியது. அவர்கள் பேசுவது இப்போது எங்களுக்கு நன்றாகவே கேட்டது. ஏதோ தவறு நடந்திருக்கிறது என்பது மட்டும் எங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தது. நாங்கள் அவர்களின் பேச்சுக்கு செவிமடுத்தோம்.

"நாசமாய்ப் போன சனியன், உன் பாட்டன் சொத்தையா வீணாக்குகிறாய்.?"

"இதுவரை எவ்வளவு பணம் செலவழித்தாகி விட்டது".

"எல்லாவற்றுக்கும் காரணம் உன் கெட்ட நண்பர்களின் சகவாசம் தான்".

"அவர்களை உடனே போகச்சொல், இல்லா விட்டால் நான் என்ன செய்வேன் என்று தெரியாது"

அவர்கள் ஏதேதோ கடுமையாக பேசிக் கொண்டார்கள். விடயம் பிழைத்து விட்டதென எங்களுக்கும் புரிந்தாலும் என்ன செய்வதெனத் தெரியவில்லை. கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. என்பார்களே அப்படி ஒரு நிலை.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. சிங்கார் அவன் நண்பர்களுடன் சேர்ந்து நிறைய பணம் செலவழித்திருக்கின்றான். அவ்விதம் அவனைக் கெடுக்கும் கெட்ட நண்பர்கள் நாங்கள் தான் என்று எங்களை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் அவன் அப்பா.

அடுத்து என்ன நடக்கப் போகிறது. அந்த கடுமையான குளிரிலும் எங்களுக்கு வியர்க்க ஆரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தது. சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போய் விட லாமா? இந்த இரவில் எங்கே போவது. ஆப்பு இழுத்த குரங்கின் நிலை. எனது நண்பர்கள் இரு வரும் பேயறைந்தவர்கள் போலானார்கள்.

சில கணங்கள் எந்த முடிவும் எடுக்க முடியாமல் கழிந்தன. அடுத்த கணம் அந்த கொடுக்கு மீசைக் காரர் மிகுந்த கோபாவேசத்துடன் அங்கு வந்தார். அவர் கையில் ஒரு வேட்டைத்துப்பாக்கி மின்னிக் கொண்டிருந்தது. அவரைத் தொடர்ந்து ஒரு பெண் ணும் சிங்காரும் ஓடி வந்தார்கள்.

“வம்பில் பிறந்தவர்களே, இன்னும் ஒரு நிமிடம் இங்கிருந்தால் உங்களை சுட்டுப் பொசுக்கி விடுவேன். ஓடுங்கள்” இதனை அவர் ஆங்கிலத்திலேயே கூறி னார்.

அவருக்கு பதில் சொல்வதற்கான திராணியோ எதிர்ப்பதற்கான துணிவோ எங்களுக்கில்லை. தாம தித்தால் சுட்டுவிடுவார் என்பது மாத்திரம் புரிந்தது. ஏற்கனவே செல்வாவும் றொபட்டும் வெளியில் பாய் ந்து விட்டனர்.

நாங்கள் பயணப்பைகள் ஒன்றும் கொண்டு வந் திருக்கவில்லை. சிங்கார் எல்லா வசதிகளையும் செய்து தருவான் என்று நம்பினோம். என்னிடம் நன்கொடை லிஸ்டுகள் அடங்கிய பைல் ஒன்று மட் டுமே காணப்பட்டது. அதனையும் சுருட்டிக் கொண்டு நானும் பாய்ந்து வெளியேறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு பிடித்த ஓட்டம் நாங்கள் இரும்புபாலம் பஸ் டான்டில் வந்து தான் திரும்பிப்பார்த்தோம். யாரும் தொடர்ந்து வரவில்லை. உடனடியாகவே நுவ ரெலியா போக அடுத்த பஸ் எப்போது என்று அங் கிருந்த ஒருவரிடம் கேட்டோம்.

மணி ஏழாகி விட்டதென்றும் இனிமேல் அந்த பாதையில் பஸ் வராதென்றும் அவர் கூறினார்.

இனி என்ன செய்வது? நேரம் கடந்து சென்றது. அவ்விடத்தில் இருந்த ஒரு சில கடைகளையும் மூடத் தொடங்கினார்கள். பசியும் தாகமும் அதனுடன் சேர்ந்து துக்கம், பயம் இப்படி எல்லா உணர்வுகளும் வந்து தொண்டையை வறளச் செய்துவிட்டது.

சாப்பிட்டால் இருந்த காசும் தீர்ந்து விடும், திரும் பிச் செல்ல பயணச் செலவுக்கு காசை மிச்சம் பிடிக்க வேண்டும். அருகில் இருந்த பெட்டிக் கடை சாத்துவதற்கு முன் ஆளுக்கு இரண்டு ஆனை வாழைப் பழங்களை விழுங்கிவிட்டு பிளேன் டீ குடித்தோம். கொஞ்சம் தெம்பு வந்தது போலிருந்தது.

நேரம் செல்லச் செல்ல குளிர் அதிகமாகியது. உடல் மட்டுமல்ல ஈரக் கொலையும் சேர்ந்து நடுங்கியது. எட்டு மணியைத் தாண்டிய போது யாரோ எங்களை நோக்கி வருவது தெரிந்தது.

சிங்கார்தான் வந்தான். அவன் முகமும் கண் களும் அழுது சிவந்து வீங்கிப் போயிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எங்களை வந்து கட்டிப்பிடித்து அழுதான். பின் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அப்பா தவறாக விளங்கிக் கொண்டார் என்றும் நாங்கள் தனது பழைய நண்பர்கள் அல்லவென விளங் கப்படுத்தியதாகவும் கூறினான். பின் எங்களை காலையில் நுவரெலியாவுக்குச் சென்று விக்டோரியா பூங்காவில் காத்திருக்குமாறும் பத்து மணிக்கு முன் தான் பணத்துடன் திரும்பி வருவதாகவும் கூறிச் சென்றான்.

அன்றைய இரவு எங்களுக்கு நரகமாக இருந்தது. குளிர் மிக அரக்கத்தனமாக கூரான ஈட்டிகளால் குத்தித் துன்புறுத்தியது. பஸ்டான்டில் யாரோ ஒரு புண்ணியவான் மழைக்கு நனையாமல் இருக்க சிமெண்டு கூடாரம் ஒன்று கட்டிப் போட்டிருந்தான். நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் இறுக்கமாக அணைத்துக் கொண்டு ஒரு மூளையில் சுருண்டு கொண்டோம். எங்கள் சூடு மட்டுமே எங்களுக்கு இதமளித்தது.

அது எங்களுக்கு மிக நீண்ட இரவாக இருந்தது. இரவு முழுவதும் தூங்கவேயில்லை. காலை விடிந்ததும் ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்சத் தெம்புடன் அருகில் இருந்த குழாயில் முகம் கழுவினோம். தண்ணீரா அது. ஈயத்தைக் காய்ச்சி முகத்தில் வார்த்தது போலி ருந்தது. உடனே அங்கிருந்து ஓடி விட வேண்டும் போல் தோன்றியது. நாங்கள் முதல் பஸ்ஸில் ஏறி நுரெலி யாவுக்கு வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காருக்காகக் காத்திருப்பதா போவதா? என்று ஆலோசித்தோம். மூன்று பேரிடமும் இருந்த சில்ல றையை எல்லாம் பொறுக்கி பிரயாணச் செலவுக்கு வைத்துக் கொண்டு மிகுந்ததை பெட்டிக் கடையில் கோதுமை ரொட்டியும் பிளேண் டீயும் குடித்தோம். சரியாகப் பத்து மணி வரை சிங்காருக்காக காத்திருப் பதென்று தீர்மானித்தோம்.

விக்டோரியா பூங்காவுக்குச் சென்று வேடிக்கை பார்த்தவாறே காத்திருந்தோம். பத்து மணியும் ஆகி விட்டது. சிங்கார் வரவில்லை. மேலும் சிறிது நேரம் பார்த்தோம். சிங்கார் வரவேயில்லை.

நாங்கள் எங்கள் சோகக்கதையை மனதுக்குள் போட்டுப் புதைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந் தோம்.

அன்று மாலை தேசிய வானொலியில் மாலைச் செய்தி முடிவடைந்ததும் செல்வாவும் றொபட்டும் என்னைத்தேடி ஓடி வந்தார்கள். செய்தியின் பின் வாசிக்கப்பட்ட மரண அறிவித்தலில் சிங்கார வேலனின் பெயரும் இருந்ததாகக் கூறினார்கள். எங்களுக்கு சப்த நாடிகளும் ஒடுங்கிப் போய் விட் டன.

சிங்கார் தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளை. அவன் தாய் அவன் சிறு பிள்ளையாக இருக்கும் போதே இறந்து விட்டார். இப்போதிருப்பது அவனது சித்தி. சிறு வயது முதலே சித்தி கொடுமைக்கு உட்பட்டு வளர்ந்தவன். பின்னர் அவனின் ஊதாரித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம் வளர்ந்து விட்டது. அவன் மேல் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாகவே முன்பு படித்த பாட சாலையில் இருந்து அவனை நீக்கி விட்டார்கள். அதன் பின்பு தான் அவன் எங்கள் பாடசாலையில் சேர்க்கப்பட்டான் என்பன பிந்திய தகவல்கள்.

■

**தாயகம்**

**2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# கரிச்சான் குருவி

தொடர்ந்து மூன்று நாட்களாக அடை மழை கொட்டியது வெளியில் தலைகாட்டவே முடியாமலிருந்தது. நான் எனது எழுத்து மேசையில் அமர்ந்து கொண்டு இன்றைக்கு வேலைக்குப் போவதா வேண்டாமா என்று இரண்டுங்கெட்டான் மன நிலையில் யோசித்துக் கொண்டிருந்தேன். இன்றைக்கு ஏதாவது அவசரமாக முடிக்க வேண்டிய வேலை உள்ளதா என்று மனக்கணக்குப் போட்டுப் பார்த்தேன். சில வேலைகள் இன்னும் முடியவில்லையே என சில வாடிக்கையாளர்கள் நச்சரித்துக் கொண்டிருந்தாலும் அவையெல்லாம் உடனடியாக முடிக்கக்கூடிய காரியங்கள் அல்ல.

என்னைப் பொறுத்தவரையில் எனக்கு எஜமான் நான் தான். எனவே நான் இன்று என்ன செய்ய வேண்டும் என்பதை நான்தான் தீர்மானிக்க வேண்டும். இன்று வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்து ஏதாவது உருப்படியான ஒரு வேலையைச் செய்ய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபட்டது. நீண்ட காலமாக மனதில் உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு கருவை வைத்து இன்று ஒரு சிறுகதையை எழுதி விடலாம் என்று மனதுக்குள் தோன்றியது. எனது மேசை பல நாட்களாகவே ஒதுக்கி வைக்கப்படாமல் குப்பை கூளங்கள் போட்டது போல் அலங்கோலமாகக் கிடந்தது. எனது மகள், என்னப்பா உங்கள் மேசை இப்படி குப்பையாக உள்ளதே. அடுக்கி வைக்க மாட்டீர்களா? என்று மிரட்டிக் கொண்டே இருப்பது இடஞ்சல் போல் தோன்றியது. அவளின் கோரிக்கைக்கு முன்னுரிமை கொடுத்து மேசையை ஒதுக்கி வைக்கலாம் என்று நினைத்தேன்.

இப்போதும் கூட அந்த மேசைக்கு முன்னால்தான் அமர்ந்திருக்கிறேன். ஜன்னலுக்கு அப்பால் முற்றத்தில் நடப்பட்டிருந்த செடி கொடிகளில் கனதியான மழைத் துளிகள் விழுந்து என் சிந்தனையை திசை திருப்பிக் கொண்டே இருந்தன. அக்கணத்தில் தான் அந்தப் பறவை என் கண்ணில் பட்டது. அது கொஞ்ச நேரமா கவே ஜன்னலுக்குக் குறுக்கும் நெடுக்குமாக பறந்து ஓடிக் கொண்டிருந்தது. மழையில் நன்கு நனைந்து குளிரில் வெடவெடத்துக் கொண்டிருந்தது. அதற்கு ஓரிடத்தில் அமர்ந்திருக்க வேண்டுமென்று தோன்ற வில்லை. ஏன் ஜன்னலுக்கு அப்பால் இருந்த தாள் வாரத்தின் அடிப்பலகைகளில் கூட அந்த பறவைக்கு நனையாமல் பாதுகாப்பாக இருக்க போதுமான இடமிருந்தது. அந்த பறவையின் முட்டாள் தனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எரிச்சலாக இருந்தது. நான் இருக்கையில் இருந்து எழுந்து சென்று அந்தப்பறவையின் செயல் களை அவதானித்தேன்.

அப்போதுதான் என் மண்டையில் ஒரு உண்மை உறைத்தது. அந்தப்பறவை எனக்கு அந்நியமான பறவை அல்ல. அது ஒரு கரிச்சான் குருவி. கறுப்பு வெள்ளை நிறத்தை தன்மேனியில் பூசிக்கொண்ட சின்னப்பறவை. அந்த பறவையை எனக்கு கொஞ்ச காலமாகவே தெரியும். அப்படியானால் அந்தப்பறவைக்கு என்னால் அநீதி ஏதும் இழைக் கப்பட்டு விட்டது போல் மனதில் உறுத்தல் ஏற்பட் டது. ஐயகோ! அந்தப் பறவையை என்னால் சமாதா னப்படுத்த முடியுமா? அந்தக் கதையை யாரிட மாவது சொல்லியே ஆக வேண்டும் போலிருந்தது. அந்தக் கதைதான் இது.

கொஞ்ச நாளைக்கு முன்னர் தான் மிகவும் சிர மப்பட்டு கடனை உடனை வாங்கி எங்கள் வீட்டுக்கு கார் ஒன்றை வாங்கினோம். நான் அதில் அதிக ஆர்வம் காட்டா விட்டாலும் மனைவி பிள்ளைகளின் நச்சரித்தல் தாங்க முடியாமல் நானும் உடன்பட்டு விட்டேன். வங்கிக்கடன் கொஞ்சமும் வட்டிக்கடன் கொஞ்சமும் மாதா மாதம் சம்பளத்தில் இருந்து கட்டும் போதுதான் இதனை ஏன்டா வாங்கினோம் என்றிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கார் வந்த காலத்தில் இருந்தே தொடர்ச்சியான மழை பெய்து கொண்டே இருந்தது. வெளியில் முற்றத்தில் நிற்பாட்டப்பட்டு அது எந்த நாளும் மழையில் நனைந்து கொண்டேதான் இருக்கிறது. அது நனையாமல் இருக்க உறை வாங்கிப் போட்டோம். இருந்தாலும் அந்தக் கார் நனைந்து கொண்டுதான் இருந்தது.

எங்கள் முற்றம் மிக விசாலமானதல்ல. கூட்டிக் கழித்துப் பார்த்தால் முப்பதடிக்குப் பதினைந்தடி நீள அகலத்தைக் கொண்டிருந்தது. இந்தப் பரப்புக் குள்தான் ஒரு முருங்கை மரம், கிறிஸ்மஸ்மரம், கறிவேப்பிலை மரம், றம்புட்டான் மரம், அகத்திமரம், என மரங்கள், செடிகள், பூங்கொடிகள் இடத்தை அடைத் துக் கொண்டிருந்தன. மரங்களிலும் செடிகளிலும் கால நிலை, பருவ காலத்துக்கமைய பூக்களும் கனிகளும் பூத்துக் காய்த்து கனிந்து கொண்டிருக்கும். பழம் உண்ணவும் பூக்களில் தேன் பருகவும் பறவைகளின் வரவு எந்த நேரத்திலும் இருந்து கொண்டே இருக் கும்.

எங்கள் வீடு கொழும்புக்கு சற்று தூரத்தில் முக்கிய மான பறவைகள் சரணாலயத்துக்கு அருகாமையில் அமைந்திருந்ததால் பறவைகளுக்கு எப்போதும் பஞ் சமிருப்பதில்லை. அதற்காகத்தான் அந்த வீட்டை வாங்கி குடியிருக்க தீர்மானித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி, மைனா, மஞ்சக்குருவி, கொண்டைக்குருவி, வீட்டுக்குருவி, தேன் சிட்டு என இப்படி பெயர் சொல்ல முடியாத பல பறவைகளும் வந்து பழம் உண்ணுவது மட்டுமன்றி கொஞ்சிக்குழாவிச் செல்லும். ஒரு முறை பட்டியல் போட்டுப்பார்த்ததில் சுமார் ஐம்பத்தாறு வகையான பறவைகள் வந்து கூடார மிட்டு கும்மாளமடித்து விட்டுச் செல்வதாக எனது மகள் ஒரு கணிப்பீடு செய்திருந்தாள்.

இங்கு வரும் பறவைகளில் செம்பூத்துப் பறவை யைத் தவிர வேறு எந்த பறவைகளையும் நானோ வீட்டில் இருப்போரோ விரட்டியது கிடையாது. இந்த செம்பூத்து என்கிற பறவை பழந்தின்னவோ, தேன் குடிக்கவோ இங்கு வருவதில்லை. அது ஒரு வேட்டைப்பறவை. இங்கே முற்றத்து வேலியில் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் செடிகளின் கிளைகளில் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சு பொரித்திருக்கும் சிறு பறவைகளின் முட்டைகளையும் குஞ்சுகளையும் களவாடி உண் ணத்தான் இந்தப்பறவை இங்கே வருகிறது. இந்தப் பறவையின் வரவை அவதானித்த உடனேயே ஏனைய பறவைகள் 'ஓ' வென்று அலறி கூக்குரல் இட்டு எச்சரிக்கை ஒலி எழுப்பி 'ஆபத்து' வருகிறது என்பதை ஏனைய பறவைகளுக்கு அறி வித்துவிடும். இந்த எச்சரிக்கை ஒலியால் பயந்து நடுங்கிப் போய்விடும் அணில் கூட "கீச்... கீச்" என்று பெரும் ஓலம் எழுப்பியவாறு ஓடிச்சென்று தன் குஞ்சு களை அணைத்துக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை நான் வீட்டுக்குள் ஏதோ வேலையாக இருக்கும்போது பறவைகளின் அவலக்குரல் ஆர்வக் கோளாறால் என் காதுகளில் விழாமல் இருந்திருக்கும். அப்போது என் மனைவியும் பிள்ளைகளும், "அப்பா வெளியே குருவிகள் கத்துது.... செண்பகமோ பாம்போ வந்திருக்கும். போய் பாருங்க" என்று கத்துவார்கள். நான் வழக்கமாக இதற்கென வைத்திருக்கும் நீண்ட கம்பையும் எடுத்துக் கொண்டு வெளியில் பாயும் போது எங்கள் வீட்டு நாயும் தன் உடலை சிலிர்த்துக் கொண்டு குலைத்துக் கொண்டு பாயும். உண்மையில் அங்கே ஒரு செண்பகமோ ஒரு சாரைப்பாம்போ வெளியில் நெளிந்து கொண்டுதான் இருக்கும். எனினும் அவை ஒருபோதும் என் கம்புக்கு அகப்பட்ட தேயில்லை. எனது நோக்கமும் அவற்றை விரட்டு வதாக மட்டுமே இருந்ததன்றி காயப்படுத்த வேண் டும் என்று நினைத்ததில்லை.

முதன் முதலாக காரை முற்றத்துக்குள் கொண்டு வர முற்பட்ட போது தான் அது எத்தனை சிரமமானது என்பது புரிந்தது. முதல் பிரச்சினை நுழைவாயில் கேட் குறுகலாக இருந்தது. அதனை இடித்து அகல மாக்க வேண்டும். அடுத்த பிரச்சினை காரை உள்நோக்கி திருப்ப முடியாதபடி கறிவேப்பிலை மரமும் றம்புட்டான் மரமும் நந்தியென நின்றிருந்தன. றம்புட்டான் காய்ப்பதற்கு இன்னும் சில மாதங்கள் மட்டுமே இருந்தன. காரா? றம்புட்டானா? கறிவேப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலையா? என்ற பலப்பரீட்சையில் றம்புட்டானும் கறிவேப்பிலையும் தோற்றுப்போக அவை மரணத்தைத் தழுவிக் கொண்டன. அவை பிடுங்கி எறியப்பட்டு சமதரையாக்கப்பட்டன. அடுத்ததாக கார் நிறுத்த இடைஞ்சலாக அங்கிருந்த பூமரங்களும் அப்போதுதான் பூத்துக் கொண்டிருந்த அம்பரெல்லா மரமும் சிறுசெடிகளும் வெட்டி அகற்றப்பட்டன. இப்போது பல மரங்களையும் செடிகளையும் கபளீகரம் செய்துவிட்ட அந்தக் கார் கம்பீரமாக யுத்தத்தில் வென்ற வீரன் போல் முற்றத்தில் நின்றிருந்தது.

என்ற போதும் அந்தக்கார் தொடர்ந்தும் மழையில் நனைந்து கொண்டுதான் இருந்தது. அப்போதுதான் ஒருநாள் காரின் பின்புறம் இடது கதவின் கீழ் ஒரு நெல்லிக்கனியளவில் ஓரிடத்தில் கறுப்பாக துருப்பிடித்திருந்ததை எனது மகன் அவதானித்து என்னிடம் தெரிவித்தான். அதனை அப்படியே விட்டால் அது வேறு இடத்துக்கும் பரவும் அபாயமும் இருந்தது. உடனடியாக வீட்டில் ஆலோசனைக்கூட்டம் ஒன்று நடந்தது. காரை நனையவிடாமல் பாதுகாக்க வேண்டுமானால் கூரை ஒன்று முற்றத்தில் கட்ட வேண்டும். இன்னும் மிச்சமிருக்கின்ற முற்றத்துக்கு மேல் கூரை போட்டால் இப்போது மரஞ்செடி கொடிகள் வளர்ந்திருக்கின்ற எங்கள் சிறு தோட்டம் மேலும் அரைவாசியாக குறைந்து போய்விடும். ஆனால் காரைக்காப்பாற்ற வேறு மார்க்கங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த சில தினங்களில் முற்றத்துக்கு மேல் வீட்டுக் கூரையையும் வேலி மதிலையும் இணைத்து கூரை போடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கூரைக்கு ஒளி உட்புகக்கூடிய இலகு கூரைத் தகடுகளை பயன்படுத்துவதென்றும் அதனால் வீடு இருளடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இனி எஞ்சியிருக்கும் மரங்களில் எவற்றுக்கு மரண தண் டனை வழங்குவது என்று ஆலோசிக்கப்பட்டபோது கிறிஸ்மஸ் மரத்தை மட்டும் வெட்டக்கூடாதென எல் லோரும் ஏகோபித்த குரலில் கூறினார்கள்.

பல காலங்களாக கிறிஸ்மஸ் காலங்களில் வர்ண மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு கொண்டா டப்பட்டு வந்த மரம் அது. அதனை வெட்டுவ தென்றால் இதயத்தை கசக்கிப் பிழியும் சோகமான காரியம்தான். ஆனால் அதனை கார் வாங்குவதற்கு முன்னர் யோசித்திருக்க வேண்டும். மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை என்றால் எதனை விட்டுக் கொடுப்பது என்று முடிவெடுத்துதான் ஆக வேண்டும்.

இறுதியில் நவீன தொழில்நுட்பம், நவீன வசதி என்ற வாதத்தின் பின் கார் வென்றது. கிறிஸ்மஸ் மரம் தன் இன்னுயிரை அர்ப்பணித்து காருக்கு இடம் கொடுப்பதைத்தவிர மாற்று வழியில்லை. கூரை அமைப்பதற்கான பொருட்கள் தருவிக்கப்பட்டன. பாஸ் ஒருவர் அழைக்கப்பட்டு சம்பளம் பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொந்தராத்தும் வழங்கப்பட்டது. எனது மனைவி மனதைக் கல்லாக்கிக் கொண்டு கிறிஸ்மஸ் மரம் வெட்டப்படுவதை அவதானித்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் இருவரின் கண்களிலும் சோகம் அப்பிக் கிடந்தது. எனக்கும் அந்தச் செயல் மனதைக்குடைந்த போதும் அதனை வெளிக்காட்ட முடியாமல் அமுக் குணி என அமுக்கிக் கொண்டேன்.

ஒருவாறு கார் நனையாமல் இருக்க முற்றத்தில் கூரை அமைக்கப்பட்டு விட்டது. இந்த காரியம் முடிந்த போதுதான் தலையில் இருந்து ஓர் பெரிய பாரத்தை இறக்கி வைத்ததுபோல ஒரு உணர்வு ஏற்பட்டது. காரில் துளியளவு எங்கேயாவது துருப்பிடித்து இருந் தாலும் அதன் மதிப்பு குறைந்து போய்விடும் என்று நண்பர்கள் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். இது போதாதென்று எலி ஒன்று காரின் இயந்திரப் பகுதியில் போய் கூடு கட்டி வாழப்பழகிக் கொண்டிருந்தது. அது உள்ளே வயரை கியரை ஏதும் கடித்து விட்டால் என்ன செய்வதென்ற பயம் வேறு. இப்போது கூரை போட்ட கையுடன் எலிப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கண்டாக வேண்டும். வீடுகளில் பொதுவாக குடும்பப் பிரச்சினைகளே அதிகம் ஏற்படும் என்று கருதிய வர்களுக்கு இப்படியும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பது புதிய விடயமாகும்.

இவ்வளவெல்லாம் நடந்துவிட்ட நிலையில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கரிச்சான்குருவியை ஏன் மறந்தோம் என்பது மனதுக்குள் சுருக்கென்று தைத்தது. அந்தக் கரிச் சாங்குருவி சிறு குஞ்சாக இருக்கும் போது கொஞ்சம் சிறகு முளைத்ததும் அதனை அதன் அம்மாக் குருவி எங்கள் வீட்டின் கிறிஸ்மஸ் மரத்துக்கு கூட்டி வந்தது. அங்கு வைத்துதான் இரைதேடி தன் குஞ்சுக்கு ஊட்டியது.

ஒருமுறை அம்மாக்குருவி இரைதேடச் சென்ற போது குஞ்சு குருவி மரக்கிளையில் இருந்து நழுவி விழுந்துவிட்டது. அதற்கு திரும்பவும் மரக் கிளைக்கு பறந்து செல்லும் அளவுக்கு சிறகுகளில் பலமிருக்கவில்லை. திரும்பிவந்து பார்த்த அம்மா குருவி தன் குஞ்சைக்காணாது "காச்சு மூச்சென்று" கத்த ஆரம்பித்து விட்டது. அன்றுங்கூட நான் இந்த எனது எழுத்து மேசையில் இருந்துதான் ஏதோ எழுதிக்கொண்டிருந்தேன்.

ஏற்கனவே அம்மா குருவியும் குஞ்சு குருவி யும் கொஞ்சிக் கொண்டிருந்ததை நான் அவதா னித்திருந்தேன். இது முற்றத்து நிகழ்வுகளில் வழ மையானது என்பதால் அதன் குலாவல் பெரிதாக என் கவனத்தைக் கவரவில்லை. ஆனால் இப்போது அம்மாக்குருவியின் கதறல் என் கவனத்தைக் கவர்ந் தது. நான் ஏதோ விபரீதம் நடந்து விட்டதோ என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க விரைந்து மரத்தடிக்குச் சென்றேன். அங்கே நிலத்தில் குருவிக் குஞ்சு தவித்துக் கொண்டிருந்தது. அது என்னைப் பார்த்து மேலும் பயப்பட்டது. நான் சந்தடி செய்யாமல் அமைதியாக மெல்ல அதனை அணுகி தூக்கி எடுத்து அது முன்பிருந்த கிளையிலேயே வைத்துவிட்டேன்.

அதன் பின் அம்மாவும் குஞ்சும் அங்கேதான் இருந்தார்கள். இரண்டு மூன்று நாட்களிலேயே குஞ்சு குருவி சிறகு முளைத்து நன்றாகப் பறக்கத் தொடங்கி விட்டது. குஞ்சுக்குருவி தானாகவே உணவு தேடி உண்ணும் தகுதி வரும் வரையில் தாய்க்குருவி அதனோடு உடன் இருந்தது. அதன் பின் தாய்க்குருவியை நான் காணவில்லை. ஆனால் குஞ்சுக்குருவி தொடர்ந்தும் கிறிஸ்மஸ் மரத்தையே தன் வீடாக்கிக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தது.

நாங்கள் காருக்குக் கூரை போடும் பிரச்சினையில் அந்த கரிச்சான் குருவியைப் பற்றி சிந்திக்கவேயில்லை. இப்போது எனக்கு கிறிஸ்மஸ் மரத்தை இழந்த சோகத்துக்கு மேல் கரிச்சான் குருவியின் வாசஸ் தலத்தை பறித்து விட்டோமே என்ற சோகமும் சேர்ந்து கொண்டது. அந்த மழை நாளுக்குப் பின் அந்தக்குருவியையும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. அது என் போன்ற மனிதர்களின் செயல்களை சபித்துவிட்டு வேறொரு மரத்தை தனது வாசஸ்த்தலமாக்கிக் கொண்டிருக்குமோ?

■

**கூர்மதி-2015**
**கல்வியமைச்சு**
**தமிழ்ப்பிரிவு ஆண்டுமலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# இன்னும் எத்தனை நாள்...?

பெருமழையாக இல்லாவிட்டாலும் ஒரு மனி தனை தொப்பையாக நனைத்து விடும் அளவுக்கு மழை பெருந்தூறலாகத் தூறிக் கொண்டிருந்தது. அதனு டன் சேர்ந்து மெல்லிய ஈரக்காற்றும் வீசியதால் தேகத் தில் நடுக்கம் ஏற்படுத்தும் அளவுக்கு குளிர் காணப் பட்டன.

அந்திச் சூரியனைக் கண்டு சில நாட்கள் ஆகி யிருந்தன. தொடர்ச்சியான மழை காரணமாக வீதி யெங்கும் சேறும் சகதியும் சொத சொதவென்று காணப்பட்டன. மாலைப்பொழுது மறைந்து மலைப் பிரதேசத்தை இருள் மெதுமெதுவாக விழுங்கிக் கொண்டிருந்தது.

இவை எதனையும் பொருட்படுத்தாமல் வீரசேவு கப் பெருமாள் தன் வசிப்பிடமான பசுமலைத் தோட் டத்தின் பணிய கணக்கு பிரிவில் அமைந்திருந்த ஐந்தாம் நம்பர் லயத்தை நோக்கி விரைந்து கொண் டிருந்தான். சுற்றுப்புறத்தில் ஏற்பட்டிருந்த சல னங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பொருட்படுத்தாத அவனது போக்கும் தீர் மானமான நடையும் அவன் ஏதோ ஒரு இலக்கை நோக்கி நடக்கிறான் என்பதனை சொல்லாமல் சொல்லிக் காட்டின.

அவன் மிகத் தீவிரமான சிந்தனையுடன் நடந்தான். அவனுள் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்து கொண்டி ருந்தது என்பது மாத்திரம் தெரிந்தது. அவன் பலமான யோசனையுடன் வீறு நடை போட்டான். கண்ணுக் கெட்டிய தூரம் வரை விரிந்து பரந்த பசுமைச் செழிப் புடன் நெடி துயர்ந்து காணப்பட்ட அந்த மலை தொடர்கள் எத்தனை காலம் தான் நம்சோகக் கதைகளை கேட்டுக் கொண்டிருக்கும். பார்த்துக் கொண்டிருக்கும். விம்மிப்புடைத்து செழிப்புடன் கிளர்ந்தெழுந்திருந்த அப்பசுமலைக் குன்றுகளின் பள்ளத்தாக்குகளில் மெல் லாடைப் போல் படர்ந்திருந்த வெண்மேகக் கூட்டங் களை பெண்ணின் மார்பகத்துக்கு ஒப்பிட்டு இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் நாம் கவிதை பாடிக் கொண்டிருப்பது? நூற்றாண்டு காலமாக கொத்தடிமை களாய் பரம்பரை பரம்பரையாக தம் வாழ்வை தேயிலைச் செடிகளுக்கு உரமாக்கி இந்நாட்டின் பொரு ளாதாரத்தை நிமிர்த்திப் பிடித்திருக்கும் நமக்கு இவர்கள் செய்த கைமாறுதான் என்ன?

கூலிகள் என்று பெயர்வைத்து எம்மைக்கூட்டி வந்து கங்காணிகளுக்கும் தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர் களுக்கும் கொத்தடிமைகள் ஆக்கி எம்மை அடகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து விட்டு வெள்ளைக்காரன் சென்று அரை நூற்றாண்டு கடந்து விட்ட பின்பும் ஏன் இன்னமும் நமது அடிமைத்தனம் போகவில்லை? ஏன் இன்னமும் இந்த நாட்டில் எம்மை இந்த நாட்டு மக்களாக மதிக்கிறார்கள் இல்லை? நாம் நமது சொந்தக் கரங்களால் நாயாக பேயாக உழைப்பதனைத் தவிர வேறென்ன தப்பைச் செய்து விட்டோமென்று நமக்கிந்த தண்டனை? இது தொடரக்கூடாது இதற்கொரு முடிவு வேண்டும்.

வீரசேவுகப் பெருமாள் அந்த மழையில் முற்றாக நனைந்திருந்தான். அவன் அணிந்திருந்த வெள்ளைச் சட்டையும் வெள்ளைச்சாரமும் நனைந்து அவன் உடம்புடன் ஒட்டிக் கொண்டிருந்தன. நன்கு செழித்து அடர்ந்து வளர்ந்திருந்த கரிய தலைமயிரின் வழியாக வழிந்த மழைநீர் மூக்கு நுனிவரை வந்து அதற்கு மேல்போக முடியாமல் வடிந்துகொண்டிருந்தது.

அவன் சிந்தனைகள் அண்மைக்காலத்தில் அவன் வாழ்வைச் சுற்றி இடம்பெற்று வரும் மாற்றங்கள் தொடர்பில் மிகத் தீவிரமாக லயித்துப் போயிருந்தது. வீரசேவுகப் பெருமாளின் குடும்பத்தில் மொத்தம் ஒன்பது குழந்தைகள். ஆறு பெண்கள், மூன்று ஆண்கள் அதில் அவன் ஆறாவது. மூத்தவர்களில் நான்கு அக்காமாரும் ஒரு அண்ணனும், இளையவர்களில் ஒரு தம்பியும் இரண்டு தங்கைகளும் இருந்தனர். மூத்த அக்காமார்கள் இருவர் அவனுக்கு விவரம் தெரியாத காலத்திலேயே கலியாணம் முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்து தோட்டங்களில் வாழ்ந்து வந்தனர். எப் போதாவது இருந்திருந்து தீபாவளி, பொங்கல், திருவிழாக்காலங்களில் வந்து ஓரிரு தினங்கள் இருந்து விட்டுப் போவார்கள்.

மற்ற இரண்டு அக்காமார் அதே தோட்டத்தில் கொழுந்து மலையில் வேலை செய்து வந்தனர். அம்மா தேயிலைத்தொழிற்சாலையில் வேலை. அப்பா வீட்டிலேயே சிறிய அளவில் பெட்டிக்கடை நடத்திக் கொண்டிருந்தார். அண்ணன் க.பொ.த (சா/த) வரை படித்து விட்டு அதன்பின் படிப்பைத் தொடர முடி யாமல் கொழும்பில் கடையொன்றில் சிப்பந்தியாக தொழில் பார்க்கிறார்.

இவர்கள் அனைவரது உழைப்பிலுமே குடும்பம் நகர்ந்து கொண்டிருந்தது. இவர்களது தயவிலேயே சேவகப்பெருமாளும் இரண்டு தங்கைகளும் தம்பியும் அருகிலுள்ள நகரப் பாடசாலையில் கல்விகற்று வந்தனர். வீரசேவுகப் பெருமாள் க.பொ.த (உ/த) படித்து பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றிருந்த போதும் வீட்டின் நிதி நிலைமை கருதி அவனால் மேற்படிப்பை தொடர முடியவில்லை.

தான் எப்படியாவது பல்கலைக்கழகம் சென்று ஒரு பட்டதாரியாக வந்துவிட வேண்டும் என்று வீட்டுக்குள் ளும் வெளியிலும் தொடர்ந்து போராட்டம் நடத்திப் பார்த்தான். இருந்தும் சரிப்பட்டு வரவில்லை. அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை அவனை எப்படியாவது கொழும்பில் ஒரு கடையில் சிப்பந்தி வேலைக்குச் சேர்த்து விட வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவன் கொழும்புக்குச் சென்று நாலு காசு சம்பாதித்தால் தான் கொழுந்து மலையில் வேலை செய்யும் அவனது இரண்டு அக்காமாரையும் கலியாணம் கட்டிக் கொடுக்க முடியும் என்றும் இரண்டு தங்கைகளையும் தம்பியையுமாவது மேற்படிப்பு படிக்கச் செய்ய முடியும் என்றும் வாதிட்டார் அவர் தந்தை.

அவர் சொல்வதிலும் நியாயம் இருந்தது. அவன் அக்காமார் இப்போதே கலியாண வயதை தாண்டிக் கொண்டிருந்தனர். அவர்களை கலியாணம் செய்து கொடுத்து விட்டால் வீட்டு வருமானம் குறைந்து விடுமே என்பதற்காகவே அவர்களுக்கு அவன் தந்தை இன்னமும் திருமணம் பேசாமல் இருந்தார். அவர் சொல்வதில் நியாயம் இருந்தாலும் தனக்கு பல்கலைக்கழகம் செல்ல முடியாதிருந்தது தொடர்பில் அவன் வருத்தப்பட்டான்.

அவனுக்கு மனக்கிலேசம் வரும்போதெல்லாம் பதிமூனாம் நம்பர் கொழுந்து மலைக்குச் சென்று மலையுச்சியில் இருக்கும் மாடசாமிக் கோயில் கல்லுப்பாறையில் ஏறி நீண்ட நேரம் மௌனமாக அழுது கொண்டிருப்பான். ஒரு சமயம் அவனது கல்லூரி அதிபர் அவனது பல்கலைக்கழக பிரவேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமாகப் பேசுவதற்கு அவனைப் பாடசாலைக்கு அழைத்திருந்தார். அதிபருக்கு அவனது பிரச்சினை நன்கு தெரியும். அவன் பாடசாலையில் படிக்கும் காலத்தில் பாடசாலையில் முதல்தர மாணவனாக பெயர் வாங்கியிருந்தான். இலக்கியம், கலை முதலான வற்றில் அதிக ஆர்வம் காட்டியதுடன் பல போட்டி களில் பரிசில்களும் பெற்று பாடசாலைக்கு பல பெருமைகள் சேர்த்திருந்தான். கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத் தலைவராகவும் சிரேஷ்ட மாணவர் தலைவரா கவும் பல வருடங்கள் கடமையாற்றி இருந்தான். இதனா லெல்லாம் கல்லூரி அதிபரும் உயர்தர வகுப்பு ஆசிரி யர்களும் அவனைக் கல்லூரியின் நம்பிக்கை நட்சத் திரமாகவே மதித்து உற்சாகப்படுத்தினர்.

நீண்ட வருடங்களுக்குப் பின்னர் அவன் ஒருவனே பல்கலைக்கழகத்துக்குச் செல்ல அந்தக் கல்லூ ரியில் இருந்து தெரிவாகி இருந்தபடியால் அவனை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி விட வேண்டும் என்ப தில் அதிபர் தீவிரமாக இருந்தார்.

அன்று அவன் பாடசாலையில் அதிபரைச் சந் தித்தபோது அதிபர் அவனுக்கு சில ஆலோசனை களைத் தெரிவித்தார். படிப்புக்கான செலவுகளை பெற்றுக்கொள்ள சில வழிகள் உள்ளன என்று கூறினார். மகாபொல என்ற அரசாங்கத்தின் மாணவர் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலமும் இந்திய வம்சாவழி தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென இந்தியத் தூதுவராலயம் கல்வி உபகார நிதி வழங்குகின்றதென்றும் அதில் சேர்ந்து நிதியுதவி பெற முடியும் என்றும் அவர் யோசனைகள் தெரிவித்தார். இறுதியாக அவர் மலையகத்தின் தனிப்பெரும் தொழிற்சங்கமொன்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி வருவதாகவும் உடனடியாக விண்ணப்பிக்கும் படியும் கூறி விண் ணப்ப படிவமொன்றையும் கொடுத்தார்.

வரும் விளைவுகளைப்பற்றி சிந்திக்காமல் அந்த விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அவன் அனுப்பிவைத்தான். இரண்டு வாரங்களுக்குப் பின் னர் அவனுக்கு ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. அவனது பல்கலைக்கழகப்படிப்பு சம்பந்தமாக நிதி உதவி கோரி அனுப்பியிருந்த விண்ணப்பப்படிவம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்காக நேர் முகப்பரீட்சை ஒன்றுக்கு வரும்படி அவனை அந்த தொழிற்சங்கம் அழைத்திருந்தது. பல்வேறு பிரச்சினை களால் குழம்பிப் போயிருந்த சேவுகப் பெருமாள் எதற்கும் அந்த நேர்முகப்பரீட்சைக்கு போய்ப்பாப்ப தென்று தீர்மானித்தான். அது விடயத்தை வீட்டில் தெரிவித்தபோது தந்தை வேண்டா வெறுப்பாகவே சம்மதித்தார்.

தான் வைத்திருந்த ஒரேயொரு கறுப்பு நிற நீள க்காற்சட்டையை நன்கு துவைத்து, உடைந்து ஓட்டை விழுந்திருந்த இஸ்திரிக்கைப் பெட்டியில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புக் கொட்டிவிடாமல் மிகக் கவனமுடன் இஸ் திரிக்கை செய்து தனக்கு அதிர்ஷ்டமானதெனக் கருதிய வெள்ளையில்கறுப்பு கோடிட்ட நீளக் கை சட்டையையும் போட்டுக்கொண்டு சோகத்தை மறைத்து இல்லாத தெம்பை வரவழைத்துக் கொண்டு மிடுக் குடன் புறப்பட்ட அவன் தோற்றத்தைக் கண்டு அதிகம் விசயம் தெரியாத அவனது தம்பியும் தங்கைகள் இருவரும் மட்டும் ஆனந்தித்து விடை கொடுத்தனர். தந்தையார் விரும்பியோ விரும் பாமலோ கொடுத்த நூறு ரூபாவையும் பெற்றுக் கொண்டு பஸ் வண்டிப்பாதை நோக்கி நடந்தான் சேவுகப்பெருமாள்.

அவன் கண்டிக்குச் சென்று குறித்த முகவரியைத் தேடி அந்தக் கட்டிடத்துக்குள் நுழைந்தபோது அவ னைப் போலவே நம்பிக்கைகளை சுமந்து கொண்டு மலையகமெங்குமிருந்தது. பல இளைஞர் யுவதிகள் அங்கு வந்திருந்தனர். அப்போதைய அரசாங் கத்தில் அமைச்சராக இருந்தவரும் மலையகத்தின் தனிப்பெரும் தொழிற்சங்கத்தின் ஏகோபித்த தலை வராகவும் இருந்தவருமே அன்றைய நேர்முகப்பரீட் சையை நடத்தவிருந்ததால் அனைவரும் அவரது வருகைக்காக காத்திருந்தனர். சுமார் அரைமணி நேர காத்திருப்பின் பின்னர் தலைவரானாவர் செயலாளர் மற்றும் பரிவாரங்கள் சகிதம் வருகை தந்தார். சங் கத்தின் செயலாளரும் கூட நாடாளுமன்ற அங்கத்தவ ராகவும் இருந்தார். அவர்கள் அனைவரும் தேநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தியதன் பின்னர் நேர்முகப்பரீட்சை ஆரம்பமாகி யது. அங்கு வருகை தந்திருந்தோர் ஒவ்வொருவராக அழைத்து விசாரிக்கப்பட்டனர்.

சேவுகப்பெருமாளின் முறைவந்த போது பணி யாள் அவனை உள்ளே போகச் சொன்னான். வீரசேவு கப்பெருமாள் தயங்கி தயங்கிச் சென்று தலைவருக்கு முன்னால் போட்டிருந்த ஆசனத்தில் மேலும் கீழும் பார்த்தவாரே அமர்ந்தான்.

தலைவரும் செயலாளரும் நேரடியாகவே மாறி மாறி அவனை விசாரித்தனர். அவன் பெயர், தந்தை பெயர், வசிக்கும் தோட்டம், பாடசாலை, பரீட்சைப் பெறுபேறுகள் என்று சகல விபரங்களும் கேட்டறியப் பட்டன.

இடையில் குறுக்கிட்ட பொதுச் செயலாளர் அவனது தந்தை குறித்த தொழிற்சங்கத்தின் அங்கத்தவரா என்று கேட்டார். அவன் இல்லை என்று பதில் சொன்னான். உடனேயே அங்கே சூழ்நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அங்கிருந்தோர் ஒவ்வொருவரும் ஒருவர் மாறி மாறி ஒருவர் முகங்களைப் பார்த்துக் கொண்டனர்.

சங்கத்தின் சட்ட விதிகளின்படி தமது சங்கத்தினர் அல்லாத ஒருவரின் பிள்ளைக்கு உதவி வழங்க முடி யாது என்று செயலாளர் தலைவருக்கு விதிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஞாபகப்படுத்தினார். இருந்தாலும் அவனது விண்ணப்பம் தொடர்பான முடிவினை பின்னர் அறிவிப்பதாகக் கூறி அடுத்தவரை அழைக் குமாறு மணியை அடித்தார் தலைவர். ஏற்கனவே வயிற்றில் சிறுபந்தைபோல் உருவாகியிருந்த சேவுகப் பெருமாளின் சோகங்கள் இப்போது மெல்ல மேலெழுந்து வந்து அவன் தொண்டையை அடைத்துக் கொண்டு விட்டது. அவன் கண்களில் நீர் திரள்வதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மெல்ல எழுந்து கதவை நோக்கி நடந்தான்.

அவன் அன்று வீட்டுக்கு மிக நேரங்கழித்தே சென்றான். நல்ல செய்தியென்றால் ஓடோடிச் சென்று சொல்லியிருப்பான். இருந்தாலும் அவன் வீட்டையடைந்ததும் எல்லோரும் என்ன நடந்தது என்று கேட்டார்கள். அதெல்லாம் சரிபட்டு வராது என்று முகத்தைத் திருப்பிக் கொண்டே பதில் சொல்லிவிட்டு பேசாமல் இருந்து விட்டான். அதன் பின் ஒருவாரம் கழித்து ஒரு கடிதம் வந்தது. அவனது விண்ணப்பம் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக இல்லாததால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று சங்கம் அவனுக்கு வருத்தத்துடன் அறிவித்திருந்தது. அத்துடன் அவ னது பல்கலைக்கழக கனவுகள் ஆடிமாதத்து மேகங்கள் என எங்கோ சிதறி ஓடி மறைந்து போய் விட்டன.

அதன்பின் சிலமாதங்களுக்குப் பின்னர் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் இருந்து அழைப்பொன்று வந்திருந்தது. அது கல்லூரியின் பவள விழா கொண்டாட்டத்துக்கான அழைப்பு. முழுநாள் கருத்தரங்கின் காலை நிகழ்ச்சியாக கல்விக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மலையகத்தில் கல்விக் கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட்ட வேண்டும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்த கொழும்பில் இருந்து பேராசிரியர்கள் மலையகக் கல்விமான்கள் சட்டத்தரணிகள் முதலானோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

வீரசேவுகப் பெருமாளும் இந்த கருத்தரங்குக்குப் போவதென்று தீர்மானித்தான். கடைசியாக அவன் தன் பல்கலைக்கழக பிரவேசம் சம்பந்தமாக அதிபரை சந்திக்கச் சென்றதற்குப் பின்பு கல்லூரிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை. கல்லூரிப் பக்கம் போவதற்கு கூச்சமாக இருந்தது தான் அதற்குக் காரணம்.

அவன் கருத்தரங்கு நடைபெறும் மண்டபமான கல்லூரியின் கோமகள் மண்டபத்தை அடைந்தபோது மண்டபத்தில் ஓரளவுக்கு மட்டும்தான் கூட்டம் கூடியிருந்தது. வீரசேவுகப் பெருமாள் அக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற உரிமையில் முன்னால் இருந்த மூன்றாவது வரிசையில் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையுரைக்குப் பின் பிரதான கருத்தரங்கு ஆரம்பமான போது கொழும்பில் இருந்து வந்திருந்த கல்விப் பேராசிரியர் உரை நிகழ்த்தினார். இன்றைய மலையகம் கல்வியில் மிகப் பின் தங்கிப் போயிருக்கின்றது. சனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது மிகக் குறைந்த மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகின்றனர். அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் கூட பல்கலைக் கழகங்களுக்குப் போகாமல் பாதியிலேயே கல்வியை விட்டு விடுகின்றனர். இவற்றுக்கான காரணிகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பரிகாரங்கள் காணப்பட வேண்டும்.

மலையக மாணவர்கள் கல்வியை பாதியில் விட்டு விடுவதற்கு பிரதான காரணியாக இருப்பது பொருளாதாரப் பிரச்சினையாகும். தங்களின் பிள்ளைகளை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி படிப்பிக்கும் அளவுக்கு அவர்களிடம் நிதிவசதியில்லை. அத்துடன் அவர்களது குடும்பங்களும் அதிக குழந்தைகளுடன் பெரிய குடும்பமாகவும் உள்ளதால் பிற்காலத்தில் குடும்பத்தின் பாரத்தை சுமக்கும் பொறுப்பு பிள்ளைகளின் தலைமேலேயே விழுகிறது.

இன்னும்கூட மலையக மக்களில் எண்பது சதவீதமானவர்கள் தோட்டங்களில் வாழ்கின்ற தொழிலாளிகளாகவே உள்ளனர். இம்மக்களில் கல்வி பயில்வோரின் வீதம் நகர்ப்புறத்தில் வாழ்கின்ற மக்களி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையே தான் அதிகம் உள்ளது. இது தொடர்பில் மலையக தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிக ளும் பொது அமைப்புகளும் அக்கறை காட்ட வேண் டும். தமக்கிடையே பேதங்களை மறந்து தமது தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவன். தமது கட்சியைச் சேர்ந்தவன் என்று பிரித்துப் பார்த்து குறுகிய நோக் கில் செயற்படுவதனை இந்த அமைப்புக்கள் தவிர்த் துக் கொள்ள வேண்டும். முழு மலையகத்தின் எதிர்கால நலன்கருதி அவர்கள் செயற்படுவார்களாயின் மட் டுமே மலையகம் முன்னேற்றப்பாதையில் செல்லும்.

பேராசிரியர் மிகுந்த கரகோசத்துக்கு மத்தியில் தனது உரையை பூர்த்தி செய்தார். கூட்டத்துக்கு வந்திருந்தோர் ஆர்வமுடன் அங்கு நடக்கும் நிக ழ்வுகளை அவதானித்துக் கொண்டிருந்தனர். பேரா சிரியர் சொன்ன சில கருத்துக்கள் தன் வாழ்வுடன் பொருந்திப் போனபடியால் வீரசேகவுப் பெருமாளும் தனது ஆசனத்தில் நிமிர்ந்து அமர்ந்து அடுத்து யார் என்ன பேசப் போகிறார்கள் என்று கவனித்துக் கொண் டிருந்தான்.

அடுத்த ஒரு விசேட நிகழ்வாக அதே கல்லூ ரியில் படித்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்று தற்போது கொழும்பில் ஒரு சட்டத்தர ணியாக இருக்கும் ஒரு இளம் சட்டத்தரணியை பேச அழைத்தார் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது அறிமுகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார். இப்போது உங்கள் முன்னிலையில் பேச அழைக்கப்பட்டுள்ளவர் பல்வேறு வகைகளில் விசேடத்துவம் பெற்றவர். இக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் தோட்டத்தில் பிறந்து தோட்டத்திலேயே வளர்ந்தவர். இக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்லூரிக்குப் பல பெருமைகளைத் தேடித் தந்தவர். இவர் வெறும் சட்டத்தரணி மட்டுமல்ல ஒரு எழுத்தாளர், கவிஞர், ஓவியர் எனப் பல பெருமைகள் இவருக்குண்டு. மலையக சமூகத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இவர் மலையக இளைஞர் சமூகத்துக்கு ஒரு முன்னுதாரணமாவார்.

இத்தகைய அறிமுகத்தால் சற்றே கூச்சத்துக்கு ஆளான இளம் சட்டத்தரணி மைக்கருகில் வந்து கூட்டத்தை சற்றே நோட்டமிட்டார். தான் படித்த கல்லூரியில் தனக்களிக்கப்பட்ட வரவேற்பாலும் வந்திருந்த பழைய புதிய மாணவர் கூட்டத்தாலும் பரவசப்பட்டுப் போன அவர் தான் தயாரித்து வந்திருந்த நீண்ட பேச்சை மறந்து போய்விட்டார். இருந்தாலும் இந்த சமூகத்தின் எதிர்காலத் தலை விதியை நிர்ணயிக்கப் போகும் சில விடயங்கள் குறித்து நாலு வார்த்தைகளை நறுக்குத் தெறிந்தாற்போல் உரைக்கும்படி கூறிவிட வேண்டும் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மிகுந்த கரகோசத்துக்கு மத்தியில் பேச ஆரம்பித்தார். அவர் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் உள்ளது உள்ளபடி ஆணி அடித்தாற்போல் வீரசேகவுப்பெருமாளின் மனதில் மாத்திரமல்ல கூடியிருந்தோர் மனதையும் கசக்கிப் பிழிந்தன.

நன்றி நண்பர்களே நன்றி! என்னை இங்கு அழைத்துப் பேச வைத்தமைக்கு நன்றி. எனக்கு முன் பேசிய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் என்னைப் பெற்ற எனது தாய் தந்தையரும் தனது குடும்பச் சுமையை என்மீது சுமத்தியிருந்தால் நான் கூட இன்று உங்கள் மத்தியில் இந்த அளவுக்கு உயர்ந்திருக்க மாட்டேன். ஆதலால் அவர்களுக்கு எனது முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நானும் உங்களைப் போல் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து நீங்கள் எதிர்கொள்ளும் அதே பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து எதிர் நீச்சலிட்டு இன்றைய நிலைக்கு வந்தவன் தான். நாம் மலையகத்தோர் என்பதாலேயே நிறைய சவால்களை வெளியுலகத்தில் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். நாம் இன்னமும் பெருந்தோட்டக் கூலிகள், கொத்தடிமைகள் என்ற அடிமைத்தனத்தில் இருந்து விடுபடவில்லை என்பது அதற்கு முக்கிய காரணம். நாம் எப்போது அந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டு இந்த நாட்டின் ஏனைய பிரஜைகள்போல் சுதந்திரமாக ஜீவிக்க ஆரம்பிக்கிறோமோ அன்று தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் அனைவருக்கும் விடுதலை என்பதனை நீங்கள் அனைவரும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த விடயத்தை நாம் இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று தான் நான் கருதுகிறேன். அதனால்தான் இந்த அடிமைத்தனத்தில் சிக்கி சுமார் இருநூறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்பும் எம்மால் அதில் இருந்து விடுபட முடியாமல் உள்ளது. நமது மக்கள் இந்த அடிமை வாழ்வுக்கு நன்கு பழக்கப்பட்டு விட்டார்கள்.

இதுதான் நமக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை, இதற்கு அப்பால் ஒன்றும் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். தமக்குச் சொந்தமென நான்கு சுவர்கள் கூட இல்லாத இந்த மக்கள் தமது எதிர்காலம் தொடர்பிலும் அடுத்த பரம்பரைகளின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்க முடியாத அளவுக்கு இந்த அடிமை வாழ்க்கையுடன் ஒன்றிப் போய்விட்டார்கள்.

இவர்களது அரசியல் தலைவர்களும் தொழிற் சங்கத்தவர்களும் கூட இவர்களை அடிமைத்தனத்தில் வைத்திருந்தால் தான் தாம் பிழைப்பு நடத்தலாம் என்று கருதுகிறார்கள். கல்வியறிவு பெறுவதால் இந்த அடிமைத்தனத்தில் இருந்து அவர்கள் விடுபட்டு விடு வார்களோ என்று பயப்படுகிறார்கள்.

அங்கே உங்களுக்கு அருகில் இருக்கும் நாட்டுப் புறத்து சிங்கள மக்களைப் பாருங்கள். தமக்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமாக இருக்கும் ஒரு சிறிய துண்டு நிலத்தில் சிறுகுடிசை ஒன்றையும் அமைத்துக்கொண்டு எவ்வ ளவு சுதந்திரமாக வாழ்கிறார்கள். அந்த வாழ்வின் மேன்மையை நாம் ஏன் அறிந்து கொள்ளவில்லை. இதனை உணர்ந்து தானோ என்னவோ அந்த மக்கள் ஆரம்பத்திலேயே கோப்பித் தோட்டங்களில் கூலி வேலை செய்ய மறுத்து விட்டார்கள்.

ஆதலினால் நாம் கல்வியில் அதிகம் நாட்டம் செலுத்த வேண்டும். கற்ற கல்வியைக் கொண்டு வேறு தொழில்களைத் தேடிக்கொண்டும். தோட்டத்துக் கூலிகள் என்ற அடிமைத்தனத்தில் இரு ந்து விடுபட வேண்டும். சொந்தமாக காணித் துண்டொன்றை பெற் றுக்கொள்ள வேண்டும். அதில் சிறியதாக நமக்கென ஒரு குடிசை ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் சுதந்திரமாய் வாழ வேண்டும் என்பது தான் எல்லாவற்றிலும் உயர்வானது. அதுதான் உன்னதமா னது. நாம் இப்போதே இந்த நிமிடத்தில் இருந்தே கூலியடிமை முறையில் இருந்து விடுபட வேண்டு மென்று சிந்திப்போம். செயற்படத் தொடங்குவோம் என்று கூறி விடைப்பெற்றார் அந்த இளம் சட்டத் தரணி. அவரது பேச்சைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்ட அனைவரும் நீண்ட நேரம் தம்மை அறியாமலேயே கைதட்டி பரவசப்பட்டனர்.

அவரது அந்த உணர்ச்சி பூர்வமான சொற் பொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் அங்கு கூடியிருந்தவர்கள் எத்தனை பேர் தூ ண்டப்பட்டனர் என்று சொல்ல முடியாவிட்டாலும் நிச் சயமாக வீரசேவுகப்பெருமாளுக்குள் அது மாற் றத்தை ஏற்படுத்தியது. அவன் நீண்ட நேரம் சிலை யென அமர்ந்திருந்தான். அதன் பின் இடம் பெற்ற நிகழ்ச்சிகளை அவன் பார்க்கவோ கேட்கவோ இல்லை.

அவனுக்கு நீண்ட நாள் புரியாமல் இருந்த ஓர் உண்மை திடீரென தெரிந்து விட்டதுபோல் இருந்தது. தான் ஞானம் பெற்றுவிட்டது போன்றதொரு அனுப வத்தைப் பெற்றான். அவனுள் எங்கோ தீப்பொறி ஒன்று பற்றிக்கொண்டு எரிய ஆரம்பித்தது.

அந்தத்தோட்டத்தில் இருந்து வீரசேவுகப் பெரு மாளுடன் சேர்ந்து சுமார் ஏழெட்டுப்பேர் நகரத்துப் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வந்தனர். அவர் களில் அருகில் இருந்த நாட்டில் இருந்து தோட்டத் தில் குடியேறியிருந்த மர்த்தேனிஸ் அப்புவின் புதல் வர்களான சுகத்தபாலாவும் ஜயசேனவும் இருந்தனர். அவர்கள் இருவருமே பத்தாம் வகுப்புடன் தமது கல்வியைக் கைவிட்டு விட்டனர்.

மர்த்தேனிஸ் அப்புவும் அவரது குடும்பத்தினரும் அந்தத் தோட்டத்தில் குடியேறி சுமார் பதினைந்து வருடங்கள் ஆகியிருந்தன. அவர்கள் குடும்பத்தினரும் சேவுகப்பெருமாள் குடும்பத்தினரும் ஒரே லயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருந்ததால் நல்ல நண்பர்களாக இருந்தனர். குடும்பப்பிரச்சினைகளின்போது பரஸ்பரம் உரிமை யுடன் பங்கெடுத்துக் கொள்வார்கள். மாத்தேனிஸ் அப்புவும் சேவுகப் பெருமாளின் தந்தையான பெரி யாம்பிள்ளையும் மாலை வேளைகளில் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு பல்வேறு விட யங்கள் பற்றி உரையாடுவார்கள்.

மர்த்தேனிஸ் அப்புவுக்கு நாட்டில் (நாடு என்பது தோட்டத்து அயலில் இருக்கும் சிங்கள கிராமத்தைக் குறிக்கும்) அரை ஏக்கர் காணியும் வீடும் இருந்தன. அதனை அவரது அக்கா வேறொருவருக்கு அடகு வைத்திருந்ததில் முழுகிப்போய்விட்டது. இந்த விடயம் தெரியாதநிலையிலேயே ஒரு நாள் நீதிமன்ற கட்ட ளையுடன் வந்து வீட்டை அடகுக்கு வாங்கியவன் அவர்களை வெளியேற்றி விட்டு வீட்டைப் பறித்துக் கொண்டான். அதன் பின் அவர்கள் போவதற்கு இட மில்லாமல் அந்தத் தோட்டத்தில் வந்து குடியேறினர்.

ஆனால் மர்த்தேனிஸ் அப்பு தோட்டத்தில் குடி யேறிய நாளில் இருந்தே எப்படியாவது நாட்டில் காணித்துண்டொன்றை பெற்றுக்கொண்டு அங்கு சென்று குடியேறி விட வேண்டும் என்று தீர்மானமாக இருந்தார். தன்னைப் போல் தனது பிள்ளைகளும் தோட்டத்துரைக்கும் கன்டாய்கையா, கிளாக்கரய்யா, கங்காணிமார் மற்றும் சகல மேலதிகாரிகளுக்கும் தலை வணங்கி அடிமை வாழ்வு வாழக்கூடாது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கூறி வந்தார். அதன்படி அண்மையில் தோட்டத்துக்கண்மையில் இருந்த தரிசு நிலத்தை துண்டுகளாக்கி கொலனியாக்கிய பொழுது எப்படியோ குத்துக்கரணம் அடித்து தனது மகன் சுகந்தபாலவின் பெயரில் காணித்துண்டொன்றை பெற்றுக்கொடுத்து விட்டார். விரைவில் மகனுக்கு ஒரு கலியாணம் செய்து கொடுத்து அந்தக் காணித்துண்டில் அமைந் திருக்கும் சிறு வீட்டில் அவர்களை குடியேற்றத் திட்டமிட்டிருந்தார்.

இவையெல்லாம் வீரசேவுகப் பெருமாளின் வாழ்வில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் நிகழ்வுகள். அவன் இவற்றையெல்லாம் மனதில் இருத்தி சீர்தூக்கிப் பார்த்தான். அன்று நீண்ட நேரம் பதின்மூன்றாம் நம்பர் கொழுந்து மலைக்குச் சென்று மலையுச்சியில் இருக்கும் மாடசாமிக்கோயில் கல்லுப் பாறையில் ஏறி கீழே பள்ளத்தாக்கையும் விரிந்து பரந்திருந்த பசுமைக் கோலத்தையும் வெறித்துப்பார்த் தவாறு அமர்ந்திருந்தான்.

நெஞ்சடைத்த சோகங்கள் விசும்பல்களாக வெளி ப்பட்டு அவன் தேகமெங்கும் நடுக்கத்தை உண்டு பண்ணின. அவன் தேம்பித்தேம்பி அழுதான். இரு கண்களிலும் கங்கைகள் என கண்ணீர் பெருக் கெடுத்தோடியது. அவன் எவ்வளவு நேரம் அங்கு அப்படியே இருந்தான் என்பது அவனுக்கு தெரியாது. அவன் மணிக்கணக்காக அவ்விடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே அமர்ந்திருந்திருக்க வேண்டும். அவன் மனம் இப்போது மிக அமைதியடைந்திருந்தது. அவனுள் அப்பிக்கிடந்த சோகங்கள் எங்கோ ஓடிப்போய் மறைந்து கொண்டன. அவன் கண்ணில் கண்ணீர் இல்லை. அவை மிகத் தெளிவுடன் ஒளி வீசிக் கொண்டிருந்தன. அவன் தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தான். மர்த் தேனிஸ் அப்புவின் மகனும் தன் நண்பனுமான சுகத்தபாலவால் முடியுமாயின் தன்னால் மட்டும் ஏன் முடியாது. அவன் காதுகளுக்குள் அன்று அந்த இளம் சட்டத்தரணி பேசிய வார்த்தைகள் மீண்டும் ஒரு முறை ஒலித்தன.

"அங்கே உங்களுக்கு அருகில் இருக்கும் நாட்டுப்புறத்து சிங்கள மக்களைப் பாருங்கள். தமக்கென சொந்தமாக இருக்கும் ஒரு சிறிய துண்டு நிலத்தில் சிறுகுடிசை ஒன்றையும் அமைத்துக் கொண்டு எவ்வளவு சுதந்திரமாக வாழ்கிறார்கள். அந்த வாழ்வின் மேன்மையை நாம் ஏன் அறிந்து கொள்ளவில்லை.... நாமும் தோட்டத்துக் கூலிகள் என்ற அடிமைத்தளையில் இருந்து விடுபட வேண் டும் சொந்தமாகக் காணித்துண்டொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதில் சிறிதாய் குடிசை ஒன்றை தமக்கென அமைத்துக்கொள்ள வேண்டும். நாம் சுதந்திரமாய் வாழ வேண்டும் என்பது தான் எல்லாவற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வானது. அதுதான் உன்னதமானது. நாம் இப் போதே இந்த நிமிடத்தில் இருந்தே கூலியடிமை முறை யில் இருந்து விடுபட வேண்டும்."

வீரசேவுகப்பெருமாள் தீர்மானத்துடன் கல்லுப் பாறையில் இருந்து இறங்கினான். ஈரமான வாடைக் காற்றும் அதனைத் தொடர்ந்து மெல்லிய தூறலும் கொட்டவாரம்பித்தது.

அவன் வேகமாக நடந்தான் தனது இலக்கை நோக்கி உறுதியுடன்.

■

**வீரகேசரி**
**2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 செல்லி அல்லது மணிராசு

1868 ஆம் ஆண்டு.

இலங்கையின் மலையகம் எங்கும் கோப்பிப் பயிர்ச் செய்கை செழித்துப் பூத்து காய்த்து கொக் கரித்து கோலோச்சிக் கொண்டிருந்தது. உலக சந்தையில் கோப்பியின் விலை மிக உச்சத்தில் உயர்ந்திருந் ததால் அன்றைய இலங்கையின் பிரிட்டிஷ் ஆளு னராக பதவி வகித்த ஹெர்கியூலிஸ் ரொபின்சன் மிகவும் ஆனந்தத்தில் மிதந்து கொண் டிருந்தார்.

அவ்வருடம் தமது நிர்வாகத்தின் கீழிருந்த சிலோன் என்ற பிரிட்டிஷ் காலனித்துவ நாட்டிலிருந்தே அதிக அந்நியச் செலாவணி வருமானம் பெறப்பட்டிருப்பதாக ஆளுனர் தம் அதிகாரிகளிடம் தம்பட்டம் அடித்துக் கொண்டார். கோப்பித் தோட்ட சொந்தக்காரர்கள் செல் வத்தில் மிதந்து கொண்டிருந்த காலம் அது. நுவ ரெலியா மாவட்டத்திலேயே மிக அதிகமான கோப்பித் தோட்டங்கள் இருந்தன. இக்காலத்தில் தான் கோப்பித் தோட்ட சொந்தக்காரர்கள் தமக்கென ஆடம்பர பங்க ளாக்களை கட்ட ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்தவிதமான எந்த செல்வச் செழிப்பும் கோப்பித் தோட்டங்களை பூத்துக்குலுங்கச் செய்த கூலித் தொழிலாளர்களை சென்றடையவில்லை. அவர் களுக்கு பஞ்சம் பட்டினியே பரிசாக வழங்கப்பட் டது. அவர்கள் தமக்குக் கிடைத்த கூழையும் கழியை யும் கிண்டிச் சாப்பிட்டு வயிறு நிறைத்தனர்.

செங்கந்தைத் தோட்டம் கம்பளைக்கருகில் கண்டி மாவட்டத்தில் காணப்பட்ட ஏனைய தோட்டங்களை விட விசாலமான ஒரு பெரிய தோட்டமாகும். ஏழு நூறு ஏக்கர்களில் அமைந்திருந்த அந்த அழகிய கோப்பித்தோட்டம் பல மலைக்குன்றுகளையும் பள்ளத் தாக்குகளையும் கொண்டிருந்தது. அவற்றை சுற்றிச் செல்லும் மகாவலி கங்கையின் தலையருவிகளில் ஒன்றான மாவலி ஆறும் அங்குதான் இருந்தது. மாவலியாறு அழகிய தொளஸ்பாகை மலைப் பிரதேசத்தில் இருந்து ஊற்றெடுத்திருக்கின்றது.

அந்தத் தோட்டத்தின் துரையாக இருந்தவர் இங்கிலாந்தின் அயர்லாந்தைச் சேர்ந்தவர். அவர் பெயர் மெக்லியோட் மெக்லீனன் என்பதாகும். ஏனைய தோட்டத்துரைமார்களைப் போலவே மெக் லீனன் தனக்கென பங்களா ஒன்றை அமைக்கத் தீர்மானித்தார். அவர் பங்களா அமைக்கத் தீர் மானித்த இடம் நாற்புறமும் மலைக்குன்றுகளாலும் அக்குன்றுகளில் இருந்து கொட்டிச் சொரியும் மலைய ருவிகளாலும் சூழப்பட்ட மலைச்சாரல் ஆகும். ஆனால் அந்த இடத்தில் தான் அத்தோட்ட மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கும் பக்திக்கும் பாத்திரமான முனியப்பர் கோயில் அமைந்திருந்தது. அவர் அக் கோயிலை இடித்து தரைமட்டமாக்குமாறு பணிப்புரை விடுத் திருந்தார்.

இந்தச் செய்தி அத்தோட்ட மக்களிடையே கலவரத் தையும் பீதியையும் ஏற்படுத்தியது. ஆனால் அவர் களால் எந்த எதிர்ப்பையும் காட்ட முடியவில்லை. அவர்கள் பெரியாங் கங்காணியிடம் சென்று முறையிட்ட னர். முனியப்பர் கோயிலை இடிப்பது அழிவைக் கொண்டுவரும் என்றும் தடுத்து நிறுத்துமாறும் வேண் டிக்கொண்டனர்.

ஆனால் பெரியாங் கங்காணியினாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் துரையிடம் சென்று இது தொடர்பில் பிரஸ்தாபித்தபோது துரை கோபம் அடைந் தார். போ...போ..வேற எடமா இல்லை....வேற எடத் துல கோயில் கட்டிக்கோ போ......போ.....என்று விரட்டி விட்டார். அதன் பின் தொழிலாளர்கள் சும்மா இருந்து விட்டார்கள். வருத்தப்படுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. தோட்டத்துரையின் அந்த அடாவடித்தன செயல் தொடர்பில் அவர்கள் மனதளவில் சாபமிட்டுக் கொண்டனர்.

செங்கந்தையில் தோட்டத்துரையின் பங்களா மிகப் படாடோபமான முறையில் உருவானது. பங்களாவின் முன்புறம் இருபதடி உயரமான தூண்களைக் கொண்ட விசாலமான வராந்தாவைக் கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் வாயிலில் இருந்து பார்த்தால் செங்கந்தை தோட்டத்தின் மலைச்சிகரங்கள் இள வயது குமரிகள் போல் நெஞ்சை நிமிர்த்தி திமிராகத் தோற்றமளிக்க வேண்டும். தாமரை இதழ்கள் போல் அறைகள் வெளிப்புறம் நோக்கி விரிந்திருக்க வேண்டும். வெளியில் பூத்துக்குலுங்கும் பூங்கா ஒன்று இருக்க வேண்டும். ஜன்னல்களில் இருந்து பார்த்தால் பூங்கா பூத்துக் குலுங்க வேண்டும். ஏனைய அறைகளையும் படுக்கையறையையும் பிரான்ஸ் நாட்டுப் பாணியில் அமைந்த ஜன்னல்களால் இணைக்க வேண்டும்.

தனது பங்களா எப்படி அமைய வேண்டுமென மெக்லீனன் துரை கட்டிடக் கலைஞர்களுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்.

படிப்படியாக சுவர்கள், சுவர்களில் ஜன்னல்கள், கதவு நிலைப்படிகள், பின்னர் புகைக் கூண்டுக் கோபுரம், இறுதியாக கூரை என பங்களா கட்டி முடிக்கப்பட்டது. ஜன்னல், கண்ணாடிகள், கூரைத் தகடுகள், தளபாடங்கள் என்பன இங்கிலாந்தில் இருந்தும் பிரான்சில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. ஒருவாறு துரையின் பங்களா பூர்த்தியாகும் கட்டத்தையடைந்தபோது தோட்டத்தின் தலைமை கண்டக்டர் அபோன்சுவையும், பெரியாங் கங்காணி வீரமலைத்தேவரையும் அழைத்து வரும் படி ஆளனுப்பினார் துரை.

எதற்காக இந்த திடீர் அழைப்பு என்று ஊகிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத கன்டக்டரும், கங்காணியும் இல்லாத வாலை கீழே தொங்கப்போட்டுக் கொண்டு ஓடி னார்கள். அவர்களுக்கு எலி அளவுக்காவது மதிப் புக்கொடுக்காத துரை அடுத்து வரும் ஒரு மாதத் துக்குள் பங்களாவுக்கு கிரகப் பிரவேச வைபவம் எடுக்க வேண்டுமென்றும் அதனை மிக உயர்வான விதத்தில் நடத்திக் காட்ட வேண்டும் என்றும் கூறினார். “நல்லதுங்க, நல்லதுங்க” என்று கை பொத்தி வாய் பொத்தி தலையாட்டிய அவர்கள் இருவரும் துரை சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் கூர்ந்து கவ னித்தனர்.

“பங்களாவை ஜோடன செய்யனும். பெரிய பார்ட்டி கொடுக்கனும், டான்ஸ் ஏற்பாடு பண்ணு.....ஸ்பெசலா தோட்ட பொண்ணுங்களோட டான்ஸ்....என்னா?” தொரையின் எல்லா வார்த்தைகளுக்கும் அபோன்சும் வீரமலை கங்காணியும் “சரிங்க சாமி.....நல்லதுங்க சாமி” என்று மட்டுமே தலையாட்டி பதில் கூறினர்.

சரி நீ ரெண்டு பேரும் போகலாம் என்று அவர் களை அனுப்பினார் துரை.

அதன் பின்னர் அபோன்சும் வீரசாமித்தேவரும் ஆலோசனை நடத்தினர். அவர்களுக்குள் ஒரு திட்டம் உருவானது. அடுத்த நாள் இது தொடர் பில் தொழிலாளர்கள் மத்தியில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு அறிவிக்கப்பட்டது. தோட்டத் துரையி டமும் நிர்வாகத்திடமும் நல்ல பேர் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பமென்றும் இதனை அனைவரும் உரிய முறையில் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் வீரசாமித்தேவர் தொழி லாளர் மத்தியில் குறிப்பிட்டார். எனினும் பங்களா கட்டப்பட்டிருப்பது முனியப்பர் கோயிலை இடித்த இடத்தில் என்பதால் பலரும் அதில் குறைந்த ஆர் வம் காட்டினர்.

அபோன்சு மற்றும் வீரசாமி கங்காணி ஆகி யோரின் திட்டத்துக்கமைய அழகும் சுறுசுறுப்பும் புத்திக் கூர்மையும் கொண்டவள் என அத்தோட்ட மக்களால் கருதப்பட்ட செல்லி என்ற பதினாறு வயதுடைய செல்லாயி நடனக்குழு தலைவியாக தெரிவு செய்யப்பட்டாள். அவளுடன் மேலும் அதே வயதுடைய ஆறு பெண் பிள்ளைகளும் தப்பு, தாரை, தம்பட்டம், தமுக்கு, உறுமி, உடுக்கு, மோர் சங்கு, புல்லாங்குழல், குண்டு மேளம், தாளம் போன்ற இசைக் கருவிகளை வாசிப்பதற்கு இள வயதுடைய இளைஞர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் மத்தியில் சுயமாக நடனக் கலைஞனாக உருவா கியிருந்த பெரியாம்பிள்ளையை டான்ஸ் மாஸ்டராக அபோன்சு நியமித்தான்.

அவர்கள் சுமார் பதினைந்து நாட்களிலேயே ஒயி லாட்டம், மலிலாட்டம், கரகம், கும்மி, கோலா ட்டம் என்பவற்றை எல்லாம் இணைத்து ஒரு அழ கிய இனிமையான நாட்டிய நடன நிகழ்ச்சியை தயாரித்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபோன்சும் வீர மலைத்தேவரும் இணைந்து அந்த நடனக் குழுவினருக்கு ஏற்ற விதத்தில் ஆடை அணிமணிகள் மற்றும் ஏனைய அலங்காரப் பொருட் களையும் பெற்றுக்கொடுத்தனர். எல்லாமே சிவப்பு, நீலம், மஞ்சள் என மின்னி ஜொலித்தன. பெண் பிள்ளைகள் இடுப்புக்கு கீழ் முழங்காலுக்கும் சற்று அப்பால்வரை மடிப்புக்கள் பல கொண்ட பாவாடை களும் மார்பகங்களை மேலும் பிதுக்கி மதர்த்து நிமிர்த்தி மெருகூட்டிக்காட்டும் விதத்தில் மார்புக் கச்சைகளும் அணிந்திருந்தனர். இயற்கையாகவே பேரழகும் கவர்ச்சியும் கட்டுடலும் கொண்ட செல் லிக்கு அந்த ஆடைகள் கண்களைக் கிறக்கம் கொள்ள வைக்கும் மையலைத் தந்தது.

எல்லாத் தயாரிப்புக்களுக்கும் மத்தியில் கிரகப் பிரவேச கொண்டாட்ட நாளும் படாடோபமாக வந்தது. ஊரெங்கும் வழியெல்லாம் ஜோடனைகள் ஜொலித்துக் குலுங்கி கிளுங்கிக் கொண்டிருந்தன. பங்களா பார்ப்போர் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் வெண் சுண்ணம் கரைத்து சாந்து பூசி மெரு கூட்டப்பட்டு மிளிர்ந்து கொண்டிருந்தது. உயர் தர பலகைகளால் மினுக்கி வார்ணிசு பூசப்பட்ட பிரான்சு நாட்டின் விலை கூடிய கண்ணாடிகள் பொருத்தப்பட்ட விசாலமான ஜன்னல்கள், கலை வேலைப்பாடுகளுடன் கூடிய கதவுகள் என்பன பார்ப்போர் நெஞ்சுக்கு பரவச மூட்டின.

அன்றைய தினம் செல்லி தலைமையிலான நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னக்குழுவினர் அந்த பங்களாவுக்குள் மிகத் தயங்கித் தயங்கியே காலடி எடுத்து வைத்து சென்றனர். அவர்கள் உயிர் பெற்று வந்த மெழுகுச் சிலைகள் போல் ஆடி அசைந்து நடந்து சென்றனர்.

அந்த பங்களாவின் மிகப்பெரிய விசாலமான மண்ட பத்திலேயே வரவேற்பு உபசார விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அழைக்கப்பட்டிருந்தவர்களில் அநேகம் பேர் வெள்ளைக்கார துரைமார்களும் அவர் கள் குடும்பத்தினரும் சில அரசாங்க அதிகாரிக ளுமாவார்கள். மற்றும் சில போர்த்துக்கேயர்கள், டச்சுக்காரரர்கள், பறங்கியர் என்போரும் சொற்பள வில் ஆங்கில பாணியில் உடையணிந்த சிங்கள செல்வந்தர்களும் இருந்தனர்.

செல்லியும் அவள் குழுவினரும் மண்டபத்துக்குள் பிரவேசித்த போது அங்கிருந்த சிங்கள தனவந் தர்கள் இந்தக் கூலிக்கார நாய்களை எந்த மடையன் அழைத்திருக்கக்கூடும் என்று மனம் சுழித்தனரன்றி வெள்ளைக்காரர்கள் அதனை ஒரு பொருட்டாக கொள்ளவில்லை. அதன் பின்னரே அந்த பங்களாவுக்கு சொந்தக்காரரான மெக்ளியோட் மெக்லீனன் மிகக் கம்பீரமாக கோட்டும் சூட்டும் அணிந்து பாதணிகள் நிலத்தில் பட்டு டக்கு டக்கு என்று ஒலி எழுப்பியவாறு கூடியிருந்தோர் முன்னிலையில் பிரவேசித்தார். அவர் தாம் அழைத்திருந்த விருந்தாளிகள் ஒவ்வொரு வரிடமும் சென்று முகமன் கூறி நலன் விசாரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் மெக்லீனன் தன் இடத்துக்குச் சென்று வந்தவர்களை வரவேற்று ஐந்து நிமிடங்கள் உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நிகழ்ச் சிகள் ஆரம்பமாகின. முதலில் ஆங்கிலப் பாடலு டனான நடனம் அரங்கேறியது. அதனைத் தொடர்ந்து டச் கலாசார நடனமும் போர்த்துக்கீச கபரிஞ்ஞா நடனமும் இடம்பெற்றன.

இவ்விதம் ஒவ்வொரு நிகழ்ச்சியும் முடிவுற்ற பொழுதுகளில் அங்கு கூடியிருந்தவர்கள் தத்தமது கரங்களில் இருந்த வைன், விஸ்கி, பிராண்டி, ரம், கிளாஸ்களை உயர்த்தி மண்டபம் எதிரொலிக்க நிறைந்த கர கோசங்களை எழுப்பினர்.

அதற்கு அடுத்த நிகழ்வாகவும் இறுதி நிகழ்வாகவும் செல்லி தலைமையிலான நடனக்குழுவின் நடனம் மேடைக்கு வந்தது. அரங்கம் என்று சொல்லும் வகையில் பலகையிலான இரண்டடி உயர மேடை யொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் தாவி ஏறிய நாட்டியக் குழுவினர் குறிக்கப்பட்ட தத்தமது இடங் களில் இருந்து கொண்டனர்.

முதலில் நீண்டதொரு சங்கொலி எழுப்பப்பட் டது. அச்சங்கொலி அங்கிருந்த சிறு சலசலப்பை யும் அமைதியாக்கியது. அதனைத்தொடர்ந்து இரண்டு நிமிடங்களுக்கு தப்பும் உறுமியும் உடுக் கையும் கலந்த சீரான இசை ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டண்டனக்கா டண்டனக்கா டுன்டுடும்.... டுன்டுடும்

டண்டனக்கா டண்டனக்கா டுன்டுடும்.... டுன்டுடும்

னாக்கு முக்கா னாக்கு முக்கா டுன்டுடும்.... டுன்டுடும்

னாக்கு முக்கா னாக்கு முக்கா டுன்டுடும்.... டுன்டுடும்

தப்பு, உறுமி உடுக்கு என்பவற்றின் ஒலி அங்கு கூடியிருந்தோரின் நரம்பு, நாளங்கள், தசைநார்கள் என்பவற்றில் ஊடுருவி அவர்கள் மனங்களில் பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணின. அவர்கள் காதுகள் இதுவரை இப்படியொரு இசையை செவி மடுத்திருக் கவில்லை.

அடுத்து அவர்களின் பாடல் வரிகள் கணீர் என்று எழுந்தன.

முப்பத்து முக்கோடி தேவரே........ தேவரே.....
எங்களுக்கு விழிவுதனை தாருமே.... தாருமே....

கதிரமலை கந்தனே.... கந்தனே.....கந்தனே.....
எங்களுக்கு விழிவுதனை தாருமே.... தாருமே....

முப்பாட்டன் முதுகொழிந்த கோப்பியே...
கோப்பியே
முன்னோரை பலி யெடுத்தாய் கோப்பியே...
கோப்பியே

**ஆத்தாளை காவு கொண்ட கோப்பியே...**

**கோப்பியே**

**அண்ணனைத்தான் என்ன செய்தாய்**

**கோப்பியே... கோப்பியே**

**டண்டனக்கா டண்டனக்கா டுன்டுடும்.... டுன்டுடும்....**

இப்படி அவர்களின் இசையும் பாட்டும் 'ராகமும் தாளமும்' ஆட்டமும் வேகமும் சேர்ந்து கூடியிருந் தோரை கல்லென சமைந்து கிறங்கச் செய்தன. அவர்கள் குதித்தாடியபோது பலகையிலான மேடையும் கூட இசையமைத்துக் கொடுத்தது. அதற்கேற்ப பாதச் சலங்கைகளும் மெட்டெடுத்துத் தந்தன.

அவர்களின் பாடல் அந்த நேரத்திலும் தமக்கு விடுதலை வேண்டும் என்ற தொனியிலேயே அமைந்திருந்த போதும் அதன் அர்த்தத்தை அங் கிருக்கும் யாரும் புரிந்து கொண்டிருக்க நியாய மில்லை.

பாட்டும் கூத்தும் இசையும் என்னதான் அங்கிருந் தவர்களை மாயப்பிடிக்குள் சிக்க வைத்து கட்டிப் போட்டிருந்தாலும் இரண்டு கண்கள் மாத்திரம் ஆட்ட நாயகியான செல்லியின் ஒவ்வொரு அங்க அசைவையும் கண்கொட்டாமல் விழுங்கி விடுவது போல் ரசித்துக் கொண்டிருந்தன. அவை வேறு யாரு டையதும் கண்கள் அல்ல. மெக்லீனின் கண்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லி ஏற்கனவே கண்ணைக் கவரும் அழகி தான். என்றாலும் அன்று அவள் செய்திருந்த ஜோடனைகள், அணிந்திருந்த ஆடை அணிமணிகள் அவளை தேவலோகத்து தேவதையாக்கி காட்டியது. குறிப்பாக அவள் கட்டியிருந்த மார்புக் கச்சைக்கு அடங்காத அவளது மதர்த்துச் செழித்த மார்பகங்களை யார், எவரது கண்களையும் கசக்கித் தேய்த்துப் பார்க்க வைத்திருக்கும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இருக்க முடியாது. மெக்லீனன் அவள் மீது தீராத மையல் கொண்டு அவள் மார்பகங்களை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான். அவனது காம வேட்கை தீப்பற்றி கொளுந்து விட்டு எரியத் தொடங்கியது.

அவர்களின் அந்த நடனம் உண்மையிலேயே அங்கிருந்தோர் அனைவரையும் தம்வசம் இழுத்து வைத்திருந்தது. மெய் மறந்திருந்த அவர்கள் நடனம் முடிந்ததும் தம் இருக்கையில் இருந்து எழுந்து நீண்ட நேரம் கரகோசம் எழுப்பினர். சிலர் விசில்கள் அடித்தனர். சிலர் தம் கரடு முரடான கட்டைக்குரலால் காட்டுக் கூச்சல் எழுப்பினர்.

நடன நிகழ்ச்சி முடிவுற்றதும் மெக்லீனன் அங்கே ஓரமாக இருந்து நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருந்த அபோன்சுவை அழைத்து தேவதை போல் ஜொலிக்கும் அந்த இள நங்கை யாரென்று கேட்டான். அதற்கு அபோன்சு அவள் மேமலை தங்கன் கங்காணியின் இளைய மகள் என்று பதில் சொன்னான். அவளை இன்றிரவு இங்கே தங்க வை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எனக்கு வேண்டும். என்று கட்டளையிட்டு அபோன்சுவை போகச்சொன்னான்.

அன்றிரவு செல்லி வீட்டுக்கு வராததும் விசயம் இன்னதுதான் என்று வீராசாமித் தேவர் கங்காணி வாயிலாக தெரிய வந்ததும் வீடு இழவு வீடு போலானது. செல்லியின் ஆத்தா கதிரம்மாளும் அப்பாயி செங்கம்மாளும் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தனர். தங்கன் கங்காணி வெத்தலையைக் குதப்பிக்கொண்டு செய் வதறியாது பித்துப் பிடித்தவன் போல் ஓரமாக குந் திக்கொண்டிருந்தார்.

தெரிந்தே நடக்கும் அந்த அட்டூழியத்தை தட்டிக் கேட்கும் திராணி அங்கே யாருக்கும் கிடையாது. மெக்லீனன் வைத்ததுதான் அங்கு சட்டம். அவனை எதிர்க்க அந்தத்தோட்டத்திலோ சுற்று வட்டாரத்திலோ யாரும் இல்லை. அங்கே மெக்லீனன் பிடியில் சிக் குண்டு கழுகின் பிடியில் சிக்கிய கோழிக்குஞ்சு போல் சின்னா பின்னப்பட்டுக்கொண்டிருந்த செல்லி யின் நிலை மிகப் பரிதாபகரமானதாக இருந்தது. நேற்று வரை தேன் சிட்டுப் போல் அத்தோட்டத்தில் காடு மலையெல்லாம் சுதந்திரமாக சுற்றித்திரிந்து கொண்டிருந்த செல்லி அக்காமுகனின் கடும்பிடியில் சிக்கி துவண்டு கந்தல் துணிக்கு சமமானாள்.

அன்றிரவு செல்லிக்கும் செல்லியின் குடும்பத்தின ருக்கும் விடியா நெடும் இரவாக நீண்டு கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது. அந்த கொடுமையான நீண்ட இரவு ஒரு வாறு முற்றுப்பெற்று செல்லி விடிகாலையில் கந்தல் துணியாக அலங்கோலமாக வீடு வந்த போது மீண்டும் ஒருமுறை அங்கே ஒப்பாரிச் சத்தம் பெருங்குரலெடுத்து ஓலமிட்டு ஓய்ந்தது.

அந்த ஒப்பாரி அத்தோட்டத்தில் எல்லா மலை முகடுகளிலும் பட்டுத்தெறித்து ஓங்காரமிட்டு சாப மிட்டு ஓய்ந்தது. அந்த ஒப்பாரியே அந்தத்தோட்டத்து சனங்களுக்கும் முழு உலகுக்கும் நடந்து போய்விட்ட அந்த அநீதியை தண்டோரா போட்டு அறிவித்தது.

இந்த சம்பவம் செல்லியின் மனதை மிகப்பாரதூ ரமாகப் பாதித்தது. அவள் பித்துப் பிடித்துப் போய் ஊமையானாள். அதற்கு முக்கிய காரணம் அவள் அவளது அத்தைப் பையன் முறையான மணிராசு மீது கொண்டிருந்த மாறாத காதல்தான். அவர்கள் இருவரும் ஒருவருக்கு மற்றவர் என நிச்சயிக்கப்பட் டவர்கள் என்பதை அந்த ஊரும் உலகும் நன்கறியும்.

அவர்கள் அந்த தோட்டத்தின் பூப்பூத்த எல்லா கோப்பிச்செடிகளுக்கு ஊடாகவும், மலை உச்சிகளிலும் நதி தீரத்திலும் அடர்ந்த பற் றைக்குள்ளும் அலைந்து திரிந்து தம் காதலை பறை சாற்றியிருந்தார்கள். அவர்கள் காதல் ஒரு போதும் இரகசியக் காதலாக இருந்ததில்லை. அவர்கள் ஒரு வரது நெஞ்சுத்துடிப்பை மற்றவர் காது கொடுத்து கேட்டு இன்புற்ற சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. இப்போது மணிராசுவிற்கு என்ன பதில் சொல்வது என செல்லிக்கு தெரியாது போனது. இதற்கப்புறமும் அவன் மடியில் தலைசாய்க்க இந்த மனம் ஒப்புக்கொள்ளுமா? அவளுக்கு தன் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் போல் உள்ளம் கொந்தளித்தது. இருந்தும் அவள் எல்லாத் துன்பங்களையும் உள்ளத்தில் போட்டு பூட்டி அடைத்துக்கொண்டு மௌனியாகவே இருந்தாள்.

தினங்கள் ஒவ்வொன்றாக கழிந்து சென்றன. செல்லியின் வாழ்வில் அந்த கறுப்புக்கறை ஏற்பட்டு அன்று எட்டாவது தினம். இந்த ஏழு நாட்களில் மணிராசு ஒரு தடவை கூட அவளை வந்து பார்க்கவில்லை. அவனுக்கு ஏன் தன்னை வந்து பார்த்து ஒரு வார்த்தை ஆறுதல் கூறத்தோன்றவில்லை. அவன் தன்னை அடியோடு வெறுத்து விட்டானோ என்று அவள் மனதுக்குத் தோன்றியது. நடந்து முடிந்து விட்ட அந்த சம்பவத்துக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது ஒரு விபத்துத்தான் என்று கத்திக் கூற வேண்டும் போல் அவள் தவிப்பாய் தவித்தாள். அதன்பின் அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். இதற்கு மேலும் இந்த உடம்பில் உயிர் ஒட்டிக்கொண்டிருப்பதில் எந்தவித பலனும் இல்லை என்று தோட்டத்தில் காணப்பட்ட அந்த உயரமான உச்சிப்பாறை நோக்கி நடந்தாள்.

இது இப்படி இருக்க, முதல் நாள் பிற்பகல் வேளையில் செங்கந்தைத் தோட்ட வரலாற்றில் மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதபடி ஒரு சம்பவம் நிகழ்ந்தேறியது. அன்று காலை சாப்பாட்டை முடித்து விட்டு பத்து மணி யளவில் தனது கம்பீரமான அரபுக் குதிரை யில் ஏறிப்புறப்பட்ட மென்லீனன் துரை தோட்டத்தின் ஒவ்வொரு மலையிலும் வேலை செய்து கொண்டி ருக்கும் கூலிகளையும் கங்காணி, கன்டாக்கு, சுப்ப வைசர் ஆகியோரின் வேலைகளையும் பார்வை யிடுவதற்காக சென்றான். அவன் எல்லா மலை களையும் சுற்றிப்பார்த்து விட்டு மேலும் செய்ய வேண் டியவைகளை கூறி விட்டு பங்களாவுக்குத் திரும்ப லாம் என்று கருதினான்.

அதுவரை மப்பும் மந்தாரமாகவும் காணப்பட்ட வானம் திடீரென கருக்கட்டி பெருந்தூறலாக கொட்டவாரம்பித்தது. குதிரையை வேகமாக முடுக்கி விட்டால்தான் பெருமழைக்கு முன்னர் பங்களாவை அடையலாம் என்று துரைக்குத் தோன்றியது. அவன் தலையில் இருந்த தொப்பியை சரி செய்து பூட்ஸ் கால்களால் குதிரையின் தொடைப்பக்கம் உதைத்து கடிவாளத்தை இழுத்துப்பிடித்தான். குதிரை வேக மாகக் கிளம்பியது.

எனினும் அந்த மலைப்பாங்கான செப்பனிடப்படாத கரடு முரடான பாதைகள் அவ்விதம் குதிரையில் வேகமாக பயணிக்கத்தக்க உகந்த பாதைகள் அல்ல. குதிரைக்கு அப்பாதைகள் பழக்கப்பட்ட பாதைகள் என்ற போதும் அது உதைத்த உதைப்பிலும் அடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியிலும் தட்டுத்தடுமாறி பங்களாவுக்கு சற்று அண்மித்திருந்த இடித்த முனியப்பர் கோவிலுக்கு அருகாமையில் வந்து விட்டது. இப்போது மழை இன்னும்பலமாக பெய்ய ஆரம்பித்தபோது மெக்லீனன் குதிரையை உதைத்து மேலும் கடிவாளத்தை இறுக்கினான்.

குதிரை எகிறிப் பாய்ந்தது. அக்கணத்தில் முனியப்பர் கோவிலின் இடிபாடுகளில் இருந்து வெளியே நீட்டித்துருத்திக் கொண்டிருந்த ஒரு கருங்கல்லில் குதிரையின் முன்காலொன்று இடற குதிரையுடன் மெக்லீனனும் குட்டிக்கரணம் அடித்து வீசப்பட்டான். குதிரை அவ்விடத்திலேயே விழ மெக்லீனன் பத்தடிக்கப்பால் வீசப்பட்டிருந்தான்.

அவன் விழுந்த போது இடிக்கப்பட்டு குவிக்கப்பட்டிருந்த முனியப்பர் கோவிலின் கருங் கற்குவியலிலேயே விழுந்தான். அவன் மண்டை பிளந்து இரத்தம் மழை நீரில் கலந்தது. அவன் மூச்சுப்பேச்சற்று கிடந்த இடத்தில் இரத்தம் கலந்த நீர் தெப்பக்குளமென நிறைந்திருந்தது.

விசயமறிந்து ஆட்கள் வந்து சேர சற்று நேரம் பிடித்தது. எனினும் அபோன்சும் வீரமலைத்தேவரும் வந்த பின்பே வண்டில் கட்டி கண்டியில் இருந்த பெரியாஸ்பத்திரிக்கு அவனை அனுப்பி வைத்தனர். அந்த நேரம் வரை தலையில் இருந்து இரத்தம் வெளியேறுவதை என்ன பிரயத்தனம் செய்தும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் நிறுத்த முடியவில்லை. அபோன்சும் அந்த வண்டியிலேயே ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

அபோன்சுவால் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்ட உடனேயே அங்கிருந்த மருத்துவர்கள் மெக்லீனனைக் காப்பாற்ற கடும் முயற்சி செய்தனர். அவ்வித முயற்சி பல மணி நேரங்கள் வரை நீடித்த போதும் அவர்களால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. உடலில் இருந்து மிக அதிகமான இரத்தம் வெளியேறி விட்டமையே அதற்கு காரணம் என்று அவர்கள் இறுதியாகக் கூறினர்.

மெக்லீனனின் மரணச் செய்தி அன்றிரவே செங் கந்தை தோட்டத்தை எட்டி விட்டது. அபோன்சுவே அச்செய்தியைக் கொண்டு வந்திருந்தான். ஆஸ்பத்திரி நடைமுறைகள் பூர்த்தியானதும் அடுத்த நாளே உடலை தோட்டத்துக்குக் கொண்டு வர முடியும் என்று அபோன்சு தெரிவித்திருந்தான். இந்த அகால மரணம் தொடர்பில் தோட்டத்து மக்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் எழத்தொடங்கின. அவற்றில் சில கருத்துக்கள் பரவலாகப் பேசப்பட்டன. அட்டூ ழியக்காரனுக்கு தமது காவல் தெய்வம் சரியான தண்டனை வழங்கி விட்டது என்பதே பொதுவாக எல்லோராலும் உரத்துக்கூறப்பட்ட கருத்தாக இருந் தது.

மெக்லீனனின் மரணச் செய்தியை மணிராசும் கேள்விப்பட்டான். உடனேயே செல்லியை சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்துவிட வேண்டுமென்று அவன் மனதில் உந்துதல் ஏற்பட்டது. எனினும் இரவு வந்து வெகு நேரமாகியிருந்ததால் காலையில் சென்று அவளை சந்திப்பது என்று தீர்மானித்தான். கடந்த ஒரு வாரமாகவே அவன் செல்லியை காணாமல் மனம் தவிப்பாகத் தவித்துக்கொண்டிருந்தது. செல்லி கெட்டுப்போனவள், அவளுடன் இனி உறவு வேண்டாமென அவன் வீட்டார் அவனுக்கு செல்லியை சந்திக்கத்தடை விதித்தனர்.

இதனால் அவன் மனம் போராடிப் போராடி தோற்றுப் போயிருந்தது. ஆனால் இப்போது மெக்லீனனின் இறப்பு அத்தோட்ட மக்கள் அனைவரது மனங்களிலும் வாழ்வின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அவன் காலையில் செல்லியை சந்திக்க அவள் வீட்டுக்குச் சென்ற போது செல்லி வீட்டில் இருக்கவில்லை. செல்லியின் வீட்டினர் அவனை திருடனைப் பார்ப்பதுபோல் அருவருப்புடன் பார்த்தார்கள். அவனால் அந்தப் பார்வையைத்தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் எங்கே போய் செல்லியைத் தேடுவது என்று நினைத்தான். சட்டென்று அந்த எண்ணம் அவன் மனதில் பளிச்சிட்டது. செல்லியும் கூட தன்னைப் போல் அவனைக் காண தவித்துக் கொண்டுதானே இருப்பாள். அவனுக்கு அவர்கள் வழக்கமாக சந்திக்கும் அந்த உயர்ந்த உச்சிப்பாறை நினைவுக்கு வந்தது. கூடவே பய உணர்வும் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இந்த ஒரு வார காலத்தில் தன்னைக் காண முடியாத ஏக்கத்தில் பாறையில் இருந்து குதித்து விட்டால்.... அந்த உச்சிப்பாறை என்ற இடத்துக்கு தற்கொலை முனை என்று இன்னொரு பெயரும் இருந்தது.

அவன் ஓட்டமும் நடையுமாக விரைந்தான். விரைந்து மலையேறுவது லேசுப்பட்ட காரியமல்ல. அவனுக்கு மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. எனினும் அவள் தற்கொலை செய்து கொண்டால்... என்ற நினைப்பு அவனது பிடறியைப் பிடித்து உந்த உருண்டு பிறண்டு அவன் மேலே ஏறிச் சென்றான். மணிராசு வருவதற்கு வெகு நேரத்துக்கு முன்னமே உச்சிப் பாறைக்கு வந்து விட்ட செல்லி தன் வாழ்க்கை இவ்விதம் திடீரென அஸ்தமித்துப் போய்விட்டதை எண்ணிக் கலங்கிக் கலங்கி விசும்ப லெடுத்து அழுதாள். இந்த உலகமே திரண்டு வந்து நீ கெட்டுப்போனவள் என்று சொன்னால் கூட அவள் கவலைப்படமாட்டாள். ஆனால் அவள் உயிருக்குயிராய் அன்பு செலுத்திய மணிராசு ஒரு தடவையாவது ஏன் வந்து பார்க்க வில்லை என்பதே அவளை சோகத்தின் உச்சிக்கு அழைத்துச்சென்றது.

அந்த உச்சிப்பாறை எவரது மனதுக்கும் இதமளிக் கும் மிக ரம்மியமான ஒரு இடமாகவே அனைவராலும் கருதப்பட்டது. மறுபுறத்தில் மலையருவி கொட்டும் மாயத்தோற்றம். அதற்குக்கீழ் மிக ஆழமான பள்ளத் தாக்கு. கால் தடுக்கி விழுந்தாலும் கூட அதல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளத்தில்தான் விழ வேண்டும். பின்னர் எலும்பு களை பொறுக்கி எடுப்பது கூட மிகக் கடினமான காரியமாகி விடும்.

வாழ்வில் எத்தகைய பெரிய துன்பம் வந்து இனிமேல் வாழ முடியாது என்று விரக்தியின் உச்ச கட்டத்துக்கு வந்தவர்கள் கூட ஒரு முறை அந்தப்பள்ளத்தாக்கை பார்த்தால் அச்சமடைந்து தம் எண்ணத்தை மாற்றிக் கொள்வார்கள். இருந்தும் தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஒரு முறை மணிராசுவை பார்த்துவிட்டு அப்புறம் நான் செத்துப்போய்விடமாட்டேனா என்று அவள் மனம் துடித்து ஏங்கியது. மணிராசு வந்துவிட மாட்டானா? என்று எதிர்பார்த்து அவள் மனம் தம் தீர்மானத்தை பின் போட்டுக்கொண்டே இருந்தது.

அப்படி அவள் மனம் அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருந்தபோதுதான் மணிராசு அவ்விடத்தைச் சென்றடைந்தான். மணி ராசுவை செல்லி காண்பதற்கு முன்னரேயே அவன் வாசத்தினை அவள் உள்ளம் உணர்ந்து விட்டது. அந்த கணத்திலேயே அவள் முகம் அன்றலர்ந்த அல்லி மலர்போல் பிரகாசிக்கத் தொடங்கி விட்டது. அவள் துன்ப துயரங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனித்துளிகள்போல் காற்றில் கரைந்து போய்விட்டன. அவள் எழுந்து அவனை வரவேற்கத் தயாரானாள்.

அவனுக்கும் அதேநிலைதான். அவன் அவளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட மாத்திரத்தில் தன் வசமிழந்தான். அவன் கால்கள் நிலத்தில் படவில்லை. இருவரும் ஒருவர் மற்றவரை நோக்கி ஓடோடி வந்தனர். அவர்களின் அந்த அணைப்பு அவர்களிடையே சகலவிதமான இடைவெளிகளையும் இல்லாமல் செய்தது. அவன் அவள் கண்களை உற்று நோக்கினான். அவற்றில் துளிர்த்திருந்த இரு சொட்டு கண்ணீர்த்துளிகளை தன் சுட்டு விரலால் அழுத்தித் துடைத்து, சொடுக்கி விட்டெறிந்தான். அந்த துடைப்பானது அந்த ஒரு வாரத்தில் அவளடைந்த எல்லாத் துயரங்களையும் துடைத்தெறிந்தது போல ஒரு சுதந்திர உணர்வை அவளுக்கு தந்தது.

அடுத்த கணத்தில் அவள் உதட்டில் முகிழ்த்த அந்த சிறு புன்னகைக் கீற்று அவன் கவலைகள் எல்லாவற்றையும் துரத்தியடித்தது. அவர்கள் இரு வருக்கும் தத்தம் ஆதங்கங்களை கூறிக்கொள்ள வார்த்தைகள் தேவைப்படவில்லை. அவர்களின் எல்லா வேற்றுமைகளும் காற்றினில் கரைந்து போய் விட்டன. அவர்கள் ஒருவரில் ஒருவர் ஒன்றாய்க் கலந்தனர். உள்ளமும் உயிரும் ஒன்றாய்க் கசிந்தன. எல்லா மலைகளும் எல்லா மரங்களும் எல்லாப் பூக்களும் அவர்களின் ஒன்றுதலுக்கு ஒத்திசை பாடின. கட்டியம் கூறின. கவிமழை பொழிந்தன.

■

**மத்திய மாகாண**
**சாஹித்திய விழா மலர்**
**2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# கரையைத் தொடாத ஓடங்கள்

பல்கலைக்கழகத்தில் நுழைந்து இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்தக் காலத்தில் நான் புதிதாக என்ன சாதித்து விட்டேன். உடலால் உள் ளத்தால் அறிவால் வளர்ந்திருக்கிறேனா? எனக்குத் தெரியாது. பரீட்சைகளில் சித்தியடைவதால் நாம் வளர்கின்றோம் என்ற பொய்யான பிரமையில் போலியான கருதுகோளில் ஏமாந்து பெருமிதம் கொண்டவர்களில் நானும் ஒருவன்.

நான் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்தது பெர்ஸ்ட்போம் வந்தது பின் செக ண்ட்போம் வந்தது பல்கலைக்கழகத்தில் நுழைந்தது எல்லாமே ஒரு எக்சீடன்டுதான். ஏனென்றால் நான் பரீட்சை பாஸ் பண்ணுவேன், பல்கலைக்கழகத்துக்குப் போவேன், பட்டதாரியாவேன் என்றெல்லாம் கனவு காணவுமில்லை. அது எனது லட்சியமாக இருக்கவுமில்லை. எனது குடும்பநிலை அப்படி. பதினொரு பேருள்ள குடும்பத்தில் ஒருவனாகப் பிறந்தவன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ.எல். படித்து விட்டு இனி என்னடா செய்வது, ஏதாவது வேலை கிடைக்காதா என வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்த என்னை எனது பாடசாலை அதிபர் ஒருநாள் லபக் என்று பிடித்து ஏ.எல். வகுப்பில் போட்டு விட்டார். வீட்டில் விருப்பமில்லைதான் என் றாலும் வேலையும் தான் இல்லையே. அதிலும் கூட ஒட்டாமல்தான் படித்தேன்.

என்னைப் பிடிச்ச சனியன் படிப்பு.. அத்தோடாவது விட்டதா? பல்கலைக்கழகத்துக்குப் போடா என்றாகி விட்டது.

அம்மாவோட கடிதம் அடிக்கடி வரும். வீட்டில் உள்ள கஷ்டங்கள் எல்லாவற்றையும் கொட்டி அழு திருப்பாள். நானும்தான் பார்க்கிறேன். ஒரு வேலை கிடைத்தால் படிப்பை விட்டு விடலாம் என்று. ஊஹூம்.

பல்கலைக்கழக வாழ்க்கைங்கிறதே தனி. சட்டங்கள், கட்டுப்பாடுகள், விதிகள் எம்மைக் கட்டுப்படுத்தாது என்று துள்ளித்திரியும் இளைஞர்களும், யுவதிகளும் தம்மை மறந்து தமது சூழ்நிலையை மறந்து, குடும்பம் உற்றார், உறவினர் பேதங்களை மறந்து புதிய ஒரு உலகத்திற்கு வந்துவிட்டது போல் சிறகடிக்கும் புறாக்கள் இவர்கள். வசந்தத்தின் எல்லா வசீக ரங்களையும் தமக்கே சொந்தமாக்கிக் கொண்டுவிட வேண்டும். அவற்றை ஆரத் தழுவிக்கொண்டு விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று சதா ஒரு ஆவல் இவர்களுக்கு. நானும்கூட இதற்கு விதிவிலக்கா என்ன? அடிக்கடி வசந்த கால கனவுகளில் மூழ்கிவிடும் போதெல்லாம் வீட்டு நினைவு வந்து உலுக்கி விடும்.

கெம்பசில் "மனோ" என்றால் யார் மன்மதனா? என்பார்கள். மனோ என்பது எனது நண்பர் மனோ கரன். காதல் பிரச்சினைகள், பாலியல் பிரச்சி னைகள் எல்லாவற்றுக்கும் மந்திரியாக நின்று ஆலோசனை சொல்பவன் இவன்தான். இவனுக்கு நண்பனாக இருக்க நான் தகுதியற்றவன் என்று கருதியதுண்டு. என்றாலும் எங்கள் நட்பு அதனால் கெட்டுப்போய் விடவில்லை.

இவனுடன் கெம்பசில் நுழைவதென்பது இனிமை யும், சங்கடமும் கலந்த விடயம். யாராவது எதிரில் சாரி கட்டிக்கொண்டு வந்தால் போதும். அவள் எந்தப் பாசை, எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இவனுக்குப் பழக்கமானவளாக இருப்பாள். அவளுடன் பல்லைக் காட்டிச் சிரிச் சுப்பேச ஒரு அரைமணித்தியாலம். அப்புறம் இன் னொன்று, மற்றுமொன்று அப்பப்பா. இது நமக்குச் சரிப்படாது.

இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் நான் சலித்துக் கொள்ளும் போதெல்லாம் மனோ சொல்வான் "இந்த நிமிசத்தில் நாம் அனுபவிக்கிறதுதாண்டா வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிமிஷம் சந்தோசமானதாக இருந்து அதை அனுபவிக்காமல் கடத்திட்டோம்னா வாழ்க்கையில் ஒரு சந்தோசகரமான நிமிசத்தை நாம் இழந்தவர்களாவோம். அழகு எங்கிருந்தாலும் அதை ரசிக்கணும். பாராட்டணும். ரசிக்கிறதால நாம் சந்தோசப்படுறோம். பாராட்டுறதால அழகுக்குரியவங்க சந்தோசப்படுவாங்க.''

மனோ பேசுறது சில நேரம் ரொம்ப பிலாசபிகலா இருக்கும். அதை நான் "பிளேபோய் பிலாசபி" என்று அடிக்கடி கேலி செய்வதுண்டு. ஆனால் உண்மையில் இவங்கதான் வாழ்க்கையில் யதார்த்தமானவங்களாக இருக்கிறாங்க. சமூகத்தின் வலுக்கட்டாயமான சில கட்டுப்பாடுகளுக்கும், விதி முறைகளுக்கும் இவர்கள் அடிபணியிறதில்லை. உண்மையில் சொல்லப்போனால் இவங்களாலதான் மயான அமைதி நிரம்பிய வாழ்வின் சுற்றுப்புறங்கள் எல்லாம் சுவாரஸ்யம் அடைகின்றதெனலாம்.

சமீபத்தில் யாரோ சொல்லக் கேட்டேன். இப்படி வாழ்வின் ஒவ்வொரு கணத்திற்கும் அர்த்தம் கற்பித்துக்கொண்டு, இன்பத்தைத் தேடி அலைந்து கொண்டு நமது பாஷையில் "கெட்டுப் போனவர்கள்'' தான் பிற்காலத்தில் தத்துவஞானிகளாக, எழுத்தாளர்களாக, கவிஞர்களாக ஆகின்றார்கள் என்று. இது உண்மைதான் போலும். ஏனெனில் இளமைக் காலத்தில் பட்டினத்தடிகள், அருணந்தி சிவாசாரியார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசன் என்போர்கள் இப்படித்தானே இருந்திருக்கிறார்கள்.

வசந்தத்தின் வசீகரங்களை எல்லாம் அள்ளிப் பருகிட வேண்டும். இளமையின் இன்பக் கனவுகளை எல்லாம் அனுபவித்து விட வேண்டும் என்று எனக்குக் கூட ஆசைதான். ஆனால், அதற்கான 'டெக்னிக்தான்' சரியாகப் புரியவில்லை. மனோ சொல்வது போல் இந்த இரண்டு வருட கால கெம்பஸ் வாழ்வில் ஒருத்தியை யாவது பிடித்துக்கொள்ள முடியவில்லை என்பது. கேவலம் ஒரு புதுசையாவது மடக்க முடியவில்லை என்பது எனது பலவீனம்தானா?

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. அந்தக் கிழமைக்கான கடைசி லெக்சர் முடிந்து விட்டது. நான் புளூமெண்டால் வீதிக்குப் போக வேண்டும். அந்த வீதிக்குச் செல்லக் கூடிய, எங்கள் கெம்பஸ் வழியாகச் செல்லும் ஒரேயொரு பஸ் நூற்று அறுபத்தேழு, இதனைப் பிடிப்பதென்பது ஒரு காதலியைப் பிடிப்பதிலும் கடினமானது. எனது நகைச்சுவையை நானே ரசித்துக் கொண்டு பஸ் ஸ்டான்டை நோக்கி நடக்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தினைப் போல் எங்கள் பல்கலைக்கழகத்தில் காதலர்க்கு அவ்வளவு வசதிகள் கிடையாது. என்றாலும்கூட நிவ் ஆர்ட்ஸ் தியேட்டர். அதனைச் சுற்றியுள்ள "வசந்தவனம்" கே.ஜி. ஹோலுக்குப் பின்னால் உள்ள நிழலான பகுதிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப்பிரரியின் மேல்மாடி என்பவை எல்லாமே காதல் இளம் ஜோடிகளால் அலங்கரிக்கப்பட்ட கண்காட்சிச் சாலைகள்தான். முகிழ்ந்து மணம் வீசாத என் போன்ற இள மொட்டுகளுக்கு இந்த இடங்களைக் கடந்து செல்வ தென்பது பனாகொடை சித்திரவதையை விட கொடியது.

நூற்று அறுபத்தேழாம் நம்பர் பஸ் எப்போது வந்து தொலைகிறதோ என்ற கவலையுடன் ரீட் அவெனியூ பஸ் ஹோல்ட்டில் போய் நின்றுகொள் கிறேன். இப்போதெல்லாம் தூரத்தில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக எந்தப் பெண் வந்தாலும் அவள் எனக்காகத் தான் வருகிறாளோ என்ற பிரமை ஏற்படு கின்றது. மனோவுடன் சேர்ந்த தோஷம், பஸ்சில் போகும் போது கூட அதில் பிரயாணம் செய்யும் அழகான பெண்களை கள்ளத்தனமாக ரசிக்கும் பழக்கம் என்னையும் தொற்றிக்கொண்டு விட்டது.

இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய அதிசயம்! நான் செல்ல வேண்டிய நூற்று அறுபத்தேழாம் நம்பர் பஸ் வேளைக்கு வந்து விட்டது. எனக்கு அதில் சந்தோசமோ, துக்கமோ இல்லை. ஏதோ கடமையைச் செய்பவன்போல ஏறிக்கொண்டேன்.

பஸ்சில் அவ்வளவு நெரிசல் இல்லை. என்றா லும் சராசரிக்கு மேல் கூட்டம் இருந்தது. பலர் நின்று கொண்டிருந்தார்கள். டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டக்டர் "இஸ்ஸராட்ட யண்ட" என்று சொல்வதற்கு முன்னரே முன்னோக்கி நகர்ந்தேன்.

இப்போதைய எனது கவலை இந்த பஸ் பிரயாணத்தைப் போரடிக்காமல் கழிப்பதற்காக வசதியான ஒரு இடத்தில் நின்றுகொள்ள வேண்டும் என்பதுதான். அப்போதுதான் அவள் என் கண்ணில் பட்டுத் தொலைத்தாள். பலருடைய எரிச்சல் மிகுந்த பார்வைகளைத் தாங்கிக்கொண்டு அந்தக் கூட்டத்துக் குள் புகுந்து அவளருகே சென்றுவிட்டேன்.அதற்கு மேல் என்ன செய்வதென்று எனக்கு விளங்க வில்லை. அவளது கவனத்தை எப்படிக் கவரலாம்? இந்த விசயத்தில் நான் வீக் ஏறெடுத்து அவளை ஒரு நேரான பார்வை பார்ப்பதற்காவது எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு பட்டதாரி மாணவன் என்று சொல்லிக்கொள்ளத் தகுதியுள்ளவனா?

பஸ் நகர்ந்து கொண்டிருந்தது. ரோயல் கல்லூரி ரீட் அவனியூ சந்தி, விக்டோரியா பார்க். நான் ஒரு முறை கடைக்கண்ணால் அவளைப் பார்க்கிறேன். அவள் "சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா...."

சூரிய சந்திரரோ
வட்டக் கரிய விழி கண்ணம்மா
வானக் கருமை கொள்ளோ

பாரதியின் பாட்டு எனக்கு ஞாபகம் வந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் முன்னெப்போதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிச் சென்று விட்ட இந்தக் கவிஞர்களின் இத்தகைய பாடல்வரிகள் அதிக சந்தோசமுடையனவாகத் தோன்று கின்றன. அவளும் என்னை ஒருமுறை பார்த்தாள்.

ஒரு சின்ன முறுவல் வெள்ளையாக எனக்குத் தானா? நான் சந்தேகத்துடன் பின்னால் திரும்பிப் பார்த்தேன். வேறு யாரும் அவளைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. புன்னகை எனக்குத்தான். என் உடம்பில் ஒரு சந்தோச சிலிர்ப்பு. எனக்குத் தைரியம் பிறந்தது. பஸ் அடுத்த திருப்பத்தில் திரும்பியபோது நான் அவள் அருகே சென்று விட்டேன். இன்னும் அவள் அவ்விடத்தில்தான் நின்று கொண்டிருக்கிறாள்.

எனது அதிர்ஷ்டமோ இல்லை அவளது அதிர் ஷ்டமோ தெரியாது. இருவருக்கும் மிக அருகிலிருந்த சீட்டில் இருந்த ஒரு மனிதர் இறங்குவதற்கு எழுந் தார். நான் அவள் இருக்கட்டும் என்பதற்காக விட்டுக்கொடுத்தேன். ஆனால் அவள் அமர்வதாக இல்லை. சில நொடிகள் சங்கடத்தில் நகர்ந்தன. நான் அவளைப் பார்த்தேன். அவள் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். அந்த சீட்டில் அமர்ந்திருந்த மற்ற மனிதர் ஒரு நடுத்தர வயதுடைய ஒருவராக இருக்க வேண்டும். அவருக்குப் பக்கத்தில் அமர அவளுக்கு விருப்பமில்லையோ?

நான் அந்த சீட்டில் அமர்ந்து கொண்டேன். அவள் இப்போது என்னருகே நின்று கொண்டிருக்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளருகே அமர்ந்து கொண்டிருக்கின்றேன். மேலே தலையை உயர்த்தி அவள் என்ன செய்து கொண்டு இருக்கின்றாள் எனப் பார்க்க ஆவல். ஆனால் அதை எப்படிச் செய்வது? மனதில் துருதுருப்பு மெல்ல நிமிர்ந்து பார்க்கிறேன்.

அவள் ..

அவளின் கீழ்நோக்கிய பார்வை எனது மடியிலிருந்த எதையோ துழாவுகின்றன. நான் சட்டெனப் பார்வை யைத் தாழ்த்துகிறேன். உடம்பின் ஒவ்வொரு நாளத் திலும் நரம்பிலும் இரத்தம் ஓடுவது அப்பட்டமாக உணரப்படுகின்றது.

வியர்வை

அவள் கண்களால் என்னதைத் துழாவுகிறாள்?

எனது மடியில் கெம்பஸ் பைல்.. அதில். கொழும்பு பல்கலைக்கழகம் என்று பெரிதாக கரிய எழுத்தில் இருபது மீற்றருக்கு அப்பால் இருந்தால் கூட விளங் கும் அளவுக்கு பதிக்கப்பட்டிருக்கின்றது. அதை எழுத்தெழுத்தாக ஆர்வத்துடன் வாசிக்கின் றாள், அப்படியென்றால்.?

வாழ்க கெம்பஸ் பைல்

அதன் கரிய பெரிய எழுத்துக்கள்..

பல கனவுகள் வருகின்றன. கதாநாயகனுக்குப் பதில் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகிக்குப் பதில் அவள்.

மேகங்களினூடே சவர்க்காரக் குமிழ்கள் வண்ண வண்ணமாகப் பறக்கின்றன. உலகத்தின் எல்லா வகை இனிய இசைக்கருவிகளும் மெல்லியதாக முழங்குகின்றன.

அவள் எனது பைல் கவரில் இருந்த பெயரையும் வாசித்திருப்பாள். ஜெகநாதன் என்ற பெயரைச் சுருக்கி "ஜெகா" என்று எழுதியிருந்தேன்.

பஸ் இப்போது யூனியன் பிளேஸ் சந்தியைக் கடந்து ஜெனரல் ஹொஸ்பிட்டல் பக்கம் சென்று கொண்டிருந்ததை அவதானித்தேன். அடுத்த ஹோல்ட்டில் பஸ் நின்றபோது இன்னொரு நல்ல விசயம் நடந்தது. எனக்குப் பக்கத்திலிருந்த அந்த நடுத்தர வயதுக்காரரர் இறங்க ஆயத்தம் செய்தார். நான் ஜன்னல் புறமாக நகர்ந்து அவள் அமர வேண்டும் என்ற பாவனையில் இடம்கொடுத்தேன்.

அவள் சற்றே தயங்கினாள். சில அமைதியற்ற கணங்கள் புயல் வேகத்தில் மின்னிச் சுழன்றன. அதற்குள் நான் ஆயிரம் தேவதைகளைப் பிரார்த்தித்து விட்டேன். பிரார்த்தனை பலித்தது. அவள் என்னருகே அமர்ந்து கொண்டாள்.

இனி என்ன செய்வது? அவள் எங்கே இறங்குவாள் எனத் தெரியாது, அவள் இறங்குவதற்குள் கதைத்து விட வேண்டும். எப்படித் தொடங்குவது? மூளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்க மறுக்கின்றது. பரபரப்பு, அவஸ்தை, ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் பிரகாசிக்கும் வானத்தில் என்னைத் தனியே தள்ளிவிட்டது போல் ஸப்த நாடிகளும் ஒடுங்குகின்றன.

அவள் எனது நிலைமையைக் கற்பனை செய்து பார்க்கக் கூடுமா? இல்லை, அவளது நிலைமையும் என் போன்றது தானா? என்னுள் இத்தனை பிரளயம் நடக்கிறது. யாருமே அதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எல்லோரது நெஞ்சங்களிலும் இப்ப டித்தான் வேறு வேறு காரணங்களுக்காக வேறு சந்தர்ப்பங்களில் பிரளயம் நடக்கும். நான் யோசிக் கிறேன். எல்லாச் சராசரி காதலர்களும் யோசிப்பது போல் இந்தப் பஸ் பிரயாணம் இப்படியே நீண்டு விடக்கூடாதா?

பஸ் மருதானைச் சந்தியை அடைந்து விட்டது. எதிரே எல்பிஸ்டன் தியேட்டர். இதற்கிடையில் நான் அவளை மூன்று நான்கு முறை கடைக்கண்ணால் நோக்கினேன். அவளும் நோக்கினாள். சுமுகமான பார்வை. உள்ளங்கள் தான் ஊமையாகிவிட்டன. கண்கள் மாத்திரம் பேசிக்கொண்டன.

இந்த நேரத்தில் இவ்விடத்தில் மனோ இருந்திருந் தால் என்ன செய்திருப்பான்? அவன் விசித்திரமான பேர்வழி. செய்கைகளும் அப்படித்தான். எந்த நேரமும் அவனிடம் அழகான கையெழுத்தில் வெள்ளைத் தாளில் எழுதப்பட்ட முகவரித் துண்டுகள் தயாராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இப்படி அறிமுகமாகும் பெண்களிடம் எல்லாம் அதில் ஒன்றைத் தயங்காமல் கொடுத்து விடுவான். பிறகு ஒவ்வொரு நாளும் தபால்காரன் வரும்வரை தவமிருப்பான். நிறையப் பெண்களிட மிருந்து நிறையக் கடிதங்கள் வரும். அநேக சந்தர்ப் பங்களில் நானும், அவனும் அவற்றைப் படித்து ரசித்துச் சிரித்திருக்கின்றோம்.

நானும் அப்படிச் செய்தால் என்ன? ஐடியா, என்னிடம் முகவரி எழுதப்பட்ட வெண்துண்டுகள் இல்லையே. ஆனால் வீட்டிலிருந்து என் முகவரியிட்டு வந்திருந்த கடித உறை பையில் இருக்கிறது. எப்படி அதனை அவளிடம் கொடுப்பது?

பரபரப்பு, இதயம் வேகமாகத் துடித்தல், மீண்டும் பிரளயம்.

பஸ் புகாரி ஓட்டலை அணுகுகின்றது. நிறையப் பேர் இறங்கத் தயாராகின்றார்கள். அவளிலும் ஒரு சலனம். அவளும் இறங்கப் போகின்றாள். நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. தாமதித்து விட்டேனா? நான் ஒரு மண்டு. மக்கு, முட்டாள், மடையன், மட்டி, மோட்டு? வயிற்றிலிருந்து ஒரு பெரிய பந்து உருண்டு வந்து தொண்டையில் அடைத்துக்கொள்கின்றது.

பெல் அடிக்கப்படுகின்றது. பஸ் நிற்கின்றது.

அவள் எழும்புகிறாள். நகர்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சக்கரவர்த்தி தன் சாம்ராஜ்யத்தை இழக்கின்றான். மனிதர்கள் கதவை நோக்கி நகர்கின்றார்கள். நான் அவளையே பார்க்கின்றேன். அவளில் ஒரு தயக்கம். நகர்கிறாள் என்னைப் பார்க்கிறாள். ஆயிரம் மின்னல்கள் ஒன்றாகத் தாக்கும். மின்சாரப் பார்வை ஏக்கம். அவள் என்னிடம் எதனையோ எதிர்பார்க்கின்றாள். நான் எதனை அவளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தேனோ அதனைத்தான் அவள் எதிர்பார்க்கின்றாளோ!

எனது நெஞ்சத்தின் எங்கோ ஒரு மூளையில் சுரீர் என்று உறைத்தது. ஆச்சரியம். நான்கூட மின்னல் வேகத்தில் செயல்பட்டேன். பைல் கவருக்குள் இருந்த எனது முகவரியிட்ட கடித உறையை உருவினேன்.

அவள் கதவருகே சென்றுவிட்டாள். அப்போதும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள். நான் எனது கையிலிருந்த கடித உறையை அவளுக்குத் தெரியும்படி காட்டினேன். அவள் கீழே இறங்கியவுடன் அக் கடித உறையை வெளியில் ஜன்னலுக்கூடாகப் போட்டேன். தமிழ்ப் படங்களில் வருவது போல அது அவள் காலடியில் போய் விழுந்தது.

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள்.

சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

பஸ் நகர்ந்தது.

அவள் கடித உறையைக் கட்டாயம் எடுத்திருப் பாள்.

அந்த இரண்டு நாட்களும் சுவாரஸ்யமான உயிரோட் டமுள்ள நாட்களாகப் பெரிய சாம்ராஜ்யக் கனவுக ளுடன் மெதுவாக நகர்ந்தன. எனது காதல் சாம்ராஜ் யத்தின் கோட்டை கொத்தளங்களைக் கட்டி முடித்து விட்டேன். அவற்றை ஆங்காங்கே திருத்தியமைத்து அழகுபடுத்திக்கொண்டிருக்கிறேன். தனிமையில். அதில் யார் குறுக்கிட்டாலும் அது என்ன தலைபோகிற காரியமாக இருந்தாலும் எரிச்சல் எரிச்சலாக வந்தது. எனது கனவைக் கலைத்து விடும் யாரையும் நான் மன்னிக்கத் தயாராக இல்லை.

சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் நான் எங்கும் வெளியில் போகவில்லை. போகப் பிடிக்கவில்லை. எதைத் தொட்டாலும் அவளைப் பற்றிய நினைவில் செயலிழந்து விடுகின்றேன். பிரமை பிடித்தவன் போல் எங்கெங்கு நோக்கினும் அங்கங்கெல்லாம் அவள் முகம், அந்தப் புன்னகை. இடையிடையே, 'உனக்கென்னடா நடந்துவிட்டது?' என்ற நண்பர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் கேட்டுத் திடுக்கிடுவதுண்டு. மனிதர்களைக் கண்டால் பிடிக்கவில்லை. சாப்பாடு செல்லவில்லை. உள்ளம் தனிமையையே நாடியது.

வழக்கம் போல் நம்பர் நைன்டி ஹெவலொக் ரோட், அக்வைனாஸ் ஹொஸ்டல் மாணவர்களின் கூக்குரல்களில்களை கட்டி இருந்தது. தொண்டையைக் கிழித்துக்கொண்டு கிளம்பும் அபஸ்வரப் பாட்டுகள், குளிப்பதற்காக உடைந்து போய்க்கொண்டிருக்கும் மோட்டார் பம்பியை இயக்க முயலும் பிரயத்தன ஊளைகள், பாத்ரூம் வாளிகளைப் பொறுமையிழந்து உதைத்துப் பந்தாடும் சத்தம். யாரோ ஒருத்தனின் அண்டர்வெயாரை மற்றவன் ஒளித்து விட்டமைக்கான மல்யுத்தம்.

விடிந்ததும் இன்னும் நித்திரை விழிக் காதிருந் தவர்களை எழுப்புவதற்காகப் பள்ளி எழுச்சி 'பக்கட்டிங்' நீராபிஷேகம். நீராபிஷேகம் செய் யப்பட் டவர்களின் சகிக்க முடியாத தூஷண காவிய பிரபந் தங்கள், வக்கிரத்தனமான ஹா ஹா சிரிப்பு இத்தி யாதி.

நான் அன்றைய காலை லெக்சருக்குப் போகப் போவதில்லை. இதுபலருக்கு ஆச்சரியம்தரும்விசயம். பலருக்கு கேள்விக்குறி. ஏனென்றால் நான் போகாமல் விட்டால் அவர்கள் போகாமல் விட்ட லெக்சர்களுக் கான நோட்ஸ் வேறு யாரிடமும் ஒழுங்காக இருக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் நான் அவர்களின் ஆச்சரியத்தையும் ஆட்சேபனைகளையும் பொருட்படுத்தவில்லை.

அன்றைய காலைத் தபாலில் எனக்கொரு முக்கியமான கடிதம் வரப் போகின்றதென்பது அவர்களில் ஒருவருக்கும் தெரியாது.

பத்து மணியை நோக்கி நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. ஹொஸ்டலுக்குப் பத்து மணிக்குத்தான் தபால் வரும். ஒன்பது மணிக்கும், பத்து மணிக்கும் இடையில்தான் நேரம் நகர மாட்டேன் என்கிறது. இதுவரை வாசலுக்கும், ரூமுக்கும் எத்தனை தடவை நடந்துவிட்டேன்? ராஜேந்திரன் கேட்டே விட்டான். "என்னடா ஜெகா! உடம்புக்குச் சரியில்லையா?" என்று, அதற்கு நான் பதில் சொல்லவில்லை. வெளியில் எந்த சைக்கிள் பெல்லடித்தாலும் அது தபால் சைக்கிளின் ஓசையாகவே கேட்டது.

அப்பாடா பத்துமணி கடந்து எட்டு நிமிடம். அப்போதுதான் அந்த நாசமாய்ப் போன தபால்காரன் வந்தான். எனது அறை ஹொஸ்டலின் மேல் மாடியில் பதினான்காம் நம்பர். பத்து மணி கடந்ததுமே மேல் மாடி வராந்தாவில் வாயிலை நோக்கியவாறு நான் நிரந்தரமாகவே நின்று விட்டேன்.

வழக்கம்போல மனோகரன் தபால்காரனை வரவேற்றான். அவனுக்கே அதிக கடிதங்கள் வருமாதலால் அவனிடம் எல்லாக் கடிதங்களும் ஒப்படைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதை மற்றவர் ஆட்சேபிப்பதில்லை. அவன் அருகில் இருப்பவருக்கான கடிதங்களைக் கொடுத்து விட்டு மிஞ்சியதை ஷெல்பில் போட்டு விடுவான்.

தபாலை எதிர்பார்த்து ஏற்படும் காய்ச்சல் பொதுவாக ஹொஸ்டலுக்குரிய குணாம்சம்தான். அது எனக்கு மட்டும் உரியதில்லை. அங்கு வரும் கடிதங்களில் அகத்துறைக் கடிதங்களே அதிகம்.

மனோ பெயர்களை வாசித்து கடிதம் கொடுத்தான். ராஜேந்திரன், ரவி, சுகுமார், சின்னபாலா, பெரிய பாலா, சற்குணமூர்த்தி ஜெகநாதன்! டேய் ஜெகா! ஓடிவா உனக்கொரு லெட்டர்.. குண்டு குண்டா கையெழுத்து பொம்பளைக் கையெழுத்துடா

மனோ ஜெகா என்று உச்சரித்து முடித்திருக்க மாட்டான். நான் பறந்தேன். அவன் தருமட்டும் காத்திருக்கவில்லை. பிடுங்கிக்கொண்டு படிக்கட்டு களில் தாவி, பாதையில் கிடந்த கதிரையில் கால் தடுக்கி விழுந்து, கையில் ஏற்பட்ட சிராய்ப்பைப் பொருட்படுத்தாமல், “டேய் டேய்” என்ற கூக்குரல்கள் பின்னே துரத்த, ஓடினேன்.

இந்த விசயத்தில் எனது ரகசியம் எனக்கு மட் டும்தான் சொந்தம். எனது இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள யாரையும் அனுமதிக்கப்போவதில்லை. பதினாலாம் நம்பர் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டேன். யாரும் பின்தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கதவைத் தட்டுகிறார்களா எனப் பார்க்க சற்றுக் காத்திருந்தேன். நல்ல வேளை தடிப்பசங்கள் யாரும் வரவில்லை.

நிம்மதிப் பெருமூச்சு, அறையில் இருந்த ஒரேயொரு கதிரையை எடுத்து கதவுக்கு முட்டுக்கொடுத்து விட்டு ஆறுதலாகக் கட்டிலில் அமர்ந்தேன்.

கண்ணில் கற்பனைகள் விரிந்தன. புதிய பூரிப்பு, கடிதத்தை ஆர்வத்துடன் மேலும் கீழும் பார்த்துக்கொண்டேன். இதனை எப்படித் திறப்பது, உறையைக் கீறித் திறப்பதென்பது அவள் இதயத்தையே குத்திக் கிழிப்பதைப் போன்று வேதனை அளித்தது. மெதுவாகவே அதனைத் திறந்தேன். எனது ஆவல் எல்லை கடந்தது.

வெண் கடதாசியில் நீல நிற மையால் எழுதப்பட்டிருந்த அந்தக் குண்டு குண்டான எழுத்துக்களில் வரி வரியாக நான் கண்களை ஓட்டிய போது அத்தனை வேகமாக எனது கற்பனைக் குதிரைகள் பாய்ந்து சென்றதனாலோ என்னவோ, அவை அந்த செங்குத்தான அதலபாதாளத்துக்குள் குதித்து விட்டன. ஆயிரம் கடப்பாரைகள் அத்தனை ஆழமாக என் நெஞ்சத்தில் பாய்ந்திருக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் அம்மா சொல்லி எனது சிறிய தங்கையால் எழுதப்பட்டிருந்தது. அன்புள்ள தம்பி! இத்துடன் நீ பரீட்சைக் கட்டணத்துக்கெனக் கேட்டிருந்த பணத்தை உனது தங்கச்சியின் தோடுகளை அடகுவைத்து அனுப்பி வைக்கிறேன். எங்கள் கஷ்டங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காதே.

மனத்தை அங்குமிங்கும் அலையவிடாதே, நீ படித்துப் பட்டம் பெற்றுப் பெரியவன் ஆனால் அதுவே எங்களுக்கு நிம்மதியைத் தரும் அன்புள்ள அம்மா!

அடுத்த லெக்சர் பதினொரு மணிக்கு கே.ஜி. ஹோலில், பொருளியல் கோட்பாடு. அதற்குப் போய்விட வேண்டும். நான் அந்த பைல் கவரை எடுக்கிறேன்.

கொழும்பு பல்கலைக்கழகம் கொழும்பு - 3 என்ற கரிய பெரிய எழுத்துக்கள் இப்போதும் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டுகின்றன.

இந்த இரண்டு நாட்களில் நான் பட்டுவிட்ட அவஸ்தை. சே. நான் எத்தனை பலவீனமானவன். நம்மால் சவால்கள் விடுக்கப்படுமுன் நமக்கு விடப்பட்ட சவால்கள் முறியடிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனது மேகங்கள் அற்ற வானம் போல் தெளிவாக இருந்தது. என் கால்கள் விரிவுரை மண்டபத்தை நோக்கி விரைந்தன.

■

**வீரகேசரி வாரவெளியீடு**

**19.02.1989**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# சூரியன் சாட்சியாக

சாமிந்த ரணசிங்கவின் மனது சுனாமியடித்து ஓய்ந்ததைப் போல் குழம்பிப் போயிருந்தது. இலங்கையில் 2004 ஆம் ஆண்டு அதிகாலை ஏற்பட்ட சுனாமித்தாக்கம், அது ஏற்படுத்திய கோர நினைவலைகள் இன்றும் கூட பாதிக்கப்பட்டவர்களின் மனதுகளில் இருந்து முற்றாக நீங்கிவிடவில்லை.

சாமிந்த ரணசிங்க சுனாமியால் பாதிக்கப்பட்டவன் அல்ல. அவன் ஒரு இராணுவ வீரன் நாட்டில் நடைபெற்ற மூன்று தசாப்த கால யுத்தம் நாட்டின் எந்த ஒரு பிரஜையின் மனத்தையும் ஏதோ ஒரு விதத்தில் தீண்டித்தான் இருந்தது. யுத்தத்தால் நேரில் பாதிக்கப்பட்டவர்களின் மனது இப்போதும் கூட அந்த கோர நினைவுகள் நினைவுக்கு வந்த போதெல்லாம் குமுறிக் கொதித்துக் கொண்டுதான் இருந்தன. சாமிந்த ஒரு யுத்த வீரனாக இருந்த போதும் அவனால் அந்த சம்பவத்தை யுத்தத்தின் ஓர் அங்கமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. அது சாதாரணமாக யாரிடமும் சொல்லக் கூடிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வும் அல்ல. இதனால் அவன் அந்த நிகழ்வை உள்ளத்துக்குள் பதுக்கிவைத்து பாதி மன நோயாளி யாக மாறிப் போயிருந்தான்.

அவன் உறங்கிய ஒவ்வொரு இரவும் விடி யாத நீண்ட இரவுகளாகவே இருந்தன. அவன் வாழ்வில் அவன் எதிர்கொணட அந்த கோர நிக ழ்வு மறக்க முடியாமல் ஆழப்பதிந்து போய் கனன் றெரியும் எரிமலைக் குழம்புகளாக பொங் கிப் பிரவகித்துக் கொண்டிருந்தன. சாமிந்த ரணசிங்க யுத்த வெறிபிடித்த பௌத்த சிங்கள இனவெறியன் அல்ல. உண்மையில் யுத்தம் செய்வதற்கு குறைந்தபட்ச மன வலிமையும் அவ னுக்கிருக்கவில்லை. விவசாயிகளான ஏழைப் பெற் றோர்கள், திருமணம் முடிக்கவிருக்கும் இரண்டு தங்கைகள், பாடசாலைக்கு போகும் தம்பியும் இன்னொரு தங்கையும் என குடும்பக்கஷ்டங்கள் வேலையற்ற அந்த இளைஞனை யுத்தத்துக்குப் போகத் தூண்டியது. இராணுவத்தில் அவன் இணைந்ததெல்லாம் வருமானம் தரும் ஒரு வேலையில் சேர வேண்டுமென்பதற்காக மட்டும் தான். யுத்தத்தில் சேர்ந்த நூற்றுக்கணக்கான, ஆயி ரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் நாட்டைக் காக்க கிளர்ந்தெழுந்த நாட்டுப் பற்றாளர்கள் என்று முழங்கியதெல்லாம் வெறும் புனைவுகளே என்பது அவனுக்குத் தெரியாததல்ல.

நீண்ட பல வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவுகள் கொஞ்ச நஞ்சமானதல்ல. எவ்வளவு பேர் மாண்டொழிந்தனர் என்பதைக்கணக்கிட இருதரப்பின ருமே விரும்பவில்லை. தோற்றவர்களுக்கு அதற்கான திராணி இல்லை. வென்றவர்களோ வானில் ஏறி கொக் கரித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர்.

மறுபுறத்தில் யுத்தத்தில் எத்தனைபேர் மாண்டனர் எனக் கணக்கிட்டால் அது ஜெனிவாவின் யுத்தக் குற்றப் பிரேரணைக்கு சாட்சியாகி விடுமோ எனப் பயந் தனர். அதனால் புதைக்கப்பட்ட மண்மேடுகள் பல இன்னமும் தோண்டப்படாமலேயே இருந்தன.

இத்தகைய நிலையில் தான் பத்திரிகைகளில் அந்தச் செய்தி வெளிவந்திருந்தது. மட்டக்களப்பு, மூதூர் நெடுஞ்சாலையை ஒட்டியதாக கொக்கட்டிச் சோலையைத் தாண்டி சில மைல்களுக்கப்பால் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த "கிளிச்சோலை" என்ற கிராமத்தில் கிராம மக்கள் பலரையும் கொலை செய்து புதைத்த சமூக புதைகுழி ஒன்று காணப்படுவதாகவும் அதில் டென்மார்க் பிரஜையான ஓர் தன்னார்வ தொண்டர் நிறுவனமொன்றில் சேவை புரிந்த இளைஞன் ஒருவனின் உடலும் புதைக்கப்பட்டிருப்பதால் அதனைத் தோண்டி அவ் விளைஞனின் உடல் பாகங்களை பெற்றோரிடம் பெற்றுக் கொடுக்க அனுமதிக்கும்படி டென்மார்க் அரசாங்கம் மட்டக்களப்பு நீதிமன்றத்தைக் கோரியி ருந்ததற்கிணங்க அப்புதைகுழியைத் தோண்ட அனு மதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச் செய்தி சாமிந்த ரணசிங்கவை மிகுந்த மனக் குழப்பத்துக்குள்ளாக்கியது. அன்றைய தினத்தில் இருந்து அவன் பித்து பிடித்தவன் போலா னான். 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் "கிளிச் சோலை" என்ற கிராமத்தில் நடந்த அந்த சம்பவம் நேற்று நடந்தது போல் அவன் மனதில் பச்சை இரத்தக் கறையுடனும் நெடியுடனும் சேர்ந்து பதிந்து உறைந்து போயிருந்தது. அந்த கொலை வெறித் தாண்டவத்தில் கலந்து கொள்ள அவனுக்கு கொஞ்சம் கூட ஆர்வம் இல்லையென்ற போதும் அவனது குழுவினர் அவனையும் சேர்த்தே இழுத்துக் கொண்டு போயினர்.

அந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியவனையும் சேர்த்து அவர்கள் ஒன்பது பேர் இருந்தனர். எல்லாரை யும் விட தலைமை தாங்கியவனே அன்றைய வெறியாட்டத்தில் அதிக ஆர்வம் காட்டினான். அவனே இந்தத் திட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தான். அந்தப் பகுதியில் இருந்த விகாரையொன்றின் தலைமைக் குருவை சில தினங்களுக்கு முன்பு ஓர் ஆயுதமேந்திய குழுவினர் படுகொலை செய்திருந்த மைக்கு பழிவாங்குமுகமாகவே அன்றைய சங்கா ரத்தை அவர்கள் நடத்தத் திட்டமிட்டனர்.

இரண்டு ஜீப் வண்டிகளில் ஆயுதங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் சீருடை அணிந் திருக்கவில்லை.

அந்திச் சூரியன் மேற்குத் திசை நோக்கி நகர வாரம்பித்திருந்தான். இன்னும் சில மணி நேரங் களில் சாயங்காலக் கருக்கல் பரவத் தொடங்கி விடும். மேகங்களற்ற வானம் நிர்மலமாக இரு ந்தது.

காற்றின் சலனத்தைக் கூடக் காண முடி யாமல் அமைதியுடன் கூடிய இறுக்கமான சூழல் நிலவியது. புலம் பெயர் பறவைகள் மாத்திரம் வானத்தில் வரிசையாக அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தன. ரம்மியத்தை ரசிக்கும் மனநிலை எவருக்கும் இருக்கவில்லை.

அவர்களின் ஜீப் வண்டிகள் நெடுஞ்சாலையில் பல மைல்களைக் கடந்ததும் அதிகம் செப்பனிடப் படாத அந்த மண்பாதையில் திரும்பின. பற்றைகள் அடர்ந்த காட்டுப்பாதையில் மேலும் பல மைல்களை அவர்கள் கடந்து சென்றனர். இடையில் மனித நடமாட்டத்தை எங்கும் காண முடியவில்லை. அவர் களை எதிர்கொண்ட முதலாவது கிராமம் அந்தக் "கிளிச்சோலை" கிராமம்தான்.

நகரத்தின் எந்த வசதிகளும் இன்னமும் அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தை சென்றடைந்திருக்கவில்லை. சில ஆடுமாடு கள், கோழிகள், நாய்கள் ஆங்காங்கே உலாவித் திரிந்தன.

அங்கு வசித்த மக்களுக்கு இந்நாட்டின் அரசியல் பற்றியோ இங்குள்ள தமிழ் மக்கள் தங்கள் உரிமைக ளைப் பெற்றுக்கொள்ள நீண்ட காலமாக அரசாங்கத் துடன் யுத்தமொன்றை நடத்தி வருகிறார்கள் என்பது தொடர்பிலோ எந்த விதமான அக்கறையும் இருந்து இருக்க நியாயமில்லை. அவர்களுக்கிருந்த பெரும் பிரச்சினை என்னவென்றால் அன்றாடம் தம் வாழ்வை எவ்வாறு கொண்டு நடத்துவது என்பது பற்றியது மட்டுமாகவே இருந்தது.

அவர்கள் சென்ற ஜீப் வண்டிகள் இரண்டும் கிரா மத்தின் அந்த பொட்டல் வெளியில் டயர்கள் நிலத்தில் பதிந்து கிறிச்சிட அதிர்ந்து நின்றன. அந்த அதிர்ச்சியிலேயே அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறு பிள்ளைகள் சிதறியோடி தத்தம் வீடுகளுக்குள் சென்று மறைந்தனர். பிள்ளைகள் கலவரத்துடன் ஓடிவந்து ஒளிவதைப் பார்த்த பெரியவர்களும் கதவால் எட்டிப் பார்த்து ஆயுதம் தாங்கியோரின் அச்சமூட்டும் அந்த காட்சியைப் பார்த்து கதவைத் தடால் என்று பூட்டிக் கொண்டினர்.

வண்டியில் இருந்து முதலில் துள்ளிக் குதித்து இறங்கியவன் குழுவின் தலைவன் ஜனக்க திசா நாயக்கதான். அவன் தன் கரங்களில் ஏந்தியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி 56 ரக இயந்திரத் துப்பாக்கியால் கண்ணில் பட்ட ஆடு, மாடு, கோழி, நாய், பூனையென சுட்டு வீழ்த்தினான். இந்த செயல் மூலம் வந் திருப்பது நண்பர்கள் அல்ல என்ற செய்தியை அங் கிருந்தவர்களுக்கு உணர்த்தி அவர்களின் மனதை ஆரம்பத்திலேயே கிலிகொள்ள வைத்தான்.

எல்லோரும் வண்டிகளில் இருந்து தத்தமது துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு தொப் தொப்பென்று குதித்து இறங்கினர். அவர்களில் ஒருவனான சேனக்க என்பவனை அழைத்த ஜனக்க முதலாவதாகத் தென்பட்ட வீட்டைக் காட்டி உள் ளிருப்பவர்களை அழைத்து வருமாறு பணித்தான். அவனும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தன் துப்பாக் கியை நீட்டியவாறே வீடு என்று அழைக்க முடியாதபடி ஏழ்மையில் மூழ்கியிருந்த அந்த குடிசையின் கதவை நெருங்கி தன் பூட்ஸ் காலால் ஓங்கி ஒரு உதைவிட்டான். கதவின் பலகைகள் சிதறி கொக்கிகள் கழன்று கதவு அப்பால் போய் விழுந்தது. அவன் நிலைப்படிக்குள் தலையை நீட்டி

“ஒக்கமலா எளியட்ட வரெல்லா...” (எல்லோரும் வெளியே வா) என உறுமிக் கட்டளை பிறப்பித்தான்.

அங்கே சில நொடிகள் இறுக்கமான மௌனம் நிலவியது. அதனைத் தொடர்ந்து நடுத்தர வயதைத் தாண்டிய பஞ்சடைந்த கண்களுடனும் பரட்டைத் தலையுடனும் பரிதாபமான பார்வையை வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஒரு பெரியவர் வெளியே வந்தார். பின் ஒருவர் பின் ஒருவராக அவர் மனைவி, மகன், இரண்டு குமர்ப்பிள்ளைகள், ஒரு சிறுமி என வெளிவந்தனர். அவர்கள் அனைவரையும் அங்கிருந்து பொட்டல் வெளிக்குச் சென்று முழங் காலில் இருக்குமாறு அதட்டினான் சேனக்க.

பின்னர் அந்த பெரியவரின் மகன் என்று கரு தப்பட்ட இளைஞனின அருகில் சென்ற ஜனக்க அவன் கன்னத்தில் பலமாக ஓங்கி ஒரு அறை விட்டு "தமுசே கொட்டியாத" (நீ புலியா?) என்று அதட்டினான்.

அடுத்து அவனை எழுந்திருக்கச் செய்து அவ னையும் கூட்டிக் கொண்டு அங்கிருந்த எல்லா வீடுகளில் இருப்பவர்களையும் பொட்டல் வெளிக்கு அழைத்து வருமாறு உரத்த குரலில் சேனக்கவுக்குக் கட்டளை பிறப்பித்தான். சேனக்க துப்பாக்கியை நீட்டி யபடி அந்த இளைஞனை முன்னே தள்ளிக் கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்றான்.

அவர்கள் மொத்தமாக முப்பத்தியிரண்டு பேரை அழைத்துவந்தனர். பலியாடுகள் போல் கூனிக்குறுகி பயந்த கண்களுடன் வந்த அவர்களில் முதியோர் மூவர், நடுத்தரவயதுடைய பெண்கள் எட்டுபேர், ஆண்கள் ஒன்பது பேர், குமர்பெண்கள் ஐந்து பேர், சிறுவர் சிறுமியர் ஏழு பேர் என இருந்தனர்.

சூரியன் மேற்கு நோக்கி மேலும் சில அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ந்திருந்தான். நிர்மலமான நீலவானம் சற்றே சிவப்பு நிறமாக மாறி இருந்தது. இதுவரை தென்றலாக வீசிக்கொண்டிருந்த குளிர் காற்று ஏன் அத்தனை வெப்பமாக மாறியதென்பதற்கு காரணம் கூற முடியவில்லை. பறவைகள் கூட பதைத்துப் போய் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டு விட்டன. பகலில் கண்ணில் படாத ஆந்தையொன்று நிலைமை அறிந்து அலறி அங்கிருந்தோர் மனதை மேலும் அச்சமுறச் செய்தது.

முதலில் குமர்ப் பெண்களின் ஆடைகளைகளையும் படி தன் சகாக்களுக்கு கட்டளையிட்டான் ஜனக்க திசாநாயக்க என்ற அந்தவெறியன். அவன் கண்கள் தீண்டத் தயாராகும் நாகத்தின் கண்களைப் போல் சிவந்திருந்தன. அவன் குடித்துவிட்டு வந்த மது வின் போதை உச்சந்தலைவரை ஏறியிருந்தது.

அந்த நாசகாரர்கள் தம் பிள்ளைகளின் மானத்தைப் பறிக்கப் போகிறார்கள் என்று அறிந்த மாத்திரத்திலேயே அங்கு கலவரம் ஏற்பட ஆரம்பித்தது. தாய் தந்தையர் அண்ணன், தம்பி எல்லோருமே அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கெஞ்சினர்.

தன் தமக்கையின் மானத்தைப் பறிக்க முற்பட்ட ஒரு முரடனை பற்றிப் பிடித்த அந்தக் தமையனை சுட்டு வீழ்த்தினான் இன்னொரு கயவன். அங்கு விழுந்த முதற்பலி அவனே. அவனது பச்சை இரத்தம் மண்ணில் படிந்து மண்ணை சிவப்பாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. இந்த அதிர்ச்சியால் அங்கே மீண்டும் ஒரு கணம் மௌனம் நிலவியது. அடுத்து அந்த மௌ னமே அவர்கள் தலைகளில் பேரிடியாக வந்து விழுந்தது.

அடுத்து வந்த அரை மணி நேரத்தில் அங்கு நடந்த வற்றை சொன்னால் அனைவரது இரத்தமும் உறைந்து போய்விடும். தமிழனின் மானத்தைப் பறிப்பது அவனது உயிரைப் பறிப்பதற்கு சம மானது என்பது அந்த கயவர் கூட்டத்துக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் கணவனின் கண்முன்பே மனைவியை துவம்சம் செய்தனர். கனன்றெழுந்த கணவனை ஒரே துப்பாக்கிக் குண்டால் கொல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக சித்திர வதை செய்தனர். அவனது ஆணுறுப்பைத் துண்டித் தனர். அவனது கண்களைத் தோண்டினர். அவனது பத்துகை விரல்களையும் ஒவ்வொன்றாக நசித்து நகங் களை பிய்த்தெடுத்தனர்.

கதறும் குழந்தைகளை கழுத்தை நெறித்துக் கொன்றனர். காதிலும் விரல்களிலும் கிடந்த நகை களை கழற்றி எடுக்காமல் கத்திகொண்டு அறிந்த னர். கண்களுக்குள் விரலை விட்டு காது வரை குடைந்தனர். தொண்டைச் சங்கை அறுத்து செவ் விரத்தம் பீச்சுவதை ரசித்து நகைத்தனர். பெண்களை வரிசையாய் மானபங்கப்படுத்தி முலைகளை கத்தியால் சீவினர். கருத்தரிக்கும் கருவறை யைத் தோண்டி கைகுண்டு வைத்து தகர்த்தனர். தப்பியோடிய சிறுவர்களை பிடறியில் குறி வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டனர். நாதியே இல்லாத முதியோரை நையப் புடைத்து நரம்புகளை உறுவினர். மனைவியின் மானத்தைக் காக்க முயன்ற கணவனுக்கு என்ன சித்திரவதை செய்யப்பட்டதோ அதே தண் டனையையே எல்லா இளைஞர்களுக்கும் விதியாய் தலையில் வரைந்தனர்.

மாலைச் சூரியன் மங்கிக் கொண்டிருந்தான். அங்கு நடந்த அந்தக் கொடுஞ் சம்பவத்தை அவ னால் கூட சகித்துக் கொள்ள முடியவில்லை. இதுவரை மஞ்சலாக இருந்த வானம் சிவப்பாக மாறிக் கொண்டிருந்தது. மண்ணில் படிந்து பரவிய இரத்தம் வானிலும் பிரதிபலித்தது. அரைமணி நேரத்துக்கு முன்னர் அழகாகக் காட்சி தந்த அந்த வனப்பிரதேசம் அட்டூழியக்காரர்களின் அடா வடித் தனத்தால் அசிங்கப்பட்டுப் போனது.

இந்த ஒரு செயலிலும் சாமிந்த ரணசிங்க பங்கு பற்றவில்லை. அவன் வாய் பொத்தி மௌனியாக ஒரு பார்வையாளனாக ஒதுங்கி இருந்தான். அவர் களை எதிர்ப்பது தனக்கும் உயிராபத்தாக முடியும் என்று அவன் பயந்தான். அவர்களின் அந்த கொடூர செயலின்போது பச்சை ரத்தம் சீறிச் சிந்தியதாலும், காற்றில் இரத்தவாடை கலந்து நெடி வீசியதனாலும், அவனுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. சில நேரம் அவனுக்கு தலை சுற்றுவது போலவும் இருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் அவன் எல்லாவற்றையும் மௌனமாக சகித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அந்த மனித சங்காரத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர். வீடுகளில் புகுந்து பணத்தையும் நகைகளையும் கொள்ளையிட்டனர். பின் வீடுகளுக்கெல்லாம் தீ மூட்டிக் கொழுத்தினர். அப்போதுதான் அங்கே மற்றுமொரு மோட்டார் வாகனம் அவர்கள் இருந்த இடத்தை நெருங்கும் சத்தம் கேட்டது. ஜனக்க அந்த வாகனத்தின் இயந்திர சத்தத்தை ஒரு கணம் காது கொடுத்துக்கேட்டான். பின் எல்லாரையும் மறைவுகளுக்குள் பதுங்கும்படி கூறிவிட்டு தானும் மறைந்து கொண்டான்.

வந்தது ஒரு புத்தம் புதிய நவீனரக டிபென்டர் வாகனம். அதன் இரண்டு கதவுகளிலும் டேனிஸ் நாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. வந்த வாகனம் இரண்டு ஜீப் வண்டிகளும் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் வந்து நின்றது. அதில் இருந்து இரண்டு இளைஞர்கள் இறங்கினார்கள். ஒருவன் உள்ளூர் இளைஞன். தமிழனாக இருக்க வேண்டும். மற்றவன் வெள்ளைக்காரன். உயரமாகவும் வாட்ட சாட்டமாகவும் இருந்தான். அவர்கள் அந்த டேனிஸ் நாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தில் பணி புரியும் தன்னார்வத் தொண்டர் சேவையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிந்தது. அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தவாறே நடந்து வந்தனர்.

அங்கே எத்தகைய கொடூரம் நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதனை அவர்கள் முற்றாகப் புரிந்து கொள்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரே ஜனக்க அவர்களுக்கு முன்னே பாய்ந் தான். ஏனையவர்களும் பாய்ந்து வந்து அந்த இருவரையும் சுற்றிவளைத்துக் கொண்டனர். அவர்கள் வாய்திறப்பதற்கு முன்னரேயே அவர் களை துப்பாக்கியின் பின்புறத்தாலும் கைகளாலும் பூட்ஸ் காலாலும் சரமாறியாக தாக்கத் தொடங்கினர். அவர்கள் போட்டிருந்த மேலாடைகள் கிழித்தெரியப்பட் டன. அவர்கள் நிலத்தில் விழுந்து எழும்ப முடியாமல் முனகிக் கொண்டிருந்தனர்.

மிகுந்த கோபமடைந்திருந்த ஜனக்க "தன்தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வெள்ளைக்கார நாய்" என்று ஆரம்பித்து சகிக்கமுடியாத தூஷணத்தில் திட்டித்தீர்த்தான். அவர்களுக்கு ஏனையோர்க்கு வழங் கியதைவிட அதிக தண்டனை வழங்க வேண்டுமென்று கர்ஜித்தான். என்ன தண்டனை கொடுக்கலாமென்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

அங்கே ஓரமாக ஓரிடத்தில் ஆடு, மாடுகள், மிரு கங்கள், மனிதக்கழிவுகள் முதலானவற்றின் கழிவு நீர் வழிந்தோடுவதற்காக ஒரு பெரிய குழி வெட் டப்பட்டிருந்தது. அதில் அசுத்த நீர் வழிந்தோடி நாற்றமெடுத்து அந்தப் பகுதி முழுதும் துர்வாடை வீசிக்கொண்டிருந்தது.

அந்த இருவரதும் ஆடைகளை களையச் செய்த ஜனக்க திஸாநாயக்க அவர்களின் காற் சட்டைப்பைகளில் இருந்த பணத்தையும் டொலர் நோட்டுக்களையும் உருவிக்கொண்டான். பின் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கை கால்களை பிணைத்துக் கட்டச் செய்தான். அவர்கள் இருவரையும் தூக்கி அந்த கழிவு நீர்க் குழிக்குள் வீசச்சொன்னான். உடலில் சில்லென்ற நீர்பட் டதும் அவர்களுக்கு சற்றே தெம்பு வந்திருக்கவேண்டும். அவர்கள் நீர்க்குழியில் அமிழ்ந்து உள்ளே தரையில் கால்பட்டதும் மூச்செடுப்பதற்காக தரையில் உதைத்து எம்பி தரை மட்டத்துக்கு மேலே வந்தனர். இதனை எதிர்பார்த்திருந்த ஜனக்கவும் ,சகாக்களும் அருகே கிடந்த வேலியடிக்கப்பயன்படுத்தப்பட்ட நீண்டதடிகளை கையிலெடுத்து அவ்விருவரதும் மண்டையில் அடித்து மீண்டும் மீண்டும் அவர்களை நீருக்குள் அமிழ்த்தினர்.

நீருக்கு மேலேவந்த அந்த சில கணங்களில் அவர்களின் கண்கள் உயிர்ப்பிச்சை கேட்டன. தங்களை விட்டுவிட்டும்படி கெஞ்சின. அந்த வெள்ளைக்கார இளைஞன் ஏதோ கூற வாயைத் திறந்தான். அந்த சந்தர்ப்பத்தில். அவன் வாயினுள் தடியைத் திணித்த ஜனக்க தடியுடன் அவனை நீருக்குள் அமிழ்த்தினான் அதன் பிறகு அவர்களின் தலைகள் நீருக்குமேல் வரவில்லை.

அந்த கொடூர நடவடிக்கை அத்துடன் முற்றுப் பெற்றது. அதன்பின் ஜனக்க எல்லாருடைய உடல் களையும் அந்தக்குழிக்குள் கொண்டுவந்து போடுமாறு கட்டளை பிறப்பித்தான். ஆங்காங்கே சிதறிக்கிடந்த உடல்களையும் உடற்பாகங்களையும் பொறுக்கி அச்சேற்றுக் குழிக்குள் அவர்களைத் தள்ளி விட்டனர். அதன்பின் அங்கே அக்குழியை வெட்டும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டப்பட்டு குவிக்கப்பட்டுக் கிடந்த அதே மண்ணைக் கொண்டு குழி மூடப்பட்டது. அந்த இரண்டு இளைஞர்களால் செலுத்தி வரப்பட்ட குறித்த டேனிஸ் தொண்டர் நிறுவனத்துக்குச் சொந்தமான டிபென்டர் வாகனத்தை அடர்ந்த காட்டுக்குள் செலுத்தச் செய்து தீயிட்டுக் கொழுத்துமாறு கட்டளையிட்டு அதற்கென இருவரை அனுப்பினான் ஜனக்க. அதன் பிரகாரம் சற்று தூரத்தில் காட்டுக்குள் அந்தவாகனம் செடி கொடிகளுடனும் மரங்களுடனும் சேர்ந்து எரிந்து சாம்பலாய் போனதை அவர்கள் உற்சாகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இவ்வளவு நேரமும் இதயமற்றவர்களின் இந்த இங்கித மற்ற கொடுஞ்செயலை சிவந்த முகத்துடன் அவதானித்துக் கொண்டிருந்த அந்திச் சூரியன் வெட்கித் தலைகுனிந்து அந்தகாரத்துக்குள் ஒளிந்து கொண்டான். அங்கே மெல்ல இருள் வந்து குடிகொண்டது. அந்த கொடூர செயலுக்கு சூரியனைத்தவிர வேறு சாட்சிகள் எதுவும் இருக்கவில்லை. அந்த நிமிடம்வரை கூடிக் குலாவி கும்மாளமிட்டு உண்டு குடித்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டத்தினர் சில மணி நேரங் களில் மண்ணுள் புதைந்து மண்மேடாகிப் போயினர்.

*********

இந்த கொடிய நினைவுகள் சற்றும் இடை வெளி யில்லாமல் சமிந்த ரணசிங்கவின் மனத் திரையில் ஒரு நீண்ட திரைப்படமாக ஓடிக் கொண்டிருந்தது. இன்று மட்டுமல்ல பல தடவைகள் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவை அவன் மீட்டுப்பார்த்து வேதனை அடைந் திருக்கிறான். ஆனால் இன்று அவன் அந்த நினைவை மீட்டுப்பார்ப்பதில் புதிய பரிமாணம் ஒன்று சேர்ந்திருந் தது.

இந்த வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றத்தில் விசாரிக்கப்படும்போது அங்கே பிரசன்னமாகி சாட்சி யமளிப்பதென்று அவன் மனதில் உறுதியான எண்ணம் ஒன்று தோன்றியிருந்தது. அப்படிச் செய்வதனால் மட்டுமே தன் மனதுக்கு நிம்மதி ஏற்படும் என்பது அவனுக்குத் திடமாகத்தெரிந்தது. இந்த ஒரு தசாப்தகாலத்தில் அங்கே புதைக்கப்பட்டு மண் மேடாகிப் போனவர்களின் சதைகள் மண்ணுடன் மண்ணாகிப் போயிருக்கலாம். ஆனால் அவர்க ளின் எலும்புகளும் எச்சங்களும் தான் அவன் சொல்லப்போவதற்கு ஆதாரங்களாக இருக்கும் என்று அவன் நம்பினான்.

அன்றைய மனித சங்காரத்தில் கலந்து கொண் டவர்களில் அவனையும் ஜனக்கவையும் தவிர மற்றவர்கள் யுத்தத்தின்போது வேறு வேறு சம்பவங்களில் குண்டடிபட்டு மாண்டொழிந்து போய் விட்டனர். ஆனால் ஜனக்க இப்போதும் இராணு வத்தில் உயர் பதவி ஒன்றை வகித்து வர்ணப் பதக்கங்களுடன் உலாவி வருகிறான் என்பதை சமிந்த நன்கறிவான்.

சமிந்தவின் மனதில் படிப்படியாக தோன்றி தீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமாகவும் திடமாகவும் விஷ்வரூபமெடுத்திருந்த இந்தத்தீர்மானம் அவனுக்கு நிம்மதியைத் தந்தது. அவனது மனச்சாட்சி அவனது மனத்தாங்கலை போக்கி அவன் மனதை ஆசுவாசப் படுத்தியது. அவன் மனம் அந்த வழக்கு விசாரணைக்கு வரும் அந்தத்திகதியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது.

■

**2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துயர்பட்ட மக்களின் ஒரு பின்னமான
தமிழ் வாசகர்களை மேலும் துயர் படச்
செய்யாத முடிவுகளைக் கொண்டவை இக்
கதைகள்.

படைப்பாற்றலுடன் கூடிய சடகோபன் அவர்
களின் இவ்வெழுத்துக்களுக்கான உழைப்பு
வியப்பைத் தருவது. ஆறு நூல்கள் தந்
திருக்கும் சடகோபனின் ஏழாவது நூல்
இது என்பது இச் சிறுகதைகளின் சிறப்
புக்கான சாட்சி ஆக முடியாது. ஆனாலும்
இச்சிறுகதை நூலின் இலக்கிய இருப்புக்
கும் கவனிப்புக்கும் இத் தொகுதியின்
கதைகளே சாட்சியாக அமையும் என்பதை
காலம் காட்டி நிற்கும்.

மலையக மக்கள் பற்றி மட்டுமல்லாமல்
இடருறும் எல்லா மக்கள் பற்றியும் துயர்
படும் மனம் கொண்ட படைப்பாளர் இரா. சட
கோபன் அவர்கள்.

ஈழப்போரே இடம்பெறாத மலையகத்தின்
மக்கள் அனுபவித்த இன்னல்கள் எழுத்
தில் அடங்காதவை. அவைகளை எழுத்துக்
குள் அடக்கி ஒரு சமூகத்துயரின் நினை
வுகளை மீட்டுத்தரும் சடகோபனின் முயற்சி
கள் பாராட்டுக்குரியவை.

-தெளிவத்தை ஜோசப்

Price: 350/-

ISBN : 978-955-42706-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org